# காதலிக்கிறாள் சரிதா



எண்டமூரி வீரேந்திரநாத்

3858309

# காதலிக்கிறாள் சரிதா

## 1

பசுமையான இயற்கைச் சூழ்நிலைகளுக்கு நடுவே ஒதுக்குப்புறமாய் இருந்த கிராமம் பத்மாபுரம். அந்த கிராமத்திலிருந்த செல்வந்தரான ஜானகிராமன் ஒரு நிலச் சுவான்தார். தர்மசிந்தனையும் பரோபகாரமும் கொண்ட மிக நல்ல மனிதர். குடியானவர்களும் ஏழைகளும் அவ்வப் பொழுது ஆலோசனைகளுக்காகவும் அறிவுரைக்காகவும் அவரிடம் வந்து போய்க்கொண்டிருப்பது வழக்கம். உழவர் களும் கூலியாட்களும் ஜானகிராமனின் பெயரைக் கேட்ட துமே ''தர்ம பிரபு! நூறு வருஷம் வாழணும்'' என்று வாழ்த்துவார்கள்.

பத்மாபுரத்தில் ஜானகிராமன் என்றால் உயிரையும் கொடுக்கக்கூடியவர்கள் ஒரு பக்கத்தில் இருந்த போதிலும், அவர் மீது பொறாமைகொண்டு சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது கொன்றும் போட்டுவிட வேண்டும் என்பதுபோல ஆத்திரத்துடன் இருந்தவர்களும் இன்னொரு பக்கத்தில் இருந்து வந்தார்கள். கிராமங்களில் பழிகளையும் ஆவேசங் களையும் தீர்த்துக் கொள்வதற்கு நிறைய வழிகள் உண்டு. வயல்வரப்புகளை உடைத்தெறிந்து எல்லைகளைக் கலைத்து

விடுவது, தண்ணீர் வரவிடாமல் செய்வது, குப்பைகளைப் போட்டு எரிப்பது இந்த விதமாய் மனதிற்குத் தோன்றிய எந்த வழியிலாவது தம் துவேஷத்தை வெளியே காட்டிக் கொள்வார்கள்.

ஊரிலிருந்த எஞ்சிய பணக்கார நிலச்சுவான்தார்கள் சிலர் ஜானகிராமனின் வயலுக்கு இறக்கத்தில் இருந்த உழவர்களைக் கையில் போட்டுக்கொண்டு அவருக்கு எதிராய் சதிபண்ணத் தொடங்கினார்கள். இதை ஒன்றையும் அறியாத ஜானகிராமன் தன் நிலத்திற்கு எப்பொழுதும் போலவே தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்.

ஜானகிராமனுக்கு நம்பிக்கைக்கு உகந்த வேலைக்காரன் வீரபத்திரன் இரவெல்லாம் வயலடியில் காவலுக்கு இருந்து வந்தான். அன்றைக்கு பிற்பகலில் வயலுக்கு வந்தான் ஜானகிராமன். ''நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போய் சாப்பிட்டு விட்டுவா வீரபத்திரா'' என்றார் ஜானகிராமன்.

''வேண்டாம் ஐயா. சுதாகரை சாப்பாடுஎடுத்துட்டு வரச் சொல்லி செய்தி அனுப்பியிருக்கிறேன். வந்துவிடுவான்'' என்றான் வீரபத்திரன்.

சொல்லிக் கொண்டிருந்தபொழுதே வீரபத்திரனின் மகன் சுதாகர் வந்துவிட்டான்.

ஜானகிராமன் விடைபெற்றுக்கொண்டு திரும்பி வரத் தொடங்கியவர் கால்வாய்க் கரையில் நின்றபடி ஒரு நிமிஷம் பார்த்தார்.

தொலைவில் வீரபத்திரன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

வீரபத்திரன் சாதத்தைப் பிசைந்து சுதாகர் வாயில் ஒரு கவளத்தைத் தந்துவிட்டுத் தான் சாப்பிடத் தொடங்கினான்.

அதற்குள் தொலைவிலிருந்து சந்தடி கேட்டது.

இறக்கத்து வயலைச் சேர்ந்த உழவர்கள் கையில் கழிகளை எடுத்துக்கொண்டு ஓடிவந்து கொண்டிருந்தார்கள்.



ஜானகிராமன் அவர்களுக்கு நயமாய் எடுத்துச் சொல்லத் தொடங்கினார். வந்தவர்களுள் ஒருவன் திடீரென்று ஜானகிராமனின் தலையில் கழியால் ஓங்கி அடித்தான். சண்டை சச்சரவு வரும் என்று சற்றும் எதிர்பார்த்திராத ஜானகிராமன் 'ஐயோ' என்று தலையைப் பிடித்துக்கொண்டு கீழே சரிந்தார். நினைவு தப்பிவிட்டது. வீரபத்திரன் ஆவேசத்தால் கொதித்தெழுந்தபடி ஓப்போய் அவர்கள் மீது பாய்ந்தான். ஒருவன் கையிலிருந்த கழியை லாவகமாய் பிடுங்கிக்கொண்டு ஜானகிராமனை அடித்தவன் மீது பாய்ந்தான். கொஞ்ச நேரம் போராடி இருவரை காயப்படுத்த முடிந்தாலும், வீரபத்திரன் தனியனாகவும் அவர்கள் பத்து பேராகவும் இருந்ததால் சமாளித்துக்கொள்ள முடியவில்லை அவனால். அதற்குள் நினைவு திரும்பிவிட்ட ஜானகிராமன் கண்களைத் திறந்து பார்த்தார். அவர்களைத் தடுப்பதற்காகக் கைகளை நீட்டிக்கொண்டே எழுந்திருக்கப் போனார். ஜானகிராமன் எழுந்துவந்து வீரபத்திரனுக்கு பக்கபலமாய் நின்றுவிட்டால் தம் காரியத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்றெண்ணிய ஓரிருவர் ஜானகிராமன் மீது கழியை ஓங்கிக் கொண்டு போனார்கள். வீரபத்திரன் மின்னலாய் ஓடிவந்து ஜானகிராமனுக்குக் குறுக்காய் நின்று அவரை மார்போடு அழுத்திப் பொத்திக் கொண்டான். ஜானகிராமன் மீது பட வேண்டியஅடி வீரபத்திரன் மீது பட்டு தலை பிளந்துவிட்டது. இதையெல்லாம் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சுதாகர் பயந்துபோய் ''ஐயோ, அம்மா, அப்பா'' என்று கத்திக்கொண்டே அம்பாய் வீட்டை நோக்கி ஓடினான்.

* * *

வீரபத்திரன் இறந்துவிட்டான்.

அவனைக் கொன்றவர்களுக்கும், அந்த சதிக்கு உண்மையான காரணகர்த்தர்களாய் இருந்தவர்களுக்கும் கடுமையான தண்டனை கிடைக்கும்படியாய் செய்தார், ஊரிலிருந்து வந்த ஜானகிராமனின் அண்ணனான ராஜாராம்.

ஜானகிராமன் வீரபத்திரனின் குடும்பத்திற்கு நிறைய உதவிகள் பண்ணியிருக்கிறார்.

வீரபத்திரனுக்கு ஒரு மகனும் மகளும் இருந்தார்கள். மகன் சுதாகர், மகள் சித்ரா. அதோடு அந்தச் சமயத்தில் வீரபத்திரனின் மனைவி மறுபடியும் கர்ப்பவதியாய் இருந்தாள் வேறு. வீரபத்திரன் மரணமடைந்தது தெரிந்ததுமே வேறு கிராமத்தில் இருந்துவந்து அவன் தங்கை காளிதேவி வந்தாள். வீரபத்திரன் தன்னிடம் வேலை பண்ணிவந்த நம்பிக்கையான வேலைக்காரனாயிருந்ததால் ஜானகிராமன் அக்குடும்பத்திற்கு எந்தக் குறையும் வரவிடமாட்டேன் என்றும் மகன், மகளின் படிப்பு பாரத்தையும் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளையும் பண்ணுவதாகவும் முன் வந்தார். ஆனால் காளிதேவி ஒப்புக்கொள்ளவில்லை. அவளுக்கு ஊரில் மாடு கன்றுகள் இருப்பதாயும் பால் வியாபாரத்தில் ஏதோ நல்லபடியாகவே வந்துகொண்டிருப்பதால் கவலை இல்லை என்றும் அவர்கள் தம்மோடு வந்து இருப்பதே நல்லது என்றும் சொன்னாள்.

பட்டிணத்திலிருந்து தம்பியின் வீட்டிற்கு வந்திருந்த ராஜாராமன்கூட இனி தம்பி இந்த பத்மாபுரத்தில் இருந்தால் ஊராருடன் சண்டை வந்து உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என்றெண்ணினார். தம்பியை அங்கே இருக்க வேண்டாம், தம்மோடு பட்டிணத்திற்கே வந்துவிடு என்று பலவந்தம் செய்தார். அண்ணியும்கூட பலவந்தம் செய்தாள். ஜானகிராமனுக்கு மனைவி இறந்துபோய் இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. மனைவி மீது இருந்த அன்பால் அவர் யார் என்ன சொன்னபோதிலும் மறுமணம் செய்துகொள்ளவில்லை. விக்கிரமன் என்ற ஒரே ஒரு மகன் இருந்தான். பட்டிணத்தில் இருந்தால் விக்கிரமனுக்குப் படிப்பு வழக்கு நன்றாய் வரும். அண்ணனுக்கு இருந்ததுஉட ஒரே மகள் ஜமுனாதான். ஆனாலும் ''இங்கே நிலம் நீச்சைப் பார்த்துக் கொண்டு எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலை பண்ணிக் கொண்டேயிருக்கிறவன் நான், என்னால் அங்கே வந்து எப்படி இருக்க முடியும் அண்ணா?'' என்றார்.

''எனக்கு மட்டும் அந்த விஷயம் தெரியாதா என்ன? ஒரு நல்ல ரைஸ் மில் விலைக்கு வந்திருக்கிறது. இங்கே நிலத்தை விற்றுவிட்டு அங்கே அதை வாங்கிக் கொள்வோம். உனக்குக் கைநிறைய வேலையும் இருக்கும். என்ன சொல்கிறாய்?'' என்றார் ராஜாராம்.

ஜானகிராமனுக்கும் அதுவே உசிதமாய் பட்டது. நிலத்தையும் வீட்டையும் விற்றுவிட்டு பட்டிணத்திற்குப் பிரயாணமானார். போகும் முன்னால் காளிதேவியைக் கூப்பிட்டு, சுதாகர் சித்ரா இருவர் பெயரிலும் கொஞ்சம் நிலத்தை எழுதித் தருவதாய் சொன்னார் ஜானகிராமன். காளிதேவி ஒப்புக்கொள்ளவில்லை. ஆண் திக்கு இல்லாத தன் குடும்பத்திற்கு உழவுத்தொழில் மிகக் கஷ்டமாயிருக்கும் என்றும், பணம் ஏதாவது தந்தால் அதைக்கொண்டு தன் பால் வியாபாரத்தோடு அவர்களுக்கும் நான்கு மாடுகளை வாங்கி பாகம் சேர்த்து அவர்களுக்கு ஒரே ஆதாரத்தை ஏற்படுத்தித் தந்து வாழ்நாள் பூராவும் கண்ணுங்கருத்துமாய் காப்பாற்றிக் கொண்டிருப்பேன் என்றாள். ஜானகிராமன் ராஜாராமன் இருவரும் காளிதேவி கேட்டுக் கொண்டாற்போலவே பணம் தந்து அனுப்பினார்கள்.

ஃ ஃ ஃ

## 2

---

ஜானகிராமனிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்ட காளிதேவி அப்பணத்தை வீரபத்திரனின் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கவில்லை. தந்ததையெல்லாம் மறைத்து வைத்துவிட்டு இருநூறு ரூபாய்களை மட்டும்

கொண்டுவந்து காட்டிவிட்டு ''இதென்ன அண்ணி! நம்ப தான் வைத்தியமே தவிர போயும் போயும் நமக்கு அவங்க எதுக்கு உதவி பண்ணப் போறாங்க? அப்பொழுது என்னவோ இரண்டு மூன்று வார்த்தைகளைப் பசப்பிவிட்டு அதைப் பண்றேன் இதைப் பண்றேன்னு சொன்னாங்க. சரி என்று போனால் வெறுங்கையோடு அனுப்பினாற்போல இதோ இந்தப் பணத்தை மட்டும் கையில் பிச்சையாய் போட்டுவிட்டுப் போய் விட்டாங்க. ஊரிலிருந்த நிலம் நீச்சுக்களையெல்லாம் விற்றுவிட்டுப் பட்டிணம் போறாங்க'' என்றாள்.

வீரபத்திரனின் மனைவிக்கு அதற்குள் வலி தொடங்கி விட்டது. காளிதேவி சொன்ன வார்த்தைகளைக் கேட்டு விட்டு பதில் சொல்ல முடியாதவளாய் மௌனமாய் இருந்தாள். பிரசவம் மிகக் கடினமாய் இருந்ததால் காளிதேவி அண்ணியை பக்கத்திலிருந்த பட்டிணத்திற்கு அழைத்துச் சென்றாள்.

பட்டிணத்து ஆஸ்பத்திரியில் வீரபத்திரனின் மனைவிக்குப் பிரசவம் மிகக் கடினமாகிவிட்டது. பெண் குழந்தையைப் பெற்றுவிட்டு இறந்து விட்டாள். சவத்தையும் குழந்தையையும் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போகச் சொல்லிவிட்டார்கள் ஆசுபத்திரி அதிகாரிகள். காளிதேவி சவத்திற்கு முன்னால் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். நர்சுகள் முதலியவர்கள் ''இங்கே இப்படி அழக்கூடாது. நோயாளிங்களுக்கு டிஸ்டர்ப் ஆகும்,'' என்று எரிந்து விழுந்தபோதிலும் அலட்சியம் பண்ணாமல் ஓவென்று அழத்தொடங்கினாள். அதே பிரசவ ஆசுபத்திரிக்கு குழந்தை இல்லாததால் குழந்தை பிறக்காதா என்று தவித்துப்போய் மருந்து வாங்கிக் கொண்டு போவதற்காக வந்த சாருமதியும் அவள் கணவன் சிதம்பரமும் காளிதேவியின் அழுகையைக் கேட்டுவிட்டுக் கிட்டே வந்தார்கள்.

காளிதேவி பச்சிளம் குழந்தையைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள். சபித்துக் கொண்டிருந்தாள்.



''உன்னோடு கூட இது கூட சாகாமல் எனக்குக் கால் கட்டாய் வந்துச் சேர்ந்துடுத்தேம்மா தாயே! நானே சோற்றுக்கு கதியில்லாமல் தாளம் போட்டுக்கிட்டிருக்கும் போது அந்த ரெண்டோடு சேர்ந்து இது ஒண்ணும் வந்து சேர்ந்துடுத்தேடா கடவுளே! பாவி தெய்வம்! உன்னைக் கொன்று சுவர்க்கத்துக்கு அழைச்சுண்டு போயிடுத்து. என்னை நகரத்தில் தள்ளி விட்டு விட்டதேடாப்பா!'' என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். அப்படி அங்கே அழுது அரற்றினால் ஆசுபத்திரி அதிகாரிகள் தனைத்திற்காகக் கொஞ்ச நஞ்சமாவது பணத்தை விட்டெறிவார்கள் என்பது அவள் உபாயம். அந்த உபாயம் பலித்தது. ஓரிருவர் ''என்ன விஷயம்?'' என்று வந்துச் சூழ்ந்து கொண்டார்கள். அப்பொழுதுதான் பிறந்து இன்னும் கண்ணைக்கூட திறக்காத அந்த பச்சிளம் குழந்தை பாலுக்காக வீல்வீலென்று கத்திக் கொண்டிருக்க, அக்குழந்தையை அப்படி கண்டபடி திட்டிக் கொண்டிருந்ததை குழந்தைப் பேறு இல்லாத சாருமதிக்குக் காது கொடுத்துக் கேட்கச் சகிக்கவில்லை.

தாங்க முடியாதவளாய் ''யாரும்மா நீ? செத்தவள் உனக்கு என்னவாகணும்?'' என்று கேட்டாள் காளிதேவியை. சாருமதி கேட்டதுதான் தாமதம். காளிதேவி புராணத்தை அவிழ்த்துவிட்டாள். தன் அண்ணன் வயல்வரப்பு தகராறில் எஜமானனைக் காப்பாற்றப் போய் எப்படி மரணமடைந்து விட்டான் என்றும், அந்த எஜமானர் கருணை என்பது இல்லாமல் கொஞ்சங்கூட உதவிப் பண்ணாமல் ஊரை விட்டு எப்படிப் போய்விட்டார் என்றும், நான் இந்த குடும்பத்தை அழைத்து வைத்துக்கொண்டு கொஞ்சம் நஞ்சம் உதவிபண்ணலாம் என்று பார்த்தால், இந்தக் குழந்தைகள் மூன்று பேரையும் என் தலையில் கட்டிவிட்டு எப்படி கண்ணை மூடிவிட்டான் என்றும் ராகம் போட்டுச் சொல்லத் தொடங்கினாள்.

சாருமதி கணவனை அப்பால் அழைத்துக் கொண்டு போய் குழந்தையை ஆசையோடு பார்த்துக் கொண்டே—

''குழந்தை தங்கமாய் இருக்குங்க. நாம்ப எடுத்துட்டுப் போய் வளர்க்கலாம்'' என்றாள்.

குழந்தைக்காகத் தவித்துப் போய்க் கொண்டிருக்கும் மனைவியின் மனதை அறிந்திருந்த சிதம்பரம் மறுக்கவில்லை. இருவரும் காளிதேவியைக் கேட்டார்கள் காளிதேவி முதலில் வாயடைத்துப் போய் விட்டாள். தனக்கு வரவிருந்த பீடை இந்த விதமாய் ஒழிந்து போய்விடும். அது தெரிந்ததும் சந்தோஷந்தான் ஏற்பட்டது. மிகவும் இரக்கப்படுவது போல ''பாவம், குழந்தைங்க இல்லாதவங்க என்கிறீங்க. உங்களுக்குக் கொடுத்தால் எனக்கும் புண்ணியம். உங்களுக்கும் நன்மை ஏற்படும். ஆனால் இதை எங்கேயும் சொல்லிவிடாதீங்க. மானம் மரியாதை உடையவள். நாலு பேர் கேட்டு விட்டால் வேறு வினையே இல்லை'' என்றாள்.

''உனக்கு அந்த மாதிரி பயம் எதுவும் வேண்டாம். இதை நாங்கள் வெளியே எங்கேயும் சொல்லமாட்டோம்'' சிதம்பரம் தைரியமூட்டினான்.

சாருமதி அதற்குள் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு ''என் கண்ணே! சந்திர பிம்பமாய் இருக்கிறது முகம்! இன்றைக்கு நான் யார் முகத்தில் விழித்தேனோ! எவ்வளவு அதிர்ஷ்டம்'' என்று மெய்மறந்து போனாள். காளிதேவி அத்தம்பதியருக்குக் குழந்தையைத் தந்ததற்கு நன்றியாய் அவர்கள் அவளுக்குக் கொஞ்சம் பணம் தந்தார்கள். அந்த விதமாய் வயிற்றில் வளரும்பொழுதே தந்தையை இழந்து, பிறந்ததுமே தாயை இழந்து தன் மக்கள் எல்லோரையும் விட்டு தொலைவிற்குப் போய் விட்டது அப்பச்சிளங் குழந்தை.

ஃ ஃ ஃ

# 3

ஆசுபத்திரியிலிருந்து கிராமத்திற்குத் திரும்பி வந்த காளிதேவி, பிரசவம் கஷ்டமாகி விட்டால் தாயோடு சேர்ந்து குழந்தையும் இறந்துவிட்டது என்று சோகம் ததும்ப, அக்கம்பக்கத்தார் மனம் கரைந்து போகும்படியாய் சுதாகரையும், சித்ராவையும் கட்டி அணைத்துக் கொண்டே சொன்னாள். தந்தையோடு தாயையும் இழந்துவிட்டோம் என்று தெரிந்ததும் சுதாகரும் சித்ராவும் திகிலடைந்துபோய் விட்டார்கள். சின்னப் பையனாய் இருந்தாலும் சுதாகர் தங்கை சித்ராவுக்கு ஆறுதல் சொன்னான்.

காளிதேவி மாட்டுக் கொட்டகையைக் கழுவி சுத்தம் பண்ணும் வேலைக்காரனை வேலையிலிருந்து நீக்கிவிட்டாள். அந்தக் காரியங்கள் எல்லாம் சித்ராவின் தலையில் விழுந்தது. ஜானகிராமன் குழந்தைகளுக்காகத் தந்திருந்த பணத்தில் காளிதேவி இன்னும் இரண்டு மாடுகளை வாங்கினாள். பால் வியாபாரம் அபிவிருத்தி அடைந்தது. இருந்த ஒரே மகன் சீனுவை ஜமீன்தார் மகனைப் போல மிக அருமையாய் வளர்க்கத் தொடங்கினாள். அந்த விதமாய் சுவாமி வரம் கொடுத்தாலும் பூஜாரி கொடுக்கவில்லை என்பது போல காளிதேவியால் ஜானகிராமன் செய்த உதவி அக்குழந்தைகளுக்குத் தரிக்கவில்லை.

வீரபத்திரனுக்கு சுதாகரின் எதிர்காலத்தைப் பற்றி நிறைய ஆசைகள் இருந்தன. ஜானகிராமனின் நிழலில் வாழ்ந்து வந்த வீரபத்திரனுக்குத் தான் வேலைக்காரனாயிருந்தாலும் எப்படியாவது கஷ்டப்பட்டு குழந்தைகள் இருவரையும் நன்றாய் படிக்க வைக்கவேண்டும் என்ற கனவு இருந்தது. வீரபத்திரனின் உத்தேசத்தை அறிந்து

கொண்டிருந்த ஜானகிராமன்கூட அவ்வப்பொழுது ''ஆமாம் வீரபத்ரா! சுதாகர் ரொம்ப சுறுசுறுப்பான பையன். கண்டிப்பாய் படிக்க வை. எங்க விக்கிரமனோடு சேர்த்து அவன் படிப்பு வழக்குக்கு ஆகிற செலவை நான் தாங்கிக் கொள்கிறேன்'' என்பார். தந்தைக்கும் அவர் எஜமானருக்குமிடையே அடிக்கடி நிகழ்ந்து வந்த இச்சம்பாஷணையைக் கேட்ட சுதாகரின் கவனம் சதா படிப்பின் மீதே சென்றது. பள்ளியில் கூட அவன் முதல் வகுப்பில் இருந்தான். ஆனால் காலம் வக்கிரமாய் மாறி காளிதேவியிடம் வந்து சேர்ந்து விரும்படி நேர்ந்ததால் சுதாகரின் படிப்பு பாதிக்கப்பட்டது. காளிதேவி சுதாகரை பள்ளிக் கூடத்திற்குப் போகக்கூடாது என்று தடைவிதித்து விட்டாள். மாடு கன்றுகளை பார்த்துக் கொள்வதில் பயிற்சி அளித்துவிட்டால் தன் கையின் கீழ் பக்க பலமாய் இருந்து கொண்டிருப்பான் என்பது அவள் எண்ணம். சுதாகர் அத்தையின் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. தான் மாடு மேய்க்க மாட்டேன் என்றும், பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிப்பேன் என்றும் கச்சிதமாய் சொல்லி விட்டான். காளிதேவி சாப்பாடு போடுவதை விட்டு விட்டாள். அடிக்கடி எந்த காரணத்தையாவது குத்திக் காட்டி, செம்மையாய் அடித்து பயமுறுத்தி வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்று முயன்றாள்.

சுதாகர் பிடிவாதமாய் நடந்து கொண்டானே தவிர வழிக்கு வரவில்லை. தம்மை யாருமே அடித்ததில்லை இது வரை. அப்படியிருக்கும் பொழுது அண்ணனை அத்தை மாட்டை அடிப்பது போல செம்மையாய் உதைத்ததைப் பார்த்து சித்ராவின் மனம் வெலவெலத்துப் போகத் தொடங்கிற்று. அடி வாங்கிய சுதாகர் அந்த அடிகளைப் பொறுத்துக் கொண்டு, அழுதுகொண்டிருக்கும் தங்கைக்கு தைரியம் சொல்லுவான்.

இன்றைக்கு பால் குவளையை எடுத்துக்கொண்டு சுப்பு வந்தபொழுது காளிதேவி சுதாகரையும், சித்ராவையும் பிடித்



துக்கொண்டு துடைப்பக்கட்டையால் அடித்துக்கொண்டிருந்தாள்.

''ஏம்மா வாயில்லாதச் சின்னப் பசங்களை இப்படி அடிக்கிறாய்?'' சுப்பு குழந்தைகளை அவளிடமிருந்து பிரித்துவிட்டுக் கேட்டான் வருத்தமாய்.

''வாயில்லாதவங்களா இவங்க? அதன் அழுகையைப் பாரு. ராட்சசியைப்போல'' என்றாள் காளிதேவி சீற்றத்துடன்.

''ஏதோ சின்னப்பசங்க, தெரியாமல் ஏதாவது தப்புப் பண்ணினாங்கன்னே வை.''

காளிதேவிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ''போதுமய்யா! பெரிதாய் சொல்ல வந்துவிட்டாய்! அனுபவிக்கிறவங்களுக்குத்தான் தெரியும் அதன் கஷ்டம்! வெறுமே பார்க்கிறவங்களுக்கு என்ன தெரியும்? உனக்கென்ன தெரியும்? இவங்களோட நான் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்னு'' என்று கைகளைக் கூப்பிவிட்டு விடுவிடென்று சமையலறைக்குள் போய்விட்டாள்.

சுதாகரும் சித்ராவும் வெளியே ஓடினார்கள். அத்தை அடித்த அடியால் இன்னும் நடுநடுங்கிக் கொண்டிருந்த சித்ரா சுதாகரை அழுத்தமாய் கட்டிக்கொண்டிருந்தாள். சுதாகர் இவ்வளவு அடி வாங்கியும்கூட வாயைத் திறக்கவில்லை ஆனால் தங்கையின்மீது யார் கை வைத்தாலும் அவனால் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

சுப்பு காளிதேவியிடமிருந்து பாலை வாங்கிக்கொண்டு திரும்பி வந்துகொண்டிருக்கையில் சந்து கோடியில் சித்ராவும் சுதாகரும் எதிர்ப்பட்டார்கள்.

சுதாகர் அழுதுகொண்டே தானும் தங்கையும் சுப்புவோடு வந்துவிடுவதாயும், எங்கேயாவது கூட்டிக்கொண்டு போய்விடச் சொல்லியும் கேட்டான்.

கப்பு யாருமில்லாத தனிக்கட்டை. அவனுக்கு வீடு என்றுகூட ஒன்றில்லை. அதனால் சுதாகரையும் சித்ராவையும் தன்னோடு பட்டிணத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் தான் பால் ஊற்றி வந்த ஓட்டல் முதலாளி சாரங்கபாணியிடம் ஒப்படைத்தான்.

''தம்பீ! தாய் தகப்பன் இல்லாத பிள்ளைங்க. திக்கற்றப் பசங்கள். இவங்களுக்கு ஏதாவது வழி காட்டுங்க'' என்றான்.

சிறு பசங்களாயிருந்தாலும் சுறுசுறுப்பாய் இருந்தார்கள். சாரங்கபாணி அவ்விருவரையும் தம் ஓட்டலில் இருந்துகொண்டு சோற்றுக்காக கப்புகளையும் பிளேட்டுகளையும் கழுவிக்கொண்டிருக்கச் சொன்னார்.

ஃ ஃ ஃ

சுதாகர் காபி ஓட்டலில் போய்ச் சேர்ந்து கப்புகளையும் பிளேட்டுகளையும் கழுவிக்கொண்டிருந்த போதிலும் படிப்பின் மீது இருந்த கவனம் போய்விடவில்லை. பகலெல்லாம் ஓட்டலில் வேலை பண்ணிக்கொண்டு இரவு நேரத்தில் படித்துக்கொண்டிருந்தான். படிப்பின் மீது அவன் காட்டிய சிரத்தையைக் கவனித்துவிட்டு முதலாளி பழைய புத்தகங்களை வாங்கித் தந்து படிக்கச் செய்தார். பிரைவேட்டாக மெட்ரிக் பரீட்சைக்குப் பணம் கட்டினார். மிகக் கஷ்டப்பட்டு படித்து முதல் வகுப்பில் அப்பரீட்சையில் பாஸ் ஆனான். சுதாகருக்கு இருந்துவந்த ஆர்வத்தையும் சிரத்தையையும் கவனித்த முதலாளி மேலும் உற்சாகமளித்து காலேஜில் சேர்த்தார் அவனை. குழந்தைகள் இல்லாத சாரங்கபாணிக்கு அவ்விருவரையும் பார்க்கும்பொழுது தெய்வமே அவனைத் தன்னிடம் கொண்டுவந்து சேர்த்திருப்பதாய் தோன்றும்.

நாட்கள் கழிந்துகொண்டிருந்தன. வருடங்கள் ஓடி மறைந்தன. சுதாகர் பெரியவனானான். அவன் காலெடுத்து வைத்த வேளையோ என்னவோ சாரங்கபாணியின் ஓட்டல்



நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டே வரத் தொடங்கிற்று. மர நாற்காலிகளுடனும் அலுமினியத் தட்டுகளுடனும் இருந்துவந்த ஓட்டல் இம்பொழுது ஃபேமிலி ரூம்களுடனும், ஸ்பிரிங் கதவுகளுடனும், விலையுயர்ந்த அழகான ஃபர்னிசர்களுடனும் மிகப் புதிய பாணியில் மாறிவிட்டிருந்தது. சாரங்கபாணிக்கு வயதாகிவிட்டது. சுதாகர் அவருக்கு வலது கையாய் இருந்து எல்லா காரியங்களிலும் உதவி பண்ணிக்கொண்டிருந்தான். ஆரோக்கியமாய், பலமாய், அழகாய் வளர்ந்திருந்த சுதாகரைப் பார்த்தபொழுது எல்லோருக்கும் அவன் ஏதோ கேடுகாலம் வந்து கொஞ்ச நாட்கள் இந்த ஓட்டலில் வேலை பண்ண வந்திருப்பதாகவே தோன்றிற்று. அவன் முகத்திலிருந்த தேஜஸ்ஸும், கண்களில் இருந்த சுறுசுறுப்பும் அப்படி இருந்தன.

அன்றைக்கு பரீட்சை ரிசல்டுகள் வெளிவந்தன. சுதாகர் யுனிவர்சிடியிலேயே முதலாவதாய் பாசாகியிருந்தான். அவன் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தெரிந்தவர்கள் எல்லோரும் அவனைச் சூழ்ந்துகொண்டு அவன் உறுதியையும் உழைப்பையும் பாராட்டினார்கள். சுதாகர் சாரங்கபாணியிடம் வந்து நன்றியால் நாத்தழுதழுக்க, ''இதெல்லாம் உங்களால்தான் சார் ஏற்பட்டது. அன்றைக்கு மட்டும் நீங்கள் எனக்கும் என் தங்கைக்கும் புகலிடம் தராமலிருந்திருந்தால் நாங்கள் என்னாவாகியிருப்போமோ!'' என்றான்.

''இருப்பா, நீ காலடி எடுத்து வைத்த விசேஷத்தால் என் ஓட்டல்கூட இன்றைக்கு இவ்வளவு முன்னேறியிருக்கிறது. இந்த ஓட்டலால் நீயும் பெரியவனானாய். இன்றைக்கு உன்னையும்விட எனக்குத்தான் சந்தோஷம் அதிகமாயிருக்கிறது. டேய், ராமு, இப்படி வா! அந்த ஜாங்கிரி தட்டை இப்படிக் கொண்டா'' என்று தட்டை வாங்கி சுதாகரிடம் தந்து, ''சுதாகர்! இந்தா! உன்னைப் பாராட்டியவங்க—மெச்சியவங்க எல்லோருடைய வாயையும் இனிப்பாக்கு'' என்றார்.

''எங்க சித்ராவுக்குகூட இந்த விஷயத்தைச் சொல்லணும்''—ஸ்வீட் இருந்த தட்டை எடுத்துக்கொண்டு சந்தோஷத்தோடு மின்னலாய் வீட்டை நோக்கி ஓடினான் சுதாகர்.

## 4

கிராமத்திய காளிதேவியின் மகன் சீனுகூட பெரியவனாகி, காலேஜில் படிக்க வந்தான். சிறுவயதிலிருந்தே தம் நிலைமைக்கு மீறி தர்பாராய் வளர்ந்துவந்த சீனுவுக்குப் பெரியவனான பிறகு எங்குமில்லாத சவுடால்களும், உல்லாசங்களும் படிந்துவிட்டன. அவன் உடைகள் கசங்கக்கூடாது. கிராப் கலையக்கூடாது. தான் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த மிகச் சாமானியமான ஒருவன் என்று சொல்லிக் கொள்வதற்கு சீனுவின் தன்மானம் இடங் கொடுக்காது. எப்பொழுதும் செல்வந்தர்களோடு சிநேகம் பண்ணிக்கொண்டு, அவர்களைப் போலவே இருக்க வேண்டும் என்று முயன்று கொண்டிருக்கும் சீனுவின் மூலமாய், காளிதேவி பாலை விற்று நெய்யை விற்று, வரட்டியை விற்றுச் சம்பாதித்தவைகளும், ஜானகிராமன் வீரபத்திரனின் குழந்தைகளுக்காகத் தந்த பணமும், கற்பூரமாய் கரைந்து போகத் தொடங்கிற்று.

சீனு இந்த வருடம் கூட பரீட்சையில் தோற்றுப் போனான்.

பரீட்சை ரிசல்டுகள் வெளிவந்தது தெரிந்ததுமே காளிதேவி மகனிடம் வந்து ''பாசாகி விட்டாயாடா?'' என்று கேட்டாள் கலக்கத்தோடு.



பட்டணம் போவதற்காக டிப்டாப்பாய் தயாராகிக் கொண்டிருந்த சீனு ''இல்லை, தவறிவிட்டதும்மா'' என்றான்.

''உன் மூஞ்சியும் முகரையும்! திரும்பவும் ஃபெயிலாகி விட்டாயா? இந்த தடவை கண்டிப்பாய் பாசாகிவிடுவேன்னு அவ்வளவு வீறாப்பாய் சொன்னாயேடா!'' என்று சீறிப் பாய்ந்தாள் காளிதேவி.

''நான் பாசாகிவிடலாம்னுதான் நினைச்சுகிட்டிருந்தேன். ஆனால் அவங்க என்னை பாசாக்கவிட்டால்தானே?''

''நீ படித்தால் அவங்க என்டா ஃபெயிலாக்கப் போறாங்க? கர்ணத்தின் மகனைப் பார், ஒவ்வொரு வருஷமும் பாசாகிக்கொண்டே வரவில்லையா?''

''அவங்க மூஞ்சி! அவங்களுக்கென்ன தெரியுமா? மார்க்கைப் போட வெச்சிருப்பாங்க. அஸ்திவாரம் உறுதியாய் இருக்கணும் என்றால் ஒவ்வொரு கிளாசிலும் குறைந்தது மூன்று வருஷமாவது பெயிலாகிக் கொண்டிருக்கணும். என்னை யாருன்னு நினைச்சாய் அம்மா? காளிதேவியின் மகன் சீனு! எந்தக் காரியத்தைச் செய்தாலும் உறுதியாய்தான் செய்வேன்'' என்றான் காலரைத் தூக்கி விட்டுக்கொண்டே.

சீனுவின் சட்டைப் பையிலிருந்து ஒரு புகைப்படம் நழுவி விழுந்தது. காளிதேவி அதை எடுத்துப் பார்த்தாள். இரட்டைப் பின்னலுடன், பார்ப்போரைக் கவர்ந்திழுக்கக் கூடிய கண்களுடன் ஒரு பெண்ணின் புகைப்படம்! தன் ஜேபியிலிருந்து போட்டோ விழுந்ததையும் அதை தாய் எடுத்துப் பார்த்ததையும் கவனிக்காத சீனு கண்ணாடியை நோக்கித் திரும்பி தலைவாரிக்கொண்டே ''அடுத்த தடவை கண்டிப்பாய் பாசாகி விடுவேம்மா. பயப்படாதே'' என்று வாக்குறுதி அளித்தான்.

அதற்குள் காளிதேவி சீனு பெயிலானதற்குக் காரணத்தைத் தெரிந்துகொண்டு விட்டவளைப்போல ''உம், விஷயம் இதுதான்னு சொல்லு'' என்றாள். சீனு திரும்பினான். தாயின் கையில் தன் காதலியின் போட்டோ! பகீரென்றது அவனுக்கு.

''டேய்! எவன்டா இது?''

''சரிதா என்று என் சிநேகிதி''

''ஓஹோ! அப்படியா?'' காளிதேவி பலமாய் தலையை ஆட்டினாள்.

''இப்படிப்பட்ட கடைச்சரக்கோடு சிநேகம் பண்ணிக்கொண்டு படிப்பில் கழித்துக் கொண்டிருக்கிறாய்னுச் சொல்லு'' என்றாள்.

''கடைச்சரக்கா? கோடிக்கணக்கானச் சொத்திற்கு வாரிசான என் சரிதாவைப் பற்றி நீ இப்படித் தெரியாமல் தாழ்வாய் பேசினால் அப்புறமாய் நீயே பச்சாதாபப்பட வேண்டியிருக்கும்''

''கோடிக்கணக்கானச் சொத்திற்கு வாரிசா?'' ஃபோட்டோவைக் கிழித்துப் போடப்போன காளிதேவி டக்கென்று நிறுத்திக்கொண்டாள்.

''ஆமாம். கோடிகள்! ஒன்று இரண்டு இல்லை. பத்துக் கோடி! பத்துக்கோடிக்கு வாரிசு அவள்! ஒரே பெண்.''

''நிஜமாகவா? நிஜமாய்தான் இருக்கும். அந்தக் கண்களிலேயே மகாலட்சுமி இருக்கிறாள்'' போட்டோவை மற்றொரு முறை உற்றுப் பார்த்தாள். தாயின் முகத்தில் பணம் என்ற பெயரைக் கேட்டதுமே ஏற்பட்ட மாறுபாட்டைப் பார்த்துவிட்டு, இதுதான் சமயம் என்று சொல்லிவிட்டான்,

''ஆமாம்மா, கோடிகளுக்கு வாரிசான சரிதா என்னைக் காதலிக்கிறாள். ஆனால் நான் ஒன்றும் இல்லாத பிச்சைக்



காரன் என்று அவள் அப்பா எங்கள் கல்யாணத்திற்குச் சம்மதிக்கவில்லை.''

''என்ன சொன்னார்?''

''ஒன்றுமில்லாத பிச்சைக்காரன் என்றார்.''

''அடேய், எவன்டா அவன்?'' உறுமினாள் காளிதேவி.

''எவனாயிருந்தால்தான் நமக்கென்ன வந்தது? என்ன சொன்னால்தான் நமக்கென்ன வந்தது? சரிதா என்னுடையவள். எனக்கு மனதைக் கொடுத்துவிட்டாள். என்னைத்தவிர வேறு யாரையும் மணம் செய்துகொள்ளமாட்டேன் என்று பீஷ்ம சபதம் எடுத்துக்கொண்டுவிட்டாள்.''

''அப்புறம் என்ன வந்தது? நிஜமாய் ஒப்புக்கொண்டு விட்டாளாடா?''

''உன் மேல் ஆணைம்மா'' தைரியமாய் சத்தியம் போட்டுவிட்டான் சீனு.

''சரி, ஜாக்கிரதையாய் இரு. அந்த மூன்று முடிச்சு விழுகிறவரைக்கும்.''

''ஜாக்கிரதையாய்தான் இருக்கேம்மா.''

''போகட்டும். படிப்புப் போனால் போகட்டும். லட்சணமான பெண்ணாவது கிடைத்தாளே'' காளிதேவி மகிழ்ந்து போய் விட்டாள்.

# 5

சீனு அவ்வளவு தவித்துப்போய், 'பரீட்சையில்பெயிலாகி' அல்லும் பகலும் சொல்லிக் கொண்டிருந்த அந்த சரிதா வேறு யாரோ இல்லை. அன்று காளிதேவி சாருமதிக்கும் சிதம்பரத்திற்கும் ஐநூறு ரூபாய்க்கு விற்றுக் கையைக் கழுவிக்கொண்ட பச்சிளம் குழந்தைதான்! குழந்தைக்கு சரிதா என்று பெயர் வைத்தார்கள் அத்தம்பதிகள். சரிதா வளர வளர நாளுக்கு நாள் அவள் அழகும் மிளிரத் தொடங்கியதைப் பார்த்துப் பரவசமடைந்தார்கள் சிதம்பரம் தம்பதிகள். அந்த ஊரில் இருந்த 'ஜானகிராம் ரைஸ் மில்'லில் குமாஸ்தாவாய் வேலைபண்ணி வந்தார் சிதம்பரம். வந்த சம்பளத்தில் முடிந்தவரை சேமித்துவைத்து, சரிதாவுக்கு எந்தக் குறையும் இல்லாதவாறு வளர்த்து வந்தார்கள்.

சரிதா சுபாவத்தில் கத்தியைப் போன்றவள். தான் யாரையும் வீணாய் வம்பிற்கிழுக்கமாட்டாள். தன்னை யாராவது இழுத்தாலும் சகித்துக் கொண்டிருக்கமாட்டாள். எப்பொழுதும் ஆடிப்பாடிக்கொண்டு சந்தோஷமாய் கழிக்க வேண்டும் என்ற மனத்தத்துவம் கொண்டவள். அவளிடம் ஒருவிதமான பொறுமை இன்மையும், கண்களில் குறும்புத்தனமும், பரபரப்பும் தென்பட்டுக் கொண்டிருக்கும்.

வாழ்க்கை என்றால் வருத்தத்தோடும் வேதனையோடும், பொறுப்புக்களோடும், பாரமாய் கழித்துக் கொண்டிருப்பது அல்ல, உல்லாசமாய் பொழுதுபோக்காய் ஆடிப்பாடிக்கொண்டு சந்தோஷமாய் கழிப்பதுதான் என்பது அவள் உத்தேசம். சரிதாவிடம் உள்ள கலகலப்பாய் பேசும் குணத்தையும், குறும்புத்தனத்தையும் பார்த்து நிறைய பேர் அவளைத் தவறாய் புரிந்து கொண்டுவிடுவார்கள்.



சரிதாவுக்குப் படிப்பின் மீது சிரத்தை இல்லை. ஸ்கூல் ஃபைனலில் பெயிலாகிவிட்ட சரிதாவை சிதம்பரம் தம்பதிகள் நர்ஸ் ட்ரெயினிங்கிற்கு அனுப்பினார்கள். சரிதாவின் சுபாவத்திற்கும் நர்ஸ் பயிற்சிக்கும் பொருத்தி வரவில்லை.

அந்த உடல் உபாதைகள், நோய்கள், சேவைகள் எல்லாம் முடியாது என்று தெளிவாய் சொல்லிவிட்டு, நர்ஸ் பயிற்சி முடிந்தும் கூட எங்கும் நர்ஸாய் சேரவில்லை.

டைப் கற்றுக்கொண்டு ஏதாவது ஒரு உத்யோகம் பார்த்துக் கொள்கிறேன் என்றுச் சொல்லவே சிதம்பரம் டைப் கற்றுத் தந்தார். டைப் கற்றுக் கொள்வதற்காக தினந்தோறும் இன்ஸ்டிடியூட்டிற்குப் போய்விட்டுத் திரும்பும் பொழுது அதே வழியில் காலேஜுக்குப் போய்விட்டுவரும் சீனு முதல் பார்வையிலேயே சரிதாவுக்குத் தன் உயிரைத் தந்துவிட்டான்.

கொஞ்சம் மிடுக்காய் இருக்கும் அப்பார்வையும், ஒய்யாரமான நடையும், செதுக்கினாற்போன்ற உடற்கட்டும், எதிராளியை வலைபோட்டு இழுக்கும் அக்கண்களும், அதிலிருந்த பரபரப்பும் அவனைப் பைத்தியமே பிடிக்கும்படிச் செய்துவிட்டன. அதிலிருந்து அவன் காலேஜுக்கு மட்டம் போட்டுவிட்டு, சினிமாக்களுக்குப் போவதை விட்டுவிட்டு, சிநேகிதர்களைத் துறந்துவிட்டு, தினமும் சரிதா டைப்பிற்கு வரும் வேளையில் அந்த வீதியில் பழியாய் கிடக்கத் தொடங்கினான்.

சரிதா முதலில் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. போகப் போக அவனுடைய சாதுவான தன்மையும், ஸ்கூட்டரில் லிஃப்ட் தருவதாய் மரியாதையாய் கேட்பதும் தேவையில்லை என்று அவள் அலட்சியமாய் சொல்லிவிட்டால் ''சாரி, நீங்கள் என்னைத் தவறாய் புரிந்துகொண்டுவிட்டீங்க'' என்று மன்னிப்பு கேட்டுவிட்டு மரியாதையாய் போய்விடுவதும், வீட்டிற்குப் பெயர் இடப்படாமல் பரிசு

களை அனுப்புவதும் இவைகளையெல்லாம் பார்த்த பிறகு சரிதாவின் மனது கொஞ்சம் சீனுவின் பக்கமாய் சாயத் தொடங்கிற்று. சீனு தமாஷாய் பேசினான்.

எப்பொழுதும் எதையாவது சொல்லிச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான். அவன் உடுத்தும் ஆடைகள் விலையுயர்ந்தவை. பணப்பசை உள்ளவன் என்று பேச்சைக் கொண்டு தெரிந்தது. சீனு லட்சாதிபதி என்றும், தன் மீது அவனுக்கு உண்மையான அன்பு இருக்கிறதென்றும் தெரிந்துகொண்ட சரிதா அவனோடு சுதந்திரமாய் சுற்றத் தொடங்கினாள்.

சரிதாவையும் சீனுவையும் சேர்ந்து ஒரு முறை பார்த்து விட்ட சிதம்பரம் வீடு திரும்பியதுமே மகளைக் கூப்பிட்டுக் கண்டபடி திட்டினார். ''வயது வந்த பெண். இப்படிச் சுற்றிக்கொண்டிருந்தால் அப்புறமாய் உனக்குக் கல்யாணம் பண்ணிவைக்க எங்களால் முடியாது'' என்று கண்டித்தார்.

''என் கல்யாணத்தை நீங்கள் ஒன்றும் பண்ணிவைக்கத் தேவையில்லை. எனக்குப் பிடித்தவனை, பணக்காரனாப் பார்த்து நானே பண்ணிக்கொள்வேன்'' என்றாள் திடமாய் சரிதா.

சிதம்பரம் ஏதோ சொல்ல வந்தபொழுது சாருமதி அவரைத் தடுத்துப் பேசாமலிருக்கும்படிச் சொன்னாள். சாருமதிக்கு சரிதாவின் மேல் கண்மூடித்தனமான பாசம். தன் மகள் மிகவும் புத்திசாலி என்றும், சிந்தித்துப் பார்க்கும் இயல்பு கொண்டவள் என்றும், அவளுக்குச் சுதந்திரம் கொடுத்தால் அவள் தன் வாழ்க்கையைத் தன்னைவிட நன்றாகவே அமைத்துக்கொள்வாள் என்றும் அவள் நம்பினாள். சிதம்பரம் ஏதாவது குறுக்கிட்டுக் கண்டித்தால், சாருமதி அவரைத் தடுத்துவிட்டு சரிதாவின் பக்கமாகவே பேசியதாலும் மொத்தத்தில் சரிதாவுக்குத் தாய் தந்தையர் மீது பயம் இல்லாமல் போயிற்று.

# 6

சரிதா அன்று மாலையில் டிப்டாப்பாக தயாராகி சினிமாவுக்குப் புறப்பட்டாள். சீனு காசினோவில் நல்ல சினிமா ஓடுவதாகவும், தான் தியேட்டருக்கருகில் காத்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னான். சினிமாவுக்குப் போய்க் கொண்டிருந்த வழியில் சரிதாவுக்கு சுதாமன் எதிர்ப்பட்டான். சுதாமன் சீனுவின் ரூம்மேட். சரிதாவின் மீது சீனுவுக்கு எவ்வளவு உரிமை இருந்ததோ அவ்வளவு உரிமை தனக்கும் உண்டு என்பது அவன் வாதனை. சரிதா சீனுவைக் கவர்ந்தாற்போலவே சுதாமனையும் கவர்ந்திருந்தாள். ஆனால் தன்னை விழுங்கிவிடுவதுபோல பசியோடு பார்க்கும் சுதாமனைக் கண்டால் சரிதாவுக்கு வெறுப்பாய் இருக்கும்.

''ஹலோ சரிதா, எங்கே போகிறாய்?'' என்று கேட்டான் சுதாமன்.

''சினிமாவுக்கு'' சரிதா மரியாதையாகவே பதிலளித்தாள். எதற்கும் நல்லது துஷ்டர்களை விட்டு விலகி நில் என்று சொல்லியிருக்கிறார்கள்!

''நானும் சினிமாவுக்கு தான்'' என்று சொல்லிக்கொண்டே சரிதாவுடனேயே நடக்கத் தொடங்கினான் சுதாமன்.

சரிதாவுக்குக் கோபம் வந்துவிட்டால் அடக்கிக்கொள்ள அவளால் முடியாது. ''நான் போகிற சினிமா உனக்குப் பிடிக்காது'' என்றாள்.

''நீ பக்கத்தில் இருந்தால் எந்த சினிமாவாய் இருந்தாலும் பிடிக்கும் எனக்கு.''

''என்ன சொன்னாய்?''

''உன்னை எனக்கு ரொம்ப பிடிக்கும்னுச் சொல்கிறேன். இதைச் சொல்லணும்னு எவ்வளவு நாளாய் தவித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா?''

''வாயை மூடு''

''ஏன் அவ்வளவு கோபம்? நான் சீனுவைவிட தாழ்ந்து விட்டேனா?''

''சீனுவின் காலடி தூசிக்குக்கூட சமமாகமாட்டாய் நீ''

சுதாமன் சரிதாவின் கையைப் பிடித்துக் கொண்டான். சரிதா அவன் கன்னத்தில் சுளீரென்று ஒன்று கொடுத்தாள்.

ஆத்திரமடைந்த சுதாமன் சரிதாவை அவமானப்படுத்த முயன்றான். சரிதா ''சீ! விடு! விடு'' என்று திமிறத் தொடங்கினாள்.

அதே சமயத்தில் தங்கையை கடைக்கு அழைத்துச் சென்று புடவைகள் முதலியவைகளை வாங்கித் தந்துவிட்டு ரிக்ஷாவில் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த சுதாகர் இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு ரிக்ஷாவை ''நில்'' என்றான். ரிக்ஷா நின்றதும் குதித்து சுதாமனை நோக்கி ஓடிவந்து அவன் கைகளிலிருந்து சரிதாவை விடுவித்து. கோபமாய் ''ஏய்! இதென்ன அக்கிரமம்! உனக்கு புத்தி இல்லையா?'' என்றான்.

''உங்களுக்குத் தெரியாது சார்! நீங்கள் அப்பால் போங்கள். இது எங்கள் சொந்த விஷயம்'' என்று திரும்பவும் சரிதாவின் கையைப் பிடித்து இழுத்தான்.

சுதாகர் சுதாமனின் கையில் ஓங்கி அடித்துவிட்டு, சட்டையைப் பிடித்து அப்பால் இழுத்தான். சுதாமன் சுதாகரின் மேல் பாய்ந்தான். கொஞ்ச நேரம் ராம ராவண யுத்தம் நடந்தது. சுதாகரின் கையில்



எலும்புகள் முறிந்தாற்போல உதை வாங்கிய சுதாமன் எப்படியோ எழுந்து, தள்ளாடிக் கொண்டே போனவன் சரிதாவைக் குரூரமாய் பார்த்துக் கொண்டே ''அதையும் பார்த்துடறேன். என் கையிலிருந்து எப்படி தப்பிக்கப் போகிறாய்னு?'' என்று சபதமிட்டு விட்டுப் போனான்.

''கிழித்தாய்'' சரிதா அலட்சியமாய் பதிலளித்தாள் தலையைத் திருப்பிக் கொண்டு சரிதாவின் முழங்கைக் கருகில் அடிபட்டு ரத்தம் வழிந்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த சித்ரா சரிதாவிடம் தம் வீடு அருகாமையில் தான் இருக்கிறது என்றும் வீட்டிற்கு வந்து கட்டுக்கட்டிக் கொண்டு போகும்படியும் சொன்னாள்.

''வாம்மா! யுத்தம் பண்ணி களைத்துப் போய் விட்டாய் அல்லவா? கொஞ்சம் காபியைக் குடித்து விட்டுப் போகலாம்'' என்றான் சுதாகர்கூட.

ஃ ஃ ஃ

மூவரும் வீட்டிற்கு வந்தார்கள். சித்ரா சரிதாவின் கைக்குக் கட்டுப்போட்டாள். காபி கொண்டு வந்து இருவருக்கும் தந்தான் சுதாகர்.

கட்டிலில் மிக நெருங்கியவர்களைப் போல பக்கத்தில் உட்கார்ந்துக் காபி குடித்துக் கொண்டிருந்த அவ்விருவரையும் பார்த்தபொழுது சுதாகருக்கு ஏனோ தாங்க முடியாத சந்தோஷம் ஏற்பட்டது.

சித்ரா சரிதா வீட்டு விஷயங்களைக் கேட்டாள்.

சரிதா சித்ராவுக்குத் தாய் தகப்பனார் கிடையாது என்றறிந்ததும் இரக்கம் காட்டினாள்.

''நான் வரேனுங்க'' கொஞ்ச நேரங்கழித்து சரிதா எழுந்திருந்தாள்.

''வீடு வரைக்கும் கொண்டு வந்து விடட்டுமா அம்மா?'' என்று கேட்டான் சுதாகர்.

''தேவையில்லைங்க, எனக்கு பயம் ஒன்றும் இல்லை'' தைரியமாய் சொன்னாள் சரிதா. சுதாகருக்கு ஏனோ தெரிய வில்லை, அந்தப் பெண் இன்னும் கொஞ்ச நேரம் தன் வீட்டில் இருந்திருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன் றிற்று. சரிதா போன பிறகு சித்ரா சொன்னாள் ''இந்தப் பெண் ரொம்ப விநோதமான குணம் படைத்தவளாய் இருக் கிறாள். சற்று முன்னர் தானே நடுத்தெருவில் அவ்வளவு அவமானப்பட்டாள்! ஆனாலும் உடனேயே பயமில்லாமல் தைரியமாய் தனியாய் வீட்டிற்குப் போகிறாள். அப்பப்பா! அந்த ஆளை நினைத்துப் பார்த்தாலே உதறல் எடுக்கிறது எனக்கு'' சரிதா வீதியில் திமிறிக் கொண்டிருந்தக் காட்சி நினைவிற்கு வந்ததுமே நடுங்கிப் போனாள் சித்ரா. பயத்தால் அவள் உடம்புச் சிலிர்த்தது.

''இந்த காலத்தில் படித்து உத்யோகங்களைப் பண்ணு கிற பெண்கள் அடிக்கடி வீட்டை விட்டு வெளியே போக வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பெண்களுக்கு இந்த அளவிற்காவது தைரியம் இருக்க வேண்டும். வீதியில் போய்க் கொண்டிருக்கும் போது யாரோ அயோக்கியன் ஏதோ சொல்லிவிட்டான் என்பதற்காகத் தெருவில் நடக்கவே பயந் தால் எப்படி? உண்மையிலேயே ரொம்ப தைரியசாலியான பெண்ணாய் தான் தோன்றுகிறாள்'' என்றான் சுதாகர்.

❀ ❀ ❀

ஜானகிராமன் கூட அதே ஊரில்தான் இருந்தான்.

அவன் மகன் விக்கிரமன் கூட பெரியவனாகி விட்டான். காலேஜில் விக்கிரமனுக்கு சீனு, சுதாமனுடன் சிநேகம் ஏற்பட்டது.

வீட்டில் மிக அருமையாய், மிக நல்லவரான தந்தையின் அரவணைப்பில் வளர்ந்த விக்கிரமனுக்கு உலக விஷயம் அவ்வளவாய் தெரியாது. வெளுத்ததெல்லாம் பால் என்றெண்ணிக் கொள்ளும் மனிதன் அவன்.



விக்கிரமனுக்குத் தந்தையிடம் பயம். படிப்பின் மீது வெறுப்பு. வாழ்க்கை என்றால் உல்லாசம்! வீட்டில் இருந் தால் எப்பொழுது பார்த்தாலும் படிப்பு படிப்பு என்று மிரட்டிக் கொண்டிருக்கும் தந்தைக்கு முன்னிலையில் அவன் மனம் கூண்டிற்குள் தவிதவித்துக் கொண்டிருக்கும் பறவையைப் போல படபடத்துக் கொண்டிருக்கும். எப்பொழுது சிநேகிதர் களோடு சேர்ந்து விளையாடப் போவோம் என்றிருக்கும். சீனுவை அவனுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. எப்பொழுதும் சிரித்துக் கொண்டே, பிறரையும் சிரிக்க வைத்துக் கொண்டேயிருக்கும் சீனுவைக் கண்டால் விக்கிரம னுக்கு மிகவும் பிடிக்கும். தங்க முட்டையிடும் வாத்தைப் போன்ற விக்கிரமனின் அரவணைப்பின் கீழ் சீனுவும் சுதாம னும் சாமர்த்தியமாய் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டும், வாழ்க்கையைப் பற்றி தமக்கு தான் எல்லாம் தெரியும் என்பது போல காட்டிக் கொண்டும், பிக்னிக், ஊர்ச் சுற்றுதல் என்று எல்லா இடங்களுக்கும் விக்கிரமனை வரச் சொல்லி உற்சாக மூட்டிக்கொண்டும், அவன் மூலமாய் நாலு பேரோடு பரிச்சியம் செய்து கொண்டும் விக்கிரமனுக்குப் பின்னால் நாடகமாடிக் கொண்டிருந்தார்கள்.

சீனுவைப் போலவே இந்த ஆண்டும் விக்கிரமன் பரீட்சை யில் தோற்றுப் போனான். மகனின் எதிர்காலத்தைப் பற்றி நிறைய கற்பனைகளை பண்ணிக் கொண்டு, அவனை ஒரு பெரிய போலீஸ் அதிகாரியாக்க வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த ஜானகிராமனுக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாகி விட்டது.

அண்ணன் மகள் ஜமுனா விக்கிரமனோடு சேர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். பெண் பிள்ளையாய் இருந்தா லும் எல்லாவற்றிலும் முதல் வகுப்பில் இருந்தாள். அண்ணன் ராஜாராமுக்கு அடிக்கடி ட்ரான்ஸ்ஃபர் ஆகிக் கொண்டே யிருந்ததால் மகள் படிப்பு கெட்டுவிடக் கூடாதே என்ற உத்தேசத்துடன் ஜெயந்தியை தம்பி ஜானகிராமனிடமே

விட்டு விட்டுப் போயிருந்தான். தாய் தந்தையர் பக்கத்தில இல்லாமல் போனாலும் ஜமுனா தன் படிப்பை என்றுமே அலட்சியம் பண்ணியதில்லை.

முன் ஹாலில் சோபாவில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்து போய் விட்டிருந்த ஜானகிராமனுக்கு நன்றாய் டிரெஸ் பண்ணிக் கொண்டு வெளியே போய்க் கொண்டிருந்த மகன் தென் பட்டான்.

''டேய்! இப்படி வா!'' என்று கூப்பிட்டான்.

விக்கிரமன் கிட்டே வந்தான். மிக விநயமாய் தந்தைக்கு முன்னால் வந்து நின்றான்

''ரிசல்ட் வந்திருக்கு. பேப்பரைப் பார்த்தாயடா?'' விக்கிரமன் பார்த்தான். ஆனால் பார்க்கவில்லை என்று தலையாட்டினான்.

''ஏன் பார்க்கப் போகிறாயடா? பார்க்கிறத்துக்கு தைரியம் இருந்தால் தானே? எவ்வளவு தடவை சொல்லி யிருப்பேன்! நீ இப்படிச் சுற்றுவதற்கும், பணத்தை வாரி யிறைத்துச் செலவு பண்றத்துக்கும் கூட நான் ஒன்றும் சொல்லமாட்டேன்; பரீட்சையில் மட்டும் பாஸ் பண்ணி விடுன்னு சொன்னேன்.''

விக்கிரமன் பதில் பேசவில்லை. தலைகுனிந்தபடி நின்றான். அதற்குள் ஜமுனா வந்தாள் அங்கே.

''வாம்மா, வா! பாசாகி விட்டதாய் அப்பாவுக்கு டெலிகிராம் தந்தாயா?''

''இதற்குப் போய் டெலிகிராம் எதுக்கு சித்தப்பா? அப்பா பேப்பரைப் பார்க்காமல் இருந்திருப்பாரா?''

''என்னவோம்மா! ஆபிசு வேலையில் ஆழ்ந்து போய் விட்டால் உங்கப்பாவுக்கு வேறு எந்த விஷயமும் ஞாபகம் இருக்காது. எதற்கும் நல்லது. நீ கடிதம் போட்டு விடு''



''சரி சித்தப்பா''

''பாருடா! பெண் பிள்ளை எவ்வளவு ஜாக்கிரதையாய் படித்து லட்சணமாய் பாசாகிவிட்டாள்னு! உனக்கு மட்டும் வெட்கம் இல்லாமல் போயிடுத்தாடா?''

''சும்மாயிரு சித்தப்பா! பரீட்சையில் பெயிலாகிவிட்டோ மென்று அண்ணா ஏற்கனவே வருத்தப்பட்டுக் கொண்டிருக் கும்பொழுது நீ வேறு இப்படிப் பேசுகிறாயே! இந்த வருஷம் இல்லாவிட்டால் அடுத்த வருஷம் பாசாகிறான்'' ஜமுனா விக்கிரமனுக்குத் தந்தையைவிட சித்தப்பாவிடந்தான் அதிக ஒட்டுறவு இருந்தது. தந்தையிடம் நேரிடையாய் பேசமாட் டான் விக்கிரமன். தனக்கு எது வேண்டுமென்றாலும் ஜமுனா வைக் கொண்டுதான் கேட்கச் சொல்லுவான்.

ஃ ஃ ஃ

ராஜாராம் உத்யோகம் பண்ணிக் கொண்டிருந்த ஊரில் மாலை நேரம்...

அவர் வராந்தாவில் உட்கார்ந்து பைப் புகைத்துக் கொண்டே பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

''போஸ்ட்'' என்று ஒரு கடிதத்தைத் தந்துவிட்டுப் போனான் போஸ்ட்மேன்.

''பொண்ணு எழுதியிருக்கிறாள்'' என்று ஆர்வத்துடன் பிரித்துப் படித்த அவருடைய புருவங்கள் நெளிந்தன. வாயிலிருந்த பைப்பை எடுத்துக் கீழே வைத்துவிட்டு ''பத்மா! பத்மா!'' என்று குடியே மூழ்கிப் போய்விட்டாற் போல கத்தினார்.

சமையலறையில் சமையல்காரனுக்கு ராத்திரிக்கு என்ன பண்ணவேண்டும் என்று உத்தரவிட்டு கொண்டிருந்த பத்மா கலக்கத்துடன் சட்டென்று ஓடி வந்தாள் வெளியே.

''உன் மகள் கடிதம் எழுதியிருக்கிறாள்'' என்றார் அவர் கோபமாய்.

''என்ன எழுதியிருக்கிறாள்?'' என்றாள் அவள் பயந்துபோய். அவர் தோரணையைப் பார்த்தால் ஜமுனா ஏதோ செய்யக் கூடாத காரியத்தைப் பண்ணி விட்டு, கடிதத்தின் மூலமாய் தெரியப்படுத்தினாற்போல இருந்தது.

''வேறென்ன? பெயிலாகி விட்டாள். சுதாகர் செகண்ட் கிளாஸில் பாசாகியிருக்கானாம்.''

''ஜமுனா ஃபெயிலாகி விட்டாளா?'' நம்பமுடியாமல் பார்த்த பத்மா கணவனின் கையிலிருந்த கடிதத்தை உருவிக் கொண்டு படிக்கத் தொடங்கினாள்.

''நான் வேண்டாம்னு சொன்னபோது என் பேச்சைக் கேட்டாயா? நம்ப பொண்ணு நம்மிடந்தான் இருக்கணுமே தவிர வேறு இடத்தில் எதற்காக இருக்கணும்? தம்பிக்கு என்ன தெரியும்? காலேஜுக்குப் போயிட்டு வரதைப் பார்த்துட்டுப் படித்துக் கொண்டு தான் இருக்கிறாள் போலிருக்கு என்று எண்ணிக் கொண்டிருப்பான்'' என்றார் கோபத்துடன்.

''அப்பப்பா! நிறுத்துங்கள். நீங்கள் கடிதத்தைச் சரியாய் கூட பார்க்காமல் இதென்ன ரகளை? இதில் ஜமுனா தான் செகண்ட் கிளாஸில் பாசாகியிருக்கிறேன் என்றும், விக்கிரமன் ஃபெயிலாகி விட்டான் என்றும் எழுதியிருக்கிறாள். பலே ஆள்தான் நீங்கள்! கலங்கடித்து விட்டீங்களே என்னை!''

''ஆங்! அப்படியா? எங்கே கொண்டா'' மறுபடியும் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். தன் தவற்றை உணர்ந்த அவர் சமயோஜிதத்துடன் ''ஆங்! அப்படிச் சொல்லு! என் பெண்ணாவது ஃபெயிலாகிறதாவது! நான் அப்பொழுதே நினைத்தேன்'' என்றார்.



''அழகுதான்'' அவள் கன்னத்தில் இடித்துக் கொண்டே உள்ளே போனாள்.

# 7

ஜமுனா தான் பாசானதற்காக சிநேகிதிகளுக்கு பார்ட்டி தந்தாள். எல்லோருமாய் சேர்ந்து சாரங்கபாணியின் ஓட்டலுக்கு வந்தார்கள்.

ஃபேமிலி ரூமிற்குள் அடியெடுத்து வைப்பதற்காக ஜமுனா கதவைத் திறக்கப் போனபொழுது அவ்வறைக்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்த சுதாகரைப் பார்த்தாள். இருவரும் ஒருவர் மீது இன்னொருவர் மோதிக் கொள்ளப் போய் சமாளித்துக் கொண்டார்கள். ஜமுனாவின் கையிலிருந்த பர்ஸ் நழுவிக் கீழே விழுந்தது. ஜமுனா சட்டென்று குனிந்து எடுக்கப் போனாள். இருவர் தலைகளும் டக்கென்று மோதிக் கொண்டன. ஜமுனா பாம்பைப்போல சீறிக்கொண்டே நிமிர்ந்து நின்று கோபமாய் ''கண் தெரியவில்லையா?'' என்றாள்.

''தெரிகிறது. அதனால்தான் பர்ஸை எடுத்துத் தரலாம்னு குனிந்தேன்.'' சுதாகர் குறும்பாய் பதிலளித்தான்.

''உம்'' பர்ஸை அவனிடமிருந்து உருவிக் கொண்டு உர்ரென்று பார்த்து விட்டு உள்ளே போய் விட்டாள். ஜமுனாவைச் சுற்றிலுமிருந்த பெண் எதிர்பாராத இக்காட்சியைப் பார்த்துவிட்டு கலகலவென்றுச் சிரித்துக்கொண்டே ஜமுனாவைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தார்கள். சுதாகர் தோளைக் குலுக்கிக் கொண்டே ''உம், குறைந்தபட்சம் தாங்க்ஸ் கூட சொல்லவில்லை'' என்றான்.

''எதுக்கு? நெற்றியை உருண்டையாக்கினதற்கா?'' யாரோ ஒருத்தி கேட்டாள்.

சுதாகர் நெற்றியைத் தடவிப் பார்த்துக் கொண்டான். உண்மையாகவே நெற்றி புடைத்துப் போய் விட்டிருந்தது.

சுதாகர் நெற்றியைத் தடவிக் கொண்டே ஃபேமிலி ரூமில் ஆர்டர் வாங்கிக் கொள்வதற்காகப் போனான்.

''பாய், என்னென்ன இருக்கு?'' என்று திரும்பிப் பார்த்த ஜமுனா, சிரிப்பை அடக்கிக் கொண்டே தீவிரமாய் பார்த்து ''மறுபடியும் இங்கேகூட வந்துவிட்டாயா?'' என்றாள். சுதாகர் சிம்பிளாய் தன் யூனிஃபாரத்தைச் சுட்டிக் காட்டினான்.

''என்ன இருக்கிறது?''

''ஸ்வீட்ஸ்: குலாப்ஜாமுன், மைசூர்பாக், ரசகுல்லா, பாதாம் அல்வா, பாதுஷா, ஜாங்கிரி. ஹாட்ஸ்: பூந்தி, பக்கோடா, பஜ்ஜி, வடை, இட்லி, தோசை, பூரி'' வழக்கப் பிரகாரம் கடகடவென்று ஒப்பித்தான்.

ஜமுனா காதுகளைப் பொத்திக் கொண்டு ''அப்பப்பா! நிறுத்து உன் தண்டகத்தை!'' என்றாள் அலுத்துக் கொண்டே. சுதாகர் நிறுத்தினான்.

''என்ன சாப்பிடறீங்க நீங்க? வரிசையாய் சொல்லுங்கள்'' சிநேகிதிகளை ஆங்கிலத்தில் கேட்டாள்.

''பாசாயிட்டு பார்ட்டி கொடுக்கிறவள் நீ. நீயே ஆர்டர் பண்ணு'' என்றாள் ஒருத்தி.

''குலாப்ஜாமுன் ஆர்டர் தரட்டுமா?'' என்றாள் ஜமுனா.

''சே, எனக்குப் பிடிக்கவே பிடிக்காதுப்பா.''

''சரி, ஜாங்கிரி?''



''ஊஹூம். அந்தப் பெயரைக் கேட்டாலே எனக்கு ஆகாது.''

சுதாகருக்கு சந்தர்ப்பம் புரிந்துவிட்டது. ஆர்டரை வாங்கிக் கொள்ளாமலேயே போய் விட்டான்.

''எனக்கு பாதுஷா'' என்றாள் ஒருத்தி.

''சரி, உனக்கு?''

''பாதாம் அல்வா''

''அப்ப உங்கள் மூவருக்கும்?''

''எதாய் இருந்தாலும் பரவாயில்லை.''

''சரி, இந்தா சர்வர்'' என்று திரும்பிய ஜமுனா அருகே சர்வர் இல்லாததைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கி, ''விடிஞ்சுது போ! நாம்ப சொல்றத்துக்குள் அந்த புண்ணிய காலம் கழிந்து போயிடுத்து. இந்த சர்வர் இன்னொரு இடத்திற்குக் கம்பிநீட்டிவிட்டான்'' என்றாள்.

அதற்குள் சுதாகர் இரண்டு பிளேட்டுகள் நிறைய எல்லா தினுசு சுவீட்டுகளையும் ஹாட்ஸ்களையும் எடுத்து வந்து மேஜை மீது அவர்கள் எல்லோருக்கும் நடுவில் வைத்தான்.

''இதென்னது? யார் கொண்டுவரச் சொன்னாங்க இதையெல்லாம் உன்னை?'' ஜமுனா கோபமாய் கேட்டாள்.

''பாசாகியிருக்கீங்க இல்லையா? பார்ட்டி என்றால் எல்லா ரகங்களும் இருக்கவேண்டும் இல்லையா? அதனால் கொண்டு வந்தேன்'' வினயமாய் சொன்னான் சுதாகர்.

ஜமுனா திடுக்கிட்டுப் போய் பார்த்தாள்.

''செத்தோம்ப்பா! உனக்கு இங்கிலீஷ்கூட வருமா?''

''ஏதோ அவ்வப்பொழுது உங்களைப் போன்ற படித்த பெண்கள் பேசிக்கொண்டிருக்கும்போது கேட்டு...''

''சரி. போய் காபி கொண்டா. இதப் பார்; ஸ்ட்ராங்காய் இருக்கணும்.''

''டபுள் ஸ்ட்ராங்காய் கொண்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு சுதாகர் போய்விட்டான்.

''எவனோ. கர்வம் பிடித்தவனாய் இருக்கிறான்'' என்றாள் ஜமுனா கோபமாய்.

''இல்லை! ஹீரோவை போல அழகாய் இருக்கிறான்'' என்றாள் இன்னொருத்தி.

''காதலிக்க கீதலிக்கத் தொடங்கிவிடப் போகிறாய். உங்கப்பா காதை பிடித்து முறுக்கிவிடப் போகிறார் ஜாக்கிரதை!'' என்றாள் ஜமுனா வேடிக்கையாய்.

''உன்னோடுகூட சேர்ந்து படிக்கிறோமே தவிர உன்னைப்போல எங்களுக்கு சுதந்திரம் எது? அப்படி ஏதாவது செய்தால் நீதான் பண்ணனும். நீ என்ன பண்ணினாலும் உங்கப்பா மறுப்புத் தெரிவிக்கமாட்டார்'' என்றாள் இன்னொருத்தி.

''நானா? சீ. சீ! அந்த மாதிரி பைத்தியக்கார வேஷங்கள் எல்லாம் நம்பளிடம் இல்லை'' ஜமுனா சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே சுதாகர் காபி அத்துடன் பில்லையும் கொண்டுவந்து வைத்தான்.

ஜமுனா பையைத் திறந்து பில்லில் இருந்ததை காட்டிலும் இன்னும் இரண்டு ரூபாய்களை பிளேட்டில் வைத்தாள்.

''இதென்ன இரண்டு ரூபாய்களை அதிகமாய் வைத்துவிட்டீங்களே!'' என்று சுதாகர் அந்தச் சில்லறைகளை ஜாக்கிரதையாய் கணக்கிட்டு பிளேட்டில் வைத்து விட்டான்.

''அது உனக்கு டிப்ஸ். எடுத்துக்கொள்'' பெருமையாய் சொன்னாள் ஜமுனா.

''எனக்கா? சீ. சீ! அப்படிப்பட்ட பைத்தியக்கார வேஷங்கள் எல்லாம் நம்பளிடம் இல்லைங்க.''



''என்ன சொன்னாய்?'' ஜமுனா சரேலென்று எழுந்திருந்தாள்.

''டிப்ஸ் வாங்கிக் கொள்கிற பழக்கம் எனக்கு இல்லை என்கிறேங்க'' சுதாகர் வினயமாய் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

ஜமுனா காபிகுடித்து முடித்த பிறகு, பேசவதற்கு முன்னால் மளமளவென்று முதலாளி சாரங்கபாணி உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து சுதாகரைக் காட்டி ''இவன் யாரோ ரொம்ப தலை கர்வத்தோடு பதில் சொல்கிறான். எங்களைப் போன்ற மதிப்பானவர்கள் உங்கள் ஓட்டலுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இந்த நிமிஷமே இவனை இந்த ஓட்டலிலிருந்து துரத்திவிடுங்கள்'' என்று சொல்லி விடுவிடென்று போய்விட்டாள்.

''என்ன சுதாகர்? என்னவாச்சு?'' சாரங்கபாணி கலக்கமடைந்தவராய் கேட்டார்.

''ஒண்ணுமில்லைங்க, டிப்ஸ் வாங்கிக் கொள்கிற பழக்கம் இல்லைன்னு சொன்னதைக் கேட்டு அந்தப் பெண் தன்னை அவமானப்படுத்திவிட்டதாய் நினைத்துக்கொண்டு விட்டாள்'' என்றான் சுதாகர்.

''இந்தத் தொல்லையெல்லாம் உனக்கு எதுக்குப்பா? லட்சணமாய் பி.ஏ. பாஸ் பண்ணிவிட்டாய். சர்வர் வேலையை விட்டுவிடுன்னு சொன்னாலும் கேட்கமாட்டேங்கிறாய்'' என்றார் சாரங்கபாணி வருத்தத்தோடு.

''பரவாயில்லைங்க. சர்வர் வேலை பண்றது எனக்கொண்ணும் தாழ்வாய் தோன்றவில்லை. இந்தத் தொழில் எனக்கு சோறு ஊட்டிற்று. தஞ்சமளித்தது. படிப்பு சொல்லி தந்தது. இதன் மூலம்தான் நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்திருக்கிறேன். அந்த சத்தியத்தை நான் மறந்து விடமாட்டேன்'' என்றான் கையிலிருந்த காபி கோப்பையை அன்போடு பார்த்துக்கொண்டே.

# 8

சுதாகர் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சித்ரா அவனுக்கு பரிமாறிக் கொண்டிருந்தாள். அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

''பாரு தங்கச்சி, நம்ப வீட்டுக்குத் தானா?'' என்றான் சுதாகர். சித்ரா மோர் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு வாசலுக்குப் போனாள். கார் அவர்கள் வீட்டிற்கு முன்னால் தான் நின்று கொண்டிருந்தது. காரிலிருந்து பிரின்ஸிபாலும் ஜானகிராமனும் கீழே இறங்கினார்கள்.

''சுதாகர் வீட்டில் இருக்கானாம்மா?'' பிரின்ஸிபால் கேட்டார்.

''இருக்காங்க. உட்காருங்க, கூப்பிடறேன்'' சித்ரா பணிவோடு பதிலளித்துவிட்டு உள்ளே போனாள். ''யாரு?'' சாப்பிட்டுக் கொண்டிருந்த சுதாகர், பிரின்ஸிபாலின் குரலை கேட்டுவிட்டு வெளியே வந்தான்.

''சார்! நீங்களா? வணக்கம் சார், வாங்க, வாங்க உட்காருங்க.'' திடீரென்று எதிர்பாராமல் அவர் நேராய் தன் வீட்டிற்கே வந்துவிட்டதற்கு சந்தோஷத்தால் திக்குமுக்காடியவனாய் மளமளவென்று நாற்காலியைப் போட்டான்.

''என்னப்பா, பாதி சாப்பாட்டில் எழுந்துவந்து விட்டாய் போலிருக்கே?'' என்றார் ஜானகிராமன்.

''ஆமாம் சார்... ஓ... ஸாரி'' அப்பொழுதுதான் எச்சில் கையோடு எழுந்து வந்துவிட்டதை உணர்ந்து கொண்ட



வனாய் கைகழுவிக் கொள்ள சமையலறைக்குள் ஓடினான் சுதாகர்.

''நீ சுதாகரின் தங்கை என்று நினைக்கிறேன், இல்லையாம்மா?'' கேட்டார் பிரின்ஸிபால்.

''ஆமாங்க.''

''உன் பேரென்ன?''

''சித்ரா.''

சுதாகர் திரும்பி வந்தான்.

பிரின்ஸிபால் ஜானகிராமனை காட்டி பரிச்சியம் பண்ணினார்.

''பார் சுதாகர்! இவர் ஜானகிராமன். நம் காலேஜை கட்டிய பிரகாசம் என்பவரின் மகன். யூனிவர்சிடியிலேயே முதலாவதாய் வந்த உன்னை பார்க்கணும்னு சொன்னதால் அழைச்சிட்டு வந்தேன்.''

''நமஸ்காரம் சார். ரொம்ப சிரமப்பட்டு விட்டீங்க. நீங்கள் செய்தி சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே!'' என்றான் மிக மரியாதையோடு.

''இதில் சிரமம் என்ன இருக்கு தம்பி? எவ்வளவு கஷ்டப்பட்டு படித்து முன்னுக்கு வந்தாய் என்பதை பிரின்ஸிபால் சொன்னார். எங்கள் காலேஜ் தொடங்கப்பட்டதிலிருந்து இன்றுவரை இப்படிப்பட்ட கௌரவம் ஏற்பட்டிருப்பது இது தான் முதல் தடவை. உன்னை நேரில் பார்த்து பாராட்டணும் என்றுதான் வந்தேன். உன்னைப் போன்ற மகனை பெற்றதற்கு உன் தாய் தந்தையர் எவ்வளவு பெருமை படுவாங்க!''

தாய் தந்தையரின் பெயரைக் கேட்டதுமே சுதாகர் மௌனமாகி விட்டான். சந்தோஷத்தால் மலர்ந்திருந்த அம்முகத்தில் வேதனையின் சுவடுகள் தென்பட்டன

முகத்தைத் தொங்க போட்டுக்கொண்டு, ''எனக்கு அவ்வளவு அதிர்ஷ்டம் இல்லை சார்! சிறுவயதிலேயே எங்கப்பா அம்மா இருவருமே செத்துட்டாங்க'' என்றான்.

''அப்படியா! ஐயோ, உங்களுடைய ஊர் எது தம்பி?'' இரக்கம் ததும்பக் கேட்டார் ஜானகிராமன்.

''பத்மாபுரம்.''

ஜானகிராமன் ஆச்சரியமடைந்தவராய் பார்த்தார்.

''பத்மாபுரமா?''

''ஆமாங்க. எங்கப்பா அங்கே நிலச்சுவான்தாரரிடம் வேலை பண்ணிட்டிருந்தார். நீர்ப்பாசனச் சண்டையினால் அந்த நிலச்சுவான்தாரருடைய உயிரைக் காப்பாற்றப் போய் தன் உயிரை இழந்துவிட்டார்.''

''யாரு?'' ஜானகிராமன் அதிர்ந்து போய் சிலையாய் பார்த்துக் கொண்டிருந்தார். சுதாகர் திகிலோடு வருத்தமாய் சொன்னான். ''அந்த நிலச்சுவான்தாரருக்குக் கொஞ்சங்கூட இரக்கம் இல்லாமல் போயிடுத்து. தனக்காக எங்கப்பா உயிரை விட்டாரேங்கிற நன்றிகூட இல்லாமல் போயிடுத்து. நிலம் நீச்சை விற்றுவிட்டு, ஊரைவிட்டுப் போய்விட்டார்.''

''என்னது? நீங்கள்... நீங்கள் வீரபத்திரனின் பசங்களா!'' ஜானகிராமன் எழுந்து நின்றார்.

''ஆமாம் சார்.''

ஜானகிராமன் சுதாகரிடம் வந்து அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் திரம்பி வழிந்தது. குரல் தழுதழுத்தது.

''தம்பி, சுதாகர், நான்தான் அந்த நிலச்சுவான்தார்—உங்கப்பாவை விழுங்கிவிட்ட பாவி நான்தான்! ஆனால் நான் நன்றி கெட்டவன் இல்லை தம்பி! உங்கள் பராமரிப்பிற்காகவும், படிப்பிற்காகவும் உங்க அத்தையிடம் பணம் தந்தேன்.''



''எங்க அத்தையிடமா?'' சுதாகர் சுருக்கமாய் நடந்ததையெல்லாம் சொன்னான்.

''அப்படியா? என்ன காரியம் நடந்துவிட்டது! குறைந்த பட்சம் உங்கம்மா கூட நான் பணம் கொடுத்த விஷயத்தைச் சொல்லவில்லையா உங்களிடம்?''

''எங்கம்மா எங்கே உயிரோடு இருந்தாங்க சார்? அப்பொழுதே காலமாயிட்டாங்க. பிரசவம் கஷ்டமாகி, ஆஸ்பத்திரியிலேயே தாயும் குழந்தையும் இறந்துவிட்டாங்க.''

''எவ்வளவு துரதிர்ஷ்டக்காரர்களாகிவிட்டீங்க! என்னால் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்திருக்கீங்க? போகட்டும்ப்பா, இப்பவாவது நான் உங்களைப் பார்த்து இந்த விதத்திலாவது நிலைமையைத் தெரிந்து கொண்டேனே! இன்றைக்கு உங்களிருவரையும் இப்படிப் பார்க்கும் போது எனக்குத் திரும்பவும் வீரபத்திரனைப் பார்த்தாற் போல சந்தோஷமாய் இருக்கிறது. வாங்க, என்னோடு வாங்க இந்த நிமிஷத்திலேருந்து நீங்கள் என் குழந்தைங்க. என் வீடுதான் உங்கள் வீடு.'' சுதாகரும் சித்ராவும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சார்! ஆனால்...'' சுதாகர் தடை சொல்ல முயன்றான்.

''சுதாகர்! மறுக்காதே. இப்பவே நீங்கள் படாத கஷ்டங்களையெல்லாம் பட்டுட்டீங்க. என்னால் திக்கில்லாதவர்களாய் ஆகிவிட்டீங்க. என்னை வேற்று மனிதனாய் பாவிக்க வேண்டாம். என் விருப்பத்திற்குத் தடை சொல்லிவிடாதே! இது உங்களுக்காக எனக்காக இல்லை தம்பி! வீரபத்திரனின் ஆத்ம சாந்திக்காக!''

''பெரியவர் சொல்கிறார், மறுக்காதே சுதாகர்'' என்றார் பிரின்ஸிபால் அழுத்தமாய். சுதாகர் தங்கையைப் பார்த்தான்.

''உன்னிஷ்டம் அண்ணா'' என்பது போல பார்த்தாள் சித்ரா.

சுதாகர் சம்மதித்துத் தீர வேண்டியிருந்தது. இந்த காலத்தில் இவ்வளவு தூரம் கள்ளமில்லாத அன்பைக் காட்டுகிறவர்கள் குறைவு. அன்பிற்கும் ஆதரவிற்கும் தவித்துப் போயிருந்த அண்ணன் தங்கைகள் இருவருக்கும் ஜானகிராமன் காட்டிய பரிவு பன்னீரைத் தெளித்தாற்போல இதமாய் இருந்தது.

# 9

யூனிவர்சிடியில் முதலாவதாகப் பாஸ் பண்ணியிருக்கும் இளைஞனைப் பார்க்கப் போவதாகவும், அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துவரப் போவதாகவும் ஜானகிராமன் முன்பே வீட்டில் சொல்லிவிட்டுப் போயிருந்தார். ஜமுனா தடபுடலாய் டீபார்டிக்கு ஏற்பாடு பண்ணியிருந்தாள். அவனுக்கு மாலை போடுவதற்காக கடையிலிருந்து ஒரு பூமாலையைக் கூட வாங்கி வரச் செய்திருந்தாள்.

வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டதுமே மளமள வென்று வெளியே வந்தாள் ஜமுனா.

ஆனால் காரிலிருந்து சிற்றப்பாவைத் தொடர்ந்து இறங்கிக் கொண்டிருந்த திமிர் பிடித்த சர்வரைப் பார்த்ததும் அவள் விக்கித்துப் போய் விட்டாள்.



''வாப்பா, வா'' என்று அவர் மிகப் பரிவோடு வரவேற்றார் அவனை. மாலையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த ஜமுனாவைப் பார்த்து விட்டு அதிர்ச்சியடைந்து போனான் சுதாகர்.

ஜானகிராமன் பரிச்சியம் செய்தார். ''இவன் தாம்மா நான் சொன்ன அவன்!'' ஜெயந்திக்கு மூச்சுவிட முடியவில்லை. தலைசுற்றிற்று. சுதாகர்கூட ஆச்சரியத்திலிருந்து இன்னும் தேறிக்கொள்ள முடியாதவனாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சித்தப்பா! இவன்... இவன்...''

''ஏம்மா இந்த தடுமாற்றம்? இவனைத் தெரியுமா?'' ஜானகிராமன் சந்தேகத்துடன் கேட்டார்.

''ஒரு தடவை ஓட்டலில் பார்த்திருக்காங்க சார்! சரியாய் சர்வ் பண்ணவில்லைன்னு கொஞ்சம் திட்டினாங்ககூட'' அதற்குள் தேறிக் கொண்ட சுதாகர் சொன்னான்.

''அதா விஷயம்? எங்க ஜமுனாவுக்குக் கொஞ்சம் மூக்கு கோபம் ஜாஸ்தி தம்பி!''

''போ சித்தப்பா! இதானா என்னைப் பரிச்சியம் பண்ணிவைக்கிற விதம்?'' ஜமுனா கோபமாய் சொல்லி விட்டு மாலையைப் போடப் போனவள் நிறுத்திக் கொண்டாள். சுதாகர்கூட பின் வாங்கினான். அவர்கள் தயக்கத்தைப் புரிந்து கொண்ட ஜானகிராமன், ''ஓஹோ!... கல்யாணமாகாத பசங்கள் அல்லவா? இப்படிக் கொடும்மா'' என்று மாலையை வாங்கிக் கொண்டு தானே போட்டார்.

''இன்றைக்கு நம்மிருவரின் வாழ்க்கையிலும் ரொம்ப முக்கியமான நாள் தம்பி'' என்று கூறிவிட்டு, சித்ராவைப் பார்த்து ஜமுனா பக்கமாய் திரும்பி ''மறந்து போய் விட்டேனே! இந்தப் பொண்ணு சித்ரா, சுதாகரின் தங்கை'' என்று பரிச்சியம் பண்ணினார்.

ஜமுனா வணக்கம் தெரிவித்து விட்டு ''என்ன படிச்சிருக்கீங்க?'' என்று கேட்டாள். சித்ரா அண்ணனைப் பார்த்தாள். சுதாகர் பதில் சொன்னான்.

''பெரிதாய் படிக்கவில்லை. படிக்க எழுத நானே கற்று தந்தேன். சமையல், பூவேலை, தையல் வேலை நன்றாய் வரும். தோட்ட வேலை என்றால் உயிர்.''

அதற்குள் விக்கிரமன் வெளியேயிருந்து வந்தான். ஜானகிராமன் விக்கிரமனைக் கூப்பிட்டு சுதாகருக்குப் பரிச்சியம் பண்ணிவிட்டு, ''தாய் இறந்துவிட்டதால் நானே தாயும் தந்தையுமாய் இருந்து வளர்த்தேன். இவனைப்பற்றி தான் என் கவலையெல்லாம்'' என்றார்.

''வந்த விருந்தாளிங்களை வாசலிலேயே உட்கார வைத்துப் பேசிட்டிருக்காயே சித்தப்பா! உள்ளே வாங்க, டிபன் ரெடியாய் இருக்கு'' ஜமுனா சட்டென்று பேச்சை மாற்றினாள்.

''இவங்க நமக்கு விருந்தாளிங்க இல்லைம்மா. ஆத்மார்த்தமானவங்க. என், எப்படி என்ற விவரங்களையெல்லாம் அப்புறமாய் சொல்றேன். வாங்க தம்பீ, தேநீர் குடிக்கலாம்'' என்றார் ஜானகிராமன்.

## 10

சீனுவின் அறை. பெயருக்கு சீனுவின் அறையாய் இருந்தாலும் அதற்கு ஆகும் செலவு, அலங்காரச் சாமான்கள் எல்லாம் விக்கிரமனுடையதுதான். விக்கிரமன், சீனு சுதாமன் மூவரும் உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். ஆட்டத்திற்கு நடுவில் சுதாமனின் பணமெல்லாம் தீர்ந்துவிட்டது. அழுமூஞ்சியுடன் இருந்தான். சீனு கடன் தர மறுத்துவிட்டான். ''போகட்டும்டா! நான் கடன் தரேன்'' என்று விக்கிரமன் தன் ஜேபியிலிருந்து ஐநூறு ரூபாய்களை எடுத்துத் தந்தான். சுதாமன் அதைக் கழுகைப் போல கொத்திக்கொண்டு, ''காமதேனுவைப் போல நீ இருக்கும்போது எங்களுக்கென்ன குறைச்சல்?'' என்று எழுந்திருந்தான்.

''ஏண்டா எழுந்துவிட்டாய்? உட்காரு. சீட்டைக் கலந்துட்டிருக்கேன்'' — என்றான் சீனு.

''இருடா அப்பனே! ஒட்டலுக்கு பில்லைக் கட்டணும். வரேன்''

''அடேய்! அடேய்.'' சீனு துரத்திக் கொண்டு வந்தான். சுதாமன் அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு அம்பாய் பாய்ந்து வெளியே ஓடினான். சீனு திட்டிக் கொண்டே திரும்பி வந்தான். ''ராஸ்கல்! இடியட்! ஃப்ரீயாய் ரூமில் இருந்து கொண்டு அழறது போதாதுன்னு இதுவும் வேறயா? பிரதர்! உனக்குக் கடுமையாய் சொல்றேன். அவன் வெறும் சோம்பேறி. உன்னோடு அவனை சேர்த்துக்காதே'' விக்கிரமனை எச்சரித்தான்...

''போடா சீனு! இந்த காலத்தில் இந்த உலகத்தில் சோம்பேறியாய் இல்லாமல் சுகமாய் வாழ்வது கஷ்டமில்லையாடா?'' என்றான் சிரித்துக் கொண்டே.

''இப்படியே சொல்லிக் கொண்டிரு. என்றைக்காவது ஒருநாள் உன் குடியே மூழ்காமல் போனால் பார்.''

''ஆங்! கிழித்துவிடுவேன்!''

அதற்குள் போன் மணியடித்தது.

விக்கிரமன் எடுத்துப் பேசினான் ''ஹலோ...யாரு? சரிதாவா? ஆங்! நான்தான்! சீனுதான் பேசுகிறேன்.''

சீனு சரிதாவின் பெயரைக் கேட்டதுமே போனை பறித்துக்கொள்ளப் போனான். ஆனால் விக்கிரமன் தரவில்லை.

''என்ன? என் குரலா? ஆமாம், கொஞ்சம் ஜலதோஷம் பிடித்திருக்கு. அதனால்தான் இப்படி இருக்கு. பிறந்த நாளா? உன் பிறந்தநாள் ஞாபகமில்லாமலிருக்குமா? நம்ப அறையிலேயே ஏற்பாடு பண்ணிட்டேன். ரொம்ப ஆடம்பரமாய், உன் சிநேகிதிகளையெல்லாம் கூப்பிடு.''

''பலே! பலே'' சீனு குட்டிபோட்ட பூனையாய் உறுமிக்கொண்டேயிருந்தான்.

''பரவாயில்லை. உனக்காக அவ்வளவுகூட பண்ணாவிட்டால் எப்படி? ஆல்ரைட்! சரி, பை! பை!'' விக்கிரமன் போனை வைத்துவிட்டான்.

சீனு விக்கிரமனின் கழுத்தைப் பிடித்து நெறிக்கவேண்டும் போல ஆத்திரமடைந்தவனாய் அவன் மீது பாயப்போய் அதற்குள் தன்னை சுதாரித்துக்கொண்டவனாய் பின்வாங்கினான்.

''என்னடா? ஏன் இவ்வளவு கோபம்? உன் சரிதா பிறந்தநாள் பார்ட்டி கொடுக்கிறாளாம்.''

''டேய் விக்கிரமா! இன்றைக்கு நீயாய் இருக்கக் கொண்டு சும்மாயிருக்கேன். வேறு யாராவதாய் இருந்தால் மென்னியைத் திருகியிருப்பேன். என்னதான் சிநேகிதனாய் இருந்தாலும் நீ என் சரிதாவிடம் நான் என்று பொய் சொல்லிப் பேசலாமாடா?''

''போடா! நீ சரிதாவிடம் உன்னைப் பணக்காரன் என்று பொய் சொல்லிக்கொள்ளவில்லையா?''

இந்த வார்த்தைகள் சீனுவின் உள்ளத்தில் படக்கூடாத இடத்தில் பட்டுவிட்டது. அவன் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

நிராசையோடு முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு ''என்ன பண்றதுடா? எனக்கு சரிதா வேண்டும், சரிதாவுக்குப் பணக்காரன் வேண்டும். அதனால் பணக்காரனைப் போல நடித்துக்கொண்டிருக்கிறேன்.''



''உன் நடிப்பு வெளிப்பட்டுவிட்டால்?''

''எப்படி வெளிப்படும், சொல்லு? ஆனாலும் அதற்காகத்தானே சரிதாவை எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கல்யாணம் பண்ணிக்கொண்டு விடவேண்டும் என்று தவித்துக்கொண்டிருக்கேன்.''

''டேய் சீனு! உயிர் சிநேகிதனாய் உனக்கு ஒரு ஆலோசனை தரட்டுமா?''

''சொல்லு?''

''அந்தப் பெண்ணிடம் உண்மையைச் சொல்லிவிடுடா! கல்யாணம் பண்ணிக்கொண்ட பிறகு நீ மோசம் பண்ணிவிட்டதாய் தெரிந்தால் எவ்வளவு வருத்தப்படுவாள்? உங்கள் குடும்பந்தான் என்னவாகும்?''

''என்னவாகும்? விரலுக்குத் தகுந்த வீக்கம்னு நினைத்துக்கொண்டு சமாதானப்படுத்திக்கொள்வாள். நம்ப நாட்டில் பெண்களுக்கு கல்யாணத்தின் மீது இன்னும் சில நம்பிக்கைகள் இருந்து தொலையவில்லையா?''

''என்னவோடா, எனக்கு நம்பிக்கை இல்லை. சரிதா சாதாரணப் பெண்களைப் போல இல்லை. அதனால் தானேடா என் தவிப்பே.''

சீனு பதில் பேசவில்லை.

''கல்யாணம் பண்ணிக்கொண்ட பிறகு அந்தப் பெண்ணோட ஆசைகளையெல்லாம் எப்படித் தீர்ப்பாய்டா?''

''ஆசைகளா? அதற்கென்ன வந்தது? சரிதாவுக்கு டைப் அடிக்கத் தெரியும். எனக்கு வியாபாரத்தின் நெளிவு சுளுவுகள் தெரியும். சரிதாவைக் கொண்டு ஒரு டைப்ரட்டிங் இன்ஸ்டிட்யூட்டைத் திறக்கச் செய்துவிடுகிறேன். சரிதா

பிரின்ஸ்பால், நான் மேனேஜர், நீ முதலாளி! தெரிஞ்சுதா?''

''தெரிஞ்சுது!''

''இனிமேல் அவனுக்கு பேசன் பண்ணாதே! தெரிஞ்சுதா?''

''அட ராஸ்கல்!'' விக்கிரமன் சீனுவைக் கிள்ளினான்.

''நான் வெறும் ராஸ்கல்தான்! நீ திருட்டு ராஸ்கல்! இல்லையா பிரதர்?''

## 11

ஜானகிராமனின் வீட்டிலிருந்த எல்லோரும் சகஜமாய் பழகியதால் சுதாகரும் சித்ராவும் மிகச் சீக்கிரத்திலேயே சங்கோஜமில்லாமல் அந்த வீட்டாரோடு ஒன்றிப் போய்விட்டார்கள். சகஜமாகவே சிநேக மனப்பான்மை கொண்ட ஜமுனா தன் வாக்கு சாதுர்யத்தால் சித்ராவிடமிருந்த பயத்தைப் போக்கடித்து தமக்கிடையே சிநேகத்தை வளர்த்துக் கொண்டாள்.

எப்பொழுதும் ஏதாவது வேலைபண்ணிக் கொண்டேயிருந்தால்தான் சித்ராவுக்குப் பிடிக்கும். ஜமுனா காலேஜிற்குப் போய் விட்ட பிறகு நாளெல்லாம் வேலையே இல்லாமலிருந்தது. ஒரு நாள் தாறுமாறாய் கலைந்து கிடந்த ஜமுனாவின் அறையை நீட்டாய் ஒழித்துவைத்து கொண்டிருந்த சித்ராவைப் பார்த்த ஜானகிராமன் பரவசமடைந்து விட்டார். ''பாரும்மா சித்ரா! ஜமுனாவுக்கு எப்பொழுது பார்த்தாலும் படிப்பின் மீதும் வீணையின் மீதும் தான் கவனமே தவிர வேறு எதிலுமே கிடையாது. எங்கள்



விக்கிரமனோ கேட்கவே வேண்டாம். அவனுக்கு எந்த விஷயத்திலும் அக்கறையேயில்லை. இது உன் சொந்த வீடுன்னு நினைச்சுக்கோம்மா! வீட்டோடு கூட மனிதர்களைக்கூட சீர்திருத்த வேண்டிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன் போதுமா?'' என்றார்.

சித்ரா சரி என்று தலையாட்டினாள்.

சித்ராவின் மேற்பார்வையினால் அந்த வீடு மிகச் சீக்கிரத்திலேயே புதிய அழகைப் பெற்று விட்டது. வேலைக்காரர்களின் சோம்பேறித்தனம் போய்விட்டது. தோட்டங்களெல்லாம் சுத்தமாயிற்று. செடிகள் எல்லாம் அழகாய் பூத்துக் குலுங்கத் தொடங்கின. எப்பொழுது பார்த்தாலும் சித்ரா கலகலவென்றுச் சுற்றிக் கொண்டே, ஏதாவது வேலையைப் பண்ணிக் கொண்டிருந்தாள். சித்ரா வந்த பிறகு வீட்டுச் செலவு விஷயத்தில் கூட நிறைய சிக்கனம் தெரிந்தது. முக்கியமாய் ஜானகிராமனுக்கு பெரிய பொறுப்புக்கள் பல தீர்ந்துவிட்டாற்போலவே இருந்தது. நிறைய வேலைகளுக்கு அவர் கவலையில்லாமல் சித்ராவின் மேல் ஆதாரப்படக்கூடிய அளவிற்கு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு விட்டிருந்தார். அதன் மூலமாய் அவருக்கு நாளுக்கு நாள் சித்ராவின் மீது அன்பு பெருகத் தொடங்கி விட்டது. வீட்டை நன்றாய் பார்த்துக் கொள்வதில் சித்ரா காட்டிய சாமர்த்தியத்தையும், பேச்சில் சாதூரியத்தையும், பணிவையும் கண்டஅவர் அவ்வப்பொழுது 'விக்கிரமனுக்கு இப்படிப்பட்ட மனைவி வர வேண்டும்' என்று யோசிக்கும் அளவிற்கு வந்து சேர்ந்தது. சுதாகருக்குக் கூட அந்த வீட்டில் தாம் இருந்து கொண்டிருந்ததற்கு பிரதிபலனாய் சித்ரா இந்த விதத்தில் அந்த வீட்டிற்குப் பயன்பட்டதற்குச் சந்தோஷமடைந்தான்.

அன்றைக்கு சுதாகருக்கு ஐதராபாத்தில் ஐ.பி.எஸ் இண்டர்வ்யூ இருந்ததால் பயணமானான். ஜானகிராமனுக்கு மிகச் சந்தோஷமாயிருந்தது. தான் விக்கிரமன் பால் ஏற்படுத்திக் கொண்டிருந்த ஆசைகளை விக்கிரமன் தீர்க்க

முடியாமல் போனாலும் விக்கிரமனுக்குச் சமமாய் தன் மனதில் அன்பையும் ஆதரவையும் சம்பாதித்துக் கொண்டிருந்த சுதாகராவது இவ்வாறு தீர்த்ததற்கு அவர் மிகவும் பெருமையடைந்தார்.

''இண்டர்வ்யூவில் கண்டிப்பாய் செலெக்ட் ஆகிவிடுவாய், போயிட்டு வாப்பா'' என்று வாழ்த்தி விடை கொடுத்தார் ஜானகிராமன். சித்ரா சுவாமியிடம் ஒரு பூவை வைத்துவிட்டு அதைக் கொண்டுவந்து அண்ணனிடம் தந்தாள்.

ஜானகிராமன் சந்தோஷத்தோடு சொன்னார்:

''சுதாகர்! உன் தங்கை வந்த பிறகு கொல்லையில் பூக்கள் மலருவதோடு வீட்டிலும் கூட சிரிப்புக்கள் மலரத் தொடங்கியிருக்கப்பா. என் வீட்டிற்கே களை வந்து விட்டது சித்ராவால்'' என்றார்.

''எல்லாம் உங்கள் அன்பால்தான் நடக்கிறது'' என்றான் சுதாகர்.

சுதாகர் புறப்படும் சமயத்தில் டிரைவர் இல்லை. ஜமுனா சுதாகரைத் தான் ஸ்டேஷனுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தால் உபாயம் தீட்டி டிரைவரை இல்லாமல் அனுப்பிவிட்டிருந்தாள்.

''இப்பொழுது என்ன பண்றது?'' என்றார் ஜானகிராமன்.

''நான் தான் இருக்கேனே சித்தப்பா!'' என்றாள் ஜமுனா.

''நீங்களா?'' என்றான் சுதாகர் சங்கடத்துடன்,

''ஏன்? பயப்படுகிறீர்களா? ஒன்றும் ஆகாது. அவ்வளவு தூரம் ஏதாவது ஆகிவிட்டால் உங்கள் உயிரோடு என் உயிரையும் பலி வாங்கிக் கொள்கிறேன்'' என்று டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து கொண்டாள். சுதாகர் பின் கதவைத் திறந்து கொண்டு பின் சீட்டில் உட்காரப் போனான்.



''ஆஹா! பெரிய தர்பாராய் பின் சீட்டில் ஏறிக் கொள்கிறீங்களே! நான் ஒன்றும் உங்கள் டிரைவர் இல்லை.''

சுதாகர் திகைத்துப்போய் நின்றுவிட்டான்...

''எங்க ஜமுனாவோடு எப்படி நடந்து கொண்டாலும் தப்புதான்! முன் சீட்டிலேயே உட்காருப்பா!'' ஜானகிராமன் சிரித்துக் கொண்டே சொன்னார். சுதாகர் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டதும் கார் புறப்பட்டது.

சுதாகர் சாலையையே நேராய் பார்த்துக்கொண்டிருந்தான்.

''என்ன, தூங்கறீங்களா?'' ஜமுனா கேட்டாள்.

''சே, சே இல்லையே'' என்றான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு

''பேச்சு மூச்சு இல்லாமல் உட்கார்ந்திருந்ததாலே... அடடா, இந்த பக்கத்து கதவைச் சரியாய் சாத்தவில்லை போலிருக்கே'' ஜமுனா குனிந்து சுதாகர் மேல் படும்படியாய் கதவின் ஹேண்டிலைத் திருப்பிப் பார்த்தாள். சுதாகர் ஜமுனாவின் கை எங்கே தன் மீது பட்டுவிடப் போகிறதே என்றாற்போல சீட்டில் பின்னுக்கு ஒட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டான்...

''இதென்ன, அவ்வளவு பயம்! நான் என்ன உங்களை விழுங்கி விடுவேனா என்ன?''

''நீங்கள் கஷ்டப்பட்டு விழுங்கினாலும் நான் ஜீரணமாக மாட்டேன்.''

''ஏன்? அவ்வளவு கடினமானவரா?''

''நான் இல்லை. என் நியமங்களும் பிரின்ஸிபிள்களும் அப்படிப்பட்டவை.''

''ஓஹோ'' என்றாள் ஜமுனா நீட்டி முழக்கியபடி.

சுதாகர் திரும்பவும் சாலையைப் பார்க்கத் தொடங்கினான்.

கொஞ்ச நேரம் பார்த்து விட்டு சுதாகர் எதுவும் பேசாமல் போகவே ஜமுனா தானே சொன்னாள்.

''தலையெழுத்து! காரில் ஒரு பெட்டியையோ படுக்கையையோ எடுத்துட்டுப் போகிறாற் போலத்தான் இருக்கேயொழிய, லட்சணமாய் ஒரு மனுஷரைக் கூட்டிட்டுப் போறாப் போலவே இல்லையே.''

''ஆமாமாம். அப்படிப் பார்த்தால் எனக்குக் காரில் போகிறாற் போலவே இல்லை. ஒற்றைமாட்டு வண்டியில் போகிறாற் போல்தான் இருக்கேயொழிய...''

''என்ன சொன்னீங்க? எனக்கு டிரைவிங் வராதுங்கறது தானே உங்கள் அபிப்பிராயம்? அப்படீன்னால் பாருங்கள்!'' ஜமுனா வேகத்தை அறுபது கிலோ மீட்டருக்கு அதிகரித்தாள்.

அதுமட்டுமில்லை, சுதாகரை பயமுறுத்துவதற்காகக் குறுக்கும் நெடுக்குமாய் காரை ஓட்டிக் கொண்டு போனாள்.

''ஐயோ, நான் அப்படிச் சொல்லவில்லை. என் உத்தேசம் அதில்லை! ஐயோ, ஐயோ, மனிதர்கள்!'' சுதாகர் சட்டென்று ஜமுனாவின் கை மீது கையை வைத்து ஸ்டீரிங்கை அழுத்தமாய் பிடித்துக் கொண்டு கார் சரியாய் போகும்படியாய் டிரைவ் பண்ணினான்.

''என்ன சாமர்த்தியக்காரர் நீங்கள்! பேச்சில் வம்புக் கிழுத்து, என் கையைப் பிடிக்கிறீங்களா?''—சுதாகர் ஷாக் அடித்தவனாய் கையை எடுத்துக் கொண்டு விட்டான்.

''சாரி, ஐயாம் வெரி சாரி'' என்றான்.

''சாரி சொல்லிவிட்டால் நடந்த காரியம் அழிந்து போய் விடும் என்கிறீங்களா?''

''என்னை மன்னிச்சுடுங்க.''



ஜமுனா சிரித்தாள்.

''எவ்வளவு அழகாய் கேட்கிறீங்க? உங்களைக் கொண்டு தப்புப் பண்ண வைச்சுட்டு, இப்படி பத்து தடவை திரும்பத் திரும்ப மன்னிப்புக் கேட்கச் செய்யணும்னு இருக்கு எனக்கு.''

சுதாகர் சீரியஸாய் உட்கார்ந்திருந்தான்.

''எதுக்காக இந்த நடிப்பு?''

''நடிப்பா? நானா?''

''பின்னே யார்? உங்க [illegible] சொரூபம் எனக்குத் தெரியாமல் இருந்திருந்தால், [illegible] நிஜந்தான் போலிருக்கு. யூனிவர்சிடியில் ஃபஸ்ட் வந்திருக்கும் இந்த ஆசாமி வெறும் முசுடு தான் போலிருக்குன்னு நினைத்துக் கொண்டிருந்திருப்பேன். அன்றைக்கு உங்கள் குறும்புத் தனத்தையும் துடிப்பையும் நான் பார்க்கவில்லையா என்ன? உங்களிடம் இருந்த அந்தச் சுறுசுறுப்பெல்லாம் என்னவாகி விட்டது?''

''அந்த ஓட்டலிலேயே மறந்து போய் விட்டுவிட்டு வந்துட்டேன்.''

''அப்படியா? அப்படீன்னால் நான் போய்த் தேடிப் பார்த்து எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்''—ஜமுனா சொன்னதைக் கேட்டு சுதாகர் பக்கென்றுச் சிரித்துவிட்டான்.

''பார்த்தீங்களா? உங்களைச் சிரிக்க வைத்து விட்டேன்.''

''நிறுத்துங்க, நிறுத்துங்க, ஸ்டேஷன் வந்து சேர்ந்து விட்டது'' என்றான் சுதாகர்.

''ஓ, அதற்குள்ளேயா? நான் கவனிக்கவேயில்லை.'' ஜமுனா காரை நிறுத்தினாள். சுதாகர் கதவைத் திறந்து கொண்டு இறங்கப் போனான்.



23309
3858309

''நில்லுங்கள்'' உத்தரவிடுவது போல வந்தது அவள் குரல்.

சுதாகர் வியப்படைந்தவனாய் திரும்பினான். ''உங்களை இவ்வளவு கஷ்டப்பட்டு கொண்டுவந்து விட்டேனே, குறைந்தபட்சம் ஒரு தாங்ஸாவது சொல்லவில்லையே எனக்கு.''

''பலே ஆள்தான்! என்னைத் தோளில் தூக்கிக் கொண்டுவந்து விட்டாற்போலவே பேசுகிறீங்களே, சரி, தாங்க்ஸ்! மெனி மெனி தாங்க்ஸ்! ஐதாராபாத்திலிருந்து உங்களுக்கு ஏதாவது வேணுமா?''

''ஊஹூம். என்னை ஞாபகம் வைத்துக்கொண்டு பரீட்சையை நன்றாய் எழுதிவிட்டு வாங்க, அது போதும்.''

''சிலபேரை மறந்து போகலாம்னு நினைத்தாலும் மறக்கவே முடியாது. ஞாபகம் வைத்துக்கொண்டு விட்டால் மட்டும் போதுமா?''

''எவ்வளவு புத்திசாலியாய் இருக்கீங்க நீங்க!''

''புத்திசாலித்தனம் இருப்பதால்தான் என் நிலைமையை நான் தெரிந்து கொண்டு சொரணையோடு நடந்து கொள்கிறேன். வரட்டுமா?''

## 12

சீனுவும் சரிதாவும் மாட்னி சினிமா பார்த்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். மழை வரத் தொடங்கி விட்டது. சீனுவின் ஸ்கூட்டர் ரிப்பேர் ஆகி விட்டது. அவன் இறங்கி அதைப் பழுது பார்க்கத் தொடங்கினான்.



''ஐயோ! மழை வலுத்து விட்டதே. நனைந்து கொண்டே வீட்டிற்குப் போனால் அம்மா என்னைக் கொன்றுப் போட்டு விடுவாங்க''— என்றாள் சரிதா.

''ஒரு நிமிஷம், இதோ ஆகிவிட்டது.''

''பெரிய லட்சாதிபதி என்று சொல்லுகிறீங்க. இந்தப் பாழாய்ப் போன ஸ்கூட்டரும் நீங்களும்! இதாவது சரியாய் ஓடுகிறதா? நொண்டிக் குதிரையைப் போல இரண்டடிகள் ஓடினால் நாலடிகள் பின்வாங்கி விடுகிறது. ஓட்டை வண்டி.''

''என்ன பண்றது சரிதா? எங்கம்மா கார் வாங்கிக்க விட்டால் தானே? வாங்கிக் கொண்டால் நான் எந்த ஆபத்திலாவது சிக்கிக் கொண்டு விடுவேனோங்கிற பயம் எங்கம்மாவுக்கு. நான் ஏதோ சாதாரண சீனுவாய் இருந்தால் சரி, நான் போய் விட்டால் எனக்குப் பின்னால் அவ்வளவு லட்சங்களும்...''

''ஆமாமாம்'' சரிதா ஒப்புக் கொண்டாள்.

ஸ்கூட்டர் நகரமாட்டேன் என்று பிடிவாதமாய் நின்று போய் விட்டது.

அதற்குள் அந்த வழியாய் போய்க் கொண்டிருந்த விக்கிரமன் சரிதாவையும் சீனுவையும் பார்த்து விட்டு காரை அவர்களுக்கருகே கொண்டு வந்து நிறுத்தினான்.

விக்கிரமனையும் காரையும் பார்த்ததுமே சரிதாவின் முகம் மலர்ந்தது.

''ஏன்டா சீனு! உன் நொண்டிக் குதிரை திரும்பவும் நின்று தொலைந்து விட்டதா?'' சிரித்துக் கொண்டே கேட்டான் விக்கிரமன்.

''போடா! உனக்கு எல்லாமே கேலிதான்! இயந்திரம் என்றால் கோளாறு ஆகாமல் இருக்குமா?''

''வாங்க, வாங்க, மழை பெரிதாய் ஆகிவிடும் போலிருக்கு, நனைந்து போய் விடுவீங்க.''

''நாங்கள் வந்துவிட்டால் எங்கள் ஸ்கூட்டர்?''

''அதை யாருடா எடுத்துட்டுப் போவாங்க? நாளைக்கு நீ வரும்வரை அங்கேயே இருக்கும்.''

''ரொம்ப அழகுதான்.''

''சீனு, நேரமாகிவிட்டது. நான் போகிறேன் வீட்டிற்கு'' என்றாள் சரிதா.

''ஆல்ரைட் டியர்'' சீனு வேறு வழியில்லாமல் ஒப்புக் கொண்டான். சரிதா வந்து காரில் உட்கார்ந்து கொண் டாள்.

''சரிதா, ஜாக்கிரதை'' சீனு சாமர்த்தியமாய் எச்சரித் தான்.

''ஒன்றும் ஆகாது சீனு'' சரிதா கையை ஆட்டினாள். வந்து கொண்டிருக்கையில் வழியில் விக்கிரமன் கேட்டான்.

''எங்கேயிருந்து வரீங்க?''

''சினிமாவிலிருந்து.''

விக்கிரமனுக்கு சரிதாவை சீனுவைப் பற்றிச் சொல்லி எச்சரிக்க வேண்டும் என்று பல நாட்களாகவே இருந்து வந்தது. ஆனால் அதற்குத் தகுந்த அவகாசம் கிட்டவே யில்லை.

சரிதாவை மெதுவாய் பேச்சில் இழுத்தான்.

''சீனுவைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன சரிதா?''

சரிதா விநோதமாய் பார்த்தாள்.

''வேறென்ன? ரொம்ப நல்லவர், பணக்காரர்.''

''நல்லவன், நிஜந்தான். நானும் ஒப்புக்கறேன். ஆனால்...''



''ஆனால்?''

''பணக்காரன் மட்டும் இல்லை.''

''மிஸ்டர் விக்ரமன்!''

''சாரீ சரிதா! பணக்காரனைப் பண்ணிக்கொண்டு வாழ்க்கையைக் கவலையில்லாமல் சந்தோஷமாய் கழிக் கணும் என்ற உன் நோக்கத்தை நான் என்றோ அறிந்து கொண்டு விட்டேன் சரிதா! நீ வாழ்க்கையில் ஏமாந்து போய் விடக்கூடாது. இது சிநேகிதனான என்னோட விருப்பம்! அப்பாவியான ஒரு பெண்ணின் வாழ்க்கை நாச மாகிக் கொண்டிருக்கும்போது பார்த்துக் கொண்டே சும்மா இருப்பதை விட, இருக்கிற விஷயத்தைச் சொல்லிவிட்டு சிநேகிதனுக்கு முன்னால் நன்றி கெட்டவனாய் திறக நேர்ந்தாலும் பரவாயில்லை என்று தோன்றிற்று எனக்கு.''

''நீங்கள்... நீங்கள் என்ன சொல்றீங்க, எனக்கு ஒன்றும் புரியவில்லையே!''

''மொதல்ல இதைச் சொல்லு. உனக்கு வேண்டியது சீனுவா, அவன் பணமா?''

''அழகாயிருக்கு. இதென்ன கேள்வி?''

''உண்மையை தைரியமாய் சொல்லு சரிதா.''

''சீனுவோடு சேர்ந்து பணம், பணத்தோடு சேர்ந்து சீனு.''

''அப்படீன்னால் என் பேச்சைக் கேள். ஒரு தடவை அவங்க ஊருக்குப் போய் நேரிடையாய் பார்த்து விட்டுவா. உன் கண்ணால் நீயே உண்மையைப் பார்த்துத் தெரிஞ் சுப்பாய்.''

''அப்படீன்னால் உங்கள் உத்தேசம்?''

''சீனு நீ நினைச்சிட்டிருக்கிறாற் போல பணக்காரன் இல்லை. கிடைத்த வரைக்கும் கடன் வாங்கி பெரிய

மனிதனைப்போல செலவழித்துக் கொண்டிருப்பான். என் ரூட்டுகளைச் சின்னது பண்ணித் தைத்துப் போட்டுக் கொண்டு பணக்காரனைப் போல போஸ் காட்டிட்டிருப்பான். அவன் நடிப்பு யாருக்கும் எந்த தீங்கும் பண்ணாத வரையில் எனக் கெந்த வருத்தமும் இல்லை. ஆனால் பார்த்துப் பார்த்து வாழ்க்கையின் மேல் இவ்வளவு ஆசைகளையும் நம்பிக்கை களையும் வைத்துக் கொண்டிருக்கும் உன்னைப் போன்ற வங்க ஏமாந்து போய்க் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியாமல் சொல்கிறேன் சரிதா! சீனுவின் மேல் எனக்கு எந்த துவேஷமும், வெறுப்பும் கிடையாது.''

சரிதா அப்படியே சிலையாய் உட்கார்ந்திருந்தாள். மனமெல்லாம் கசப்பை உண்டாற்போல ஆகிவிட்டது. சீனு இப்படி ஏமாற்றுபவனா? இது உண்மையா? அல்லது விக்கிரமன் தம் இருவரையும் பிரிப்பதற்காகப் போடுகிற நாடகமா இது! அவனைப் பார்த்தால் அப்படிப் பட்டவனாய் தோன்றவில்லை. என்னவோ, எது நிஜம் என்று எப்படித் தெரிந்து கொள்வது?

## 13

விக்கிரமனின் எச்சரிக்கையினால் தூக்கமும் வராமல் தவித்த சரிதா, கடைசியில் என்னவானாலும் ஆகிவிட்டுப் போகிறது என்று துணிந்து சீனுவின் சொந்த ஊருக்குப் புறப்பட்டுவிட்டாள்.

சரிதா போனபொழுது மொட்டையான சுவர்களே காம்பவுண்டுச் சுவரைப்போல இருந்த ஓட்டு வீட்டிற்கு முன்



னால் சாணி குவியலுக்கருகில் உட்கார்ந்து வரட்டி தட்டிக் கொண்டிருந்தாள் காளிதேவி.

அந்த வீட்டின் கோலத்தைப் பார்த்தபொழுது வெறுப்பு வந்தது சரிதாவுக்கு.

''மிஸ்டர் சீனுவின் வீடு இதுதானா?'' என்று கேட் டாள்.

''மிஸ்டர் சீனுவா?'' காளிதேவி ஆச்சரியமடைந்தவ ளாய் சரிதாவை ஏறயிறங்கப் பார்த்தாள்.

''ஆமாம், நான் அவர் சிநேகிதி.''

''ஓ, நீயா?'' காளிதேவி சந்தோஷத்தோடு எழுந்து வந்தாள்.

''வாம்மா, வா'' என்று பரிவோடு வரவேற்றாள்.

''நீ யாரு? இந்த வீட்டில் வேலைக்காரியா?''

காளிதேவியின் தோற்றம் அசல் அதுபோலவே இருந் தது.

''என்னம்மா, என்ன பேசுகிறாய்? வரட்டித் தட்டற வங்க எல்லோரும் வேலைக்காரங்களாகி விடுவாங்களா என்ன? ஏதோ மாடு கன்றுங்க இருக்கிறதால வரட்டி தட்டிக் கொள்கிறேன். தப்பா?''

''தப்பில்லை. மன்னிச்சுக்குங்க. சீனு உங்களுக்கு என்னவாகணும்?''

''என் மகன்ம்மா! என் பேர் காளிதேவி.''

''ஓ, அப்படின்னால் வரேன்''—சரிதா விருட்டென்று போகத் திரும்பினாள்.

''ஐயோ, ஐயோ, வரப்போற மருமகள் நீ! இப்படி வந்துட்டு அப்படி போயிட்டால் எப்படி? வா, வா, உள்ளே வா.'' காளிதேவி குறுக்கே வந்து நின்றாள்.

''நான் வரப்போற மருமகள் என்று யார் சொன்னாங்க உனக்கு?''

''வேறு யாரு? எங்க சீனுதான்! உள்ளே வா.''

சரிதா வேறு வழியில்லாதவளாய் பலவந்தத்தின்பேரில் பேரில் உள்ளே வந்தாள். வீட்டின் எந்த மூலையைப் பார்த்தாலும் கொஞ்சங்கூட செல்வத்தின் சுவடு தென்படவில்லை.

காளிதேவி நாற்காலியைப் போட்டு அதில் சரிதாவை பலவந்தமாய் உட்காரவைத்து, ''என்ன அப்படிப் பார்க்கிறாய்? வீட்டையா? ஏதோ நீங்கள் பெரிய பெரிய பங்களாவில் இருப்பீங்க. எங்கள் வீடெல்லாம் உங்களுக்குப் பிடிக்குமா?''

''நான் பெரிய பெரிய பங்களாவில் இருப்பேன்னு யார் சொன்னாங்க உங்களுக்கு?''

''என்னம்மா மூடு மந்திரமாய் பேசுகிறாயே! உங்கப்பா கோடீஸ்வரராய் இருக்கும்போது பங்களாவில் இல்லாமல் குடிசையிலா இருப்பீங்க? ஆனாலும் இதென்ன போதாத காலம்! ஒரே பெண்ணில்லையா நீ? உனக்குப் பிடித்த பையனைப் பார்த்து பண்ணி வைக்காமல் இதென்ன அகங்காரம்?''

''எங்கப்பா கோடீஸ்வரர் இல்லை.''

''ஆங், என்ன சொன்னாய்?''

''எங்கப்பா கோடீஸ்வரர் இல்லை. நாங்க பணக்காரங்ககூட இல்லை. ஒரு சாதாரண குமாஸ்தாவின் பெண்.''

''என்னது?''

''ஆமாம். நான் மிகச் சாதாரணமான ஒரு பெண்.''

''அப்படீன்னால் மொதல்ல இந்த நாற்காலியைவிட்டு எழுந்திரு'' காளிதேவி உறுமினாள்.

''என்ன இது?''



''என்னவா? கோடீஸ்வரரின் மகள் என்று சொல்லி என் மகனை வலையில் போட்டுக்கொண்டுவிட்டாயாமே.''

''வலையில் போட்டுக்கொண்டது நான் இல்லை. உன் மகன் பணக்காரன் என்று சொல்லி என்னை ஏமாற்றிவிட்டான். நீச்சமானவன்!''

''என்னடி பேத்துகிறாய்? என் மகனையா நீச்சன் என்கிறாய்?''

''வார்த்தைகளை அளந்து பேசு.''

''என்ன பண்ணிவிடுவாயடி! ஆஹா! அப்படின்னால் பணம் இருக்கா இல்லையான்னு பார்த்துட்டுப் போகலாம்னு என் மகனுக்குத் தெரியாமல் வந்திருக்கிறாய்னு சொல்லு! அடி மாயக்காரி! உன் தளுக்கு மினுக்கில் சொக்கிப்போய் தானேடி என் மகன் அவ்வளவு தடவை பரீட்சையில் பெயிலானான்?''

''மூடு வாயை!''

''என்ன சொன்னாய்?'' காளிதேவி சரிதாவின் கூந்தலைப் பற்றிக்கொண்டாள்.

''விடு, விடு மொதல்ல! இல்லாவிட்டால் உன் மூஞ்சி பிளந்துவிடும்.''

ஒரு வினாடி இருவரும் திமிறினார்கள். சரிதா கையிலிருந்த பையைத் தூக்கி காளிதேவியின் முகத்தின்மீது பலமாய் ஒரிரண்டு தடவை அறைந்தாள்.

''ஐயோ!'' வீலென்ற காளிதேவி சரிதாவை விட்டுவிட்டு இரு கைகளாலும் மூக்கைப் பிடித்துக்கொண்டாள். சரிதா விடுவிடென்று போய்விட்டாள்.

''ஐயோ, ஐயோ! ரத்தம்! ரத்தம்! ராட்சசி! என் மூக்கை உடைச்சுட்டாளே தெய்வமே!'' ராகம் போடத் தொடங்கினாள்.

சீனுவின் அறையில் விக்கிரமன் உட்கார்ந்திருந்தான்.

சீனு விக்கிரமனின் மோவாயைப் பிடித்துக்கொண்டே கெஞ்சிக்கொண்டிருந்தான்.

''டேய், நாலு நாள் கொஞ்சம் காரைக் கடன் கொடுடா, வாங்கிவிட்டேன்னுச்சொல்லி, சரிதாவைசம்மதிக்க வைத்து அந்த மூன்று முடிச்சைப் போட்டுவிடுகிறேன்!''

''போடா இடியட்! என் பணத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் சுகப்பட்டுக்கொள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அப்பாவியான ஒரு பெண்ணை ஏமாற்றினால் மட்டும் என்னால் சும்மாயிருக்க முடியாது, அந்த பாவம் என்னையும் சூழ்ந்துகொள்ளும். ஆனாலும் சீனு, ஏண்டா இந்தப் பொய்? சரிதாவிடம் உண்மை விஷயத்தைச் சொல்லிவிடக்கூடாதா?''

''ஐயோ! வேறு வினை வேண்டுமா? என் மூஞ்சியில் அறைந்துவிட்டு என் காதை அறுத்து மாலையாய் போட்டுக்கொண்டுவிடுவாள் கழுத்தில்.''

''அதற்காக எவ்வளவு நாளைக்கு இப்படி பொய் சொல்லிக்கொண்டு இருக்கப்போகிறாய்?''

''கல்யாணமாகிற வரைக்கும்! அடேய்! எவ்வளவு அதிர்ஷ்டம் இருந்தால் சரிதாவை போன்ற பெண் மனைவியாய் கிடைப்பாளடா! ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை பண்ணு என்று சொல்லியிருக்காங்க. லட்சாதிபதி என்ற ஒரு சின்ன பொய்யைச் சொல்லிட்டு என் கல்யாணத்தை நான் பண்ணிக் கொள்கிறேன். இதில் தப்பென்னடா இருக்கு?''

''என்ன இருக்கா? என்னைக் கேளு, சொல்றேன்!''

இருவரும் திடுக்கிட்டுப் போய் திரும்பிப் பார்த்தார்கள்.

அறை வாசலில் சரிதா நெருப்பை உமிழும் கண்களோடு நின்று கொண்டிருந்தாள்.



''சரிதா'' விக்கிரமன் சட்டென்று எழுந்திருந்து எதிரே போனான்.

சரிதா எரிமலை வெடித்தாற்போன்ற பார்வையுடன் சீனுவை பார்த்து சொன்னாள்,

''இப்படிப்பட்ட சவுடால், டாம்பீகம் இவற்றால்தானே என்னை மோசம் பண்ணினாய்! உனக்கு கல்யாணந்தானே வேண்டும். நான் பண்றேன் வா'' கால் செருப்பைக் கழற்றினாள்.

''சரிதா'' விக்கிரமன் குறுக்கிட்டான்.

''நீங்கள் குறுக்கிடாதீங்க. இந்த நீச்சனுக்கு, இந்த துரோகிக்கு இப்படி பதில் சொன்னாலேயொழிய எனக்கு நிம்மதி ஏற்படாது.'' சரிதா கையிலிருந்த பையையும், செருப்பையும் சீனுவின்மீது வேகமாய் விட்டெறிந்தாள்.

''என் பேச்சை கேளு சரிதா. அவசரப்படாதே. இதென்ன ஆவேசம்?'' விக்கிரமன் தடுக்க போனான்.

''சீ! இவ்வளவு மோசக்காரன், ஏமாற்றுக்காரன் என்று கனவிலும் நினைக்கவில்லை. நீங்கள் உண்மையை சொல்லி என் கண்களைத் திறந்தீர்கள். இல்லாவிட்டால் என் வாழ்க்கையே நாசமாகியிருக்கும்...'' சரிதாவுக்கு துக்கம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

''ஆ! இதெல்லாம் நீ பண்ணிய காரியமா? டேய் சிநேகத் துரோகி!'' சீனு விக்கிரமன் மீது பாயவந்தான்.

விக்கிரமன் ஒரே உதறலில் சீனுவை அப்பால் தள்ளினான். கண்கள் சிவக்க சொன்னான். ''சீனு! ஜாக்கிரதை. கொழுப்பு பிடித்து நடந்து கொள்ளாதே.

''நான் செய்தது சிநேகத் துரோகம் இல்லை. உன்னிடம் ஆதியிலிருந்தே சரிதாவிடம் உண்மையை சொல்லிவிடுன்னு சொல்லிக்கொண்டே வந்தேன். நீ அந்தக் காரியத்தை

செய்யாததால் வேறு வழியில்லாமல் நான் செய்யவேண்டி யிருந்தது.''

''சரிதா! நீ விக்கிரமனை நம்பவேண்டாம். அவனுக்கு நம் மீது பொறாமை'' என்றான் சீனு சரிதாவை பார்த்து.

''சீ. மூடு வாயை. உன் மூஞ்சியைப் பார்த்தாலே எனக்கு பிடிக்கவில்லை.''

''அதில்லை சரிதா. நான் இதையெல்லாம் ஏன் பண்ணி னேன் தெரியுமா?'' சீனு நயமாய் சொல்லப் போனான்.

''என் மூஞ்சிக்கு முன்னால் நிற்காதே நீ. போய் விடு. போகிறாயா இல்லையா?'' சரிதா திரும்பவும் பூங்குவ ளையை எடுத்துக்கொண்டு சீனுவை நோக்கி வந்தாள்.

சீனு அறையை விட்டு வெளியே போய்விட்டான். கத விற்குப் பக்கத்தில் நொடிந்து போனவளாய் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே நின்றிருந்த சரிதாவிற்கு பின்னால் வந்து நின்றான் விக்கிரமன்.

''சரிதா! இதென்ன பைத்தியக்காரத்தனம்! வாழ்க்கை நாசமடையாமல் தப்பித்ததேன்னு சந்தோஷப்படாமல்...''

''நீங்கள்... நீங்கள் செய்த உதவியை இந்த ஜென்மத்தில் மறக்கமாட்டேன்.''

''என்னை தப்பாய் புரிந்து கொள்ளவில்லையே?''

''உங்களையா? ஊஹூம். இல்லை. நீங்கள் தெய் வத்தைப் போன்றவர்.''

''இந்த விஷயத்தைப் பற்றி அதிகம் வருத்தப்பட மாட்டாயே?''

சரிதா மாட்டேன் என்று தலையாட்டினாள். ஆனால் கண்களிலிருந்து கண்ணீர் பிரவாகமாய் வழிந்து கொண் டிருந்தது.



''சரிதா! உனக்கு எப்பொழுது எந்தக் கஷ்டம் வந் தாலும் காப்பாற்றுவதற்கு சிநேகிதனாய் நான் இருக் கிறேன் என்பதை மறந்துவிடாதே. நீ புத்திசாலி என்றும் அழுத்தக்காரி என்றும் எல்லோரும் நினைச்சிட்டிருக்காங்க. ஆனால் அதற்கு பின்னால் இருக்கிற உன் நிர்மலமான இதயத்தையும் அப்பாவித்தனத்தையும் நான் அறிவேன் சரிதா! உனக்கு அநியாயம் ஏற்பட்டுவிடக் கூடாதேங்கிற உணர்ச்சியால்தான் சீனு சொன்னது போல சிநேகிதத் துரோகம் பண்ணினேன். நீ எப்பொழுதும் சந்தோஷ மாகவும் சுகமாகவும் இருக்கணும். அதுதான் என் விருப்பம்.''

''விக்கிரமன்'' சரிதா விக்கிரமனை முதல் முதலாக கவனிப்பது போல ஆச்சரியத்துடன் பார்த்தாள்...

## 14

தீபாவளி பண்டிகை!

வீட்டில் இரண்டு பெண்கள் சிரித்துக்கொண்டும் கேலி பண்ணிக்கொண்டும் எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டும் கலகலப்பாய் இருந்ததைப் பார்த்து ஜானகி ராமனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

சித்ராவை பார்த்தவர்கள் யாருமே அவள் அந்நிய வீட்டுப்பெண் என்று உணர்ந்ததில்லை. சித்ராவுக்கு கல்யாணமாகி வேறு வீட்டிற்கு போய்விட்டால் திரும்பவும் இத்தனை பொறுப்புக்களும் தன் தலைமீதுதான் விழும் என்ற யோசனை வந்துவிட்டால் போதும் மனதில் நெருடத் தொடங்கிவிடும். பண்டிகைக்காக சித்ரா செய்திருந்த சமையல் மிக ருசியாய் இருந்தது.

இருட்டத் தொடங்கியதும் சித்ராவும் ஜமுனாவும் மத்தாப்புக்களைக் கொளுத்த தொடங்கினார்கள். விக்கிரமன் கூட அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டான். பளிச் பளிச் சென்று மின்னிக்கொண்டிருந்த அந்த மத்தாப்பு வெளிச் சத்தில் பளபளத்துக்கொண்டிருந்த சித்ராவின் முகத்தையே உற்று பார்த்துக்கொண்டிருந்த ஜானகிராமனின் இதயத்தில் சித்ராவின்பால் தந்தையின் வாத்ஸல்யம் நிரம்பி வழிந்தது.

ஜமுனாவை தேடிக்கொண்டு யாரோ சிநேகிதி வந்ததால் அவள் அப்பால் போய்விட்டாள். விக்கிரமனும் சித்ராவும் மட்டுமே எஞ்சிநின்றார்கள். பொறுப்பில்லாமல் இஷ்டப்படி சுற்றியலைந்து கொண்டிருந்த விக்கிரமனுக்கு சித்ராவை போன்ற மனைவி வந்தால் அந்த வாழ்க்கை சிரிப்பும் மகிழ்ச்சியுமாய் மிக நன்றாயிருக்கும் என்ற எண்ணம் இப்பொழுதெல்லாம் அடிக்கடி தோன்றிக் கொண் டிருந்தது ஜானகிராமனுக்கு. சித்ராவை மருமகளாக்கிக் கொண்டால் உற்றார் உறவினர்களும் பிறரும் ஆட்சேபணை சொல்லுவார்களோ என்ற சந்தேகம் கூட இல்லாமல் போக வில்லை அவருக்கு. ஆனால் விக்கிரமனின் சுகமும் எதிர் காலமுந்தான் முக்கியம் என்றெண்ணி துணிந்து இந்த முடிவிற்கு வந்திருந்தார் அவர்.

ஜானகிராமன் மறுநாள் ஜமுனாவோடு கூட சித்ரா வுக்கும் ஒரு நல்ல புடவையையும் நெக்லெஸ், வளையல் களையும் வரவழைத்தார். ஜமுனாவைக் கூப்பிட்டு சித்ரா வுக்கு அவைகளைத் தரச் சொன்னார்.

''எனக்கா? இவ்வளவு விலையுயர்ந்தவைகள் எனக் கெதற்கு?'' குழப்பத்துடன் ஜமுனாவைப் பார்த்தாள் சித்ரா.

''இது உன் மதிப்பிற்கு மீறியது ஒன்றுமில்லைம்மா! புடவையைக் கட்டிக் கொண்டு அந்த நெக்லெஸைப் போட்டுக் கொண்டு வா—'' என்றார் ஜானகிராமன்.



சித்ரா அவைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள். ஜானகிராமன் அந்தச் சமயத்தில் ஜமுனாவிடம் சித்ராவை விக்கிரமனுக்குப் பண்ணிவைக்க விரும்புவதைப் பற்றிச் சொன்னார்.

ஜமுனா ஆச்சரியமடைந்தவளாய் ''சித்தப்பா'' என்று கத்தியே விட்டாள்.

''நான் நன்றாகவே யோசித்துப் பார்த்து விட்டேன் ஜமுனா. வழி தப்பி விட்ட அவன் வாழ்க்கையை ஒரு வழிக் குக் கொண்டு வர வேண்டுமானால் சித்ராவைப் போன்ற பொறுமைசாலியான, சாதுவான, சாந்தமான பெண்தான் வேண்டும். எனக்கு எப்படியும் வரதட்சனை சீர் இவற்றின் மீது ஆசை இல்லை என்று உனக்கும் தெரியும். வீட்டிற்கு மருமகளாய் வரப்போகிறவள் நிதானமான பெண்ணாய் இருக்க வேண்டும். நான் சொல்கிற அருகதையெல்லாம் சித்ராவிடம் இருக்கின்றன. அந்தஸ்தைப் பற்றிச் சொல் கிறாயா? நாளைக்கு சுதாகருக்கு ஏதாவது நல்ல உத்யோகம் கிடைத்து விட்டால் அவங்க நம்மோடு சமமாகி விடுவாங்க. என்ன சொல்கிறாய்?''

''உன் உத்தேசம் ரொம்ப நன்றாகவே இருக்கு சித்தப்பா! ஆனால் விக்கிரமன் அண்ணன்... சித்ராவுக்குப் படிப்பு வழக்கு இல்லைன்னு சொல்லி...''

''அவன் மட்டும் பெரிதாய் என்ன படித்துக்கிழித்திருக் கிறான்? படிப்பில் என்னம்மா இருக்கு? படித்திருந்தும் பண்பில்லாமல் போனால் அந்தப் படிப்பு இருந்தும் ஒன்று தான், இல்லாமல் போனாலும் ஒன்றுதான். படித்தவங்களில் மட்டும் முட்டாள்கள் இல்லை என்கிறாயா?''

''நிஜந்தான் சித்தப்பா.''

அதற்குள் சித்ரா வந்ததால் அவர்கள் பேச்சு நின்றது.

புதுப்புடவை கட்டிக்கொண்டு வந்த சித்ரா ஜானகி ராமனின் பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

''எழுந்திரும்மா! எழுந்திரு! தீர்க்க சுமங்கலியாய் நூறாண்டு வாழணும்.''

அதற்குள் சுதாகர் கூட அங்கு வந்தான். அவன் கையில் தங்கைக்காக வாங்கி வந்திருந்த புடவை பாக்கெட் இருந்தது.

ஜானகிராமன் சுதாகரைப் பார்த்ததுமே சந்தோஷமாய் ''வாப்பா, வா! உனக்காகத் தான் காத்துட்டிருக்கேன். இந்தப் பண்டிகை நாளில் உனக்கு ஒரு சுபச் செய்தியைச் சொல்லப் போகிறேன்''— என்றார்.

''அதென்ன செய்தி?'' ஆர்வத்தோடு கேட்டான் சுதாகர்.

''சுதாகர்! உனக்கு ஆட்சேபனை இல்லையென்றால் உன் தங்கையை எங்கள் வீட்டு மருமகளாக்கிக் கொள்ள விருப்புகிறேன்'' என்றார்.

சுதாகர், சித்ரா இருவரும் வியப்படைந்தவர்களாய் அவரைப் பார்த்தார்கள். ஜானகிராமன் திருப்தியோடு சொன்னார்,

''இதில் ஆச்சரியப்படக்கூடிய விஷயம் எதுவுமில்லை. உங்கப்பா எனக்காகச் செய்த தியாகத்திற்கு இந்த விதமாய் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன். என்ன சொல்கிறாய்?''

''என்ன சொல்லுவேன் நான்? எங்கள் மீது நீங்கள் காட்டுகிற அன்பிற்கும், ஆதரவிற்கும் ஒரு எல்லையே இல்லை என்று தோன்றுகிறது. இந்த அதிர்ஷ்டம் சித்ராவுடையதல்ல என்னுடைய எதிர்காலமாய் பாவித்து சிறுவயதாயிருந்தாலும் பெரிய பொறுப்பை என் தலைமேல்



போட்டுக் கொண்டு தாயும் தந்தையும் நானேயாகி, என் கண்ணின் இமைகளைப் போல வளர்த்து வந்தேன்.''

சுதாகரின் கண்கள் கலங்கின. ''எப்பொழுதும் கவலைப் பட்டுக் கொண்டேயிருப்பேன்— வரதட்சணை, சீர் கொடுக்க முடியாத என்னால் அவளுக்கு நல்ல சம்பந்தத்தை எப்படி கொண்டு வர முடியும் என்று! நீங்கள் உண்மையில் தெய்வத்திற்குச் சமமானவர்''— சுதாகர் சட்டென்று குனிந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினான். உள்ளே வந்த சித்ரா அண்ணன் தந்த புடவையைப் பிரித்துப் பார்த்தாள். அவ்விடத்திலேயே இருந்த ஜமுனா அப்புடவையைப் பிடுங்கிக் கொண்டு ''அம்மோசவ்! புடவைகளை செலெக்ட் பண்ணுவதில் உங்கண்ணா எக்ஸ்பர்ட் போலிருக்கே. இந்தப் புடவை எவ்வளவு நன்றாய் இருக்கு!'' என்றாள்.

''உனக்கு அவ்வளவு பிடித்திருந்தால் நீயே எடுத்துக் கொள் ஜமுனா'' என்றாள் சித்ரா அப்பாவியாய்.

''ஐயோ! தங்கைக்காக வாங்கிய புடவையை நான் கட்டிக் கொண்டால்...?''

சித்ரா ஜமுனாவின் வாயைக் கைகளால் பொத்தி விட்டு ''எங்கண்ணா ரொம்ப நல்லவன். அப்படி ஒன்றும் நினைத்துக் கொள்ளமாட்டான். ஜமுனா, நீ மறுக்காதே. எடுத்துக் கொள்'' என்றாள் பலவந்தமாய்.

ஜமுனா அப்புடவையை எடுத்துக் கொள்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை.

மாலையில் ஜமுனா அப்புடவையைக் கட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்த சுதாகர் ஆச்சரியமடைந்தவனாய் தங்கையைக் கூப்பிட்டுக் கேட்டான்.

''அந்தப் புடவை ஜமுனாவுக்கு ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது அண்ணா. அதனால் தானே கொடுத்தேன்'' என்றாள் சித்ரா...

மாலையில் ஜானகிராமன் ஃபேக்டரியில் இருந்த ஊழியர்களுக்கெல்லாம் சுவீட்டுகளைத் தருவதற்காகப் போனார்.

விக்கிரமன் வீட்டில் இல்லை.

சித்ரா சமையல் அறையில் வேலையாய் இருந்தாள்.

ஜமுனா சுதாகர் இருந்த இடத்திற்கு வந்தாள்.

சுதாகர் படித்துக் கொண்டிருந்தான்.

''என்ன சார் போலீஸ் ஆபீசரே! இந்த புடவை எனக்கு எப்படி இருக்கு?''

''புடவை நன்றாய்தான் இருக்கு.''

''அப்படீன்னால் உங்கள் உத்தேசம்? நான் கட்டிக்கொண்டால் நன்றாய் இல்லைன்னா?''

''ஊஹூம், நீங்கள் கட்டிக்கொண்டால் நன்றாய்தான் இருக்கு. ஆனால் உங்கள் அந்தஸ்துக்குத் தகுந்ததாய் இல்லை. எளிமையாய் சாதாரணமாய் இருக்கு. எப்பொழுதும் பட்டு, சில்க், ஃபாரின் நைலான் என்று கட்டிக்கொள்ளும் உங்களுக்கு உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், யாரோ பலவந்தமாய் இழுத்துக் கட்டிவிட்டாற்போலதான் இருக்கு.''

''அதென்னவோ! அந்த விலை கிலை எல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குப் பிடித்துவிட்டது. கட்டிக்கொண்டுவிட்டேன், அவ்வளவுதான்!''

சுதாகர் திரும்பவும் புத்தகம் படிப்பதில் ஆழ்ந்து போனான்.

''நீங்கள் எவ்வளவு நன்றி கெட்டவர்'' என்றாள் கோபமாய்.

''நானா?'' திடுக்கிட்டுப்போய் கேட்டான்.

''நீங்கள் வாங்கிவந்த புடவையைக் கட்டிக்கொண்டிருக்கிறேனே, குறைந்தபட்சம் தாங்க்ஸ்ஸாவது சொன்னீங்களா நீங்கள்?''



''நானா?''

''பின்னே நானா? எங்கப்பா ஆயிரம் ரூபாய் புடவையை வாங்கிக்கொண்டு வந்து தந்துவிட்டு மணிக்கணக்காய் கெஞ்சினாலும் கட்டிக்கொள்ள மாட்டேன் நான். ஆனால் நீங்கள் வாங்கிக்கொண்டு வந்த புடவையை நீங்கள் கேட்காதபோதே கட்டிக்கொண்டேன்.''

''ஓ! அப்படீன்னால் தாங்க்ஸ்!''

''உப்! அழகாய்தான் சொல்றீங்க! அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி விருந்து வாங்கிச் சாப்பிட்டாற்போலதான் இருக்கு!''

சுதாகர் கையிலிருந்த புத்தகத்தை மூடி வைத்தான். ''ஜமுனா'' பரிவோடு கூப்பிட்டான்.

''சீக்கிரமாய் சொல்லுங்கள், என்ன?'' போகத் திரும்பியவள் கேட்டாள்.

''என்னை ஏன் இப்படி வம்பிற்கிழுத்துச் சீண்டுகிறாய்? என்னை அழவைப்பது நியாயமா?''

''ரொம்ப அழகுதான்! இப்ப நான் என்னத்தைச் சொல்லிவிட்டேன்?'' மின்னல் வெட்டும் பார்வையை வீசிவிட்டு அறையை விட்டு ஓடிப்போய்விட்டாள்.

ஜமுனா போன திசையையே பார்த்துக்கொண்டு வெகு நேரமாய் உட்கார்ந்திருந்த சுதாகர் பெருமூச்செறிந்துவிட்டு, திரும்பவும் புத்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டான். இப்பொழுது அங்கே எழுத்துக்களுக்கு பதில் ஜமுனாவின் முகந்தான் தென்படத் தொடங்கிற்று. தன்னைச் சீண்டி அழவைத்துக்கொண்டிருக்கும் ஜமுனாவின் குறும்புத்தனத்திற்குப் பின்னால் வேறு ஏதோ இருப்பதுபோல தோன்றிற்று. அது இருவருக்குமிடையே சிநேகபூர்வமான நெருக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தவிப்பு! அவன் மனதில் ஏதோ இனிமையான உணர்ச்சி தோன்றத் தொடங்கிற்று.

# 15

அந்த தீபாவளி விநோதமாய் சரிதா-சித்ரா இருவர் வாழ்க்கையிலும் மிக முக்கியமான நாளாயிற்று. வீட்டில் ஒரு பக்கத்தில் ஜானகிராமன் சந்தோஷமாய் சித்ராவை வாழ்த்திவிட்டுத் தன் மருமகளாக்கிக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை சுதாகரிடம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்த அதே சமயத்தில் விக்கிரமன் ஊருக்கு தொலைவில இருந்த காட்டேஜிற்கு சரிதாவை அழைத்துச் சென்று அவள் மீது தனக்கு ஏற்பட்டிருக்கும் அன்பை வெளியிட்டான். இப்பொழுதெல்லாம் விக்கிரமனுக்கு எப்பொழுது பார்த்தாலும் சரிதாவைப்பற்றிய ஞாபகமாகவே இருந்தது. சீனுவின் மோசடியால் எதிரடி வாங்கிய சரிதாவை விக்கிரமன் தன்னால் முடிந்தவரை எல்லாவிதமாகவும் தேற்றுவதற்கு முயன்றான். சீனுவின் மீது எவ்வளவோ கனவுகளையும் நம்பிக்கைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்த சரிதா திடீரென்று அவைகள் எல்லாம் கனவுகள் என்று தெரிந்து கொள்ள நேரிட்டதால் கலங்கிப் போய்விட்டாள்.

சீனு தன்னை ஏமாற்றிவிட்டான் என்ற சத்தியத்தைவிட எவ்வளவு எளிதாய் தான் ஏமாந்து போய்விட்டோம் என்ற உண்மைதான் அவளை தகித்துக்கொண்டிருந்தது. இந்த நிலைமையில் யாரை நம்பலாம் யாரை நம்பக்கூடாது என்று கூட தெரியாதபடி சங்கடத்தில் ஆழ்ந்தாள்.

விக்கிரமன் அவளுக்காக உயிரையும் தருவதற்குத் தயாராய் இருந்தான் என்பது அவன் வார்த்தைகளைக் கொண்டு தெரிந்தது. ஆனால் அந்த வார்த்தைகளை எப்படி நம்புவது? அதற்காக அவனை விட்டு விலகி இருக்கவும் சாத்தியப்படவில்லை. சரிதாவின் மனதில் தோன்றிய



அல்லோகலத்தை விக்கிரமன் நன்றாகவே புரிந்துகொண்டான். அவனுக்கு எவ்வளவு யோசித்துப் பார்த்தபொழுதிலும் சரிதா தனக்குச் சரியான ஜோடி என்றுதான் தோன்றிற்று. நிறைய விஷயங்களில் இருவர் அபிப்பிராயங்களும் ஒன்றாகவே இருந்தன.

விக்கிரமனுக்குப் பெண்களைப்பற்றி விநோதமான அபிப்பிராயம் இருந்தது. கட்டுப் பெட்டித்தனமாய் பழைய ஆச்சாரங்களுடன், எப்பொழுது பார்த்தாலும் கணவனே கண்கண்ட தெய்வம் என்று நிதானமாய், மந்தமாய் இருக்கும் பெண்களைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்காது.

அடிக்கடி ஊடலும் கோபமும் கொண்டு, பேச்சால் சுண்டியிழுத்து, அவ்வப்பொழுது சின்னச் சின்ன அபிப்பிராய பேதங்களுக்காக புயலை உண்டாக்கி, அதற்குள்ளேயே திரும்பவும் சமாதானமாகப் போய், கைக்கு எட்டியும் எட்டாதது போலவும், விருப்பம் இருந்தும் இல்லாதது போலவும் நடந்துகொள்ளும் பெண்களைத்தான் அவனுக்குப் பிடிக்கும்.

கணவன் என்பவன் கண்கண்ட தெய்வமாய் இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள், கணவன் தெய்வமாய் கொஞ்சங்கூட எந்த அப்பழுக்கும் இல்லாதவனாய் இருக்க வேண்டும் என்றும் மனிதனுக்கு உரிய பலவீனங்கள் இருக்கக் கூடாது என்றும் விரும்புவார்கள். எப்பொழுதாவது அவனால் தப்பித்தவறிப்போய் ஏதாவது அநியாயம் ஏற்பட்டுவிட்டால் தம் வாழ்க்கையே நாசமாகிவிட்டாற்போல அழுது அட்டகாசம் பண்ணிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆண்களுக்குக் கால்கட்டுகளே தவிர மனைவிகள் ஆகமாட்டார்கள் என்பது அவன் உத்தேசம். பெண்கூட ஆணுக்குச் சமமாய் இருக்க வேண்டும்.

சமம் என்றால் கிளப்புகள் சீட்டாட்டம் இல்லை... நீ இல்லை என்பதற்காக நான் செத்துப்போய் விடமாட்டேன் என்ற நெஞ்சுறுதி பெண்கள் எல்லோருக்கும் இருக்க வேண்டும். கணவன் என்பவன் கவனித்துக் கொண்டாலும்,

இல்லாவிட்டாலும், தன் வாழ்க்கையை தான் சீர்திருத்திக் கொள்ளக்கூடிய திறமை மனைவிக்கு இருக்கவேண்டும். மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும் வாழ் நாள் பூராவும் ஒருவர்கொருவர் துணையும் நிழலுமாய் இருக்கவேண்டுமே தவிர, ஒருத்தர் மூலமாய் இன்னொருத்தர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற அடிமை உணர்ச்சி மட்டும் வரக்கூடாது.

விக்கிரமன் தனக்கு வரவேண்டிய மனைவி எப்படி இருக்கவேண்டும் என்று கற்பனை பண்ணிக் கொண்டிருந் தானோ அசல் அதேபோலவே இருந்தாள் சரிதா. அதனால் தான் இன்றைக்கு தன் மனதில் சரிதாவிற்கு இருந்த இடத்தை பற்றி வெளிப்படையாய் சொல்லிவிட்டான் விக்கிரமன்.

சரிதா அவன் சொன்னதையெல்லாம் கேட்டாள். ஆனால் தனியாய் இருக்கிறோம் என்ற தைரியத்தில் அவன் காட்டிக்கொண்ட உரிமைக்கு மட்டும் அவளால் உற்சாக மளிக்க முடியவில்லை. அவனுக்கு அது சகிக்கவில்லை.

"என்ன சரிதா! தொலைவிலிருந்து தூண்டிவிழுப்பாய், கிட்டே வந்தாலோ ஓடிவிடுகிறாயே!" என்றான் பழிப்பது போல.

"ஆணின் கைக்கு எட்டிவிட்டால் பெண்ணின் கதி என்னவாகும் என்று உங்களுக்குத் தெரியாதா விக்கிரமன்?"

"நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்லவில்லையா சரிதா?"

"நீங்கள் சொல்லிவிட்டால் ஆகிவிடுமா? உங்கப்பா சம்மதிக்க வேண்டாமா?"

"சம்மதிக்க வைக்கிற பொறுப்பு என்னோடது. அவர் என் பேச்சை மீறமாட்டார். சிறுவயதிலிருந்தே நான் எது வேண்டும் என்றாலும் நிமிஷத்தில் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்து விடுவார்."



"அதெல்லாம் வேறு, கல்யாணம் வேறு விக்கிரமன்! கல்யாணம் என்றால பெரியவங்க ஆயிரம் யோசிப்பாங்க."

"என் பேச்சை நம்பு! ஒருக்கால் நீ சொல்லுவதே நிஜமாகி, அப்பா ஒப்புக்கொள்ளாமல் போனால் உன்னை ரெஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக்கொள்வேனே தவிர, உன்னை கைவிட்டு விடமாட்டேன்."

"விக்கிரமன்" வியப்பும் மகிழ்ச்சியுமாய் அவனை பார்த்தாள் சரிதா.

விக்கிரமன் சரிதாவின் தோள்களை பிடித்துக் கிட்டே இழுத்துக்கொண்டான். அழகான அத்தலையை மார்போடு அணைத்துக்கொண்டே சொன்னான். "என் பேச்சை நம்பு! என்னை சந்தேகப்படாதே. நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கொள்வது உனக்காக இல்லை. எனக்காக என் சந்தோஷத்திற்காக! என் சுகம், சந்தோஷம் எல்லாம் உன்னிடந்தான் இருக்கின்றன என்று எனக்கு நன்றாய் தெரியும் சரிதா."

சரிதா கண்களை மூடிக்கொண்டாள். மூடிய இமைகளின் வழியாய் இரு சொட்டு கண்ணீர் துளிகள் கீழே உருண்டு விழுந்தன.

"இதென்ன? நான் ஏதாவது சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லிவிட்டேனா? உன்னை வருத்தப் படுத்தி விட்டேனா சரிதா?"

"இல்லை விக்கிரமன், இல்லை... இவ்வளவு நாட் களாய் நான் பணந்தான் உலகமே என்றெண்ணிக் கொண் டிருந்தேன். பணம் இருந்துவிட்டால் சொர்க சுகங்கள் கிடைத்துவிடும் என்றெண்ணிக் கொண்டிருந்தேன். இப் பொழுது தெரிகிறது. ஒரு கள்ளமில்லாத இதயத்திலிருந்து வெளிவருகிற அன்பிற்குச் சமமாய் இந்த உலகத்தில் எதுவுமே இல்லை என்று! தெய்வம் மிக கருணைமய

மானவர். அகளபாதாளத்தில் விழத்தெரிந்த என்னை காப் பாற்றி என் கண்களைத் திறந்துவிட்டார். உங்களுக்கு பணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒன்று மட்டும் நிஜம் விக்கிரமன்! என் மனதில் உங்களுக்கு இருக்கும் மதிப்பு ஒருநாளும் மாறாது.''

''நன்றி சரிதா'' என்றான் விக்கிரமன் சரிதாவை மார்போடமுத்திக்கொண்டே.

பழிவாங்கத் துடிக்கும் பாம்பை போல சரிதாவை அவளுக்குத் தெரியாமல் நிழலாய் தொடர்ந்துகொண்டிருந்தான் சுதாமன். இங்கேயும் அவர்களை பின்தொடர்ந்து வந்து அவகாசத்திற்காக காத்துக் கொண்டிருந்தவன் டக்கென்று தன் கையிலிருந்த கேமிராவை அழுத்தினான். சரிதாவின் மீது அவனுக்கு இன்னும் பைத்தியமாய் தான் இருந்தது. சரிதா கிடைத்தால் தனக்குத்தான் கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு யாருக்குமே கிடைக்கக்கூடாது. சரிதா யாருக்குமே கிடைக்காமல் போகவேண்டுமென்றால் அவனுக்கு ஒரே வழிதான் தென்பட்டது. சரிதாவை தன்னால் முடிந்தவரை நடுத்தெருவிற்கு இழுத்துவந்து, ஏகளைப் பண்ணி, அவள் வாழ்க்கை சந்தி சிரிக்கும்படி செய்ய வேண்டும். அப்பொழுது கல்யாணமாகாத சரிதா கதிகெட்டுப் போய் வேறுவழியில்லாமல், தாய் தந்தையரின் உபத்திரவம் தாங்கமுடியாமல் போயாவது தன்னை மணந்து கொள்வாள் என்ற ஆசை இருந்தது. அதனால்தான் சரிதாவின் வாழ்க்கையை நடுத்தெருவிற்கு இழுப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான் சுதாமன்.

# 16

சரிதா விக்கிரமன் இருவரும் நெருக்கமாய் இருந்த போட்டோ ஜானகிராமனுக்குப் போய்சேர்ந்தது. போட்டோ வோடு கூட ஒரு உண்மை விளிம்பியின் கடிதம்கூட இருந் தது. அதில் சரிதாவுக்கு சீனுவோடு இருந்த சம்பந்தத்தை யும் விக்கிரமனை பார்த்ததுமே அதை கத்திரித்துக் கொண்டதையும், சரிதா ஒரு கெட்டுப்போன பெண் என்றும் விவரிக்கப்பட்டிருந்தது. ஜானகிராமன் அந்த போட்டோ வைப் பார்த்ததுமே ஆத்திரமடைந்தார் ஆனால் மகளை கூப்பிட்டு கண்டிக்கவில்லை. வீட்டே அதிரும்படியாய் சுத்தி ஆர்பாட்டம் பண்ணவில்லை. இந்த நிமிஷமே வரச்சொல்லி புரோகிதருக்கு செய்தி சொல்லியனுப்பினார். வந்ததும் முகூர்த்தத்தை வைத்துக் கொண்டுவிட்டார்.

அதே சமயத்தில் அங்கே வந்த விக்கிரமன் திருமணம் தனக்குதான் என்றறிந்ததும் பேயறைந்தவனைப்போல ஆகி விட்டான். குறைந்த பட்சம் தன்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல், தன்னோடு பேசி முடிவெடுக்காமல் ஒரேயடி யாய் திருமணத்திற்கு முகூர்த்தத்தையே வைத்துவிட்டதை பார்த்ததும் அவனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்து விட்டது.

மனதில் தோன்றிய கோபத்தை அடக்கிக்கொண்டே கேட்டான். ''கல்யாணத்துக்கு இப்பொழுது அவ்வளவு அவசரம் ஏன் வந்துவிட்டது அப்பா?''

''உனக்கு அவசரமாய் இல்லாவிட்டாலும், எனக்கு அவசரமாய் இருக்குடா.''

''அதற்காக என் கல்யாணத்திற்கு என் சம்மதம் தேவை யில்லையா?''

ஜானகிராமன் எழுந்து நின்றார்.

''தேவையில்லாதபடி நீயேதான் பண்ணிக் கொண்டிருக்கிறாய்.''

''அப்பா''

''ஆமான்டா! உன் கல்யாணம் நடக்கப்போவது சித்ராவோடு! நீ மறுத்தால் கேட்டுக்க போறவங்க இங்கே யாருமில்லை.''

''சித்ராவோடா?''

''ஆமாம். சித்ரா உன் மனைவியானால் உன் வாழ்க்கை கொஞ்சமாவது சீர்திருந்துமேங்கிற ஆசையால்தான் இந்தக் காரியத்தை பண்ணுகிறேன்.''

''இப்ப நான் என்ன அப்படி கெட்டுப் போயிட்டேனப்பா?''

''டேய்! வெட்கமில்லைடா உனக்கு. இப்படி வா!'' ஜானகிராமன் கையைப் பிடித்து தன் அறைக்கு அழைத்துச் சென்று மேஜை டிராயருக்குள் இருந்த போட்டோவை எடுத்துக் காட்டினார்.

அவனும் சரிதாவும் நெருக்கமாய் இருந்த போட்டோ அது!

அதை பார்த்ததும் வாயடைத்து போனவனாய் அப்படியே நின்றுவிட்டான் விக்கிரமன்.

''இப்பச் சொல்லுடா! ஏன் பேசமாட்டேங்கிறாய்? நீ கெட்டுப்போய் கொண்டிருக்கிறாயா? உருப்பட்டுக் கொண்டிருக்கிறாயா? உன் கல்யாணத்துக்கு அவசரப்படுவதில் என்ன தப்பு இருக்குங்கறேன்? யார் இந்தப் பெண்?''

விக்கிரமனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

''இந்த... இந்தப் பொண்ணு என் கிளாஸ்மேட் அப்பா.''



''கிளாஸ்மேட்டாய் இருந்தால் இப்படி ஏன் கட்டிக்கணும் என்கிறேன்? டேய், உன் பசப்பல்களால் என் கண்ணை மூடிவிட முடியாது. உனக்கு உடனே கல்யாணம் பண்ணி வைக்காமல் போனால் உருப்படாமல் போய் விடுவாய். சித்ராவோடு இந்த முகூர்த்தத்தில் உன் கல்யாணத்தை வைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும்.''

''அப்பா, என் பேச்சைக் கேளுங்க.''

''மூடுவாயை! என் கோபத்தைத் தூண்டிவிடாதே. போ அப்பால்.''

## 17

ராஜாராம் உத்யோகம் பண்ணிக்கொண்டிருந்த ஊரில்-

ராஜாராம் பரபரப்புடன் வீட்டிற்கு வந்தார்.

மைத்துனர் வந்திருப்பதாய் மனைவி போன் பண்ணியதால் பரபரப்புடன் வீட்டிற்கு வந்தவரை ஜானகிராமன் எதிர் கொண்டார்.

''என்ன தம்பி! என்ன இப்படி திடீரென்று வந்துகுதித்திருக்கிறாய்?''

''சம்பந்தம் குதிர்ந்திருக்கு அண்ணா விக்கிரமனுக்கு!''

''குட். மணமகள் யார்? எவ்வளவு படித்திருக்கிறாள்? தந்தை என்ன வேலையில் இருக்கிறார்? வரதட்சணை எவ்வளவு தராங்களாம்?''

''பொண்ணு வேறு யாரோ இல்லை அண்ணா. நம்ப சித்ராவே தான்.''

''சித்ராவா? யாரு சித்ரா...?''

''அதாங்க! மைத்துனருக்காகச் செத்துப் போனாரே அந்த வீரபத்திரனின் மகள்'' என்றாள் மனைவி பத்மா இடைமறித்து.

''வீரபத்திரனின் மனைவியா? ஓஹோ! சுதாகரின் தங்கை சித்ராவா? அப்படிச் சொல்றத்துக் கென்ன? என்ன சொன்னாய்? சித்ராவை விக்கிரமனுக்குச் சம்பந்தம் பார்த்திருக்கிறாயா? உனக்கு புத்தி கித்தி பிசகி விட்டதா?''

''இல்லை அண்ணா! சித்ரா ரொம்ப நல்ல பெண், புத்திசாலி.''

''விக்கிரமன் மட்டும் இல்லையா?''

''இப்பல்லாம் அவனோட நடவடிக்கை சரியாய் இல்லை. எப்பப் பார்த்தாலும் பார்ட்டிகள், பிக்னிக்குகள், என்னென்னவோ சிநேகங்கள்.''

''மொதல்ல ஒண்ணு கேட்கிறேன் சொல்லு. இந்தக் கல்யாண விஷயத்தில் என்னை ஆலோசனைக் கேட்பதற்காக வந்தாயா? உன் முடிவைச் சொல்றத்துக்கு வந்தாயா? ஆன்ஸர் டு தி பாயிண்ட், உம்! க்விக்.''

ஜானகிராமன் பதில் சொல்ல முடியாதவராய் பார்த்தார்.

ராஜாராம் தாமதத்தைப் பொறுக்கமாட்டாதவராய் தானே சொன்னார்—

''ஆலோசனை கேட்பதற்காக வந்திருந்தாயானால் எனக்கு இந்தக் கல்யாணம் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை என்பேன். ஏன் என்கிறாயா? கொடுக்கிற இடத்திலும் வாங்கிக் கொள்கிற இடத்திலும் சமமான அந்தஸ்து இருக்க வேண்டும். இல்லை, தீர்மானம் பண்ணி விட்டாயா? ஆல்ரைட். எனக்கொண்ணும் ஆட்சேபணை இல்லை. அப்புறமாய் மட்டும் 'அண்ணா, விக்கிரமனின் குடும்பம் இப்படி



ஆயிடுத்து அப்படி ஆயிடுத்துன்னு'-என்னிடம் வரக்கூடாது. நான் முன்பே சொல்லி விட்டேன்.''

''சரி அண்ணா'' என்றார் ஜானகிராமன் சிரித்துக் கொண்டே.

''இந்தக் கல்யாணத்தை உங்கள் கையால் நடத்தி வைக்கணும் அண்ணி.''

''சரி'' என்றாள் பத்மா. அவள் சித்ராவைப் பார்த்திருக்கிறாள். விக்கிரமனின் சுபாவத்தைப் பற்றியும் தெரியும். இந்தக் கல்யாணத்தை நிச்சயம் பண்ணியதில் ஜானகிராமனின் உத்தேசத்தை அறிந்து கொண்டாள். மகிழ்ச்சியடைந்தாள் கூட.

## 18

ஜானகிராமன் சொன்னபடியே நடத்திக் காட்டி விட்டார். தீர்மானித்திருந்த முகூர்த்தத்தில் சித்ராவுக்கும் விக்கிரமனுக்கும் மணம் செய்து வைத்து விட்டார். திருமணம் அவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி கம்பீரமாய் நடந்தேறி விட்டது. திருமணத்திற்கு சிதம்பரமும் சாருமதியும் கூட போனார்கள்.

விக்கிரமனின் திருமண அழைப்பிதழைப் பார்த்ததுமே இடி விழுந்தாற்போல ஆனாள் சரிதா.

ஜானகிராமனின் ரைஸ் மில்லிலேயே குமாஸ்தாவாய் வேலை பண்ணிக் கொண்டிருந்த சிதம்பரம் முதலாளியின் மகனுக்குத் திருமணம் என்று ஒரு வாரமாய் வீட்டிற்கே வராமல் பம்பரமாய் வேலை பண்ணிக் கொண்டிருந்தார். வீட்டிற்கு வந்த பிறகு மகள் இதயத்தில் நெருப்பை வாரிப்

போடுகிறோம் என்று தெரிந்து கொள்ளாமல் ஜானகி ராமனின் வீட்டில் திருமணத்திற்காக நடத்துக் கொண்டிருந்த ஏற்பாடுகளையெல்லாம் விவரித்துச் சொல்லுவார். சரிதாவின் இதயமே தூள் தூளாகிவிட்டது. கண்களில் கண்ணீர் கால்வாய் கட்டிற்று. அந்த வருத்தம் விக்கிரமனுக்குத் திருமணம் ஆகிறதே என்று கூட இல்லை. தனக்கு இவ்வளவு வார்த்தைகளைச் சொல்லி விட்டு, எவ்வளவோ ஆசைகளைக் கற்பித்து விட்டு, தந்தையை எதிர்த்தாவது சரி ரிஜிஸ்தர் மேரேஜ் செய்து கொள்வேன் என்று சபதமிட்ட விக்கிரமன் குறைந்தது கண்ணில் கூட படவில்லையே என்று தான்!

அவளிடம் வந்து ''நிலைமைக்குக் கட்டுப்பட்டு விட்டேன். வேறு வழியில்லாமல் போய்விட்டது'' என்று சொல்லியிருந்தால் சரிதாவுக்கு இவ்வளவு வருத்தம் இல்லாமல் போயிருக்கும். விக்கிரமன்கூட சீனுவை போன்றவன் தான். இந்த உலகத்தில் ஆண்கள் எல்லோருமே ஒன்று தான்! சீ! தன்னை கையில் போட்டுக் கொள்வதற்காகவே அப்படி இனிக்க இனிக்கப் பேசியிருப்பான்!

சீனுவின் விஷயத்தில் கேவலம் பணத்திற்கு முக்கியத்துவம் தந்து அவனோடு சுதந்திரமாய் பழகினாள்.

ஆனால் விக்கிரமன் விஷயத்தில் அவ்வாறு இல்லை. பணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவன் தனக்கு வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அதுவே இப்படியாகி விட்டது. கடைசியில் அவளுக்கு எஞ்சி நின்றது, சீனுவோடும் விக்கிரமனோடும் சுற்றிக் கொண்டிருந்தாள் என்ற கெட்ட பெயர்! சரிதாவின் துக்கத்திற்கு அளவில்லாமல் போய்விட்டது.

ஃ ஃ ஃ

விக்கிரமனுக்கு சகஜமாய் சங்கோஜம் அதிகம். கோழை, சரிதாவுக்குத் தான் அநியாயம் பண்ணிவிட்டோம் என்றும்,



இனி ஜென்மத்திலும் சரிதாவின் முகத்தை பார்க்க முடியாது என்றும், வேதனையால் குமுறிக் கொண்டிருந்தான். விக்கிரமன் தன்னை நினைத்து அவ்வளவு வேதனையடைந்து கொண்டிருக்கிறான் என்ற விஷயம் சரிதாவுக்கு தெரிந்திருந்தால் அவள் அவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டாள். சித்ராவின் கழுத்தில் தாலியை கட்டிவிட்ட போதிலும், சித்ராவின் கணவனாய் தனக்கு முத்திரையிடப்பட்டு ஒரு வாரமாகிவிட்ட போதிலும் அவனால் சரிதாவை இன்னும் மறக்கமுடியவில்லை. அவனுக்கு எந்த வேலையை பண்ண முனைந்தாலும் சரிதாவின் நினைவே வந்து கொண்டிருந்தது.

அன்றைக்குத் தபாலில் விக்கிரமனின் பெயருக்கு ரிஜிஸ்தர் பார்சல் ஒன்று வந்தது. கையெழுத்து பழக்கப்பட்டதாய் இருந்ததால், துடிக்கும் இதயத்தோடு பிரித்து பார்த்தான்.

அதில் சரிதாவுக்கு அவன் எழுதிய கடிதங்களும் தந்த பரிசுகளும் இருந்தன. அவற்றை திருப்பி அனுப்பி வைத்து சரிதா தன் கடிதம் ஒன்றையும் இணைத்திருந்தாள்.

''விக்கிரமன்!

எட்டாத கனிக்காக கொட்டாவி விட்ட துரதிர்ஷ்டசாலி நான்! ஏழ்மையில் பிறந்து பணமே வாழ்க்கையாய் பாவித்து, முன்னுக்கு வருவதற்காக தவிக்கும் என்னை போன்ற பெண்கள் எல்லோரும் இப்படிப்பட்ட பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டியதுதான். விக்கிரமன்! சீனு விஷயத்தில் அவனிடம் இருப்பதாய் எண்ணிக்கொண்டிருந்த பணத்திற்குதான் அதிக மதிப்பளித்தேன். ஆனால் உங்கள் விஷயத்தில் அப்படியில்லை. மனமார, பணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி என்று உங்களையே விரும்பினேன் நல்லவரான உங்கள் நிழலில் என் வாழ்க்கை சந்தோஷமாய் கழிந்துபோகும் என்றும் நான் அதிர்ஷ்டசாலியாகி விடு

வேன் என்றும் பேராசைப்பட்டேன். நான் இவ்வளவு நாளாய் என்னை மிக புத்திசாலி என்றே நினைத்துக்கொண்டிருந்தேன். இன்றைக்குத் தெரிந்துவிட்டது. என்னைப் போன்ற முட்டாளும் அப்பாவியும் கிடையாது என்று! என் ஆசைகள், அகம் எல்லாம் சாம்பலாகி போய்விட்டன. உங்கள் தாம்பத்தியம் சிறந்த தாம்பத்தியமாய் ஆகவேண்டும் என்று மனப்பூர்வமாய் விரும்புகிறேன். அதனால்தான் இக்கடிதங்களையும், நகைகளையும், திருப்பி அனுப்பி விட்டேன். உங்களை நிரந்தரமாய் இழந்துவிட்ட என்னாய் இவைகள் ஞாபகமூட்டுவதைத் தாங்கிக் கொள்ளமுடிய வில்லை.

—சரிதா"

சரிதா உண்மையிலேயே அவனை பழிவாங்க எண்ணி யிருந்தால் கடிதத்தைக் காட்டிலும் வேறு சாதனம் இல்லை. அவைகளை தன்னிடம் வைத்துக்கொண்டு என்ன வேண்டு மானாலும் செய்திருக்கலாம். பழிவாங்கக் கூடிய அவகாசம் இருந்தும்கூட சரிதா அவனை மனப்பூர்வமாய் மன்னித்து விட்டுவிட்டாள்.

இந்த சத்தியம் விக்கிரமனின் இதயத்தை ரம்பமாய் பிளந்து கொண்டிருந்தது. சரிதா செய்த இந்த காரியத் தால் அவன் குற்ற உணர்வு இருமடங்காகிவிட்டது.

இந்த விவாகத்தால் தன்னையொத்த அதிர்ஷ்டசாலி இந்த உலகத்தில் வேறு யாருமே இல்லை என்று இறு மாந்து போய்க்கொண்டிருந்த சித்ராவுக்குக் கணவனின் மனதில் குமுறிக் கொண்டிருக்கும் இந்த வேதனை தெரி யாது. சித்ராவின் கண்ணோட்டத்தில் விக்கிரமன் தெய்வத் திற்குச் சமமானவன். அந்த தெய்வத்திற்கு சதா தன் இதயக்கோவிலில் பூஜை பண்ணிக்கொண்டிருந்தாள் அவள். தன்மீது பக்தியையும் அளவுக்கு மீறிய மதிப்பையும் காட்டிக் கொண்டு நிசப்தமாய் தன் வாழ்க்கையில் அந்தர்வாஹினி



யைப்போல வந்து சேர்ந்து கொண்டுவிட்ட சித்ராவை விக்கிரமனால் எதிர்பார்த்தபடி வெறுக்க முடியவில்லை. திருமணமானதுமே சில நாட்கள் விக்கிரமனையும் 'சித்ராவை யும் வெளியூருக்குச் சந்தோஷமாய் போய்விட்டு வரச்சொல்லி அனுப்பிவைத்தார் ஜானகிராமன்.

## 19

மகள் மனதில் ஏற்பட்டுவிட்டிருந்த காயத்தையும், அந்த இளம் இதயத்தில் ஏற்பட்டு போயிருந்த ஏமாற்றத்தை யும் கொஞ்சமும் உணராத சிதம்பரமும் சாருமதியும் சரிதா வின் திருமணத்திற்காக முயற்சிகளை பண்ணிக் கொண்டும், ஏதேதோ சம்பந்தங்களை பார்த்துக்கொண்டும் இருந்தார் கள். ஓரிரண்டு பேர் பெண்ணை பார்த்து பிடித்திருக்கிறது என்று போய்விட்டு, அப்புறமாய் தெரிந்த விவரங்களை கொண்டு பெண்ணின் நடத்தை நல்லதில்லை என்று சாட்டுமாட்டாய் கேள்விப்பட்டு பேசாமல் இருந்து கொண் டார்கள். சிதம்பரம் வரதட்சணை சீர்களை அதிகமாய் சொல்ல வில்லை. இருப்பதற்குள் சுமாரான சம்பந்தத்தை பார்த்தார் அவர். ஆனால் சரிதா தனக்கு கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். அக்கணவன் மனைவியர் அதை பொருட்படுத்தவில்லை. இப்பொழுதே சொன்ன பேச்சை கேட்காமல் சிநேகிதர்கள் என்று நான்குபேருடன் சுற்றி கெட்ட பெயரை வாங்கிக் கொண்டுவிட்ட பெண்ணிற்கு கூடிய சீக்கிரத்தில் திருமணம் பண்ணாமல் போனால் பிறகு திருமணமே ஆகாது என்று சிதம்பரம் பயந்தார். திருமணம் பண்ணிக்கொண்டு ஒரு வீட்டிற்குபோய் குடித்தனம் பண்ணத் தொடங்கினால் கொஞ்சமாவது ஸ்திரமான புத்தி வராதா

என்பது சாருமதியின் ஆசை. கடைசியில் எப்படியோ சரிதாவின் விருப்பு வெறுப்புகளுக்கு சற்றும் இடம் கொடுக்காமல் ஒரு சம்பந்தத்தை பார்த்து முடிவு பண்ணினார்கள்.

மணமகன் வீட்டார் சரிதாவை பெண் பார்ப்பதற்கு வந்தார்கள். சரிதா என்னவானாலும் சரி, பெண் பார்க்க அவர்கள் வந்தால் தான் அவர்களுக்கு முன்னால் போகமாட்டேன் என்று பிடிவாதமாய் மறுத்தாள். பெண்ணை சந்தைக் கடையில் பசுவைப்போல நிறுத்திவைத்து நாணயத்தை பார்த்து பேரமாடும் இந்த பெண்பார்க்கும் படலம் என்றாலே அவளுக்கு எப்பொழுதுமே இளப்பந்தான். மணமகன் வீட்டாரை உட்காரவைத்துவிட்டு உள்ளே வந்த சிதம்பரம் சரிதாவுக்கு பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி அவள் வந்தே தீர வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். அவர் மறுபடியும் வெளியே ஹாலுக்கு வந்தபொழுது சுதாமன் உள்ளே வந்தான்.

''யார் தம்பீ நீ? என்னவேண்டும்?'' என்று கேட்டார் சிதம்பரம்.

சுதாமன் சிதம்பரத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை. நேராய் மணமகனுக்கருகில் போய் ''என்னடா ராஜீ?'' என்று விசாரித்தான்.

''சுதாமனா? வா வா! சமயத்திற்கு வந்தாய்'' மணமகன் வரவேற்றான்.

''இப்படி வா! உன்னோடு அர்ஜெண்ட்டாய் பேசனும். கொஞ்சம் வேலை இருக்கு'' என்றான் சுதாமன். மணமகன் கொஞ்சம் சங்கடத்தில் ஆழ்ந்தான். சிதம்பரத்திற்கு ஏனோ சுதாமனின் தோரணை பிடிக்கவில்லை.

''என்ன பிரச்னை?'' என்றார்.

''இன்னும் மணமகள் வரவில்லை இல்லையா? மணமகள் வரனும், இவன் பார்த்து இவனுக்குப் பிடித்து போகனும். அதற்குள் கல்யாணமே ஆகிவிட்டாற்போல அவசரப்படுகிறீர்களே நீங்கள்! வாடா நீ'' என்று மணமகனை கையை பிடித்து வெளியே வந்தபிறகு சுதாமன் ராஜீவின் தோளில் கையை வைத்து ''ஏண்டா! ஒரு ஊர்க் காரர்கள் இல்லை நாம்ப? நானும்கூட இதே வீதியில்தான் இருக்கேன்னு தெரியுமோனோ? வரும் முன்னால் ஒரு சின்ன செய்தியை சொல்லியனுப்பியிருக்கலாமே!'' என்றான்.

''இப்ப என்னவாயிடுத்துடா?''

''நீ ஒன்றும் நினைத்துக்கொள்ள மாட்டேன் என்றால் ஒரு வார்த்தை சொல்றேன்.''

''என்ன?''

''இந்த பொண்ணு ஒரு ஊர்சுற்றிடா.''

''ஆங்!''

''ஆமாம். இதோ இந்த போட்டோவை பாரு. இதுதான் விவகாரம். நிறைய கைமாறியிருக்கு! போயும் போயும் இந்த எச்சில் இலைக்கு ஆசைப்படுகிற தலையெழுத்து உனக்கு எதுக்குடா?''

அந்த போட்டோவை பார்த்ததுமே மணமகனின் முகம் சிவந்துவிட்டது. சுதாமனின் கையை பிடித்துக்கொண்டே ''எங்கப்பா இந்த சம்பந்தத்தை மூர்த்தா நேற்றுதான் பார்த்தார். பெண் நன்றாயிருக்கிறாள் என்றதால் வரதட்சணை கொடுக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை, பண்ணிக் கொள்ளலாம் என்ற உத்தேசத்துடன்தான் வந்தோம். தாங்க்ஸ் பிரதர்! நீ பண்ணிய நன்றியை இந்த ஜென்மத்தில் மறக்கமாட்டேன்'' என்றான்.

''ஒரே ஊர்க்காரர்களாய் இருந்து கொண்டு இந்த அளவிற்குக்கூட உதவமுடியாமல் போனால் எப்படி?''

வெளியே அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் உள்ளே சிதம்பரம் சாருமதியை பார்த்து ''இன்னும் ரெடியாக

வில்லையா?'' என்று அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். சரிதா இன்னும் தலைவாரிக் கொள்ளவில்லை. புடவை மாற்றிக் கொள்ளவில்லை. அவருக்கு கோபம் தலைக்கேறி விட்டது.

''இன்னுமா அப்படியே உட்கார்ந்திருக்கீங்க?''

''இதோ ஆயிடுந்து. நிமிஷத்தில் அழைத்துக்கொண்டு வரேன் நீங்கள் போங்கள்'' என்றாள் சாருமதி மகளுக்கு தலைவாரிக்கொண்டே.

''எனக்கு இந்த கல்யாணம் பிடிக்கவில்லைம்மா. அப்பாவிடம் சொல்லு. என்னைக் கஷ்டப்படுத்தாதீங்க'' சரிதா திடீரென்று தாயின் மார்பில் முகத்தை பதித்துக் கொண்டு ஓவென்று கதறிவிட்டாள்.

''நீ பார்த்துவிட்டு வந்து விடும்மா. நன்றாய் இருக்காது'' சாருமதி கெஞ்சினாள்.

''இதோ வந்துவிட்டாள். ஆயிடுத்து'' என்றார் சிதம்பரம்.

''இந்தச் சம்பந்தத்தை இனி நாம் பார்க்கவேண்டிய தேவையில்லைப்பா'' முகத்தை கடுகடுவென்று வைத்துக் கொண்டு சொன்னான் மணமகன்.

''என்னடா இது? என்னவாயிடுத்து?''

''கல்யாணத்துக்கு அழகு ஒன்று மட்டுமே முக்கியம் இல்லை, குணமும் வேண்டும் என்றும் அது இந்தப் பெண்ணிடம் இல்லை என்றும் அவனுக்குத் தெரிந்துவிட்டது'' என்றான் சுதாமன்.

சிதம்பரம் கொதித்தெழுந்தார்.

''யாரைய்யா நீ? பூஜை வேளையில் கரடியைப்போல வந்திருக்கிறாய்?''



''நான் யாருன்னு உங்க பெண்ணிற்கு நன்றாய் தெரியும். உங்கள் பெண்ணின் வாழ்க்கையை பற்றி இன்னும் நன்றாய் தெரியும் எனக்கு.''

''என்ன சொன்னாய்?'' சிதம்பரம் சுதாமனின் சட்டையை பிடித்துக்கொண்டு அடிப்பதற்காக கையை ஓங்கினார்.

சுதாமன் ஒரே உதறலில் அவரிடமிருந்து விலகிக் கொண்டான். பகை, துவேஷம் நிரம்பிய பார்வையுடன் விஷத்தை கக்கினாற்போல சொன்னான்.

''எவ்வளவு பேர்களின் வாயை மூடுவீங்க சார்? ஆனா தாம் கெட்டுப்போன பெண்ணுக்கு கல்யாணம் எதுக்கு? உன் பிடிவாதந்தானேயொழிய, கொஞ்சம் கண்களை மூடிக் கொண்டுவிட்டால் போகிறது தங்கமழையே பெய்யுமே.''

''இதுதானா சார் சங்கதி? அப்பஅன்னால் வரோம்'' மணமகன் வீட்டார் எழுந்து விட்டார்கள்.

''இதப் பாருங்க. என் பேச்சைக் கேளுங்க'' சிதம்பரம் தயமாய் எடுத்துச் சொல்ல போனார்.

''இதுவரை கேட்டதே போதும்ப்பா! எங்களுக்கு எதற்கு வீண்வம்பு!'' அவர்கள் காதில் போட்டுக் கொள்ளாமல் போய்விட்டார்கள்.

சுதாமன் வெற்றிப் பெருமிதத்துடன் பார்த்துவிட்டு போய்விட்டான்.

சிதம்பரத்திற்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது.

அந்த கோபத்தையெல்லாம் கூட்டி மகள் மீது காட்டினார்.

''சீ, சீ, இந்த தரித்திரம் பிடித்த மூஞ்சிக்கு கல்யாணம் ஆகிற யோகமே இல்லை. வேண்டாம், அவங்களோடும்

இவங்களோடும் சுற்ற வேண்டாம்மா என்று தலையிலடித்துக் கொண்டேனே, கேட்டாளா? சிநேகிதர்கள், பொழுது போக்கு என்றாள். இப்பப் பார்!... கடைசியில் பிச்சைக்காரன்கூட கிடைக்கமாட்டான். இது செத்தால்தான் பீடை ஒழியும். அவ்வளவு வருத்தமாய் இருக்கு எனக்கு'' ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார் சிதம்பரம்.

சரிதாவின் கண்களில் மடைதிறந்தாற்போல கண்ணீர் பெருக்கெடுத்துக் கொண்டேயிருந்தது. அழுதுகொண்டே கட்டிலில் சரிந்தாள்.

## 20

விக்கிரமனுக்கும் சித்ராவுக்கும் திருமணம் ஆகிவிட்டதால் ஜமுனாவுக்கு சுதாகரோடு கொஞ்சம் உரிமை ஏற்படத் தொடங்கிற்று. அதோடு இப்பொழுது சொந்தம்கூட ஏற்பட்டு விட்டது. ஜமுனாவின் குறும்புத்தனத்திற்கு அளவில்லாமல் போய்விட்டது. சுதாகரின் நிதானகுணம், பண்பு, நீர் பூத்த நெருப்பைப்போல மறைந்திருந்த சாமர்த்தியம், இதெல்லாம் ஜமுனாவை கவர்ந்தன. சுதாகர் ஜமுனா தன் மீது காட்டிய சுவாதீனத்தை பார்த்துவிட்டு ஓரிரண்டு தடவை கண்டித்தபொழுது, ஜமுனா கோபித்துக்கொண்டு விட்டாற்போல முகத்தை வைத்துக்கொண்டு, ''இதில் உங்களுக்கென்ன தொந்தரவு இருக்கிறது? எங்கண்ணாவுக்கு உங்கள் தங்கையை கொடுத்து கல்யாணம் பண்ணியதால் நம்மிடையே அந்தஸ்து வேற்றுமைகூட போய்விட்டது இல்லையா?'' என்று வாதாடினாள்.

அன்றிரவு சாப்பாடு ஆனபிறகு, சுதாகர் தோட்டத்தில் தனியாய் உட்கார்ந்திருந்தான். பின்னாலிருந்து ஜமுனா



எப்பொழுது வந்தாளோ தெரியாது, காலடி சப்தம் கேட்காதவாறு வந்து சட்டென்று அவன் கண்களை பொத்திவிட்டாள்.

''ஜமுனா'' கைகளை தடவிக்கொண்டே பரிவோடு கூப்பிட்டான் அவன்.

''ஒரு வாக்குறுதி தந்தால்தான் கைகளை எடுப்பேன்.''

''தராவிட்டால்?''

''எடுக்கமாட்டேன்.''

''சரி, எனக்கென்ன வந்தது? என்னால் இப்படியே உட்கார்ந்திருக்க முடியும். உனக்குதான் கைகள் வலியெடுக்கும்.''

''அதானே தவிர வாக்குறுதி தரமாட்டேங்கிறீங்க, அப்படித்தானே?''

''விஷயம் என்னன்னு தெரியாமல் எப்படி?''

''தெரியாவிட்டால் தரக்கூடாதா? என் மேல் அவ்வளவு நம்பிக்கைகூட இல்லையா?''

''உன் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு ஜமுனா.''

''எங்கே, இன்னொரு முறை ஜமுனா என்று கூப்பிடுங்கள்.''

சுதாகர் சிரித்தான். ஜமுனாவின் கை ஸ்பரிசம் அவன் மனதில் கிளுகிளுப்பையூட்டி, ஆயிரம் அடுக்கு மாளிகையின் உச்சிக்கு விர்ரென்று அவனை ஏற்றிவிட்டாற் போல இருந்தது. அவனுக்கு ஒரு நிமிஷம் ஜமுனாவின் கையை எடுத்துவிட்டு கடுமையாய் மிரட்ட வேண்டும் போலிருந்தது. அதே சமயத்தில் ஜமுனாவின் அக்கைகளைப் பிடித்துக்கிட்டே இழுத்துக் கொள்ள வேண்டும் போலவும் இருந்தது.

''இதென்ன வாக்குறுதி சொல்லு.''

''அடுத்த வாரம் நம்ம காலேஜில் 'பழைய மாணவர்கள் நாள்' விழா இருக்கிறது அதில் புரோகிராமுக்கு நம் இருவரின் பெயர்களையும் கொடுத்து விட்டேன் நான்.'' என்றாள் ஜமுனா அவனுக்கெதிராய் வந்து உட்கார்ந்து கொண்டே.

''இதில் வாக்குறுதி என்ன இருக்கிறது?''

''நீங்கள் என் வார்த்தைகளை மீறிவிடக்கூடாதுன்னு.''

''அதென்ன புரோகிராம்?''

''ராதா-கிருஷ்ணா நாட்டியம்.''

''மை காட்! நாட்டியமா? செத்தேன்! எனக்கு டான்ஸ் வராது.''

''டான்ஸ் தேவையில்லை. நீங்கள் பாட்டுக்குத் தகுந்தாற்போல முகபாவங்களைக் காட்டினால் போதும்.''

சுதாகர் நிலா வெளிச்சத்தில் தனக்கெதிரே வந்து உட்கார்ந்து கொண்டிருந்த ஜமுனாவை மெய் மறந்தாற் போல பார்த்துக் கொண்டேயிருந்தான். நிர்மலமாய் அகலமாய் இருந்த கண்களோடு, பளிங்குச் சிலையைப் போல இருந்தாள் ஜமுனா. பணக்காரியும், படிப்பும் பண்பும், கொண்டவளுமான இவள் மனதில் இடம் பிடித்துக் கொள்வதற்குத் தான் என்ன புண்ணியம் செய்திருப்பானோ? அவன் மனதில் இதுவரை எந்தப் பெண்ணுமே இவ்வளவு இனிமையான உணர்ச்சிகளைத் தோற்றுவித்ததில்லை. முதல் முதலாகத் தோற்றுவித்திருப்பது ஜமுனாதான்! ஆனால்... அதற்குமேல் யோசிப்பதற்கும் ஆசைப்படுவதற்கும் அவனுக்கு தைரியம் போதவில்லை.

''ஏன் அப்படிப் பார்க்கிறீங்க? ஒப்புக் கொண்டுவிட்டாற் போல தானே?''

''உன் பேச்சை மறுத்துவிட முடியுமா ஜமுனா?''

''என்றுமே மறுக்கமாட்டீங்களா?''

''ஆமாம்.''



''நிஜமாகவா?'' நம்ப முடியாதவளாய் பார்த்துக் கேட்டாள்.

''நிஜம்.''

ஜமுனா பக்கென்று சிரித்து விட்டாள். சுதாகரும் சிரித்துவிட்டான்.

ராத்திரி வேளையில், மிக நிசப்தமாய், அமைதியாய் இருந்த அந்த தோட்டத்திலிருந்து பக்கென்று சிரித்தச் சிரிப்பு அலை அலையாய் எழும்பி, மாடியறையில் தூக்கம் சரியாய் வராமல் கட்டிலில் புரண்டு கொண்டிருந்த ராஜாராமின் காதில் விழுந்ததை அவ்விருவரும் அறியவில்லை.

ராஜாராம் மகளின் சிரிப்புச் சப்தத்தைக் கேட்டதுமே கட்டிலை விட்டு எழுந்து வந்து ஜன்னல் வழியாய் நின்று பார்த்தார். தொலைவில் தோட்டத்தில், நிலா வெளிச்சத்தில், சிமெண்ட் பெஞ்சியின் மீது உட்கார்ந்து சுதாகரும் ஜமுனாவும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அவர் புருவங்கள் முடிச்சேறின.

சுமார் அரை மணிக்கு பிறகு ஜமுனா தோட்டத்திலிருந்து திரும்பி வந்து, தன் அறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று ''ஜமுனா!'' என்று தந்தை கூப்பிட்டதைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அறை வாசலில் பைப்பைப் புகைத்துக் கொண்டே நின்றிருந்த ராஜாராம் மகளைக் கூர்ந்து பார்த்தார்.

வெளியே பரவியிருந்த நிலா வெளிச்சமெல்லாம் ஜமுனாவின் கண்களிலேயே நிரம்பி வழிந்துகொண்டிருந்தாற் போல இருந்தது.

''டாடி! நீங்கள் இன்னும் தூங்கவில்லையா?'' வியப்போடு கேட்டாள்.

''இல்லை, எங்கேயிருந்து வருகிறாய்?''

"தோட்டத்திலிருந்து டாடி. தூக்கம் வாராததால் இப்படியே தோட்டத்திற்குப் போனேன். அங்கே சுதாகர் உட்கார்ந்திருக்கவே, ஏதோ பேசிக் கொண்டே உட்கார்ந்திருந்து விட்டேன்."

"சுதாகரா? ஏன், அவனுக்கும் தூக்கம் வரவில்லையா?"

சகஜமாய் எப்பொழுதுமே வேடிக்கையாய் பேசும் தந்தை இப்பொழுதுகூட ஜோக் அடிக்கிறார் என்றெண்ணிக் கொண்ட ஜமுனா பக்கென்று சிரித்துவிட்டு— "போ டாடி! நீ ரொம்பத்தான் மோசம். எனக்குத் தூக்கம் வருது. குட்நைட்" என்று சிறகு முளைத்த குதிரையைப் போல தன் அறையை நோக்கி ஓடிவிட்டாள்.

மாயமில்லை. மகளின் முகம், அச்சிரிப்புக் குரல். எங்கோ மிதந்து கொண்டிருந்தாற் போன்ற அந்தப் பார்வை, எல்லாம் அனுபவம் வாய்ந்த ராஜாராமின் உள்ளத்தைக் கடுமையாய் எச்சரித்தன.

## 21

காலேஜில் 'பழைய மாணவ மாணவிகளின் தினம்' மிக விமரிசையாய் கொண்டாடப்பட்டது. ஜமுனாவும் சுதாகரும் சேர்ந்து போட்ட ராதாகிருஷ்ணா நாட்டியம் மிக அபாரமாய் இருந்ததாய் எல்லோரும் ஒருமித்துப் பாராட்டினார்கள். ஆனால் ராஜாராமுக்கு அந்தக் காட்சியில் ஜமுனாவும் சுதாகரும் ஒருவர்பால் இன்னொருவர் காட்டிக் கொண்ட அந்த உரிமை ஆத்திரத்தைக் கிளப்பிற்று. அன்றைக்குத் தோட்டத்தில் பார்த்ததற்கு இது அடுத்தபடியாய் தோன்றிற்று.



வீட்டிற்கு வந்ததுமே தம்பியையும் மனைவியையும் கண்டபடி திட்டினார்.

"வயது வந்த பெண் அந்த சுதாகரோடு சேர்ந்து இதென்ன கும்மாளம்? புத்தியிருக்கா?" என்று உலுக்கி எடுத்தார்.

"அதெல்லாம் நடிப்பு தானே அண்ணா?" என்றார் ஜானகிராமன் நயமாய் எடுத்துச் சொல்ல முனைந்து.

"வாயை மூடடா! நடிப்பாம்! இன்றைக்கு நடிப்பு, நாளைக்கு நிஜமாகிற அறிகுறிகள் எனக்கு நன்றாய் தென்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம் நீதான்டா! வேண்டாம் என்று சொன்னபோது கேட்டுக்கொள்ளாமல் சித்ராவை அழைத்து வந்து உன் மருமகளாக்கிக் கொண்டாய். அதனால் இந்த சுதாகர் தலைக்குமேல் போய் விட்டான். இதப்பார்! நீ உன் மகனுக்குப் பண்ணினாற்போல என்னால் பண்ண முடியாது. எனக்கு ஜமுனாவின் எதிர்கால நலன் மீது ரொம்ப அக்கறையிருக்கு"—என்றார் ஆவேசத்தால் ஆடிக் கொண்டே.

"நடுவில் மைத்துனர் என்ன பண்ணினாருங்க?" பத்மா ஜானகிராமனுக்குப் பரிந்து கொண்டு வந்தாள்.

"மொதல்ல இவ்வளவையும் பண்ணியது நீதான். தாயாய் இருந்து கொண்டு அவளை ஒரு கண் பார்த்துக் கொண்டுவர வேண்டாமா? அவளைக் கண்டித்தாயா?"— ராஜாராம் மனைவியின் மீது எரிந்து விழுந்தார்.

"அண்ணியை ஒன்றும் சொல்லாதே அண்ணா, நான் சுதாகரைக் கண்டிக்கிறேன்" என்றார் ஜானகிராமன்.

"அவ்வளவு தூரம் வருத்தப்படுவானேன்? நடந்ததென்னவோ நடந்து விட்டது. இப்பொழுது நம் பெண்ணை நம் வீட்டிற்கே அழைத்துக் கொண்டு போய் விட்டால் எந்த ரகளையும் இருக்காது" என்றாள் பத்மா.

''கரெக்ட்! தம்பி! காலையில் ஜமுனாவை எங்களோடு கூட்டிக் கொண்டு போய் விடுகிறோம். நீ ஒன்றும் நினைத்துக் கொள்ளாதே?''

''உன்னிஷ்டப் அண்ணா.''

ஜானகிராமன் அன்றிரவு படுக்கப் போவதற்கு முன்னால் சுதாகரை தன் அறைக்குக் கூப்பிட்டு எச்சரித்தார்.

''சுதாகர்! ராத்திரி நாட்டிய நிகழ்ச்சியில் ஜமுனாவும் நீயும் அவ்வளவு சுவாதீனமாய் இருந்தது நன்றாயில்லை. அண்ணாவின் மனதுக்கு வருத்தம் ஏற்பட்டுவிட்டது.'' சுதாகர் விக்கித்துப் போய் விட்டான்.

ஜானகிராமன் மென்மையாய் சொன்னார்.

''ஜமுனாவின் கல்யாணத்தைப் பற்றி என்னென்னவோ ஊகித்துக் கொண்டிருக்கிறார் அண்ணன். இதற்கு மேல் என்னால் சொல்ல முடியாது.''

''எனக்குப் புரிந்துவிட்டதுங்க''—என்று வினயமாய் பதிலளித்தான் சுதாகர்.

ஜானகிராமனின் அறையை விட்டு வெளியே வந்த சுதாகருக்கு திடீரென்று உலகமே சாரமில்லாமல் போய் விட்டாற்போல தோன்றிற்று. பஞ்ச கல்யாணி குதிரையைப் போல பறந்து கொண்டிருந்த அவன் மனதிற்கு ஜானகிராமனின் வார்த்தைகள் கடிவாளம் போட்டு விட்டாற்போல ஆயிற்று. அன்றிரவெல்லாம் சரியாய் தூங்கவில்லை அவன். காலையில் எழுந்ததுமே சித்ரா காபியைக் கொண்டு வந்து கொடுத்தபொழுது—''இன்றைக்கு ராஜாராம் ஊருக்குப் போய்விடப் போகிறார் அண்ணா! ஜமுனாகூட அவர்களோடு போகிறாள்'' என்றாள்.

இந்த விஷயத்தைக் கேட்டதுமே பெருமூச்செறிந்தான் சுதாகர்.



''ஜமுனா ஷாப்பிங்கிற்குப் போகணுமாம். பத்து மணிக்கு உன்னை ரெடியாய் இருக்கச் சொன்னாள்'' என்றாள் சித்ரா.

''எனக்கு வேலை இருக்குன்னு சொல்லு தங்கச்சி'' என்றான் சுதாகர்.

காலையில் வீட்டை விட்டுபோன சுதாகர் சாப்பிடக்கூட வரவில்லை. தன்னோடு ஷாப்பிங்கிற்கு வராவிட்டாலும், குறைந்த பட்சம் ஊருக்குப் போகிற சமயத்தில்கூட வீட்டிற்கு வராதது ஜமுனாவுக்குக் கோபத்தை வரவழைத்தது. கடிதம் ஒன்றை எழுதி, சித்ராவிடம் தந்து, ''இதை உங்கண்ணாவிடமே கொடு அண்ணி'' என்று சொல்லிவிட்டு போய்விட்டாள். மாலையில் சுதாகர் வீட்டிற்கு வந்ததுமே சித்ரா அவனை உலுக்கி எடுத்தாள்.

''உனக்காக ஜமுனா எவ்வளவு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் தெரியுமா? எங்கே போய்விட்டாய் அண்ணா?''

''வேலை இருந்தது போனேன். இப்ப என்னவாயிடுத்து?''

''ஜமுனாவுக்கு ரொம்ப கோபம் வந்துவிட்டது. இதோ, உனக்குக் கடிதம் எழுதி தந்திருக்கிறாள், கண்டிப்பாய் பதில் போடச் சொல்லி திரும்பத் திரும்ப சொல்லிவிட்டுப் போனாள்.''

சுதாகர் கடிதத்தை வாங்கிப் படித்தான். கடிதத்தில் ஒவ்வொரு எழுத்திற்கும் பின்னால் மறைந்து நின்ற ஜமுனாவின் கோபம், குறும்புத்தனம், அன்பு எல்லாவற்றையும் உணராமல் போகவில்லை அவன். இதற்கு முன்பாய் இருந்தால் அவன் மனது சந்தோஷத்தால் குதித்துக் கும்மாளமிட்டிருக்கும். இப்பொழுது நிலைமை வேறு. அவன் எந்த மூலையோ, ஜமுனா எந்த மூலையோ! அவனுக்கு நன்றாய் தெரிந்துவிட்டது. அதனால்தான் ஜமுனா எழுதிய கடிதத்

தைக் கிழித்து போட்டுவிட்டு, ''பைத்தியக்காரப் பொண்ணு'' என்றெண்ணிக்கொண்டான்.

''என்ன அண்ணா இது?'' சித்ரா பதற்றத்துடன் கேட்டாள்.

''ஜமுனாவின்மேல் எந்தவிதமான ஆசையையும் வளர்த்துக்கொள்வதற்கு எனக்குப் பிடிக்கவில்லைம்மா! அதனால் தான் வேண்டுமென்றே நான் வீட்டிற்கு வரவில்லை.'' சுதாகர் தலைவலி என்று சொல்லிவிட்டு கதவைச் சாத்திக்கொண்டு படுத்தான். அவனுக்கு என்றுமில்லாதவாறு இன்றைக்கு உற்சாகமில்லாமல் இருந்தது. ஜமுனா ஒரு அழகான கனவாய் எஞ்சி நின்றுவிடுவாள் என்று அவன் எண்ணியும் பார்க்கவில்லை. தன்னை, நிலைமையை தான் மறந்துபோய் மனக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டு விட்டேனோ என்று தன்னையே தான் விமர்சித்துக்கொண்டான். ஜமுனா எழுதிய கடிதத்தை கிழித்துப் போட்டுவிட்டான். ஆனால் ஜமுனா அள்ளி வீசியெறிந்துவிட்டுப்போன சுகந்தமான சிநேகம் என்ற மலரை அவனால் மறந்து போகத்தான் முடியுமா?

## 22

---

சுதாகர் ஐ. பி. எஸ். பரீட்சைக்குப் போன இண்டர்வ்யூவில் செலெக்ட் ஆகிவிட்டதாய் கடிதம் வந்தது. ட்ரெயினிங்கிற்காக அவன் ஐதராபாத்திற்குப் போகவிருந்தான். ஜானகிராமனின் சந்தோஷத்திற்கு அளவில்லை.

சித்ரா கர்ப்பமாகியிருந்தாள். அண்ணனை விட்டுப் பிரிந்து இருந்து பழக்கமில்லாத சித்ரா அதைரியத்துடன்



அமைதியில்லாமல் இருந்தாள். சுதாகர் அன்று ஊருக்குப் போவதற்கு பிரயாணமானான்.

வாடிய முகத்துடன் கண்ணீரை அடக்கிக்கொண்டே வீட்டில் வளைய வந்துகொண்டிருந்த மருமகளைப் பார்த்த ஜானகிராமன், ''பாருப்பா! நீ ஏதோ நாடு விட்டு நாடு போவதுபோல உன் தங்கை எப்படி திகிலடைந்து போய்க் கொண்டிருக்கிறாள் பார்'' என்று கேலி செய்தார்.

''நீங்கள் இருக்கும்போது என் தங்கச்சிக்கு திகில் எதற்கு?'' என்றான் சுதாகர்.

''என்னவோப்பா! அதிகமாய் வேலை பண்ண வேண்டாம் என்று சொன்னாலும் கேட்கமாட்டேங்கிறாள். எப்பொழுது பார்த்தாலும் சுற்றிச் சுற்றி வந்து வேலை பண்ணிக் கொண்டேயிருக்கிறாள்'' என்று புகாரிட்டார் ஜானகிராமன்.

''சித்ரா! உடம்பு ஜாக்கிரதை'' எச்சரித்தான் சுதாகர்.

''அதில்லை அண்ணா. டாக்டர் என்னவோ உடற்பயிற்சி பண்ணணும் என்கிறார். மாமா என்னவோ...''

''மாமாவின் பயமெல்லாம் மருமகனுக்காகத்தானேம்மா!'' என்றான் சுதாகர் சிரித்துக்கொண்டே.

''போ அண்ணா'' சித்ரா நாணமடைந்தாள்.

''வரேங்க'' சுதாகர் ஜானகிராமனிடம் விடைபெற்றுக் கொண்டான்.

''போயிட்டுவாப்பா! நீ ட்ரெயினிங் முடிந்து திரும்பி வரும்போது லட்டு போன்ற மருமான் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பான்.''

''அண்ணா! வாரா வாரம் கடிதம் போட மறந்துவிட மாட்டாயே?'' தீனமாய் கேட்டாள் சித்ரா.

''மறப்பேனா தங்கச்சீ? நீயும் எழுதிக்கொண்டிரு!''

''சரி அண்ணா!''

சுதாகர் தங்கையிடமும் ஜானகிராமனிடமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

ஸ்டேஷனுக்கு வந்துகொண்டிருக்கையில் அவனுக்கு அன்றைக்குத் தான் இண்டர்வ்யூவுக்குப் புறப்பட்ட பொழுது ஜமுனா டிரைவ் பண்ணிக்கொண்டே பேசிய வார்த்தைகள் எல்லாம் நினைவிற்கு வந்தன.

ஜமுனாகூட ஐதராபாத்தில்தான் இருந்தாள்.

அவனும் அங்கேயேதான் ட்ரெயினிங்கிற்குப் போகிறான். சுதாகர் மனமெல்லாம் ஏதோ போல ஆயிற்று. கூடுமானவரையிலும் ஜமுனாவைப் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டான்.

23309
3858309 23

---

சீனுவுக்கு விக்கிரமனின் சிநேகம் சிதைந்துபோய்விட்டதால் கடன்காரர்களின் தொல்லை அதிகமாகிவிட்டது.

கடன் தருவார் யாருமில்லை. அதனால் வீட்டை அடமானம் வைத்துப் பணம் வாங்கினான். கடனைத் திருப்பித் தராததால் கோர்ட்டில் கேஸ் போட்டு அது 'டிகிரி' ஆகிவிட்டது. சேட் வீட்டை ஜப்தி பண்ணுவதற்கு வந்துவிட்டான். ஒரு வாரமாய் காளிதேவிக்கு குளிர் ஜுரம்...பட்டினி. சீனு வீட்டிற்கு வருவதைத் தவிர்த்து வெகு நாட்களாகிவிட்டது. காளிதேவி தன்னந்தனியாய் முனகிக்கொண்டே படுத்திருந்தாள். பக்கத்து வீட்டுப் பையன் மூலமாய் டாக்டருக்குச் செய்தி அனுப்பினாள்.

கோர்ட் அமீனாவும், கடன் தந்த சேட்டும் வந்தார்கள்.



அவனைப் பார்த்து டாக்டர் என்றெண்ணிக்கொண்டாள் காளிதேவி. ''வாங்க தம்பீ வாங்க...புது டாக்டரா நீங்க? நான் பார்த்ததேயில்லையே. இந்தக் குளிர் ஜுரத்தால் செத்துப்போயிட்டிருக்கேன்னால் நம்புங்க.''

''உங்கள் மகன் சீனு எங்கே?''

''அவன் பேரையே எனக்கு முன்னால் எடுக்காதே தம்பீ! அந்த கதி கெட்டவன் சரிதா என்ற மாயக்காரியின் வலையில் விழுந்து வீட்டையெல்லாம் மொட்டையடித்து விட்டான்.''

''உங்கள் மகன் வீட்டை அடமானம் வைத்து எழுதி என்னிடமிருந்து நாற்பதாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டான். கேசு போட்டபொழுது டிகிரி ஆகிவிட்டது. நீங்கள் கட்டிலிலிருந்து எழுந்து இப்படி வாங்க. நாங்கள் வீட்டை ஜப்தி பண்ணறதுக்கு வந்திருக்கோம்.''

காளிதேவி ருத்ரகாளியாகிவிட்டாள்.

சாமி வந்தவளைப்போல ஆடிக்கொண்டே, ''என்னது வீட்டை அடமானம் வைத்து எழுதியிருக்கானா அந்தப் பிசாசு? நீங்கள் குரங்கு மூஞ்சிகள் ஜப்தி பண்ண வந்திருக்கீங்களா? இதப்பார், என்னய்யா! வீடு என்னோடது. மரியாதையாய் வந்த வழியே போய்விடுங்கள். இல்லாவிட்டால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவேன், ஜாக்கிரதை'' என்று கத்தினாள்.

''இதப் பாரும்மா! கத்திப் பிரயோஜனம் இல்லை. நீங்கள் பயமுறுத்தினாலும் இங்கே பயப்படுகிறவங்க யாருமில்லை. நான் கோர்ட் அமீனா! நீங்கள் பண்ணலேன்னா நாங்கள் பலவந்தமாய் காலி பண்ண வைத்துவிடுவோம்.''

''ஆ! என்னது?'' காளிதேவிக்கு துக்கம் பொத்துக்கொண்டு வந்தது.

''என் மகன் என்னை இவ்வளவு மோசம் பண்ணி விட்டானே தெய்வமே!... இத்தனைக்கும் காரணம் அந்த பாவி தான்! எனக்கு நிற்க நிழலில்லாமல் போயிடுத்துடா கடவுளே! நான் என்ன பண்ணுவேண்டா? அவன் நாசமாய் போகணும். என்னை உயிரோடு கொல்றத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறாளே அவள் ஒருத்தி!'' என்று ராகம் போட தொடங்கினாள்.

அதே சமயத்தில் சீனு அங்கே வந்தான்.

''அம்மா, அம்மா என்ன இது? என்னவாச்சு? ஏன் இப்படி அழுது கொண்டிருக்கிறாய்?'' என்று கலக்கத்தோடு கேட்டான்.

காளிதேவி மகன் மீது பாய்ந்தாள்.

''டேய், பாவி! எனக்கு தெரியாமல் வீட்டை அடமானம் வைத்தாயாடா? உனக்கென்னடா கேடுகாலம் வந்து சேர்ந்திருக்கு? இப்ப என் கதி என்ன?''

''ஒன்றும் ஆகாதும்மா. நீ பயப்படாதே. நான் சொல்லுகிறேன் அவங்களுக்கு.''

சீனு கோர்ட் அமீனாவையும் சேட்டையும் அப்பால் அழைத்துக்கொண்டுபோய் ''எங்கம்மா வீட்டில் இருக்கும் போது வீட்டை சுவாதீனம் பண்ணிக்கொள்ள உங்களால் முடியாது. நான் இப்படியே என்னோடு ஆசுபத்திரிக்கு கூட்டிட்டு போய்விடுகிறேன். நீங்கள் வந்து சுவாதீனம் பண்ணிக் கொள்ளுங்கள்'' என்று ஆலோசனை தந்தான்.

அவர்கள் சரி என்று ஒப்புக் கொண்டார்கள். உள்ளே திரும்பி வந்த சீனு காச்மூச் என்று கத்திக்கொண்டே, "தடியன்கள்! வீட்டைசுவாதீனம் பண்ணிக்கபோறாங்களாம், சுவாதீனம்! கன்னம் பழுத்துவிடும் என்று சொல்லிவிட்டு வந்தேன்'' என்று தாயின் உடம்பைத் தொட்டு பார்த்து விட்டு ''ஐயோ! உடம்பு கொதிக்குதே! நூற்று ஆறு



டிகிரிக்குக் குறையாமல் இருக்கும். இப்ப ஊரில் புது நினுக வியாதி வந்திருக்கும்மா. நிமிஷத்தில் உயிர்போய் விடுகிறது. அம்மா, ஒரு நிமிஷம் கூட தாமதிக்கவேண்டாம், வா, பெரிய டாக்டரிடம் காட்டுகிறேன்'' என்றான்.

''வேண்டாம்ப்பா! பட்டிணத்தில் பணத்தை தண்ணீரைப்போல கறந்து கொள்வாங்க. வேண்டாம். ஆச்சாரியார் மருந்து தந்துட்டிருக்கார்.''

''பாழும் பணம்! உன் உயிரைவிட பெரியதா அம்மா? என் பேச்சை கேளு. என்னோடு புறப்படு.''

''அப்ப வீடு?''

''வீட்டை பூட்டிட்டு போகலாம்மா. இன்றைக்கு என் அதிர்ஷ்டம் நன்றாய் இருந்ததால் இப்படி வீட்டிற்கு வரும் புத்தி பிறந்திருக்குன்னு வை!''

சீனு பலவந்தமாய் தாயை பட்டிணத்திற்கு புறப்படச் செய்தான்.

ஃ ஃ ஃ

ட்ரெயினிங்கில் இருந்த சுதாகர் அன்றைக்கு போலீஸ் கான்ஸ்டேபிளுடன் சேர்ந்து ட்ராபிக் சிக்னலுக்கருகில் நின்று கொண்டிருந்தான். ஜமுனா அந்த பக்கமாகவே காரை ஓட்டி வந்து கொண்டிருந்தாள். வேகமாய் போய்க்கொண்டிருந்த ஜமுனா சுதாகரை கவனிக்கவில்லை. ட்ராஃபிக் ரூலை மீறி வேகமாய் போய்விட்டாள். கான்ஸ்டேபிள் விசில் ஊதினான். ஜமுனா காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. கார் விர்ரென்று போய்விட்டது. சுதாகர் ஜீப்பில் பின் தொடரச் செய்தான்.

காரை தடுத்து ஜீப்பை குறுக்காய் கொண்டுவந்து நிற்க வைத்து காரை நிறுத்திவிட்டான். ஜீப்பிலிருந்து இறங்கி காருக்கருகில் வந்தான். ஜமுனா சுதாகரை பார்த்து திகைப் படைந்து விட்டாள்.

''சுதாகர்! நீங்களா! ஓஹோ! தொரை ட்ரெயினிங்கிற்கு வந்திருக்கார்னு சொல்லுங்க. ஒரு வார்த்தைகூட தெரியப்படுத்தவேயில்லையே எங்களுக்கு? நாங்கள் என்ன பாவம் செய்தோம்?'' என்று கேட்டாள் சந்தோஷத்தோடு.

''அந்த விஷயமெல்லாம் அப்புறமாய். உங்களுக்கு டிரைவிங் லைசென்ஸ் இருக்கா?''

''இருக்கு. ஏன்?''

''ட்ராபிக் ரூலை மீறி நீங்கள் காரை ஓட்டுகிறீங்க.''

''ஓட்டினால்?''

''குற்றம் என்கிறேன்''

''அதற்காக என்ன பண்ணிவிடுவீங்களாம்?'' குறும்பாய் கேட்டாள்.

''கேசு புக் பண்ணிக்கொள்வேன். அது என் டியூட்டி'' தீவிரமாய் பதிலளித்தான். அதற்குள் பின்னாலிருந்து கான்ஸ்டேபிள் வந்தான்.

சுதாகர் அவனை பார்த்து ''எழுதிக்கொள்'' என்றான்.

கான்ஸ்டேபிள் டைரியை எடுத்து குறித்துக்கொள்ள தொடங்கினான்.

''உங்கள் பெயர்?''

''ஜமுனா''

''ஃபாதர் நேம்?''

''எஸ். ராஜாராம். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ். போதுமா?'' கோபமாய் கேட்டாள்.

''லைசென்ஸைக் காட்டுங்க.''



''வீட்டில் இருக்கு.''

''நாளைக்குக் கோர்ட்டுக்குக் கொண்டுவருவாங்க. சம்மன் கொடு'' என்றான் சுதாகர்.

சம்மனில் ஜமுனா கையெழுத்து போட்டுக் கொடுத்து விட்டு ''போதுமா'' என்றாள்.

''இனி நீங்கள் போகலாம்'' என்றான் சுதாகர்.

''தாங்க்ஸ்.''

ஜமுனா போய் காரில் உட்கார்ந்து கொண்டு படீர் என்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

சுதாகர் திரும்பிக் கூட பார்க்காமல் போய் ஜீப்பில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

## 24

அவமானத்தால் கொதித்துப் போய் கண்களிலிருந்து கண்ணீர் வழிய நேராய் தந்தையின் அறைக்குப் போனாள் ஜமுனா.

''டாடி.''

''ஏம்மா?''

''இன்னிக்கு எனக்கு ஒரு புது சத்தியம் தெரிந்தது.''

''அதென்ன?''

''சிலபேருக்கு உத்யோகம் வந்துவிட்டால் தலைகர்வம் ஏறிவிடும். கண் மண் தெரியாது.''

''யாரு சொல்லு. கீழே இறக்கிவிட்டு விடுவோம்.''

''அதில்லை டாடி. என்னதான் டியூட்டியில் இருந்தாலும் யார் நீ. உன் பேரென்ன, உன் தந்தையின் பேரென்ன, அட்ரஸ் என்ன என்று நடுத்தெருவில் காரை நிறுத்தி என்னை அவமானப்படுத்தலாமா?''

''எவன்ம்மா? எவ்வளவு குண்டு தைரியம் இருக்கணும் அந்த ஆளுக்கு? அவன் பேரென்ன? அவன் தந்தையின் பேரென்ன? அட்ரஸ் என்ன?''

''அவன்தான் டாடி, அந்த சுதாகர் இல்லை?''

''சுதாகரா?'' ராஜாராம் திகைத்துப் போனார்.

''ஆமாம் டாடி. ரொம்பப் பெரிய போலீஸ் ஆபீசராயிட்டான். ஏதோ காரைக் கொஞ்சம் வேகமாய் ஓட்டியதால்... தெரிந்தவங்களாச்சேன்னு சும்மாயிருக்கக் கூடாது? காரை நிறுத்தி கேசை எழுதச் செய்தான்.''

ராஜாராமுக்கு மகளின் கோபம் புரிந்துவிட்டது. மெதுவாய் கேட்டார்,

''கேசு எழுதிக் கொண்டானா? உன் மீதா?''

''ஆமாம் டாடி.''

''ரொம்ப நல்ல காரியந்தான் செய்திருக்கிறான். போன் பண்ணி அவனைப் பாராட்டணும்.''

''டாடி.''

''ஆமாம்மா. தப்புப் பண்ணியவங்களுக்கு தண்டனை கிடைத்தே தீரணும். நீ ஜட்ஜின் மகள். ரூல்ஸ் தெரிந்தும் கூட நீ காரை வேகமாய் ஓட்டியது முதல் தப்பு. இந்த விஷயத்தை என்னிடம் வந்துசொல்லி ரிபோர்ட் பண்ணியது இரண்டாவது தப்பு... ஏன்? உங்கப்பா ஜட்ஜ் ஆனதால் உன் மேல் கேசு போடக் கூடாதா?''

அதற்குள் சுதாகரே வந்துவிட்டான்.

''நமஸ்காரம் சார்.''



''நமஸ்காரம்! வா, வா! என்ன இது? என் பெண்ணின் மீதே கேசு போட்டு விட்டாயாமே? ஏன், எங்கள் ஜமுனாவை கோர்ட்டுக்கு இழுத்தாலேயொழிய உனக்குத் திருப்தியாய் இராதா?''

''கோர்ட்டுக்கு வரத் தேவையில்லைங்க. ஐம்பது ரூபாய் அபராதப் பணத்தை நானே கட்டிவிட்டேன். இந்தாங்க ரசீது.''

ஜமுனா ஒரே பாய்ச்சலாய் வந்து அந்த ரசீதைப் பிடுங்கிக் கொண்டாள்.

''உங்களை யார் கட்டச் சொன்னாங்க? நானே கோர்ட்டுக்கு வருவேனே?''

''நீங்கள் கோர்ட்டுக்கு வந்தால் நன்றாயிருக்காதுன்னு நினைச்சேன்.''

''உனக்கும் எனக்கும் நன்றாயிருக்காதுப்பா. ஆனால் பெண்ணின் அகங்காரத்திற்குக் கொஞ்சம் மருந்தாய் வேலை பண்ணும். இன்னொரு தடவை இந்த மாதிரி காரியத்தைப் பண்ணாதபடி—''

''முதல் தப்பு- மன்னிப்பு இருக்குமே.''

''தாங்க்ஸ்! இனி ஒருபோதும் இந்த மாதிரி பண்ணாதீங்க...'' என்றாள் ஜமுனா துடிப்போடு.

''ஜமுனா! இதென்ன பேச்சு? உன் கௌரவத்தைக் காப்பாற்றியதற்கு அவனோட இப்படியா பேசுவாங்க?''

''நான் வரேங்க'' சுதாகர் விடை பெற்றுக் கொண்டான்.

''இதென்ன, வந்தவன் அப்படியே போய் விடுவதா? உட்காரு. கொஞ்சம் காபி குடித்து விட்டுப் போகலாம்.''

''இல்லை, வேலை இருக்கு வரேன்''— சுதாகர் போய் விட்டான்.

ஜமுனாவுக்கு சுதாகர் காரை நிறுத்தி ரிபோர்ட் எழுதிக் கொண்டதைவிட, வீட்டிற்கு வந்துவிட்டு, கொஞ்ச நேரம் கூட உட்காராமல் போனதற்குத் தான் அதிகமாய் கோபம் வந்தது.

ஃ ஃ ஃ

சரிதா தாயின் பலவந்தத்தின் பேரில் ஒரு நர்சிங் ஹோமில் நர்சாக வேலையில் சேர்ந்தாள் முடிந்தவரையி லும் நோயாளிகளின் சேவை மூலமாய் தன் மனதில் ஏற்பட்டிருந்த காயத்தை மறப்பதற்கும் கொஞ்சமாவது ஆறுதலடைவதற்கும் முயன்றாள்.

சரிதாவை ஒரு முறையாவது சந்திக்க வேண்டும் என்றும், சரிதாவுக்காகவே தான் இவ்வாறு பணக்காரனைப் போல நாடகமாடினேன் என்றும், மோசம் பண்ணவேண்டும் என்ற எண்ணம் தனக்குக் கொஞ்சமும் இல்லை என்றும் சரிதாவிடம் மனம் விட்டுப் பேசவேண்டும் என்று தவித்துக்கொண்டிருந்த சீனு, ஓரிரண்டு முறை சரிதாவைச் சந்திக்க முயன்று தோற்றுப் போனான். சரிதாவிடம் அந்த கலகலப்பே போய் விட்டது. மனதில் ஏற்பட்டிருந்த அணைக்க முடியாத தீயை நிசப்தமாய் தாங்கிக் கொண்டிருந்தாற் போல மௌனமாய் கம்பீரமாய் இருந்து கொண்டிருந்தாள்.

தாயைப் பட்டிணத்திற்கு அழைத்துக் கொண்டு வந்த சீனுவுக்கு நல்ல யோசனை தோன்றிற்று. அதனால் நோய் தாயை அழைத்துக்கொண்டு சரிதா இருந்த நர்சிங் ஹோமிற்குப் போனான்.

காளிதேவியை டாக்டர் உள்ளே பரிசோதித்துக்கொண் டிருக்கையில் சீனு வெளியே வராந்தாவில் உட்கார்ந்து சரிதாவைப்பற்றி விசாரணையைத் தொடங்கிவிட்டான்.

''சிஸ்டர்! சரிதா என்ற நர்ஸ் இருக்கிறாளா இங்கே?''

''இருக்கிறாள். ஏன்?''



''ஒன்றுமில்லை. கொஞ்சம் கூப்பிடுகிறீங்களா? கொஞ்சம் அவளோடு பேசணும்.''

''அதோ, இந்தப் பக்கமாய்தான் வந்துகொண்டிருக் கிறாள், நீங்களே கூப்பிடுங்கள்'' என்று சொல்லிவிட்டு சிஸ்டர் போய்விட்டாள்.

சரிதா நர்ஸ் உடையில் ட்ரேயை ஏந்திக்கொண்டு டாக் டரின் அறைக்குள் நுழைந்துகொண்டிருந்தாள்.

''சரிதா!''

திடுக்கிட்டுப்போனாள் சரிதா.

''நீயா? இங்கே ஏன் வந்தாய்?'' என்றாள் கோபமாய்.

''உனக்காகத்தான் சரிதா. என்ன பண்றது? உன்னைப் பார்க்காவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. உனக்காகக் கடைசியில் வீடு வாசலைக்கூட தாரைவார்த்து விட்டேன். என் மேல் இரக்கம் காட்டு! என்னை மன்னித்து விடு சரிதா! நீ சரி என்றால் நாமிருவரும் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்.''

திருமணத்தைப் பற்றிய பேச்சைக் கேட்டதுமே சரிதா வின் முகத்தில் வேதனையான வைராக்கிய உணர்ச்சி தோன்றிற்று. ''கல்யாணமா? அந்த மாதிரி ஆசைகளை யெல்லாம் வைத்துக்கொள்ளாதே. நான் இந்த ஜென்மத்தில் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்.''

''சரிதா!''

''சீனு! தயவுசெய்து என் மேல் கொஞ்சமாவது அன்பு இருந்தால் என்னைத் தொந்தரவு பண்ணாதே! இதுவரை நான் பட்ட தொல்லைகளே போதும்.''

''சரிதா! என் பேச்சைக் கேள்!''

''இனி கேட்க வேண்டியதோ சொல்ல வேண்டியதோ எதுவும் இல்லை சீனு'' முகத்தைத் திருப்பிக்கொண்டு அறைக்குள் போய்விட்டாள்.

சீனு ஆழ்ந்த பெருமூச்சு விட்டபடி நின்றுவிட்டான்.

உள்ளே அறையில் டாக்டர் காளிதேவியைப் படுக்க வைத்துவிட்டுப் பரிசோதித்துக்கொண்டிருந்தார். அதற்குள் சரிதா உள்ளே வந்தாள். சரிதாவைப் பார்த்ததுமே காளி தேவி டாக்டரை ஒதுக்கித் தள்ளிவிட்டு எழுந்து உட்கார்ந் தாள்.

''நீயா தாயே! இங்கேகூட வந்து சேர்ந்துவிட்டாயா?''

டாக்டர் சரிதாவைக் கேட்டார்,

'' சரிதா! இவங்களை உனக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியாது டாக்டர்.''

''ஆங்! என்ன சொன்னாய்? தெரியாதா? இந்த ராட்சசி என் மகனை வலையில் போட்டுக்கொண்டு என் குடியையே மொட்டையடித்துவிட்டாள் டாக்டர்''

தாயின் கத்தலைக் கேட்டுவிட்டு சீனு உள்ளே ஓடி வந்தான்

''டேய் சீனு! இதோ பாருடா உன் காதலியை! பெரிய வேஷக்காரி! எதும் அறியாதவளைப்போல எப்படிப் பார்க் கிறாள் பார்! என்னைத் தெரியாதாம்!''

''அம்மா! இதென்ன ரகளை? என் காதலியா? சீ, சீ உனக்கு புத்தி எதாவது பிசகிவிட்டதா?'' சீனு அப்பாவி யைப்போலக் கேட்டான்.

''டேய்! உனக்குத்தாண்டா புத்தி பிசகிடுத்து! இதன் வலையில் விழுந்துதானேடா சொத்தையெல்லாம் கற்பூர மாய் கரைத்துவிட்டாய்? இவள் போட்டோவைத்தானேடா ஜேபியில் வைத்துக்கொண்டு குலுங்கித் திரிந்தாய்?''



''டாக்டர் சார்! பாருங்க இப்படித்தான் பண்றாங்க! கொஞ்சம் இளம் பெண்கள் யாராவது தென்பட்டுவிட்டால் போதும்! இப்படி எல்லோரும் என்னைத் தட்டிக்கொண்டு போய்விடுவாங்கன்னு சொல்லி ரகளை பண்றாங்க. இது எதாவது சித்த சுவாதீனம் இல்லாத கேசாய் இருக்குமா?''

''என்னடா உளறுகிறாய்?'' மகன் கேசங்களைப் பிடித் துக்கொண்டாள் காளிதேவி. சரிதா தலைகுனிந்தபடி மெது வாய் அங்கிருந்து போய்விட்டாள். காளிதேவி அவளைப் பார்த்து ''அடி! ஏன் போகிறாய்? அன்றைக்கு என் மூக்கை உடைத்தாயோனோ? இன்றைக்கு உன் முகத்தைப் பிளந்துவிடுகிறேன் பார்.''

''அம்மா, பேசாமலிரும்மா! இது ஆஸ்பத்திரி.''

''இருந்தால் எனக்கென்னடா வந்தது?''

''மிஸ்டர்! இவங்களை முதலில் வெளியே கூட்டிட்டுப் போ!'' டாக்டர் பொறுமையின்றிச் சொன்னார். சீனு தாயை பலவந்தமாய் அப்பால் அழைத்துக் கொண்டு போனான்.

## 25

ராஜாராம் ஊரில் இல்லை. காம்ப் போயிருந்தார். அன்றைக்கு தாசில்தாரின் மகளுக்குத் திருமணம். ரிசப்ஷ னுக்கு அழைத்திருந்தார்கள். பத்மா தானும் ரெடியாகி, மகள் அறைக்குள் வந்தாள். ஜமுனா தலை வாரிப் பின்னிக் கொள்ளாமலும், உடை மாற்றிக் கொள்ளாமலும் டி.வி. யைத் திருப்பிக்கொண்டிருந்தாள்.

''என்ன ஜமுனு இது! நேரமாயிடுத்து. இன்னுமா ரெடியாகலை?''

''நான் வரலைம்மா. ஏனோ ரொம்ப தலை வலியாய் இருக்கு'' நெற்றிப் பொட்டை அழுத்திக் கொண்டே பதிலளித்தாள்.

''சரி. ரெஸ்ட் எடுத்துக்கொள். இதப்பார், நான் திரும்பி வருவதற்கு ரொம்ப நேரமாகிவிடுமோ என்னவோ? நீ சீக்கிரமாகவே சாப்பிட்டுவிடு.''

''சரிம்மா.''

பத்மா போய் விட்டாள்.

தாய் போனதுமே ஜமுனா மளமளவென்று போனுக் கருகில் வந்து சுதாகருக்கு டயல் பண்ணினாள்.

மறுமுனையிலிருந்து சுதாகர் பேசினான்.

''ஹலோ.''

''சுதாகர் தானே?''

''ஆமாம்.''

''நான்தான் ஜமுனா! ராஜாராமின் மகள். ஜானகி ராமனின் அண்ணன் மகள்! விக்கிரமனின் தங்கை. சித்ரா வின் நாத்தி''— மளமளவென்று தண்டகம் படிப்பது போல சொன்னாள்.

ஜமுனாவின் குரலில் தென்பட்ட குறும்புத்தனத்தையும் கோபத்தையும் பார்த்த சுதாகர் மென்மையாய் ''அவ்வளவு வியாக்கியானம் தேவையில்லை ஜமுனா!'' என்றான்.

''அம்மாடா! ஞாபகம் வந்துவிட்டதா?''

''ஸ்பெஷலாய் ஞாபகம் வரத்துக்கு மறந்து போயிருந் தால்தானே?''

''தாங்க்ஸ். நீங்கள் எங்கள் வீட்டிற்கு வாருங்கள்''

''ஏன்? ஏதாவது காரியம் இருக்கா?''



''ஆமாம். ஆஹா ஹா, இல்லை... என்னவோ எனக்குத் தெரியாது.''

''எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு இப்பொழுது. நாளை, நாளன்றைக்கு எப்பொழுதாவது வரேன்.''

''ஊஹூம். அதெல்லாம் முடியாது. எவ்வளவு வேலை இருந்தாலும் சரி, சரியாய் மாலை ஆறுமணிக்கு உங்களை வர சொன்னார் அப்பா. வேறு யாரோ வரப் போறாங் களாம்.''

''சரி, வரேன்''

''தாங்க்ஸ்.''

ஜமுனா போனை வைத்துவிட்டாள். வீட்டில் யாரும் இல்லை. சுதாகரை அவள் வரச்சொல்லி போன்பண்ணி விட்டாள். ஜமுனாவின் இதயத்தில் பரபரப்பு, பயம், சந் தோஷம், இம்மூன்றும் சேர்ந்த வினோதமான உணர்ச்சி யொன்று சூழ்ந்துகொண்டது. மளமளவென்று சமையலறைக் குப் போய் மாலையில் தன் சிநேகிதர் ஒருவர் வரப் போகிறார் என்றும் சமையலில் என்னென்ன ஸ்பெஷல் அயிட்டங்கள் இருக்கவேண்டும் என்றும் சமையல்காரரிடம் சொல்லிவிட்டு வந்தாள்.

பரபரப்புடன் தலைவாரிக்கொண்டு, அன்றைக்கு சித்ரா விற்காக சுதாகர் வாங்கிவந்த புடவையைக் கட்டிக் கொண் டாள். மனதில் தோன்றிக்கொண்டிருந்த குழப்பம் கண்களில் பரபரப்பைக் காட்டிக் கொண்டிருந்தது.

ஆறு மணி அடித்ததும் மோட்டார் சைக்கிள் சப்தம் கேட்டது. வேலைக்காரனைகூட அதற்குள் வீட்டிற்கு அனுப்பிவிட்டிருந்த ஜமுனா, மளமளவென்று ஓடிப்போய் கதவை திறந்தாள்.

''ஜமுனா! உங்கப்பா எங்கே?'' வீடெல்லாம் நிசப்த மாய் இருந்ததைப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்தவனாய் கேட்டான் சுதாகர்.

''இல்லை. காம்ப்பிற்குப் போயிட்டார்.''

''காம்ப்பிற்கு போயிட்டாரா?''

''ஆமாம். அம்மா கூட இல்லை. தாசில்தார் வீட்டுக் கல்யாண ரிஸப்ஷனுக்கு போயிருக்காங்க.''

சுதாகர் செய்வதறியாது அப்படியே நின்று கொண்டிருந்தான். ஜமுனாவை அவன் கண்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தன. சட்டென்று அவனுக்கு புரிந்துவிட்டது. ஜமுனா கட்டிக்கொண்டிருக்கும் புடவை, குளித்த அந்த தலை, வார்த்தைகளில் தடுமாற்றம், இவை அவனோடு ஏகாந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஜமுனா செய்த காரியம் என்று நன்றாய் புரிந்துவிட்டன.

''ஜமுனா'' பரிவோடு கூப்பிட்டான்.

ஜமுனா நிமிர்ந்து பார்த்தாள்

''என்ன காரியம் இது?''

''எது?''

''என்னை எதுக்கு இப்படி வரவழைத்தாய்?''

''உங்களை சில கேள்விகள் கேட்கணும்.''

''கேளு.''

''இங்கேயேவா? இப்படி நின்று கொண்டேவா? இப்படி வாங்க என்னோடு'' ஜமுனா அவனை தன் அறைக்குள் அழைத்துக்கொண்டு போனாள்.

''சொல்லுங்கள் என்ன வேண்டும் உங்களுக்கு? காபியா டீயா? அல்லது ஐஸ்கிரீமா? கோல்ட் ஸ்பாட்டா?'' சர்வரைப் போல கடகடவென்று கேட்டாள்.

சோபாவில் வந்து உட்கார்ந்துகொண்ட சுதாகர் சிரித்தான்.

''ஒன்றும் வேண்டாம். நீ அப்படி உட்காரு'' எதிரே இருந்த சோபாவைக் காட்டினான்.



ஜமுனா உட்கார்ந்தாள்.

''இப்ப சொல்லு.''

''என்னத்தை சொல்றது?''

''என்ன சொல்லணும்னு போன் பண்ணினாயோ அதை.''

''நான் சொல்லணும் என்பதற்காக போன் பண்ணவில்லை. நீங்கள் ஏதாவது சொன்னால் கேட்கலாமேன்னு தான் பண்ணினேன். முதலில் இந்த விஷயத்தைச் சொல்லுங்கள், நீங்கள் என் கடிதத்திற்கு ஏன் பதில் போடவேயில்லை?''

''அந்த கேள்விக்கு பதில் என்னிடம் இல்லை.''

''போகட்டும், இந்த ஊருக்குதான் வந்தீங்களே, வந்த உடனேயே எனக்கு ஏன் தெரியப்படுத்தவில்லை?''

''தப்புத்தான். மன்னித்துவிடு.''

''நீங்கள் முன்போல் இல்லை, ஏன்?''

சுதாகர் பதில் பேசவில்லை. மௌனமாய் ஜமுனாவையே பார்க்கத் தொடங்கினான்.

''பதில் சொல்லுங்கள். ஏன் பேசமாட்டேங்கிறீங்க?''

''பதில் சொல்றத்துக்கு முன்னால் உன்னை ஒரு வார்த்தை கேட்கலாமா?''

''கேளுங்கள்''

''நம்ப விஷயத்தை பற்றி உங்கப்பாவிடம் ஒளிவு மறைவாகவாவது சொன்னாயா?''

ஜமுனாவின் முகம் தாழ்ந்தது.

''சொல்லணும் என்றுதான் முயன்று கொண்டிருக்கிறேன். சரியான சந்தர்ப்பம் கிடைக்க மாட்டேங்கிறது.

இந்தத் தடவை காம்ப்பிலிருந்து திரும்பி வந்ததுமே சொல்லி விடுகிறேன்.''

''சொல்லிப் பார், அவர் அபிப்பிராயம் ரொம்ப முக்கியம் அல்லவா?''

ஜமுனா எழுந்து சுதாகரின் சோபாவுக்கு பின்பக்கமாய் வந்து நின்றாள்.

அவன் தலை மீது கையை வைத்து, கேசங்களை அளைந்துகொண்டே சொன்னாள்,

''உங்கள் சந்தேகம் எனக்கு புரிந்துவிட்டது''

சுதாகர் நிமிர்ந்து பார்த்தான். இருவர் பார்வையும் கலந்தன.

நிமிர்ந்த சுதாகரின் நெற்றியின் மீது விரல் நுனியால் மெதுவாய் தடவிக்கொண்டே நின்றுகொண்டிருந்தாள் அவள். பத்மா ரிஸப்ஷனில் அதிகநேரம் இருக்காமல் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள். வாசலில் சுதாகரின் மோட்டார் சைக்கிளைப் பார்த்ததுமே அவளுக்குச் சந்தேகம் வந்தது. விடுவிடென்று மாடிக்கு வந்தாள்.

அவள் சந்தேகப்பட்டதே நிஜமாயிற்று. அறையில் ஜமுனாவும் சுதாகரும் மிக நெருக்கமாய் இருந்தார்கள்.

''ஜமுனா'' அவள் கோபமாய் கூப்பிட்டாள்.

ஜமுனா, சுதாகர் இருவருமே திடுக்கிட்டுப் போனார்கள்.

''இப்படி வா'' அவள் வந்த வேகத்திலேயே பக்கத்து அறைகுள் போனாள்.

ஜமுனாவும் சுதாகரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஜமுனா மெதுவாய் தாய் இருந்த அறைக்குள் போனாள்.

''சுதாகர் எதுக்காக வந்திருக்கான் இப்பொழுது?''



''நான்தான் வரச்சொல்லி போன் பண்ணினேன்மா. சாப்பிட வாச்சொன்னேன்.''

''எனக்குத் தெரியாமல் சாப்பிடக் கூப்பிட்டாயா? உனக்கு புத்தி இருக்கா இல்லையா? இந்த விஷயம் உங்கப்பாவுக்குத் தெரிந்தால் வேறு வினை உண்டா?''

''நான் அப்படி பண்ணக்கூடாத காரியம் என்னம்மா பண்ணிட்டேன்?''

''இதென்ன பதில்? நீ என்ன சின்னப் பொண்ணா? நல்லது கெட்டது தெரிய வேண்டாமா?''

''அம்மா! அப்பா கேம்ப்பிலிருந்து திரும்பி வந்ததுமே சுதாகரின் விஷயத்தை அவரிடம் சொல்லிவிடப் போகிறேன். நான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''மூடு வாயை! இந்த வார்த்தைகளை என்னிடம் சொன்னது போல உங்கப்பாவிடம் சொல்லிவிடாதே. அவர் உன் கல்யாணத்தைப் பற்றி எவ்வளவோ ஆசைகளை வைத்துக் கொண்டிருக்கிறார் என்று உனக்குத் தெரியாதா என்ன? நீ நம்ப அந்தஸ்தை தெரிந்துகொண்டு பழகுவது நல்லது.''

''அந்தஸ்து தெரிந்து தானே சிற்றப்பா சித்ராவை மருமகளாக்கிக் கொண்டார்?''

''ஓஹோ! அதற்காக உன்னை இவனுக்குத் தந்து கல்யாணம் பண்ணி வைச்சுடுவாங்கன்னு நினைத்தாயா? உங்கப்பா உன் சிற்றப்பாவைப் போன்றவரா இல்லையான்னு உனக்குத் தெரியாதா? அப்படிப் பார்த்தால் சித்ராவைப் பண்ணிக் கொண்டது கூட இவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை. நீ பைத்தியக்காரத்தனமான யோசனைகளையெல்லாம் வளர்த்துக் கொண்டு கொழுப்புப் பிடித்து அலையாதே.''

''அம்மா.''

''சுதாகரை நீ மணந்து கொள்வது நடக்காத காரியம். இதை இப்பொழுதாவது நீயும் அவனும் தெரிந்து கொண்டு விடுவது நல்லது.''

ஜமுனா சுதாகர் இருந்த அறைக்கு வந்தாள். ஆனால் அங்கே சுதாகர் இல்லை. அதற்குள் கீழே மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் பண்ணிய சப்தம் கேட்டது.

ஜமுனா கலக்கத்துடன் கீழே ஓடினாள். அதற்குள் மோட்டார் சைக்கிள் கேட்டைத் தாண்டிப் போய் விட்டது.

ஜமுனா உடனே ஓடிவந்து காரைக் கொண்டுவந்து, ஸ்டார்ட் பண்ணி சுதாகருக்குப் பின்னாடியே புறப்பட்டாள்.

கொஞ்சதூரம் போனபிறகு சுதாகரின் மோட்டார் சைக்கிள் கண்ணில் பட்டது. ஜமுனா காரை அதற்கு முன்னால் கொண்டுவந்து குறுக்காய் நிறுத்தினாள். சுதாகர் வேறு வழியில்லாதவனாய் பிரேக்கைப் போட்டு நிறுத்தினான்.

''இதென்ன? சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டீங்க?''

''நான் சொல்றத்துக்கு வேறு ஏதாவது விஷயம் இருந்ததா ஜமுனா?''

''என்னை மன்னிச்சுடுங்க. எங்கம்மாவின் பேச்சைக் கேட்டு நானே வருத்தப்படுகிறேன். உங்கள் மனதை வருத்தப்படுத்தணுங்கிறது அவங்க உத்தேசமில்லை.''

''நான் ஒன்னும் வருத்தப்படவில்லையே ஜமுனா! நிஜந்தான். அவங்க நம் நலனை எண்ணித்தான் சொன்னாங்க.''

''சுதாகர்''



''உன்னோடு அவ்வளவு சுதந்திரமாய் இருந்தது என்னோட தப்புதான் ஜமுனா!''

''அந்த சத்தியத்தை இப்ப தெரிந்துகொண்டுவிட்டீங்களா?'' கண்ணீர் மல்க கேட்டாள்.

''சித்ராவின் கல்யாணத்தின் மூலமாய் நம்மிடையே அந்தஸ்து பேதம் நீங்கிப்போய்விட்டதுன்னு தவறாய் எண்ணிக்கொண்டு விட்டேன். ஆனால் அந்தக் கல்யாணம் கூட உங்கப்பாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லைன்னு எனக்கு இப்பத்தான் தெரிஞ்சுது.''

''அவங்க விருப்பு வெறுப்புக்களோடு எனக்குச் சம்பந்தமில்லை. எனக்கு வேண்டியது நீங்கள். என்னை உங்களுக்கு அர்ப்பணித்துக் கொள்வதற்கு நான் சித்தமாய் இருக்கிறேன்.''

''ஆனால் ஏற்றுக் கொள்வதற்கு நான் சித்தமாய் இல்லை ஜமுனா!''

''சுதாகர்''

''நடந்ததை மறந்துபோய் தொலைவில் இருந்து கொள்வதுதான் இருவருக்குமே நல்லது. உன்னை உங்கம்மாவும் அப்பாவும் உயிருக்குச் சமமாய் வளர்த்து ஆளாக்கியிருக்காங்க. அந்த ஆசைகள் என் மூலமாய் நாசமாகிப் போவதை நான் விரும்பவில்லை. என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. நாங்கள் இதுவரைக்குமே உங்கள் குடும்பத்திற்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். இதன் மூலமாய் நன்றிக் கெட்டவனாகி அந்த வீட்டின் அமைதி கெட்டுப் போவதற்கு காரணகர்த்தாவாய் ஆகமாட்டேன். போ ஜமுனா! என்னை முழுவதுமாய் மறந்து போய்விடு. என்னிடம் வேறெதுவும் சொல்ல வேண்டாம்.''

தளர்ந்து போய்விட்ட மனதோடு சுதாகர் தன் அறைக்கு வந்து சேர்ந்தபொழுது ஜானகிராமனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அதில் சித்ராவுக்கு ஐந்தாம் மாதம் அபார்ஷனாகி

விட்டதென்றும் அவளால் எழுந்திருக்க முடியவில்லை என்றும் இருந்தது. சுதாகருக்கு அன்றைக்குத் தான் எழுந்த வேளை நன்றாயில்லை போலிருக்கிறது என்று தோன்றிற்று. ஏற்கனவே மனம் உடைந்து போயிருந்த அவனுக்கு இச்செய்தி இடியாய் வந்து விழுந்தது. மாலையில் எதிர் பாராமல் நடந்துவிட்ட வேதனையால் மனமெல்லாம் விஷமயமாகி விட்டிருந்தது. ஒரு ஆறுதல் வார்த்தைக்காகத் தவித்துக்கொண்டிருந்த அவன், அந்தக் கவலைகளையெல்லாம் ஒரு பக்கத்தில் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இரவு வெகு நேரம் விழித்திருந்து ஜானகிராமனுக்கு தைரியமும் ஆறுதலும் தெரிவித்துக் கடிதம் எழுதினான்.

## 26

சித்ரா கட்டிலில் படுத்திருந்தாள்.

முகமெல்லாம் வெளுத்துப்போய் சோர்வுடன் தென்பட்டாள் அவள்.

லேடி டாக்டர் இஞ்ஜெக்ஷனைத் தந்துவிட்டுச் சொன்னாள். ''அதைரியப்படாதேம்மா! உன் உடம்பு நன்றாக ஆகட்டும். அடுத்த வருஷம் லட்டு போன்ற குழந்தை பிறந்துவிடுவான்.''

டாக்டர் அறையைவிட்டு வெளியே வந்தாள். ஜானகிராமன் அங்கே கவலையுடன் காத்துக்கொண்டிருந்தார்.

டாக்டர் அவரைப் பார்த்துச் சொன்னாள்.

''பொண்ணுக்கு ரொம்ப ரெஸ்ட் வேண்டும். ஒரு வாரத்திற்கு எங்கள் நர்சிங்ஹோமில் சேர்த்துவிடுங்கள்.''

''நர்சிங்ஹோமுக்கா? தனியாய் இருக்க முடியுமோ என்னவோ அவளால்!''



''அப்படியென்றால் எங்கள் நர்ஸை இங்கே அனுப்பச் சொல்றீங்களா? காலையிலும் மாலையிலும் இரண்டுவேளை நான் வந்து பார்த்துட்டுப் போகிறேன்.''

''அப்படியே பண்ணுங்கள் டாக்டர்.''

''சரி வரேன்.''

மாலையில் ஆஸ்பத்திரியிலிருந்து நர்ஸ் வந்தாள். அவள் வேறு யாருமில்லை, துரதிர்ஷ்டசாலியான சரிதா தான்! யார் மூலமாய் அதிர்ஷ்டம் வக்கிரமாய் மாறி, தான் இந்த நர்ஸ் தொழிலைக் கடைப்பிடிக்கும்படி நேர்ந்ததோ அவனுக்கே சேவை பண்ணுவதற்கு வந்தாள்.

திருமணமான பிறகு ஜானகிராமன் மகனுக்கு மூச்சுவிட முடியாத அளவிற்கு வேலைகளை ஏற்படுத்தி தந்து, வியாபார விஷயங்களைத் தலையில் ஏற்றிவைத்து, ஒரு நிமிஷம் கூட ஓய்வில்லாதபடிச் செய்துவிட்டார். விக்கிரமன் மாதத்திற்கு இருபது நாட்கள் எந்த காரணத்தை முன்னிட்டாவது வெளியூர்களுக்குப் போக வேண்டியிருந்தது.

மனைவிக்கு உடம்பு சரியாயில்லை என்று தந்தை டெலிகிராம் தந்ததுமே விக்கிரமன் வீட்டிற்கு வந்தான்.

ஜானகிராமன் மகனை கிட்டே அழைத்து ''சுதாகர்கூட பக்கத்தில் இல்லை. இப்படிப்பட்ட சமயத்தில் ரொம்ப பழக்கமானவங்க கிட்டேயிருக்கணும் என்பாங்க. இந்த நாலு நாட்களுக்கு ஃபேக்டரி வேலைகளை நான் பார்த்துக்கறேன். நீ வீட்டில் அவளிடமே இரு'' என்று எச்சரித்தார்.

நர்ஸாய் வந்த சரிதாவைப் பார்த்து வேலைக்காரி ''அம்மா இந்த அறையில் இருக்காங்க, வாங்கம்மா'' என்று வழி காட்டினாள்.

அந்த பக்கமாய் போக முயன்ற சரிதா சட்டென்று நின்றுவிட்டாள். மாடியிலிருந்து விக்கிரமன் இறங்கி வந்துகொண்டிருந்தான்.

அவன், நர்ஸ் உடையில் இருந்த சரிதாவைப் பார்த்ததுமே திக்பிரமை அடைந்தவனாய் அப்படியே நின்று விட்டான்.

ஒரு வினாடி விக்கிரமனைப் பார்த்ததுமே சரிதாவின் முகம் மாறிப்போயிற்று. ''சரிதா'' என்றான் அவன் தன்னையறியாமலேயே. சரிதா பதில் பேசவில்லை. தான் அந்த வீட்டிற்கு வந்த காரியத்தை நினைவுப் படுத்திக் கொண்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு, அவனை அடையாளம் தெரிந்து கொள்ளாதது போலவே சித்ராவின் அறைக்குள் போய்விட்டாள்.

சித்ராவின் அறைக்குள் வந்த சரிதா தன் பேஷண்ட்டைப் பார்த்து வியப்படைந்து விட்டாள். சித்ராவும் சரிதாவைப் பார்த்து ''நீயா?...'' என்று எழுந்து உட்காரப் போனாள்.

''என்னை மறந்து போயிட்டீங்களா? ஏன் அப்படி பார்க்கிறீங்க? ஞாபகம் வரவில்லையா?'' முறுவலுடன் கேட்டாள் சித்ரா. ''நீ...நீ... சரிதா தானே?''

''ஆமாம்''

''இதென்ன நர்ஸ் வேஷம்?''

''வேஷம் இல்லை. தொழில். அண்ணா சௌக்கியமா?''

''ஆங்''

''எங்கே இப்பொழுது?''

''ஐதராபாத்தில் ஐ.பி.எஸ் ட்ரெயினிங் எடுத்துட்டிருக்கான்.''

''அப்படியா?'' சரிதா பெருமூச்சை அடக்கிக்கொண்டே முறுவலை வரவழைத்துக் கொண்டாள். ''என்ன ஆச்சரியம்! திரும்பவும் உங்களை இப்படி சந்திப்பேன்னு நினைத்திருக்கவில்லை'' என்றாள்.



''நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கவில்லை சரிதா?'' அப்பாவித்தனமாய் கேட்டாள் சித்ரா.

சரிதா பதிலுக்கு விரக்தியோடு சிரித்துவிட்டு பேசாமலிருந்தாள்.

''உன்னிடம் ஏதோ மாறுபாடு தெரிகிறது. அந்த உற்சாகம், குறும்புத்தனம் இல்லை இப்பொழுது.''

''நர்ஸ் தொழிலுக்கு அவை பயன்படாது. அதனால் விட்டுவிட்டேன்'' தர்மாமீட்டரை எடுத்துக்கொண்டே சொன்னாள் சித்ரா.

''ஆமாம், நர்ஸாய் ஏன் சேர்ந்தாய்?''

''வயிற்றுப் பிழைப்பிற்கு''

''ஓ!'' புரிந்தாற்போல இரக்கம் ததும்பப் பார்த்தாள் சித்ரா.

ஃ ஃ ஃ

இரவு பத்து மணி அடித்துவிட்டது.

சரிதா அறைக்கு வெளியே சித்ராவுக்கு எலெக்ட்ரிக் ஹீட்டரில் ஹார்லிக்ஸைக் கரைத்துக் கொண்டிருந்தாள்.

நைட் டிரெஸ்ஸில் இருந்த விக்கிரமன் கிட்டே வந்தான். சரிதா அவனை கவனிக்காதது போலவே தன் வேலையில் தான் ஆழ்ந்து போயிருந்தாள்.

''சரிதா!'' மென்மையாய் கூப்பிட்டான் விக்கிரமன். சரிதா பதில் பேசவில்லை. திரும்பியும் பார்க்கவில்லை.

''ஏன் பேசமாட்டேங்கிறாய்? அவ்வளவு பாவம் நான் என்ன பண்ணிவிட்டேன்?''

''பாவம் பண்ணியது நீங்கள் இல்லை, நான்'' முகத்தைத் திருப்பிக் கொண்டுவிட்டாள்.

''என்னைப் பார்த்தும் கூட பாராததுபோலவே நடிக்கிறாய். அது என் மனதை எப்படி ரம்பமாய் பிளந்து கொண்டிருக்கிறது தெரியுமா? என்னைக் கண்டால் அவ்வளவு வெறுப்பாகி விட்டதா?''

''அந்த உண்மையை இப்பத்தான் தெரிந்து கொண்டீங்களா?''

''அப்பொழுதே தெரிந்துகொண்டு விட்டேன். அதனால்தான் உனக்கு மூஞ்சியைக்காட்ட முடியவில்லை என்னால்- என்னை மன்னித்துவிடு சரிதா! நடந்ததற்காக நான் எவ்வளவு வருத்தப்பட்டேன் என்று உன்னால் ஊகித்தும் பார்த்திருக்க முடியாது.''

''நான் இங்கே உங்கள் பேச்சைக் கேட்பதற்காக வரவில்லை. கேட்கவும் நேரமில்லை எனக்கு'' சரிதா அலட்சியமாய் போய்விட்டாள்.

''சரிதா'' இரைந்து கூப்பிட்டான் அவன்.

சரிதா நின்றாள்.

''நீ தென்பட்டதிலிருந்து உன்னோடு பேசவேண்டும், இதையெல்லாம் சொல்லவேண்டும் என்று தவித்துக் கொண்டிருக்கிறேன் நான். நீ என்னை எப்படி புரிந்து கொண்டாலும் பரவாயில்லை, முதலில் நான் சொல்றதைக் கேள்.''

''என்ன இது? சாகமுடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இப்படி வாழ்வதுகூட உங்களுக்குப் பிடிக்கவில்லையா? நான் ஒன்றும் உங்களை சால்ஜாப்பு கேட்கவில்லையே? நான் கேட்காத விஷயங்களை நீங்கள் எதற்கு பலவந்தமாய் சொல்லவேண்டும் என்னிடம்?''

விக்கிரமன் சரிதாவிடம் வந்தான். தொண்டை அடைக்கச் சொல்ல முடியாமல் சொல்வது போல சொன்னான்— ''சரிதா! உன்னைக் காதலித்தது, நம்ப வைத்து ஏமாற்றுவதற்காக இல்லை. உன்னை வாழ்நாளெல்லாம் வாழ்க்கைத்



துணையாக்கிக் கொண்டு உன்னையும் சுகப்படுத்தி, நானும் சந்தோஷமாய் இருக்கணும் என்றெண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் எங்கப்பா திடீரென்று சித்ராவோடு என் திருமணத்தை செட்டில் பண்ணிவிட்டார். எல்லாம் கனவைப் போல நிமிஷத்தில் நடந்து முடிந்துவிட்டது. அப்பாவை எதிர்க்க முடியாமல் போய் விட்டேன். நீ என்னைத் திட்டினாலும் வெறுத்தாலும் நான் ஒன்றும் வருத்தப்படமாட்டேன். உனக்கு நான் செய்த அநியாயம் அப்படிப்பட்டது. அதற்காக நான் எவ்வளவு குமுறினேன் என்று யாருக்குமே தெரியாது. நடந்ததற்காக என்னை மன்னித்துவிடு என்று கேட்கிற உரிமைகூட எனக்கு இல்லை. போ சரிதா, போ!'' விக்கிரமன் தானே அங்கிருந்து திரும்பி போய் விட்டான்.

சரிதா மெதுவாய் சித்ராவின் அறைக்குள் வந்தாள்.

சித்ரா சுவர் பக்கமாய் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தாள்.

''சித்ரா''— ஒரிரண்டு முறை கூப்பிட்டாள் சரிதா. ஆனால் சித்ரா பதில் குரல் கொடுக்கவில்லை. தூங்கி விட்டாளோ என்றெண்ணிக் கொண்ட சரிதா விளக்கை அணைத்து விட்டு, விடி விளக்கைப் போட்டுவிட்டுப் போய் விட்டாள்.

அன்றிரவு முழுவதும் விடியும் வரை தூக்கமில்லாமல் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டேயிருந்தாள் சித்ரா. தன் உயிரைக் காட்டிலும் மேலாய், தெய்வத்திற்குச் சமானமாய் பாவித்துக் கொண்டிருக்கும் தன் கணவனின் வாயிலிருந்து வெளிவந்த கசப்பான சத்தியம் சித்ராவின் மனதை சூலமாய் தாக்கிக் கொண்டேயிருந்தது. இந்த திருமணம் விக்கிரமனுக்கு இஷ்டமில்லை. தந்தையின் வார்த்தைகளைத் தட்ட முடியாமல் போய் பண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் மனதில் அவளுக்கு இடமில்லை. சரிதாவுக்கு அநியாயம்

பண்ணிவிட்டோமே என்ற வருத்தத்தால் அவன் ஒவ்வொரு நிமிஷமும் குமுறிக் கொண்டேயிருக்கிறான். கடவுளே! சித்ராவுக்கு அந்தச் சமயத்தில் பூகம்பம் வந்து—தான் அதல பாதாளத்திற்குள் போய் மறைந்து விட்டால் நன்றாயிருக்குமே என்று தோன்றிற்று. 'அண்ணா, நீ எங்கே இருக்கிறாய்?' சிறுவயதிலிருந்தே கஷ்டம் ஏற்பட்ட பொழுதெல்லாம் அண்ணனின் இதமான வார்த்தைகள் மூலமாகவும், அன்பான ஸ்பரிசத்தாலும் ஆறுதலடைந்து பழக்கப்பட்டிருந்த சித்ராவின் மனம் அண்ணனுக்காகப் பரிதவிக்கத் தொடங்கிற்று.

மறுநாள் சித்ராவுக்கு நல்ல ஜுரம் வந்துவிட்டது. கண்கள் சிவந்து வீங்கியிருந்தன. சரிதா டெம்பரேச்சரைப் பார்க்க வந்தபொழுது அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் பேசாமல் இருந்து கொண்டாள்.

''என்ன கஷ்டம்?'' என்றாள் சரிதா ஜுரத்தைப் பார்த்துவிட்டு.

''என் கஷ்டத்தை கடவுளால் கூட தீர்க்க முடியாது'' என்றாள் சித்ரா ஆத்திரத்தை அடக்கிக் கொண்டே.

''அப்படீன்னால்?'' சரிதா வியப்போடு கேட்டாள்.

''உனக்குத் தெரியாதா? நிஜத்தைச் சொல்லு! நீ நர்ஸாய் வந்தது எனக்கு சேவை பண்றதுக்கா? அல்லது என் கணவரின் அன்பைத் திரும்பவும் பெறுவதற்காகவா?''

''சித்ரா'' சரிதா பேயறைந்தவளைப் போல பார்த்தாள்.

''அந்தப் பேருடன் என்னைக் கூப்பிடாதே. என்னைப் பெயரிட்டு அழைக்கக்கூடிய உரிமை உனக்கு இல்லை. போ அப்பால். உம்! முதலில் என் கண் பார்வையை விட்டு வெளியே போ!'' சித்ரா இரைந்து கத்தினாள்.



அதே சமயத்தில் சித்ராவைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருந்த லேடி டாக்டர் அறை வாசலில் நின்று கொண்டு இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டாள்.

சித்ராவின் ஆவேசத்தைக் கண்ட அவள் சட்டென்று உள்ளே வந்து கலக்கத்துடன், ''சித்ரா! நீ எழுந்திருக்காதேம்மா''— என்று எச்சரித்துக் கொண்டே கிட்டே வந்தாள்

''டாக்டர்'' அவளைக் கட்டிக்கொண்டு ஓவென்று கதறி விட்டாள் சித்ரா.

''இந்தச் சமயத்தில் நீ கொஞ்சமும் அலட்டிக் கொள்ள கூடாதுன்னு சொன்னேனா இல்லையா?''

''டாக்டர்! இந்த சரிதா...''

''நான் எல்லாவற்றையும் கேட்டேன். நீ ஒன்றும் கவலைப்படாதே. நான் வேறு நர்சை அனுப்புகிறேன். போதுமா?'' டாக்டர் சித்ராவைத் தேற்றி சாந்தப்படுத்த முனைந்தாள்.

கொஞ்ச நேரங்கழித்து டாக்டர் சித்ராவின் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

அவளோடு கூட சரிதாவும் வந்தாள். டாக்டர் சரிதாவை ஏளனமாய் பார்த்துவிட்டுக் கடுமையாய் சொன்னாள்— ''பார் சரிதா! உன் நடத்தையைப் பற்றி அநேகம் கேட்டிருக்கிறேன். உன் நடத்தை நல்லது இல்லைன்னு தெரிந்தும் கூட உங்கம்மா உன்னைப் பற்றி அரற்றியதால் உன்னை என்னிடம் சேர்த்துக் கொண்டேன். நீ உன் தொழிலுக்கே களங்கத்தை ஏற்படுத்தி விட்டாய். என் நர்சிங் ஹோமில் உன்னைப் போன்றவங்களுக்கு இடம் இல்லை. நீ இந்த நிமிஷமே வீட்டிற்குப் போய்விடு.''

''டாக்டர்!'' கண்ணீர் மல்க ஏதோ சொல்ல வந்தாள் சரிதா.

''வீண் தர்க்கத்தில் இறங்கி இங்கே ரகளையை உண்டாக்காதே. அங்கே நோயாளி இருக்கிறாள்''— கச்சித

மாய் சொல்லி விட்டு விடுவிடென்று போய் விட்டாள் லேடி டாக்டர்.

சரிதா சிலையாய் நின்று விட்டாள்.

வாழ்க்கையில் முதல் முதலாய் சரிதாவுக்கு விரக்தி ஏற்பட்டது.

சிதம்பரம் ஒரு மாத காலம் படுத்த படுக்கையாகி விட்டார். மகள் விஷயம் அவருக்கு திகிலையும் மனக்கவலையையும் உண்டாக்கிற்று. இரக்க சுபாவம் கொண்ட ஜானகிராமன் நல்லவரும் நம்பிக்கையான ஊழியருமான சிதம்பரத்திற்கு மருத்துவ உதவிகளையும் பண உதவிகளையும் செய்து வந்தார்.

கட்டிலில் நோயாளியாய் படுத்திருந்த சிதம்பரத்திற்கு மகள் உத்யோகத்தைப் போக்கடித்துக் கொண்டு வந்து விட்டாள் என்ற விஷயம் தெரிந்ததும் பைத்தியமே பிடித்து விடும் போல ஆயிற்று.

''உம்! கடைசியில் அந்த வேலையைக்கூட போக்கடித்துக் கொண்டு வந்து விட்டாய் என்று சொல்லு! உனக்கு எதுதான் நிலைக்கும்? எனக்குத் தெரியும் உனக்கு உடம்பு வணங்காதுன்னு.''

''அப்பா! இந்த வேலையை நான் விடவில்லை. டாக்டர் என்னை டிஸ்மிஸ் பண்ணி விட்டாள்.''

''டிஸ்மிஸ் பண்ணிவிட்டாளா? பேஷ்! வேறென்ன? சும்மா பண்ணிவிடுவாளா? நீ ஏதாவது சனியன் பிடித்த காரியம் பண்ணியிருப்பாய். உண்மையைச் சொல்லு. என்ன செய்தாய்?'' சிதம்பரம் ஆவேசமாய் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

''ஏங்க இப்படிக் கத்தறீங்க? டாக்டர் அதிகமாய் பேச வேண்டாம்னு சொன்னாரா இல்லையா?''சாருமதி அவரை பலவந்தமாய் படுக்க வைத்தாள்.



சிதம்பரம் ஆயாசமடைந்து கொண்டே— ''இதுக்குக் கல்யாணம் ஆகிற யோகமும் இல்லை. அதை என் கண்ணால பார்க்கப் போறதுமில்லை'' இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே விக்கிரமன் டாக்டரை அழைத்தும் கொண்டு உள்ளே வந்தான்.

''இந்த ஏக்கத்தோடேயே குமுறிக் குமுறிச் செத்துப் போயிடுறேன். அப்ப யாருக்கும் எந்தக் கவலையும் இருக்காது. உன் காதில் கத்தலும் கேட்காது. அவளைத் தடுக்கிறவங்களும் இருக்க மாட்டாங்க.''

சரிதா விக்கிரமனைப் பார்த்ததுமே முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

''யாரு? முதலாளியின் மகனா? வாங்க, வாங்க!'' சிதம்பரம் மரியாதையோடு வரவேற்றார்.

டாக்டர் அவரை பரிசோதித்தார்.

''உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன் தம்பி.''

''இதில் சிரமம் என்ன இருக்கு?எங்கள் ஃபேக்டரியில் பல ஆண்டுகளாய் வேலை பண்ணிக் கொண்டுவரீங்க. கஷ்டம் வந்தால் உங்களை அரவணைப்பது எங்கள் தர்மம்.''

''அவருக்கு வேறு எந்த கஷ்டமும் இல்லை தம்பி! பெண்ணைப்பற்றிய வருத்தம் தான் இப்படி பாதித்து விட்டது'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் சாருமதி.

''ரொம்ப பலவீனமும் சோர்வுந்தான்! வேறெந்த நோயும் இல்லை. மருந்து கொடுத்தனுப்புகிறேன். சாப்பிடுங்கள்'' என்றார் டாக்டர்.

''என்னவோப்பா! ஃபேக்டரியில் வேலை எல்லாம் அப்படியே தேங்கி நிற்கிறது. வேலை பண்ணாமல் சம்பளம்

வாங்கிக் கொள்ள என் மனம் ஒப்புக்கவில்லை. விக்கிரமன் தம்பி! என் மகளுக்கு டைப் அடிக்கத் தெரியும். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நான் உடம்பு தேறுகிற வரை அந்த வேலையைத் தந்தால் பிழைத்துப் போவோம்.''

விக்கிரமனின் முகம் நிறம் மாறிற்று.

''அப்படியே செய்கிறேன். அதற்குப் போய் இவ்வளவு தூரம் கேட்கணுமா என்ன? நாளையிலிருந்து அனுப்புங்கள். உங்களுக்குப் பணம் ஏதாவது தேவைப்பட்டால் தயக்கமில்லாமல் சொல்லியனுப்புங்கள். அனுப்புகிறேன். வரேன்''

''நல்லதுப்பா! சமயத்துக்கு தெய்வமாய் வந்து காப்பாற்றினாய். தெய்வம் உன் குடும்பத்தை நூறாண்டு காலம் பார்த்துப்பார்.'' கைகளைக் கூப்பிச் சொன்னார் சிதம்பரம்.

விக்கிரமனும் டாக்டரும் போய் விட்டார்கள்.

மறு நாள் தந்தையின் விருப்பத்தின்படி சரிதா கம்பெனிக்கு டைப்பிஸ்டாய் போவதற்கு மறுப்புத் தெரிவித்தாள்

''நான் போகமாட்டேன் அப்பா. எனக்குப் பிடிக்கவில்லை.''

''ஏன்? டைபிஸ்ட் உத்யோகம் உன் கௌரவத்துக்குக் குறைச்சலா?'' கேலியாய் கேட்டார்.

''அதில்லைப்பா..''

''பின்னே? சொன்னதை வாயை மூடிக்கொண்டு செய். அங்கே உன் வேலை கொஞ்சம் பிடித்துப்போய் விட்டால் ஜானகிராமன் சாரின் காலில் விழுந்தாவது சரி உன் உத்யோகம் பர்மெனென்ட் ஆகும்படியாய் செய்கிறேன். போ! இதப்பார். கவனமாய் கேளு! அங்கே ஏதாவது பைத்தியக்கார வேஷம் போட்டாயோ?... உன்னைப் பற்றிய



அவதூறான வார்த்தைகள் எதையாவது கேட்க நேர்ந்தால்... என்ன பண்ணுவேன் பார்த்துக்கோ...''

சிதம்பரம் ஆள்காட்டி விரலைக் காட்டிச் சொன்னார்.

சரிதா இதயத்தில் பற்றியெரிந்து கொண்டிருந்த ஆவேசத்தையும் ரோஷத்தையும் மென்று விழுங்கிவிட்டு நிசப்தமாய் அங்கிருந்து நகர்ந்தாள்.

## 27

ராஜாராமின் சிறுவயது சிநேகிதனான சூர்யநாராயணனின் ஒரே மகன் ரகுவீரன் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்திருந்தான். ஜமுனாவை மருமகளாக்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்பிய சூர்யநாராயணன் ராஜாராமுக்கு போன் பண்ணி எல்லோரையும் சாப்பாட்டிற்குத் தன் வீட்டிற்கு வரச்சொல்லி அழைத்தார். அங்கேயே பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வார்கள் என்றும், அதற்கப்புறமாய் தாம் எஞ்சிய விஷயங்களைப் பேசிக்கொள்ளலாம் என்றும் சொன்னார்.

உடனே ஒப்புக்கொண்டுவிட்ட ராஜாராம் மனைவியைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார். ''இது நல்ல சம்பந்தம். எல்லா விதத்தில் நமக்கு ஏற்றவர்கள். என்ன சொல்கிறாய்?''

''இதை முதலில் பெண்ணிடம் கேளுங்கள்.''

''ஆமாமாம், அவள் அபிப்பிராயம்கூட வேண்டும் இல்லையா. எங்கே, ஜமுனாவைக் கூப்பிடு''

ஜமுனா வந்தாள்.

''ஏம்மா, என்ன சொல்கிறாய்?''

''இதற்குள் கலியாணம் பண்ணிக்க எனக்குப் பிடிக்க வில்லைம்மா.''

''கேட்டது நான். பதில் சொல்றது அம்மாகிட்டே! நான் கேட்டதற்கு உங்கம்மாவிடம் பதில் சொல்கிறாயே? ஏன் பிடிக்கவில்லை? காரணம் என்ன?''

''நான் டிகிரி வாங்கிக் கொள்கிறவரை கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை டாடி.''

''குட். என் மகள் என்று காட்டிக்கொண்டு விட்டாய். எனக்கு ஆட்சேபனை இல்லை.''

''டாடி! நான் நாளைக்கு சித்தப்பாவின் ஊருக்குப் போறேன் டாடி.''

''இது இன்னும் நன்றாய் இருக்கும்மா! லீவு நாள் தானே! அங்கேபோய் என்ன பண்ணுவாய்?''

''அண்ணிக்கு உடம்புச் சரியாயில்லையாம் பார்த்து விட்டுவரேன்''

''சித்ராவுக்கு உடம்பு சரியாயில்லையா? என்ன கம்ப்ளைண்ட்.''

''அவளுக்கு அபார்ஷன் ஆகிவிட்டதுன்னு சொன்னேனே'' என்றாள் பத்மா.

''வாட்! எப்பொழுது? நீ எதோ முணுமுணுத்திருப்பாய். எனக்குக் காதில் விழுந்திருக்காது! ஜமுனா! உடனே புறப்பட்டுப்போ. சித்தப்பாவுக்கு நான்கூட கடிதம் போடுகிறேன்.''

''தாங்க் யூ டாடி'' ஜமுனா சந்தோஷத்தோடு உள்ளே ஓடினாள்.

சுதாகர் ட்ரெயினிங் முடிவடைந்து சென்னைக்குப்போய் விட்டான். அங்கே போனால் எல்லாம் சீர்திருந்தும் என்பது அவன் உத்தேசம்.

∴ ∴ ∴



சரிதா விக்கிரமனின் ஃபேக்டரியில் டைப்பிஸ்டாய் வேலை பண்ணிவந்ததை சீனுவும் சுதாமனும் கவனித்து விட்டார்கள். சரிதாவுக்கு சீனுவிடமிருந்து காதல் கடிதங்களும், சுதாமனிடமிருந்து மிரட்டல் கடிதங்களும் வந்து கொண்டேதான் இருந்தன. ஆனால் சரிதா அவைகளைப் பொருட்படுத்தவில்லை. தன் வரைக்கும் தான் நேர்மையாய் இருந்து கொண்டிருந்தால் யாரும் தன்னை தப்பு சொல்ல முடியாது என்றெண்ணினாள் அவள்.

விக்கிரமன் தினமும் சரிதா வந்ததுமே சிதம்பரத்தின் உடல்நிலை எப்படி இருக்கிறது என்று விசாரித்துத் தெரிந்து கொள்வான். ஒரு விதத்தில் சரிதா இப்படி தன் கண்ணெதிரே வளைய வந்துகொண்டு தன்னோடு சேர்ந்து வேலை பண்ணி வந்தது அவனுக்கு கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது. அதே ஃபேக்டரியில் வேலை பண்ணிக்கொண்டிருந்த மது என்ற குமாஸ்தாவிடம் சுதாமன், விக்கிரமன்—சரிதா இருவருக்குமிடையே இருந்த பழைய உறவைப்பற்றி இளப்பமாய் பேசியதால் அது ஒரு கதையாய் மாறி, அதற்குக் கண்காது வைக்கப்பட்டு ஆபிசில் இருந்தவர்கள் எல்லோரும் குசுகுசுத்துக் கொள்வதற்கு நல்ல பொழுது போக்காகி விட்டது.

ஜானகிராமனுக்கு கிட்னீ தொந்தரவு இருந்ததால் ஆபரேஷன் ஆயிற்று. டாக்டர் சில நாட்கள் ஓய்வாய் இருக்க வேண்டும் என்று சொன்னதால், கம்பெனி விவகாரங்கள் விக்கிரமனின் கைக்கு வந்தன.

ஓரிரு தானிய புரோக்கர்கள் விக்கிரமனிடம் வந்து அரிசியை திருட்டுத்தனமாய் போக்குவரத்து பண்ணினால், கள்ளமார்க்கெட்டில் விற்பவர்கள் எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்குவார்கள் என்றும் அதில் நல்ல லாபம் வரும் என்றும் விக்கிரமனுக்கு எடுத்துச் சொல்லத் தொடங்கினார்கள்.

எந்த விதத்திலாவது அந்த கம்பெனிக்குள் நுழைந்து சரிதாவின் சுற்றுவட்டாரத்தில் இருக்கவேண்டும் என்று தவித்துக்கொண்டிருந்த சீனு வேஷத்தை மாற்றிக்கொண்டு தானிய புரோக்கராய் வந்து விக்கிரமனிடம் லாவாதேவிகளைத் தொடங்கிவிட்டான்.

சரிதாவின் மேஜைக்கருகில் வந்து அடிக்கடி நின்று— ''என்னம்மா பொண்ணு! உன் பேர் சரிதாதானே? உங்கப்பாவை எனக்குத் தெரியும்! எப்பப் பார்த்தாலும் உன் கல்யாணத்தைப் பற்றி பேசிக்கொண்டிருப்பார். நீ சீனு என்று யாரையோ பண்ணிக்கொள்வாய் என்றல்லவா எல்லோரும் நினைச்சிட்டிருந்தாங்க?'' என்று பேச்சில் இழுக்கத் தொடங்குவான் குமாஸ்தா மது.

''அதெல்லாம் உங்களுக்கு தேவையில்லாதது. உங்கள் வேலையை நீங்கள் பார்த்துக்கொண்டு போங்கள்'' என்பாள் சரிதா எரிந்து விழுந்தபடி.

''ஐயோ, இவ்வளவு கோபம் எதுக்கும்மா? ஏதோ பெரியவனாதலால் கேட்டேன்'' என்பான்.

''பெரியவன் சின்னவன் என்றில்லை. எல்லோருக்கும் இது ஒரு விளையாட்டு ஆகிவிட்டது'' என்று துடிப்பாய் சொல்லிவிட்டு சரிதா அங்கிருந்து போய்விடுவாள்

நடுவில் அவ்வப்பொழுது சுதாமன் விக்கிரமனிடம் வந்து ''சோற்றுக்கு இல்லாமல் செத்துட்டிருக்கேன். ஏதாவது உத்யோகம் இருந்தா தா'' என்று கேட்பான்.

விக்கிரமன் சிரித்துவிட்டு ''போடா! உன்னை இங்கே சேர்த்துக்கொண்டு விட்டால் இது ஒரு சூதாட்ட கிளப் ஆகிவிடும்'' என்று சொல்லிவிடுவான்.

''நீயும்-சரிதாவும் அத்தனை பேரும் புத்திசாலிகளாகிவிட்டீங்க. எனக்கும் ஆகணும்னு ஆசையாய் இருக்குடா'' என்பான் சுதாமன் சிரித்துக்கொண்டே.



சுதாகருக்கு போஸ்டிங் சென்னையிலேயே வந்தது.

அசிஸ்டெண்ட் சூபரெண்டெண்டாய் அவன் உத்யோகத்தில் சேர்ந்தான். ஜானகிராமனை பார்ப்பதற்காக வந்தான்.

அவர் போலீஸ் உடையில் இருந்த சுதாகரைப் பார்த்ததுமே மிகச் சந்தோஷமடைந்து ''வாப்பா! வா'' என்று வரவேற்றார்.

சுதாகர் வணங்கிவிட்டு தன் உத்யோகத்தைப் பற்றிச் சொன்னான்.

மிகவும் மகிழ்ந்து போனார் அவர். ''உங்கப்பா கண்ட கனவு பலித்துவிட்டது. உனக்கு நல்ல உத்யோகம் கிடைத்துவிட்டது. உன் தர்மத்தை நீ நிறைவேற்றுவதில் உன்னை மிஞ்சியவர்கள் கிடையாது என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் நீ. வா தம்பி, உட்காரு.''

''எல்லாம் உங்கள் ஆசிதானுங்க.''

''இதில் நான் செய்தது என்னப்பா இருக்கு? நீ கஷ்டப்பட்டு படித்தாய். ஒரு லட்சியத்தை வைத்துக் கொண்டு உழைத்தாய். உன்னை இன்றைக்கு இந்த நிலையில் பார்க்கும்பொழுது எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமா?'' சிற்றப்பா யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறாரே, வந்தது யாராயிருக்கும் என்று எட்டிப் பார்த்த ஜமுனாவுக்கு சுதாகர் தென்படவே கண்கள் மின்னின. மளமளவென்று உள்ளே ஓடிவந்து சித்ராவிடம் சொன்னாள்.

''அண்ணி! உங்கண்ணா வந்திருக்கிறார். அந்த போலீஸ் ஆபீசர் உடையில் டிப்டாப்பாய் எவ்வளவு அழகாய் இருக்கிறார் தெரியுமா?''

''எவ்வளவு அழகாய் இருக்கிறானாம்? எங்கே; உன் கண்களைக் கொஞ்சம் இரவல் கொடு. பார்க்கிறேன்'' குறும்போடு சொன்னாள் சித்ரா.

''போ அண்ணி'' ஜமுனா பிடிபட்டுப் போன திருடனைப் போல அவனைப் பார்த்து வெட்கமடைந்தாள்.

சித்ரா அண்ணனிடம் வந்தாள்.

''சௌக்கியமா தங்கச்சி?''

ஆனந்தக் கண்ணீரோடு தலையாட்டினாள் சித்ரா.

''ஆமாம், உன் சாமான்கள் எங்கே சுதாகர்?'' அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவராய் கேட்டார் ஜானகிராமன்.

''எடுத்துட்டு வரலைங்க. இனி இங்கே இருக்க முடியாதுங்க.''

''ஏன் அண்ணா? எதுக்கு?'' சித்ரா கவலையோடு கேட்டாள்.

''க்வார்டர்ஸ் கொடுத்திருக்காங்க'' என்றான் சுதாகர் ஜானகிராமனைப் பார்த்து.

''இவ்வளவு நாட்களாய் சித்ராவுக்குப் பிறந்த வீடு மாமியார் வீடு இரண்டுமே இதுவாய் இருந்தது. இனிமேல் மாமியார் வீட்டில் நடக்க வேண்டிய மரியாதைகள் எல்லாம் அத்தானுக்கு என் வீட்டில் தான் நடக்கணும். நீங்கள் எல்லோரும் அடிக்கடி என்னிடம் வந்து கொண்டிருங்கள்.''

''அதெல்லாம் இல்லை சுதாகர். அப்படிப்பட்ட பேதங்கள் நம்மிடையே எதுவும் இல்லை.''

''பேதங்களுக்காக இல்லை. அண்ணனாய் என் தர்மத்தை நான் நிறைவேற்ற வேண்டாமா. தங்கச்சி, அத்தான் எங்கே?''

''ஃபேக்டரிக்குப் போயிட்டார் அண்ணா.''

''ஆமாம் தம்பி! எனக்கு உடம்புக்கு வந்ததால் அவனிடம் அந்த பொறுப்புக்களையெல்லாம் ஒப்படைத்துவிட்டேன். பரவாயில்லை. கொஞ்சம் வழிக்கு வந்துவிட்டான். எப்பப் பார்த்தாலும் ஃபேக்டரி தொல்லைகள் தானேயொழிய இப்ப வேறெந்த நினைப்புமே இல்லை.''



''பொறுப்புக்கள் தலை மீது வந்துவிட்டால் நிலைத்து நிற்கிற தன்மை அதுவாகவே வந்துவிடுங்க.''

''உள்ளே வா அண்ணா. டிபன் சாப்பிடலாம்.''

''மாமா?''

''நான் இப்பத்தான் சாப்பிட்டேன். நீ போய் சாப்பிடு சுதாகர்.''

சித்ராவோடு சுதாகர் டைனிங் ரூமிற்கு வந்தான். சித்ரா டிபனுக்காக சமையலறைக்குள் வரப்போன பொழுது ஜமுனா அதற்குள் தட்டில் வைத்து எடுத்துத் தந்தாள் அவனிடம். இருவரும் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

சுதாகர் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சித்ரா காபியைக் கலந்து கொண்டே சொன்னாள்,

''அண்ணா! உனக்கு உத்யோகமும் கிடைத்து விட்டது. குவார்டர்ஸ் கூட தந்து விட்டாங்க. இனி ஒன்றே ஒன்று தான் பாக்கியிருக்கு.''

''அதென்ன?''

''உன் கல்யாணம் அண்ணா.''

''ஓஹோ! அண்ணன் கல்யாணத்தில் பெரிய மனுஷியாய் உலாவணும்னு இருக்கா? எனக்கு இப்பொழுது என்ன அவசரம்மா?''

''உனக்கு இல்லாவிட்டாலும், உன் மீது ஆசை வைத்துக் கொண்டு, உன்னையே பண்ணிக்கணும்னு இருக்கிறவங்களுக்கு இருக்காதா?''

''அப்படீன்னால்?''

''நான் ஜமுனாவின் விஷயத்தைச் சொல்றேன் அண்ணா.''

''ஜமுனாவா!'' சுதாகரின் முகம் வேதனையாய் மாறி விட்டது.

''எல்லோருக்கும் உன்னைப் போன்ற அதிருஷ்டம் கிடைத்து விடாதும்மா.''

''அப்படியென்றால்?''

''ராஜாராம் ஜமுனாவுக்கு வேறு சம்பந்தம் பார்த்துட்டிருக்கார்.''

''ஜமுனாவுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லையாம்: உன்னைத்தான் பண்ணிப்பேன்னு என்னிடம் சொல்லி விட்டாள்.''

''அது சாத்தியமா தங்கச்சீ?''

''அவங்க அப்பாவை எப்படியாவது சம்மதிக்க வைத்து விடுவேன் என்கிறாள். அவர் ஒப்புக் கொண்டால்?''

''எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லைம்மா.''

''கேட்டாயா ஜமுனா?'' சித்ரா சிரித்துக்கொண்டே சமையலறை பக்கம் பார்த்தாள். சுதாகர் ஆச்சரியமடைந்தவனாய் திரும்பி பார்த்தான்.

''என்ன, ஜமுனா இங்கே இருக்கிறாளா? ஓஹோ! இது அவள் அனுப்பிய தூது தானா?'' ஜமுனா வெட்கத்துடன் அவனுக்கருகில் வந்து நின்றாள்.

''திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு என் தங்கையைக் கொண்டு நாடகமாட வைத்துக் கொண்டிருந்தாயா?''

சித்ரா ஏதோ வேலை இருந்தாற்போல அங்கிருந்து மெதுவாய் போய் விட்டாள்.

# 28

ஃபேக்டரியில் விக்கிரமன் ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்தான். மாலையாகிவிட்டது. எல்லோரும் போய் விட்டார்கள்.

விக்கிரமன் 'அர்ஜென்ட்' லேபிள் இட்டுத் தந்திருந்த ஃபைலை டைப் அடித்துக் கொண்டு வந்து அவனிடம் தந்தாள் சரிதா.

விக்கிரமன் கையெழுத்திட்டுக் கொண்டே கேட்டான், ''உங்கப்பாவுக்கு எப்படி இருக்கு?''

''அப்படியேதான் இருக்கு.''

''டாக்டர் அவருக்கு ஏதோ மனநோய் என்றும், அதனால்தான் மருந்துகள் வேலை பண்ண மாட்டேங்கிறது என்றும் சொல்கிறார்.''

சரிதா பதில் பேசவில்லை.

விக்கிரமன் நிமிர்ந்து பார்த்தான்.

''உன்னைப் பற்றித்தான் அவர் கவலை. நீ கல்யாணம் பண்ணிக் கொண்டு ஒரு வீட்டிற்குத் தலைவியானாலே யொழிய அவர் நிலை போகாது.''

சரிதா பதில் பேசவில்லை.

விக்கிரமன் நிமிர்ந்து பார்த்தான்.

''ஏன் பேச மாட்டேங்கிறாய் சரிதா?''

''என்னத்தைப் பேசுவேன்? செய்யாத தப்புக்கு தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். வாய் இருந்தும் ஊமையாகி விட்டேன். ஆதாரம் இல்லாத பெண்

ணின் வாழ்க்கை அறுந்த காற்றாடியைப் போலத்தான்! அப்படி ஆகிவிட்டது என் வாழ்க்கை.''

''சரிதா! ஏன் இந்த நிராசை உனக்கு? நீ கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு என்ன ஆட்சேபணை?''

''என்னை யார் பண்ணிப்பாங்க? பண்ணிக் கொண்டாலும் அவங்களுக்கு சுகம் கிடைக்குமா?''

''ஏன் கிடைக்காது?''

''ஹூம்! இந்தக் கேள்வியை நீங்களே கேட்கிறீங்களே என்னை? உங்கள் தயவால் நான் பட்ட அபவாதங்களும், ஏசல்களும் அதற்குள் நீங்கிப் போய் விட்டதாய் நினைத்துக் கொண்டிருக்கீங்களா?''

விக்கிரமன் பெருமூச்செறிந்து விட்டுச் சொன்னான்—

''நிஜந்தான் சரிதா! என்னால் உன் வாழ்க்கையே தாறுமாறாகி விட்டது. உன் நிலைமையைப் பார்க்கும்போது என் மீது எனக்கே வெறுப்பாய் இருக்கிறது. உன்னை இந்த நிலைமைக்குத் தள்ளி விட்டவனும் நான்தான். இதிலிருந்து உன்னை மீட்க வேண்டிய பொறுப்பு கூட என்னைத்தான் சேர்ந்தது. சரிதா...'' விக்கிரமன் சரிதாவின் கைகளைப்பிடித்துக்கொண்டான். ''உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்.''

சரிதா திடுக்கிட்டாள்.

விக்கிரமனின் பார்வை வேண்டிக் கொள்வது போல இருந்தது.

''உங்களுக்கு கல்யாணம் ஆயிடுத்துங்கிற விஷயத்தை மறந்து போயிட்டீங்களா?''

''இல்லை. சித்ராவைச் சம்மதிக்க வைக்கிறேன்.''

சரிதா விக்கிரமன் கையிலிருந்த தன் கைகளை வேகமாய் இழுத்துக் கொண்டு—''வேண்டாம் தயவுசெய்து அந்த



காரியத்தை மட்டும் செய்யாதீங்க. இப்பொழுதே அவள் என்னைத் தப்பாய் புரிந்து கொண்டிருக்கிறாள். இதையும் கேட்டால் தன் குடும்பத்தில் கலகத்தை உண்டாக்குவதற்காகவே இப்படிச் செய்வதாய் நினைத்துக் கொள்வாள்.''

''யார் என்ன நினைத்துக்கொண்டாலும் நான் பொருட்படுத்த மாட்டேன் சரிதா.''

''நான் பொருட்படுத்துவேன். எனக்காக அவளுக்கு அநியாயம் செய்யாதீங்க, நடந்ததென்னவோ நடந்து விட்டது. நமக்குக் கல்யாணம் ஆவது என்பது நடக்காத காரியம்...இப்படிப்பட்ட பைத்தியக்கார யோசனைகளையெல்லாம் மனதில் வளர விடாதீங்க.''

''இல்லை சரிதா, நம்ம கல்யாணம் நடந்தே தீரணும். இந்த நரகத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் சமயம் வந்தால் சித்ராவை மட்டுமில்லை, எங்கப்பாவைக்கூட எதிர்த்து நிற்பேன். இந்தக் கோழைத்தனத்தால் எவ்வளவு விலைமதிப்பு வாய்ந்தது கைநழுவிப் போய் விட்டது என்று எனக்கு நன்றாய் தெரிந்துவிட்டது.''

''மன்னியுங்கள். நான் இந்த ஃபேக்டரியில் இருக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேச வேண்டாம். வரேன்'' சரிதா விடுவிடென்று வெளியே வந்து விட்டாள்.

விக்கிரமன் உள்ளங்கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு வருத்தத்தோடு உட்கார்ந்திருந்தான். சரிதாவுக்குத் தன்னால் அநியாயம் நிகழ்ந்து விட்டது. இதைத் தான் சீர்திருத்திக் கொள்ள முன்வந்தால் ஒப்புக்கொள்ள மறுக்கிறாளே, இதென்ன பைத்தியக்காரப் பெண்! ஊஹூம் எப்படியாவது சரி, தான் சரிதாவை மனைவியாக்கிக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் இரண்டு பெண்டாட்டிக்காரர்கள் எவ்வளவு பேர் இல்லை? கடவுள் கருணையால் தனக்குப் பணத்திற்குப் பஞ்சமில்லை. பங்கிட்டுக் கொள்வதற்குக்கூட யாரும் இல்லை.

விக்கிரமன் சரிதாவை திருமணம் பண்ணிக் கொள் வதற்கே உறுதியான தீர்மானத்திற்கு வந்து விட்டான்.

* * *

ஜானகிராமனுக்கு மேனேஜர் மூலமாய் விக்கிரமன்—சரிதா இருவரின் கதையும் தெரிய வந்தது. மகனுக்கு திடீரென்று ஃபேக்டரியின் மேல் அவ்வளவு மோகம் ஏன் வந்தது என்பது புரிந்தது.

என்றும் போலவே அன்றைக்கும் ஃபேக்டரிக்குப் புறப் பட்டான் சுதாகர்.

ஜானகிராமன் மகனைக் கூப்பிட்டார்.

''டேய் இப்படி வா, எங்கே புறப்பட்டு விட்டாய்?''

''ஃபேக்டரிக்கு அப்பா.''

''உம்'' மகனை ஏறயிறங்கப் பார்த்துவிட்டு கேட்டார்,

''என்ன சொல்கிறது ஃபேக்டரி?''

தந்தையின் கேள்வி புரியாதவனாய் குழப்பத்துடன் பார்த்தான்.

''நீ யாரையோ லேடி டைப்பிஸ்ட்டை வேலைக்கு வைத் திருக்கிறாயாம். என்னிடம் சொல்ல வேண்டிய அவசிய மில்லைன்னு நினைத்துக் கொண்டு விட்டாய் போலிருக்கு.''

விக்கிரமனுக்கு பகீர் என்றது.

''சிதம்பரத்துக்கு உடம்பு சரியாயில்லை அல்லவா, அதனால்தான் தன் வேலையைப் பார்ப்பதற்காகத் தன் மகளை அனுப்பினார்!''

''அவர் அனுப்பினாரா அல்லது நீ தான் அழைத்தா யான்னு எனக்குத் தெரியும். நீ இவ்வளவு நாளாய் காதல்



நாடகத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது அந்தப் பெண் ணோடுதானே?''

''அப்பா.''

''எவ்வளவு நாளைக்குடா நாடகமாடிக் கொண்டிருப் பாய்? பெற்ற தந்தையையும் கட்டிய மனைவியையும் எவ்வளவு நாளைக்கு ஏமாற்றிக் கொண்டிருக்கப் போகிறாய் நீ?''

''இதில் ஏமாற்றுகிற விஷயம் என்ன இருக்குப்பா? நான் சரிதாவைக் காதலித்தேன். கல்யாணம் பண்ணிக்க லாம்னு எண்ணிட்டிருக்கிறேன்.''

''என்ன சொன்னாய்?''

''சரிதாவைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு வாக்கு கொடுத்து விட்டேன் அப்பா.''

''மூடு வாயை! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்கிறேன்? மகாலட்சுமியைப் போல் இருக்கிறாள்டா உன் மனைவி சித்ரா! சித்ராவுக்குத் துரோகம் பண்ணினால் அவள் உசிர் சாபமாகி பிச்சை எடுத்துத் தின்பாய்.''

''என்ன ஆனாலும் சரி, சரிதாவுக்கு நான் அநியாயம் பண்ண மாட்டேன்.''

''என்னடா சொன்னாய்? நீ திரும்பவும் அவள் பெயரை இந்த வீட்டில் எடுத்தாயானால் உன்னைக் கொன்று போட்டு 'விடுவேன்''—ஜானகிராமன் மகனை கன்னத்தில் மாறி மாறி அடித்தார்.

அதற்குள் அங்கே வந்து தந்தைக்கும் மகனுக்கு மிடையே நடந்த பூசலைக் கேட்டுக்கொண்டே நின்றிருந்த சித்ரா சட்டென்று குறுக்கிட்டாள்.

''மாமா! நீங்க அவசரப்படாதீங்க. என் பேச்சைக் கேளுங்க'' என்று கைகளைக் கூப்பினாள்.

''அவசரப்படலைம்மா. என் வயிறு பற்றியெரிகிறது. அதன் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு உன் கழுத்தில் சுருக்கை மாட்டலாம்னு பார்க்கிறான் இந்த அயோக்கியன்! டேய், கடைசி தடவையாய் எச்சரிக்கிறேன். அந்த கதி கெட்டவளோட எல்லா சம்பந்தங்களையும் விட்டுத் தொலை. இல்லாவிட்டால் உங்களிருவரையும் மூட்டைப்பூச்சியைப் போல எப்படி நசுக்கணும்னு எனக்குத் தெரியும். திரும்பவும் இப்படிப்பட்ட அயோக்கியத்தனங்களைப் பண்ணினாயானால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவேன். நீ என் மகனே இல்லைன்னு நினைத்துக் கொண்டு விடுவேன், ஜாக்கிரதை!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றார் ஜானகிராமன்.

விக்கிரமன் வேகமாய் விடுவிடென்று தன் அறைக்குள் போய் உடைகளை அடுக்கிக் கொள்ளத் தொடங்கினான்

அவனைப் பின் தொடர்ந்து வந்த சித்ரா அழுகையை அடக்கிக் கொண்டே கைகூப்பிச் சொன்னாள். ''உங்களுக்குக் கோடி கும்பிடு! நீங்கள் வீட்டை விட்டுப் போய் விடாதீங்க. நீங்கள் என்ன சொன்னாலும் அதைச் செய்வதற்கு சித்தமாய் இருக்கிறேன் நான். நான் பாவி, திக்கில்லாதவள் என்றெண்ணி என்னைக் கிட்டே அழைத்துவந்து அரவணைத்ததற்கு, தந்தைக்கும் மகனுக்குமிடையே சிக்கலை வரவழைத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் வேறெந்த கொடுமையையும் பண்ணி விடாதீர்கள்.''

உடைகளை அடுக்கிக் கொண்டிருந்த விக்கிரமன் நின்று சித்ராவை நோக்கித் திரும்பினான். அவளைக் கூர்ந்து பார்த்தான்.

''நான் என்ன சொன்னாலும் பண்ணுவாயா?'' தீவிரமாய் கேட்டான்.

''பண்ணுவேன்.''



''அப்படீன்னா நான் சரிதாவை மணந்து கொள்வதற்கு உனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று எழுதிக் கொடு.''

''கொடுக்கிறேன். இப்பொழுதே கொடுக்கிறேன்'' சித்ரா பக்கத்து அறைக்கு ஓடினாள்.

அதே அறையில் நின்றுகொண்டு இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜமுனா பேனாவையும் காகிதத்தையும் எடுத்துக் கொண்டிருந்த சித்ராவின் கையைப் பிடித்து அழுத்தமாய் தடுத்து விட்டாள்.

''அண்ணி! இதென்னது? அண்ணாதான் ஏதோ ஆவேசத்தில் சொல்கிறான். உனக்குமா புத்தி பிசகி விட்டது?'' என்று கண்டித்தாள்.

''உங்கண்ணாவின் மனதில் இடமில்லை என்று தெரிந்த அன்றைக்கே என் புத்தி பிசகி விட்டது ஜமுனா! என் கையை விடு! என்னைப் போன்ற அதிர்ஷ்டக்காரி யாருமில்லைன்னு இறுமாந்து கொண்டிருந்தேன். அவரை என்னுடையவர் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அருகதை இல்லாத அதிர்ஷ்டத்திற்காக ஏங்கி வருந்தினேன். அவர் சுகமாய் இருக்கட்டும். அவங்க சந்தோஷத்துக்குக் குறுக்கே நிற்க எனக்குப் பிடிக்கவில்லை. இந்த கல்யாணத்துக்கு அவர் பலவந்தமாய் ஒப்புக் கொண்டிருக்கிறார். அது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நான் முன்பே விலகியிருப்பேன். இப்பொழுதும் ஒன்றும் மிஞ்சி விடவில்லை. என்னை விடு''—சித்ரா ஜமுனாவின் கையிலிருந்த தன் கையை இழுத்துக் கொண்டு விக்கிரமன் இருந்த அறைக்குப் போய் விட்டாள்.

ஜமுனா சிலையாய் நின்றுவிட்டாள். அவளுக்கு ஒரு நிமிஷம் என்ன செய்வதென்றே புரியவில்லை. கொஞ்ச நேரங்கழித்து பரபரவென்று உடையணிந்துகொண்டு

புறப்பட்டு நேராய் சுதாகர் இருந்த குவார்டர்ஸிற்கு வந்தாள்.

ஜமுனா போன சமயத்தில் சுதாகர் வீட்டில் இல்லை. ஜமுனா அவனுக்காக காத்துக்கொண்டு அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

இரவு வெகுநேரங்கழித்து வீட்டிற்கு வந்த சுதாகர் டிராயிங்ரூமில் உட்கார்ந்து கொண்டிருந்த ஜமுனாவைப் பார்த்து திகைப்படைந்து போனான்.

ஜமுனா அவனைப் பார்த்ததுமே எழுந்து நின்றாள்.

''உட்காரு ஜமுனா! என்ன இப்படி வந்திருக்கிறாய்?''

''சுதாகர்! ரொம்ப பெரிய ஆபத்து வந்து சேர்ந்து விட்டது.''

''ஆபத்தா? யாருக்கு? உனக்கா—எனக்கா?'' குறும்பாய் கேட்டான்.

''வேடிக்கைக்கு இது சமயமில்லை. விக்கிரமன் அண்ணனோட ஃபேக்டரியில் குமாஸ்தா சிதம்பரம் இல்லே, அவர் மகள் சரிதாவைக் கல்யாணம் பண்ணிக்கப்போறாராம். இன்றைக்குச் சித்தப்பாவுக்கும் அண்ணனுக்கும்பெரிய சண்டை வந்தது. சித்தப்பா அண்ணாவைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவேன் என்றார். அண்ணா வீட்டை விட்டுப் போகிறேன்னு புறப்பட்டபோது அண்ணி வேண்டாம் என்று தடுத்து, சரிதாவை கல்யாணம் பண்ணிக் கொள்வதற்குத் தனக்கெந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் வீட்டைவிட்டுப் போகவேண்டாம் என்றும் கெஞ்சி, அனுமதி பத்திரத்தை எழுதித் தந்துவிட்டாள்.''

''ஜமுனா! என்ன சொல்கிறாய் நீ?'' சுதாகர் இடி விழுந்தவனைப் போல ஆனான்.



''நிஜந்தான் சுதாகர்! இந்தக் கல்யாணம் நிகழ்ந்தால் அண்ணியின் வாழ்க்கை என்னவாகும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.''

சுதாகரின் முகம் கோபத்தாலும் ஆவேசத்தாலும் செக்கச்செவேர் என்று ஆகிவிட்டது. கோபத்தை அடக்கிக் கொண்டதற்கு அடையாளமாய் அவன் தாடை எலும்புகள் அதிர்ந்தன.

''நான் உயிரோடிருக்கும்வரை சித்ராவுக்கு அநியாயம் நிகழும்படி விட்டுவிடுவேனா ஜமுனா?'' என்றான்.

❖ ❖ ❖

மறுநாள் சுதாகர் நேராய் சிதம்பரத்தின் வீட்டிற்குப் போனான்.

சுதாகர் போனபொழுது சிதம்பரம் வீட்டில் இல்லை. சாருமதி வந்து கதவைத் திறந்தாள்.

போலீஸ் ஆபீசராய் வந்த சுதாகரைப் பார்த்துவிட்டு திகிலடைந்து போனாள். தடுமாற்றத்துடன் கேட்டாள்,

''என்ன வேணும் தம்பீ உங்களுக்கு?''

''சிதம்பரம் சாரின் வீடு இதுதானே?'' உள்ளே வந்ததும் சுதாகர் வீட்டையெல்லாம் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே கேட்டான்.

''ஆமாம், ஆனால், அவர் வீட்டில் இல்லை'' என்றாள் சாருமதி, சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டே.

''பரவாயில்லை, அவரோடு வேலை இல்லை. சரிதா உங்கள் மகள்தானே?'' தீவிரமாய் கேட்டான்.

''ஆமாம் தம்பீ! ஏன்? ஏதாவது ஆகக்கூடாத காரியம் ஆயிடுத்தா அவளால?''

''ஆகக்கூடாத காரியம்! ஹூம்! அடுத்தவங்க குடும்பங்களுக்கே உலை வைக்கிறாள். அடேயப்பா! குழந்தைகளைப் பெற்றுவிட்டால் போதுமா? அவங்களை கண்டிப்பிலும் கட்டுப்பாட்டிலும் வைக்கவேண்டிய தேவையில்லையா?''

சாருமதியின் முகம் கறுத்துவிட்டது. திகிலோடு சொன்னாள், ''என்ன செய்வது தம்பீ! நாங்கள் என்ன சொன்னாலும் கேட்கமாட்டாள். எங்கள் வார்த்தைகளைப் பொருட்படுத்தவே மாட்டாள். இதெல்லாம் எங்கள் தலையெழுத்து.''

''உங்கள் தலையெழுத்துன்னு எண்ணிக்கொண்டு பேசாமலிருந்து கொண்டிருக்கீங்க போலிருக்கு. மற்றவங்க குடும்பத்தில் சிக்கலை விளைவித்துக் கொண்டிருப்பது உங்களுக்குப் பெரிதாய் தோன்றவில்லை போலிருக்கு! பெற்ற மகளை இப்படி நாலு பேர் சீ என்று புழுவைப்போல பேசுகையில், நல்ல வார்த்தைச் சொல்லியோ அல்லது மிரட்டியோ வழிக்குக் கொண்டுவராமல் தன்னிஷ்டம் போல நடந்து கொள்ள விட்டுவிட்டுப் பேசாமலிருந்து கொண்டுவிடுவாங்களா யாராவது?''

சாருமதிக்கு அது அவமானமாய் தோன்றிற்று. ''பெற்ற மகள! ஹூம்! அவள் என் மகளாகவே இருந்திருந்தால் இதற்குள் கைகளை முறித்து மூலையில் உட்கார வைத்திருப்பேன். அவள் நாங்கள் பெற்ற மகள் இல்லை தம்பீ! தகித்துக்கொண்டிருக்கும் இந்த சத்தியத்தை என் மனதிற்குள் போட்டுப் புதைத்துக் கொண்டிருக்க முடியாமல் குமறிக் குமறிப் போய்க் கொண்டிருக்கிறேன். இந்த திக்கற்றப் பெண்ணை அன்றைக்கு ஆசுபத்திரியில் அந்த காளிதேவியிடமிருந்து எப்பொழுது வாங்கிக் கொண்டேனோ அப்பொழுதிலிருந்து எங்களுக்கு மன அமைதி இல்லாமல் போய்விட்டது.''



அதற்குள் உள்ளே வரப்போன சரிதா, இவ்வார்த்தைகளைக் கேட்டுவிட்டு கதவிற்குப் பின்னாடியே நின்றுவிட்டாள். அவளுக்கு சாருமதியின் வார்த்தைகள் இடியாய் வந்து விழுந்தன.

சுதாகர்கூட வாயடைத்துப் போனவனாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

''காளிதேவியா? யார் அது?''

சாருமதி சொல்லத் தொடங்கினாள்.

''எங்கள் பிறந்த ஊரில் குழந்தை பிறப்பதற்காக நான் ஆசுபத்திரியில் ஆபரேஷன் பண்ணிக் கொண்டேன். ஆனாலும் லாபம் இல்லாமல் போய்விட்டது. ஆசுபத்திரியிலிருந்து அன்றைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபொழுது யாரோ காளிதேவி தம்பீ, அவள் அண்ணன் வீரபத்திரனாம், முதலாளிக்காக நிலத்தகராறில் தலை வெட்டுண்டுச் செத்துவிட்டானாம். அதிலிருந்து அந்த அண்ணனின் குடும்ப பாரமெல்லாம் காளிதேவியின் தலையில் விழுந்ததாம். அதற்கு முன்பே அந்த அண்ணிக்கு இரண்டு குழந்தைகள் இருந்தாங்களாம். அப்பொழுது கணவன் சாகும் தறுவாயில் வயிற்றில் இன்னொரு குழந்தை இருந்தது. பிரசவம் கஷ்டமாகிவிட்டதால் நான் மருந்து வாங்கிக் கொண்டிருந்த ஆசுபத்திரிக்கே தூக்கிட்டு வந்தாள். அவள் பெண் குழந்தையைப் பெற்றுவிட்டுச் செத்துவிட்டாள். இன்னும் கண்களைக் கூட திறக்காத அந்த பச்சிளம் குழந்தையை வைத்துக் கொண்டு அவள் அக்குழந்தையையும் அதன் தாய் தந்தையரையும் திட்டிச் சபித்துக் கொண்டிருந்ததை பார்த்தோம். எங்களால் கேட்டு சகித்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. நானும் என் கணவரும் அவளிடம் போய் யார், என்ன விஷயம் என்று விசாரித்தோம். 'இதற்கு முன்பே இரண்டு குழந்தைகள் தனக்குக் கால்கட்டாய் இருக்கிறார்

கள் என்றும். இந்த தரித்திரத்தை கூட என்னால் எப்படி வைத்துக்கொள்ள முடியும்?' என்றும் அவள் ஒரே அழுகை! குழந்தையைப் பார்த்தபோது சந்திரபிம்பம் போல இருந்தது. குழந்தைக்காக தவித்துக் கொண்டிருந்த என் மனம் வீல் வீலென்று கத்திக் கொண்டிருந்த அச்சிறு குழந்தையின் அழுகுரலைக் கேட்டதும் உருகிப் போய்விட்டது. என் கணவரைக் கேட்டேன். என் மனதிலிருந்த வருத்தம் அவருக்குத் தெரியும். அதனால்தான் காளிதேவியோடு பேசி சவத்தை தகனம் பண்ணுவதற்குப் பணம் இல்லாமல் கஷ்டப் படுவதாய் சொன்னதால் ஐநூறு ரூபாயைத் தந்துவிட்டு, குழந்தையை வாங்கிக்கொண்டு திரும்பி வந்தோம். எங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்றாய் ஆசையாய் தான் வளர்த்து ஆளாக்கினோம். அவளுக்கு எந்தக் குறையும் வாராதபடி அல்லும் பகலும் சிரத்தையாய் பார்த்துப் பார்த்து வளர்த்தோம். அதற்குப் பலனை இதோ இப்படி நாலுபேர் வாயில் நாறிக் கொண்டிருக்கிறோம்.''

சாருமதி சொல்லிக் கொண்டிருந்த பொழுதே—''சரிதா! சரிதா!'' என்று கத்திக் கொண்டே சிதம்பரம் உள்ளே வந்தார். அவர் முகம் கடுகடுவென்றிருந்தது.

வெறி பிடித்தவரைப் போல இருந்தார்.

சுதாகரைப் பார்த்ததுமே—

''சுதாகர் தம்பி! நீங்களே வந்துவிட்டீங்களா? உங்களுக்காக நானே வர வேண்டும் என்றிருந்தேன்'' என்று சொல்லி விட்டு சரிதாவை நோக்கித் திரும்பி—

''சரிதா! இப்படி வா'' வீடே அதிரும்படியாய் கத்தினார்.

''என்னங்க, என்னவாச்சு?'' சாருமதி கலங்கிப் போன வளாய் கேட்டாள்.



''என்னவாச்சா? நீயும் நானும் தூக்குப் போட்டுக் கொண்டு சாக வேண்டிய நாள் வந்து விட்டது. எங்கே அந்தப் பாவி? சரிதா வரப் போகிறாயா, இல்லையா?''

சரிதா உயிரற்ற பொம்மையாய் அவர்களுக்கு முன்னால் வந்தாள்.

''என்ன காரியம் செய்து விட்டாய். என்ன சாகஸம் உனக்கு'' சிதம்பரம் மகளிடம் வந்து கேட்டார்.

''என்ன பண்ணிட்டேன் அப்பா?'' ஜீவனில்லாதவளாய் சிதம்பரத்தைப் பார்த்துக் கேட்டாள்.

''என்ன திமிர் உனக்கு? விக்கிரமனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று நினைத்தாயா? கடைசியில் அவ்வளவுக்குத் துணிந்து விட்டாயா?''

''ஆ!'' சாருமதி விக்கித்துப் போய் நின்று விட்டாள்.

சுதாகரின் கண்கள் சரிதாவின் மீதே நிலைத்திருந்தன.

அவன் அந்தரங்கத்தில் சந்தோஷமா வருத்தமா என்று தெரியாத விநோதமான உணர்ச்சி ஒன்று இதயத்தைச் சூறாவளியாய் சுற்றிக் கொண்டு திணறடித்துக் கொண்டிருந்தது. சரிதா சிதம்பரம் பெற்ற மகள் அல்ல. காளிதேவி அவர்களுக்கு வளர்ப்பதற்காகத் தந்திருக்கிறாள். சரிதா வேறு யாரோ இல்லை. ஆசுபத்திரியில் வீரபத்திரனின் மனைவி சாகும்பொழுது பெற்றெடுத்த குழந்தை! சுதாகர் கண் முன்னால் வானமும் பூமியும் ஒன்றாகி விட்டாற் போல விநோதமாய், குழப்பமாய் இருந்தது.

ஆனால் சிதம்பரமோ சாருமதியோ சுதாகர் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை கவனிக்கும் நிலையில் இல்லை.

சிதம்பரம் சரிதாவின் கையைப் பிடித்து இழுத்துவிட்டுச் சொன்னார்—

23309

''சொல்லு, ஏன் பேச மாட்டேங்கிறாய்? இடிச்ச புளியாட்டம் நிற்கிறாயே ஏன்? உன்னை ஃபேக்டரிக்கு அனுப்பி வைத்தது என் தப்புதான். விக்கிரமனை யார் என்று எண்ணி விட்டாய்? அவன் அந்தஸ்து என்ன, உன் அந்தஸ்து என்ன? அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்ற விஷயம் தெரிந்தும்கூட உனக்கு பயமில்லாமல் போய் விட்டதா? இவ்வளவு நாட்களாய் யாருடைய உப்பைத் தின்று பிழைத்து வந்தோமோ அவங்க வீட்டுக்கே உலை வைக்கத் தயாராயிட்டாயே பாவி!'' சிதம்பரம் ஆவேசத்தோடும் தாங்க முடியாத கோபத்தோடும் சரிதாவின் கன்னங்களில் மாறி மாறி ஓங்கி யறைந்தார்.

''என்னங்க! இதென்ன உங்களுக்கு புத்தி பிசகி விட்டதா?'' சாருமதி கணவனுக்குக் குறுக்கே வரப் போனாள். சிதம்பரம் மனைவியை தொலைவிற்குத் தள்ளி விட்டார்.

சரிதாவின் கழுத்தைப் பிடித்து சுதாகர் பக்கமாய் தள்ளி விட்டு—''சுதாகர் தம்பி! உங்களுக்குப் புண்ணியமாய் போகட்டும்! இதை இந்த நிமிஷமே ஜெயிலில் தள்ளி விடுங்கள். இல்லாவிட்டால் எங்கள் மானம் உயிர்கூட நிலைக்காது. இதை எங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொன்னால் என் மனைவி என் பேச்சைக் கேட்க மாட்டேங்கிறாள். இந்தப் பாவி மூலமாய் எவ்வளவு அவமானங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அந்த ஆண்டவனுக்குத் தான் தெரியும்''—என்றார். சிதம்பரம் வேகமாய் தள்ளிய தள்ளலுக்கு சரிதா தடுக்கி சுதாகரின் கால்களில் விழப் போனாள். ஆனால் சுதாகர் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு விழுந்து விடாதபடி தடுத்து விட்டான்...

''சார்! நீங்கள் ஆவேசப்படாதீங்க''— என்றான் சுதாகர்.

''ஆவேசமா! இல்லை தம்பி, இல்லை. இதை வளர்த்த பாவத்திற்கு நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிற



தண்டனையே போதும்! எங்கள் நெஞ்சில் நெருப்பை அள்ளிப் போட்டு விட்டாள். இவளால் கடைவீதிக்குப் போவதைக்கூட தவிர்த்துக் கொண்டு விட்டேன். நாலு பேரோடு சிநேகத்தை விட்டு விட்டேன். மற்றவங்க விரல் சுட்டிக் காட்டுமளவுக்கு ஒதுக்கப்பட்டு விட்டோம். எங்கே போனாலும் கேலியும் பழிப்பும்! எங்களால் கேட்டுச் சகிக்க முடியவில்லை. என் காதுகள் வெடித்துவிட்டன. கறிகாய் வாங்கிக் கொண்டு வருவதற்காக மார்க்கெட்டிற்குப் போனால் அங்கே ஃபேக்டரி குமாஸ்தா கண்ணில் பட்டான். அவன் சொன்னான் இதையெல்லாம். ஃபேக்டரி முழுவதும் ஒரே அல்லோகலமாய் இருக்கிறதாம். எங்கே போனாலும் இதே செய்தி! போதும் தம்பி போதும். இதைத் தாங்கிக் கொள்கிற சக்தி எங்களிடம் இல்லை, இதை எங்கள் கண்ணுக்கு முன்னாடியே கூட்டிட்டுப் போயிடுங்க.''

''அவர் என்னங்க செய்வார்?'' சாருமதி குறுக்கிட்டுச் சொன்னாள்.

சிதம்பரம் நெருப்பை உமிழும் கண்களுடன் பார்த்துச் சொன்னார்—''என்ன பண்ணுவாரா? ஜெயிலில் தள்ளுவார். சித்திரவதை பண்ணுவார். அவர் மனது வைத்தால் என்ன வேண்டுமானாலும் பண்ணுவார். இந்தப் பாவி இனி ஒரு நிமிஷம்கூட என் வீட்டில் இருக்கக் கூடாது.''

''வா சரிதா!'' மனம் சிதறிப் போய் துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிலையாய் நின்றுகொண்டிருந்த சரிதாவைப் பார்த்துச் சொன்னான் சுதாகர்.

சரிதா ஒரு நிமிஷம் நிமிர்ந்து தீனமாய் அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் சுழற் காற்றில் சிக்கிக் கொண்டு வெள்ளத்திற்கடியில் போய்க் கொண்டிருக்கும் ஆள் கடைசி தடவையாய் பற்றிக் கொள்வதற்காக சுற்றிலும் பார்த்த பார்வையாய் இருந்தது...அந்த உணர்ச்சி சுதாகர் உள்ளத்தை சுண்டியிழுத்தது. அவன் மனம் அவள்பால் இரக்கப்

பட்டது. ''வா'' என்றான். சரிதா மெதுவாய் வெளியே வந்தாள்.

''அம்மா சரிதா!'' சாருமதி ஓவென்று கதறினாள்.

''சும்மாயிரு. சும்மாயிரு. இன்றோடு அதுக்கும் நமக்கும் பந்தம் போயிடுத்து. அது ஜெயிலிலேயே கிடப்பதுதான் நல்லது. விக்கிரமன்கூட இதைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறதாய் சொல்லி தந்தையை எதிர்த்தானாம். மனைவியைக்கொண்டு காகிதத்தைக்கூட எழுதி வாங்கிக்கொண்டு விட்டானாம். சீ! பசங்க இல்லையேன்னு எடுத்து வளர்த்ததற்குக் கொஞ்சங்கூட ஆசை தீர்ந்தபாடில்லை நமக்கு'' மனைவியைத் தேற்றிக் கொண்டே பதிலளித்தார் சிதம்பரம்.

ஃ ஃ ஃ

சுதாகர் சரிதாவை தன் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு நேராய் தன் குவார்டர்ஸிற்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தினான்.

''இறங்கு'' என்றான். பைத்தியம் பிடித்தவளைப் போல சூனியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்துகொண்டிருந்த சரிதா கனவில் ஆழ்ந்திருந்தவளைப் போல நடந்து வந்தாள்.

வீட்டிற்குள் அடியெடுத்து வைத்த பிறகுதான் தெரிந்தது. தான் வந்திருப்பது போலீஸ் ஸ்டேஷனுக்கு இல்லை என்றும் யாருடைய வீட்டிற்கோ என்றும்.

''இதென்ன. என்னை இங்கே எதற்காக கூட்டி வந்திருக்கீங்க?''

''உன்னோடு பேச வேண்டிய காரியம் இருக்கு'' என்றான் சுதாகர் மிக மென்மையாய்.

''அதென்ன காரியம்?''

''மிக முக்கியமான காரியம்! உன் வாழ்க்கை சம்பந்தப்பட்டது'' சுதாகர் வாசற்கதவைச் சாத்தி விட்டான்.



சரிதா விழித்துக் கொண்டாள். படமெடுத்த பாம்பைப் போல சீறினாள். ''இதானா உங்கள் பெரிய மனுஷத்தனம்? புகலிடம் இல்லாத திக்கற்ற பெண்களை குற்றவாளிகள் என்ற சாக்கில் அறைகளுக்கு அழைத்துக் கொண்டு வந்து குலாவலாம் என்று நினைப்பதுதான் போலீஸ் அதிகாரியான உங்கள் பொறுப்பா?''

''தப்பாய் புரிந்து கொண்டு விட்டாய் சரிதா நீ: புகலிடம் இல்லாத நீ வரவேண்டிய இடத்திற்குதான் வந்து சேர்ந்திருக்கிறாய். இது உன் வீடு.''

''நிறுத்துங்கள் உங்கள் பேச்சை'' என்றாள் முகம் சிவக்க.

''இல்லைம்மா. நீ ரொம்பவும் தவறாய் புரிந்து கொண்டு விட்டாய். உன்னை இந்த வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தது அதிகாரியாய் தண்டிப்பதற்காக அல்ல. அன்போடு அரவணைப்பதற்காக.''

''நீங்கள் என்ன பேசுகிறீங்கன்னு எனக்கு ஒன்றுமே புரியவில்லை.''

''புரிகிறபடியாய் பண்ணுவதுதான் என் முயற்சி. சரிதா, உன்னை சிதம்பரம் முதலியவர்களுக்கு விற்றவங்க யார் தெரியுமா?''

''கொஞ்சம் முன்னாடி உங்களோடு சேர்ந்துதானே நானும் கேட்டேன். யாரோ காளிதேவி என்று சொல்லவில்லையா?''

''அந்த காளிதேவி வேறு யாரோ இல்லை நம்ப அத்தைதான்!''

''நம்ப அத்தையா? அப்படீன்னால்?''

''சாருமதி அம்மாள் கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி சொல்லிக் கொண்டிருந்ததை நீ கேட்கவில்லையா?

உன்னைப் பெற்றுவிட்டு இறந்துவிட்ட அவங்களுக்கு அதற்கு முன்பே இரண்டு குழந்தைகள் இருந்தாங்கன்னு சொல்லவில்லையா? அந்தக் குழந்தைகள் வேறு யாரோ இல்லைம்மா, நானும் சித்ராவுந்தான்.''

''ஆ'' வீலென்று கத்தப்போன சரிதா சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டு விட்டாள்.

சுதாகர் கண்கள் பனிக்க கம்பீரமாய் சொன்னான்—''நிலத் தகராறில் செத்துப்போன அந்த வீரபத்திரன் வேறு யாரோ இல்லைம்மா, நம்ப தந்தைதான்! நம் தந்தை யாருக்காகத் தன் உயிரை விட்டாரோ அந்த நிலச்சுவான் தார் விக்கிரமனின் தந்தை ஜானகிராமன்தான். அவர் எங்களுக்காக தந்த பணத்தை அத்தை விழுங்கிவிட்டு எங்களுக்கு நிற்க நிழலில்லாமல் செய்து விட்டாள்; உன்னைப் பிறந்ததுமே மற்றவங்களுக்கு விற்று விட்டாள். நீ உயிரோடு இருக்கிற விஷயம் எங்களுக்குத் தெரியாது. இல்லாவிட்டால் நானும் சித்ராவும் வாழ்ந்து வந்தபோது உன்னை எங்களோடு சேர்ந்து வாழவைக்க எங்களால் முடியாதாம்மா?''

சரிதா குழப்பத்துடன் சுதாகரைப் பார்த்தாள். அவன் முகம் வெளுத்துப் போயிருந்தது. அந்த பார்வையில் ஆயிரம் சந்தேகங்களும் கேள்விகளும் தென்பட்டன.

''அப்படீன்னால்... நீங்கள்... நீங்கள்...'' உதடுகள் நடுங்கத் தடுமாறினாள்.

''உன் அண்ணன் அம்மா! நீ கூட சித்ராவைப் போல என் ரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு பிறந்தவள் தான்.''

''இது நிஜமா? அப்படீன்னால்...கடவுளே!'' சரிதா இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினாள்.

சுதாகர் கிட்டே வந்தான்.



சரிதாவின் தலை மேல் கையை வைத்துக் கோதிக் கொண்டே சொன்னான்—அவன் குரல் தழுதழுத்தது.

''இன்றைக்கு நான் எழுந்த வேளை எவ்வளவு நல்லது! இப்பவாவது உன்னைப் பற்றிய உண்மை தெரிந்ததே.''

''ஆனால்...ஆனால்...நான்...நான்...''

''இப்ப தெரிந்து விட்டது இல்லையா சரிதா? சித்ரா யார், விக்கிரமன் யார் என்றெல்லாம்?'' கேட்க முடியாமல் கேட்டான். சரிதா தலையை ஆட்டிக் கொண்டே விம்மலுக் கிடையே பதிலளித்தாள்

''நான்... நான் என்றைக்குமே அவரைக் கல்யாணம் பண்ணிக்கிறதாய் சொல்லவேயில்லை. அவர் கல்யாணம் ஆவதற்கு முன்னால், ஏதோ சில ஆசைகளை வைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் கல்யாணம் நிச்சயமாகிவிட்ட துன்னு தெரிந்ததுமே, அவைகளையெல்லாம் உதறிக் கொண்டுவிட்டேன். எனக்கு... எனக்கு... கல்யாணமே பிடிக்கவில்லை. ஆனால் அவர்தான் தன்னால் என் வாழ்க்கைப் பாழாகிவிட்டதேன்னு வருந்தி இப்படிச் செய் கிறார். நான் என்ன சொன்னாலும் கேட்கவில்லை. எனக்கு என்ன பண்றதுன்னும் தெரியவில்லை. நான் செய்யாத தப்புக்கு உலகம் என்னை தண்டித்துவிட்டது அண்ணா! நான் எந்த தப்பும் பண்ணவில்லை. நீயாவது நம்பு'' சரிதா அடக்கி வைத்துக்கொண்டிருந்த துக்கம் கட்டுமீறிக்கொண்டு வெளிவந்துவிட்டது.

சுதாகர் தங்கையைத் தேற்ற விரும்பி பரிவோடு தைரியம் சொன்னான்.

''இனி உனக்கு எந்த பயமும் இல்லைம்மா. நான்தான் இருக்கிறேனே! நீ கவலையில்லாமல் இரு. எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். உன் வாழ்க்கையை ஒரு வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பு என்னோடது.''

சுதாகரின் வார்த்தைகள் காய்ந்த கட்டாந்தரையில் மழைத்துளிகள் விழுந்தாற்போல இருந்தன சரிதாவின் மனதிற்கு

சுதாகர் கிட்டேயிருந்து தங்கைக்குச் சாப்பாடு போட்டான். தன் கையால் படுக்கை போட்டுத் தந்து படுக்கச் சொன்னான்.

வெளுத்த முகத்துடன் சரிதா மிகச் சோர்வாய் இருந்தாள். கட்டிலில் படுத்துக்கொண்ட சரிதா, ''அண்ணா'' என்று கூப்பிட்டாள்.

''என்மா?''

''என்னை... என்னை சீக்கிரத்திலேயே எதாவது ஹாஸ்டலுக்கு அனுப்பிவிடு.''

''ஹாஸ்டலுக்கா? ஏன்?'' திகைத்துப் போனவனாய் கேட்டான்.

''உனக்குத் தெரியாதா அண்ணா?

''அபவாதங்களுக்கும், பழிப்புக்களுக்கும் ஆளான வாழ்க்கை என்னுடையது. உலகத்தாரின் கண்ணோட்டத்தில் நான் ஒரு கெட்டுப்போன பெண். உன்னைப் போன்ற நல்லவனுக்குத் தங்கை என்று சொல்லிக் கொள்ளும் அருகதையோ அதிர்ஷ்டமோ எனக்கு இல்லை. நான் இங்கே இருந்தால்...''

''யார் என்ன சொன்னாலும் நீ கவலைப்படாதேம்மா. நானும் பொருட்படுத்தமாட்டேன்.''

சரிதா கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''என்னால்... என்னால் இங்கே இருக்க முடியாது அண்ணா! ரத்தத்தைப் பகிர்ந்துகொண்டு பிறந்து விட்ட காரணத்தால் என் துரதிர்ஷ்டத்தை உங்களுக்குப் பகிர்ந்து தரமாட்டேன்.''



''தங்கச்சி! அம்மா அப்பாதான் எப்படியும் இல்லை. அத்தையின் மூலமாய் நாம்ப சேர்ந்து இருக்க முடியாமல் போய்விட்டது. இவ்வளவு நாட்களுக்கு பிறகு எனக்கு இன்னொரு தங்கை இருப்பதாய் தெரிந்து கொண்டேன். இந்தச் சந்தோஷத்தை எனக்குக் கிடைக்கவிடாமல் பண்ணப் போகிறாயா?''

''நான் சொல்றது...''

''எனக்குப் புரிந்துவிட்டதும்மா! ஆனால் வெளியே போய் உன்னால் தனியாய் வாழ முடியுமா? உலகத்தார் காக்கையாய் என் தங்கையை இம்சித்துக் கொண்டிருந்தால் என்னால் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்துவிட முடியுமா? நீ எங்கேயும் போகக்கூடாது. இது உன் பிறந்த வீடு. சித்ரா வேறு நீ வேறு இல்லைம்மா எனக்கு. உங்களிருவரின் நலந்தான் எனக்கு முக்கியம். நீ எதைப்பற்றியும் யோசிக்காதே.''

''அண்ணா! நான் ஒரு பாவி! பிறந்ததுமே தாயைக் கொன்று விட்டேன். வளர்த்தவங்க துக்கத்துக்குக் காரணமாகி விட்டேன். எட்டாத கனிக்காக கொட்டாவிவிட்டு, அபவாதங்களுக்கு ஆளாகி, குற்றுயிராய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னால் உனக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டு விட்டால்...''

''ஒன்றும் ஏற்படாதும்மா. நீ தைரியமாய் இரு!'' தேற்றுவது போல சொன்னான்.

∴ ∴ ∴

ராஜாராம் மனைவியோடு சேர்ந்து ஊரிலிருந்து வந்தார். அவர் மிக உற்சாகமாய் சந்தோஷத்துடன் இருந்தார். காரணம் சூரியநாராயணன் வரதட்சணை சீர் எதுவும் இல்லாமல் தன் மகன் ரகுவீரனுக்கு ஜமுனாவை கல்யாணம் பண்ணிக் கொள்வதாய் சொல்லிவிட்டார். எல்லாம் தீர்மான

மாகி விட்டன. இனி லக்னம் வைத்துக்கொள்ள வேண்டியது தான் பாக்கி. தம்பியிடம் இந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு மகள் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு திருமணத்தை இங்கே நடத்திவிடலாம் என்ற உத்தேசத்துடன் லீவு போட்டு விட்டு வந்திருந்தார்.

ஜானகிராமனும் ராஜாராமனும் உட்கார்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தார்கள். ராஜாராம் கல்யாண சம்பந்த விஷயங்களைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார்.

''தம்பீ, நம்ப தீர்ப்புக்கு எப்பொழுதுமே எதிர் தீர்ப்பு இல்லை. இப்பொழுதும் அப்படித்தான்! பையனுக்குச் சொத்து, படிப்பு, பணம் எல்லாம் இருக்கின்றன'' என்று ஒரு மிழுங்கு காபியைக் குடித்துவிட்டு ''சே! இதென்ன பானகமாய் இருக்கே!'' என்றார்.

ஜானகிராமன் பக்கென்று சிரித்தார்.

''நீயேதானே கலந்துகொண்டாய் அண்ணா! சொத்துக்கு ஒரு ஸ்பூனும், அந்தஸ்துக்கு ஒரு ஸ்பூனும் பணத்துக்கு ஒரு ஸ்பூனுமாய் சர்க்கரையை அள்ளிப் போட்டுக்கொண்டு விட்டாய் போலிருக்கு! ஜமுனாவின் அபிப்பிராயத்துக்கும் கூட இன்னொரு ஸ்பூன் போட்டுக்கொண்டாயா?''

ராஜாராம் கோபம் வந்துவிட்டவரைப் போல பார்த்தார்.

''தம்பி, நீ வீணாய் கவலைப்படுகிறாய்! என் காபியில் சர்க்கரைக்கும், ஜமுனாவின் அபிப்பிராயத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''அதான் அண்ணா! ஜமுனா என்னவானாலும் நாலும் தெரிந்த பெண். என்ன சொல்லுவாளோ?''

''ஒரு தடவை கேட்டுவிடச் சொல்கிறாய். அவ்வளவு தானே? ஏன், என் மகளை உன் மகளைப்போல என்றெண்ணிவிட்டாயா? இப்பொழுதே கேட்டுவிடுகிறேன். உன் எதிரிலேயே சொல்லச் சொல்லி விடுகிறேன். பத்மா... பத்மா...''



''என்னங்க? ஏன் கூப்பிட்டீங்க?'' என்று வந்தாள் அவள்.

''சொல்லு. உன் மச்சினருக்குத் தெரியும்படியாய் சொல்லு. நாம்ப பார்த்த சம்பந்தத்தைப்பற்றி நம்ப பெண்ணின் அபிப்பிராயத்தைக் கேட்கணுமாம்.''

''ஆமாங்க. கேட்டுதானே ஆகணும்?''

''அப்படீன்னால்?''

''அவளுக்கு இந்தச் சம்பந்தம் அவ்வளவாய் பிடிக்கலைன்னு தோணுது.''

''நீ ஏதோ அவளை பயமுறுத்தியிருப்பாய்! எங்கே ஜமுனா? கூப்பிடு.''

''நாலு பேருக்கு முன்னால் எதுக்கு அண்ணா? நீயே போய் கேளு. அந்த அறையில்தான் இருக்கிறாள் போலிருக்கு.''

ஜமுனா அதற்குள் இந்தச் சம்பாஷணைகளையெல்லாம் கேட்டு விட்டிருந்தாள்.

''என்னம்மா, உன் உத்தேசம் என்ன?'' ராஜாராம் மகளைக் கேட்டார்.

''எனக்கு... எனக்குக் கல்யாணம் பிடிக்கவில்லை அப்பா.'' திடமாய் வந்தது பதில்.

''என்னது? பிடிக்கவில்லையா? ஏன்? எதுக்கு? அவனுக்கு என்ன குறைச்சல்?''

''குறைச்சல் என்பதால் மறுக்கவில்லைப்பா. எனக்குப் பிடிக்கவில்லை என்கிறேன். அவ்வளவுதான்.''

''அதான் ஏன் பிடிக்கவில்லை என்கிறேன். அதைச் சொல்லு?''

''என் கல்யாண விஷயத்தில் எனக்குச் சுதந்திரம் இல்லையாப்பா?''

''இல்லைன்னு யார் சொன்னாங்க? நூற்றுக்கு நூறு சதவீதம் உண்டு.''

''அப்படியென்றால் நான் தீர்மானித்திருக்கும் நபரை நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள் அப்பா.''

''அதென்ன தீர்மானம்? யார் அந்த நபர்?''

''சுதாகர் டாடி.''

''யார் அந்த சுதாகர்?''

பத்மா உள்ளே வந்தாள். ''நம்ப சுதாகர் தாங்க! சித்ராவின் அண்ணன்.''

''என்னது? சுதாகரைப் பண்ணிக் கொள்கிறாளா? உனக்கு ஏதாவது புத்தி கித்தி பிசகிவிட்டதா? உனக்கு இந்த தைரியம் எப்படி வந்ததுன்னு எனக்குத் தெரியும். இதப் பாரு ஜமுனா! கல்யாணம் என்றால் ஆயிரங்காலத்துப் பயிர். அதற்கு அஸ்திவாரம் எப்படிப் போட்டுக்கொள்ளணும் என்று உங்கள் இளம் ரத்தத்திற்குத் தெரியாது. நாங்கள் பெரியவர்கள். அனுபவம் உள்ளவர்கள். நல்லது கெட்டதை யோசித்துப் பண்ணவேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு. படிப்பும் பண்பும் இருக்கிறவள் நீ. ஜட்ஜின் மகள். இதைக் கூட புரிந்துகொள்ளத் தெரியாதா?''

''அப்பா! உங்கள் மகளாயிருப்பதால் ஒளிவு மறைவு இல்லாமல் என் மனதில் இருக்கும் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்.''

''சரி. நீ சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டாய். இதைப் பற்றி வாதாடவேண்டியதில்லை. நான் நன்றாய் யோசித்துப் பார்த்துவிட்டுதான் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன். நான் பார்த்த சம்பந்தம் நடந்து தீரும். என்



பேச்சுக்கு எதிர்பேச்சு கிடையாது'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ஜமுனா அழுது கொண்டேயிருந்தாள்.

தாய் தேற்றிவிட்டு- ''பாரும்மா! அப்பா உன் நலனை உத்தேசித்துதான் சொல்கிறார். உன் சந்தோஷந்தானேம்மா எங்களுக்கு வேணும்?''

''நான் சுதாகரைத் தவிர வேறு யாரையுமே பண்ணிக்கொள்ளமாட்டேன். இல்லாவிட்டால் எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' முகத்தைத் திருப்பிக்கொண்டு பிடிவாதமாய் சொன்னாள் ஜமுனா.

## 29

விக்கிரமன் ஆபீசில் ஃபைல்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தான். சுதாமன் அவனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து சிகரெட் மீது சிகரெட்டாய் புகைத்துக் கொண்டிருந்தான்.

விக்கிரமன் காலிங் பெல்லை அழுத்தினான்.

''சார்'' பையன் வந்தான்.

''டைப்பிஸ்டைக் கூப்பிடு.''

''அவங்க வரலைங்க.''

''இன்னும் வரவில்லையா? சரி நீ போ'' நெற்றியைச் சுளித்தான் விக்கிரமன்.

''இனிமேல் எங்கே வரப்போகிறாள்?'' என்றான் சுதாமன்.

''ஏன்?''

''சரிதாவோடு எல்லா சம்பந்தங்களையும் முறித்துக் கொண்டுவிடு என்றும், இல்லாவிட்டால் உன்னை வீட்டை விட்டுத் துரத்திவிடுவேன் என்றும் உங்கப்பா சொன்ன விஷயம் அவளுக்குத் தெரியாது என்கிறாயா?''

''தெரிந்தால்?''

''அதனால்தான் உனக்கு எதற்காக தொந்தரவு கொடுக்கணும் என்று வேலையை விட்டு விட்டிருப்பாள். என் பேச்சைக் கேள். சரிதாவை முற்றிலுமாய் மறந்து போய் விடு!''

''தாங்க்ஸ்! உன் யோசனை எனக்குத் தேவையில்லை.''

''மறக்காமல் என்ன பண்ணிவிடுவாய்?''

''கல்யாணம் பண்ணிப்பேன். சூரியன் மேற்கே உதித்தாலும் சரி என்னை மட்டும் யாராலும் மாற்றிவிட முடியாது. சரிதாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு அவளைச் சுகப்படுத்தினாலொழிய என் மனது நிம்மதியடையாது.''

சுதாமன் எழுந்திருந்து விக்கிரமனின் முதுகில் ஓங்கித் தட்டிவிட்டு, ''பேஷ்! ஆண்பிள்ளை என்றால் அப்படி இருக்கணும். நீ நிஜமாய் அவ்வளவு தூரம் சரிதாவின் நலனை விரும்புகிறாய் என்று எனக்கு இதுவரை தெரியவே தெரியாது. ஆங், உன் காரியம் மிக அனுகூலமாய் நடப்பதற்கு ஒரு வழி சொல்லட்டுமா?''

''என்ன?''

''சரிதாவை நீ ரெஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக்கொண்டு விடு. எப்படியும் உன் மனைவி ஒப்புக்கொண்டுவிட்டாளே! பரவாயில்லை. அந்தக் கல்யாணம் பண்ணிக்கொண்ட காகிதங்களை நம்ப குமில் ஒளித்து வைத்துக்கொண்டுவிடு.



மேலுக்கு மட்டும் உங்கப்பாவிடம் சாதுவாய் நடந்துகொள். ஓரிரண்டு வருஷங்கள் கண்களை மூடிக்கொண்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். அதற்குள் ஓரிரண்டு குழந்தைகள் பிறந்துவிடாதா?

''அவங்களே வேறு வழியில்லாமல் ஒப்புக்கொண்டு விடுவாங்க! என்ன சொல்கிறாய்?''

''நான் யோசித்துக்கொள்ளவேண்டும்.'' 'வெளியேயிருந்து புரோக்கர் வேஷத்தில் உள்ளே வரப்போன சீனு, இதைக் கேட்டுவிட்டு பற்களை நற நறத்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

'கல்யாணம் செய்துகொள்ளப் போகிறானாம், கல்யாணம்' என்று உறுமினான் சீனு.

''நன்றாய் யோசித்துப் பார். எல்லா விதத்திலும் இதுவே சிறந்தது. என்ன சொல்கிறாய்?'' சுதாமன் போகும் முன்னால் மற்றொரு முறை எடுத்துச் சொல்லிவிட்டுப் போனான்.

சுதாமன் போன பிறகு சீனு உள்ளே வந்தான். இரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்திருந்த விக்கிரமன் நிமிர்ந்து பார்த்துவிட்டு, ''வாங்க, வாங்க, என்ன விசேஷம்?'' என்றான்.

''ஒன்றுமில்லை சார். இன்றைக்கு குறைந்தது மூன்று லாரி அரிசி லோடுகளாவது அனுப்பவேண்டும் என்று எங்கள் முதலாளி போன் பண்ணினார்.''

''அப்படியா? சரி, எங்கள் மேனேஜரைக் கூட அனுப்புகிறேன். பணம் அவரிடம் தந்துவிடுங்கள்.''

''அம்மம்மா, வேண்டாம் சார். இப்படிப்பட்ட விஷயங்களை நீங்களே சொந்தமாய் பார்த்துக் கொள்வதுதான் எதற்கும் நல்லது. ஏன் என்கிறீர்களா? என்னவிருந்தாலும்

பிளாக் மார்க்கெட் பணம். யாருடைய புத்தி எந்த சமயத்தில் எப்படி இருக்கும் என்று நம்மால் சொல்ல முடியாது. எல்லாம் ரகசியமாய் ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் நடத்துவிடணும். யாரையாவது அனுப்பினால் அவங்க அதில் கொஞ்சம் விழுங்கிவிட்டு நம்மைச் சிக்கலில் ஆழ்த்திவிடுவாங்க! சமீபத்தில் பெங்களூரில் என்ன நடந்ததுன்னால்...''

''சரி, சரி, நானே வரேன்'' என்றான் விக்கிரமன் வேறு வழியில்லாமல்.

''நல்லது. உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். நான்தான் உங்களோடு இருக்கிறேனே!''

''சரி!''

## 30

அன்றிரவு ஊரெல்லையில் சுதாகர் போலீஸ் ஸ்க்வாடோடு நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு மாலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து நின்றால் திருட்டுப் போக்குவரத்து மூலமாய் மூன்று லாரிகளில் அரிசி போகும் என்றும் பிடித்துக்கொள்ளலாம் என்றும் யாரோ போன் பண்ணிச் சொன்னார்கள். விக்கிரமன் அரிசி சப்ளை பண்ணிக்கொண்டிருந்த லாரிகள் வரிசையாய் வந்துகொண்டிருந்தன. முதல் லாரியில் விக்கிரமனும் மாறு வேஷத்தில் இருந்த சீனுவும் இருந்தார்கள்.

போலீசாரைப் பார்த்ததும் கலக்கமடைந்துவிட்ட விக்கிரமன், ''டிரைவர், நிறுத்த வேண்டாம், வேகமாய் விடு'' என்று எச்சரித்தான்.



சுதாகர் தன்னைத் தாண்டிக்கொண்டு வேகமாய் போன லாரியை குறி பார்த்து துப்பாக்கியால் சுட்டான்.

குண்டு லாரியின் பின் சக்கரத்தில் பட்டு காற்று போய் விட்டது.

லாரி கிரீச்சென்ற ஓசையுடன் நின்றுவிட்டது.

லாரியிடம் வந்த சுதாகர் விக்கிரமனைப் பார்த்து ஆச்சரியமடைந்து விட்டான்.

''இது உங்கள் வேலைதானா? சொல்லுங்கள். இறங்குங்கள் கீழே'' என்றான்.

விக்கிரமன் கோபமாய் ஏளனமாய் பார்த்தான்.

''இன்ஸ்பெக்டர் சார் அத்தான்தானே? ஏதோ விட்டு விடுங்கள்''—சீனு குறுக்கிட்டுச் சொன்னான்.

''ஷட் அப்'' அவனைக் கோபித்துக் கொண்ட சுதாகர் திரும்பி பக்கத்தில் நின்ற சி.ஐ.டி.யிடம் ''மிஸ்டர் மூர்த்தி! இவங்களை அரெஸ்ட் பண்ணி நான் கூட்டிட்டுப்போகிறேன். நீங்கள் மீதி விஷயங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

விக்கிரமன் வேறு வழியில்லாமல் ஜீப்பில் ஏறிக் கொண்டான். அவ்விருவரையும் நேராய் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போன சுதாகர்—''இவங்க ரெண்டு பேரையும் லாக்கப்பில் வையுங்கள்'' என்று ஒப்படைத்தான்.

''சார் சார்! ரொம்ப அநியாயம். இந்தக் கேசை பிடிக்கச் செய்தது நான்தான்'' என்றான் சீனு பதறிப் போய்.

''நீயா?''

''ஆமாம் சார்! மாலையில் உங்களுக்கு போன் பண்ணியது நான்தான்'' என்று தாடியையும் தலைப்பாகையையும் எடுத்தான்.

விக்கிரமன் சீனுவைப் பார்த்ததும் திகப்ரமை அடைந்து விட்டான்.

''சீனு நீயா?'' என்றான்.

''ஆமாம் பிரதர்! அடிக்கு பதிலடி! அன்றைக்கு சரிதாவை என்னிடமிருந்து பிரித்தாய் அல்லவா?''

''ராஸ்கல்''—விக்கிரமன் சீனுவின் மேல் பாய்ந்தான்.

''சார் சார்! என்னைக் கொல்கிறானே ஐயோ!''

சீனு பெரிதாய் கத்தினான்.

சுதாகர் விக்கிரமனையும் சீனுவையும் பிரித்தான். விக்கிரமனைப் பார்த்து ''விக்கிரமன்! இது போலீஸ் ஸ்டேஷன். நீங்கள் உங்கள் பழிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இது சமயமல்ல'' என்றான்.

''இவனை...இந்த ராஸ்கலை...ஒரு கை பார்த்து விடுகிறேன்'' விக்கிரமன் ஆவேசத்தால் தள்ளாடினான்.

''இவரைக் கூட்டிட்டுப் போங்கள்'' சுதாகர் எச்சரித்ததின் பேரில் போலீசார் வந்து விக்கிரமனை உள்ளே இழுத்துக் கொண்டு போனார்கள்.

''வரேன் சார், தாங்க் யூ'' சீனு சல்யூட் பண்ணிவிட்டுப் போகத் திரும்பினான்.

''நில்'' உத்தரவிட்டான் சுதாகர்.

''சார்!''

''நானும் வரேன் உன்னோடு.''

''என்னோடா? உங்களுக்கு என்ன வேலை.''

''உன்னோடு பேசணும்.''

சீனு பயந்து போனவனாய் நின்றான்.

சுதாகர் வந்தான். இருவரும் சேர்ந்து வெளியே வந்தார்கள்.



ஜீப்பில் ஏறிக்கொண்ட சுதாகர் சீனுவை ''ஏறிக் கொள்'' என்றான். சீனு வேறு வழியில்லாமல் ஜீப்பில் ஏறிக் கொண்டான். ஜீப்பை ஓட்டிக்கொண்டே சுதாகர் கேட்டான்.

''மிஸ்டர் சீனு! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சரிதா என்றாயே யார் அவள்?''

''சரிதாவை யாரென்றா கேட்கிறீங்க? என் உயிர். என் வாழ்க்கையின் ஒளி!''

''அதான் அவள் யார் என்று கேட்கிறேன்.''

''அவள்...அவள்...அதான் சார் அன்றைக்கு விக்கிரமன் எங்கள் ரூமுக்கு டீ பார்ட்டிக்கு வந்த பொழுது நீங்கள் பார்க்கவில்லையா? சிவப்பாய் ஒல்லியாய் உயரமாய் இருப்பாள். நாங்கள் ஒருவரையொருவர் காதலிக்கிறோம் சார். ஆனால் இந்த விக்கிரமன் என்னிடம் பணம் இல்லை என்றும் நான் ஏழை என்றும் சொல்லி சரிதாவின் மனதை மாற்றி விட்டான். சரிதா என்னைத் தவறாய் புரிந்து கொண்டு விட்டாள். என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாள். அதிலிருந்து பைத்தியம் பிடித்தவனைப் போல சுற்றிக் கொண்டிருக்கிறேன்.''

''உனக்கு இன்னும் சரிதாவைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டும் என்றிருக்கிறதா?''

''இருக்கிறதாவது! அதுதான் என் வாழ்க்கையின் நோக்கமே! இப்பொழுது என்றில்லை, ஜென்ம ஜென்மத்திற்கும் எனக்கு சரிதாதான் வேண்டும். வாழ்க்கையில் எனக்குக் கல்யாணம் என்று நடந்தால் அது சரிதாவோடு தான் நடந்து தீர வேண்டும். இல்லாவிட்டால் வாழ்நாள் பூராவும் பிரம்மச்சாரியாகவே இருந்து விடுவேன்.''

''சரிதா யாருன்னு தெரியுமா சீனு!''

''தெரியாமல் என்ன? சிதம்பரம் சாரின் மகள்!''

''இல்லை. சரிதா அவர்கள் பெற்ற மகள் இல்லை.''

''இல்லையா? பின்னே?''

''சரிதா என் தங்கை. சிறு வயதிலேயே எங்களை விட்டுப் பிரிந்துவிட்டாள். அது ஒரு கதை.'' என்றான் சுதாகர் பெருமூச்செறிந்துவிட்டு.

சீனு தாங்க முடியாத வியப்படைந்தான். ''நிஜமாகவா? நிஜமா?''

''நிஜந்தான் சீனு. என் தங்கையின் வாழ்க்கை வீணாய் நடுத்தெருவுக்கு வந்துவிட்டது. அநியாயமாய் பிறர் வாயில் புரளத் தொடங்கிவிட்டது. இப்பவாவது அவளைக் குடியும் குடித்தனமாய் ஆக்கி, அவள் சுகமாய் எல்லோரையும்போல இருப்பதைப் பார்க்கணும் என்றிருக்கிறது. சீனு! என் நிலைமைக்குத் தகுந்தபடி கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.''

''சரிதா மனைவியானால் போதும். அதுவே என் வாழ்க்கையில் அபூர்வ வாம்! நீங்கள் அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தால் அதைக் காட்டிலும் அபூர்வமானது வேறென்ன இருக்கிறது எனக்கு?'' சுதாகரின் கை மீது தன் கையை வைத்தான் சீனு.

''தாங்க்ஸ் சீனு. நான் நாளைக்கே வந்து உங்கள் வீட்டாருடன் பேசுகிறேன்!''

''எங்கள் வீட்டில் எங்கம்மாவைத் தவிர வேறு யாருமே இல்லை! எங்கம்மா பெயருக்குத் தகுந்தபடியே காளிதேவி! அவங்க உரக்கப் பேசுவாங்க. முடியாது என்று டபாய்த்து விடுவாங்க. தூக்குப்போட்டுக்கொண்டு செத்துவிடுவேன் என்பாங்க. அவங்க பேச்சைக் கேட்டு நீங்கள் பயந்து விடாதீங்க!''

''யாரு? பெயர் என்ன? காளிதேவியா?''



''ஆமாம் சார்! சொல்லிக்கொள்வதற்கு வெட்கம் இல்லை. எங்கம்மாவுக்கு அந்தப் பெயரை யார் வைத்தாங்களோ தெரியாது, சரியாய்தான் வைத்திருக்காங்க!'' சுதாகர் ஜீப்பை சடன் பிரேக் போட்டு நிறுத்திவிட்டு சீனுவைத் திரும்பி பார்த்துக் கேட்டான்,

''காளிதேவியா? உங்கள் ஊர் எது சீனு?'' சீனு சொன்னான்.

''மை காட்.''

''என் சார்? என்னவாச்சு?'' கலக்கத்துடன் கேட்டான் சீனு.

''உங்களுக்கு வீரபத்திரன் என்று மாமா இருந்தார் தெரியுமா?''

''லேசாய் ஞாபகமிருக்கு சார் நான் அப்பொழுது ரொம்பச் சின்ன பையன். அவர் ஏதோ நிலத் தகராறில் செத்துப்போய்விட்டார் என்று எங்கம்மா சொல்லியிருக்காங்க.''

''அவர் செத்துவிட்ட பிறகு நிறைமாத கர்ப்பிணியாய் இருந்த மனைவியும் இரு குழந்தைகளும் உங்கள் வீட்டிற்கு வந்தார்கள். ஞாபகமிருக்கா?''

''நன்றாய் ஞாபகமில்லை.''

''உங்க அத்தை ஆசுபத்திரியில் பிரசவத்தின்போது செத்துவிட்டாங்க.''

''ஆமாம்!''

''ஆனால் அவங்க செத்துவிட்ட பிறகு உங்கம்மா, பிறந்த அந்தக் குழந்தைகூட செத்துவிட்டதாய் எல்லோரிடமும் சொன்னாங்க. ஆனால் அந்தக் குழந்தை சாகவில்லை சீனு!''

''பின்னே என்னவாயிற்று என்கிறீங்க?''

''பிழைத்தே இருக்கிறது. அந்தப் பெண் குழந்தை தான் சிதம்பரம் சார் எடுத்து வளர்த்துக்கொண்டிருக்கும் சரிதா.''

''வாட்!'' சீனு முற்றிலுமாய் சுதாகரின் பக்கமாய் திரும்பினான்.

''சரிதாலை உங்கம்மா ஐநூறு ரூபாய்க்கு அவங்களுக்கு விற்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிட்டாங்க. சரிதா என் தங்கை. நாங்கள் உனக்கு வேற்று மனிதர்கள் இல்லை சீனு.''

''என்னது! சரிதா—என் சரிதா! எனக்கு மாமன் மகளா? இவ்வளவு நல்ல வார்த்தையை என் ஜென்மத்தில் இதுவரை நான் கேட்டதில்லை.''

சுதாகர், வருத்தத்தோடு சொன்னான்: ''இவ்வளவு நாட்களாய் நான் அந்த காளிதேவியைச் சந்திப்பதற்காக முயற்சி பண்ணிக்கொண்டிருந்தேன். அவங்க இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு, அவங்க எனக்கு பண்ணிய அநியாயத்திற்குச் சுடச்சுட நாலு திட்டிவிட்டு வரவேண்டும் என்று என் மனம் தவித்துக்கொண்டேயிருந்தது. தேடப்போன மூலிகை காலுக்குத் தட்டுப்பட்டாற்போல நீ எனக்கு அத்தை மகனாய் இருந்தது அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ தெரியவில்லை! 'காலச் சக்கரம்' எவ்வளவு விநோதங்களை பதித்துவிட்டுப் போயிருக்கிறது பார்.''

''ஆனால் சார்! சாரி. அத்தான்! நான்... என் மூஞ்சியைப் பார்த்து நீங்க எங்கம்மாவை மன்னித்துதான் தீரணும். எங்கம்மா உங்களுக்குச் செய்த துரோகத்திற்கு நான் சரிதாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு உங்களுக்கு ஏற்பட்ட அநியாயத்திற்குக் கொஞ்சமாவது ஈடு கட்டுகிறேன்.''

''சரி சீனு! அப்படியே பண்ணு! அப்படிப்பட்ட தாயின் வயிற்றில் உன்னைப் போன்ற உத்தமன் பிறந்தது உண்மையிலேயே விநோதந்தான்.''



''நாளைக்குச் சாயந்திரம் நீங்கள் கண்டிப்பாய் எங்கள் வீட்டிற்கு வரணும். நீங்கள் யார் என்று எங்கம்மாவிடம் சொல்லப் போறதில்லை. சரிதாவின் வீட்டைச் சேர்ந்தவர் என்று மட்டும் சொல்லுவேன். தற்சமயம் நம் உறவைப் பற்றிய பேச்சையே எடுக்கவேண்டாம் உங்களை என் நண்பராய் பரிச்சியம் பண்ணுகிறேன். என்ன சொல்கிறீர்கள்?''

''சரி சீனு.''

சுதாகர் ஜீப்பை ஸ்டார்ட் பண்ணினான்.

ஃ ஃ ஃ

மறு நாள் பிற்பகலில் சுதாகர் ஆபீசு வேலையாய் எங்கேயோ புறப்படத் தொடங்கியபொழுது வீதியில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

சுதாகர் எட்டிப்பார்த்தான். சித்ரா காரிலிருந்து இறங்கி மளமளவென்று வீட்டிற்குள் வந்தாள்.

சுதாகர் எதிரே போய் கேட்டான், ''என்ன தங்கச்சி, இப்படி திடீரென்று வந்திருக்கிறாய்? போன் பண்ணினால் நானே வந்திருப்பேனே.''

''நீ இப்பொழுது பெரிய உத்யோகத்தில் இருக்கிறாய் இல்லையா அண்ணா? உனக்கு எதற்காக சிரமம் கொடுக்கணும் என்று நானே வந்தேன்.''

''இதென்ன பேச்சம்மா?...'' கடிந்து கொண்டான்.

சித்ராவுக்கு அழுகை வந்துவிட்டது.

''வேறெப்படிப் பேசறது அண்ணா? உன் கையால் நீயே அவருக்கு விலங்கைப் பூட்டிவிட்டாயே! தங்கையின் முகம் உனக்கு ஞாபகத்திற்கு வரவில்லையா? அத்தான் என்ற விஷயத்தைக்கூட மறந்துவிட்டாயா?'' என்றாள் பழிப்பது போல.

சுதாகருக்கு விஷயம் என்னவென்று புரிந்தது. தங்கைக்கு நயமாய் சொல்லத் தொடங்கினான்.

''என்னம்மா செய்வது, வேறு வழியில்லை, அது என் கடமை...''

''அதென்ன கடமை அண்ணா? குறைந்தபட்சம் மாமா நமக்குச் செய்த உதவியையாவது ஞாபகம் வைத்துக் கொண்டாயா? அவர் நமக்கு எவ்வளவு செய்திருக்கிறார்?''

''நன்றிக்கும் கடமைக்கும் சம்பந்தம் இல்லைம்மா.''

''அவரை நீ மனம் வைத்தால் விடுதலை பண்ண முடியாதா?''

''என் கையில் எதுவும் இல்லை. கடமை என்பது மிகக் கடுமையான பரிசோதனை. வேண்டியவங்களாய் இருந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம்.''

சித்ராவின் முகத்தில் ரோஷமும் ஆவேசமும் பொங்கி வந்தன.

''நீ இவ்வளவு நயை இல்லாமல் பேசுவாய் என்று தெரிந்திருந்தால் வந்தே இருக்கமாட்டேன்.''

''அண்ணனின் மனதைப் புரிந்துகொள் அம்மா! இந்த உத்யோகமே அப்படிப்பட்டது. கடமையைப் பின்பற்றுவதில் சிற்சில சமயம் பாசத்தையும் மனதையும்கூட கொன்று கொள்ள வேண்டியிருக்கு.''

''அப்படீன்னால் மாமாவின் பெயரும் புகழும் காற்றில் பறக்க வேண்டியதுதானா? அவர் ஜெயிலில் மங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதானா?''

''அந்த விஷயத்தில் நீ எந்த திகிலும் அடைய வேண்டாம். அத்தானை ஜாமீனில் விடுதலை பண்ணலாம். ராஜாராம் சார் அந்த முயற்சியில்தான் இருக்கிறார். நீ வீட்டிற்குப் போ. ஜானகிராமனுக்கு நான் வந்து எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொள்கிறேன்.''



அதற்குள் சித்ராவுக்கு திரைச்சீலைக்குப் பின்னால் புடவை கொசுவங்களும், வெண்மையான பாதங்கள் இரண்டும் தென்பட்டன.

''உள்ளே யாரோ பெண் இருக்கிறாப்போல தெரிகிறது. யார்?'' என்றாள்.

சுதாகர் சட்டென்று பதில் சொல்ல முடியாதவனாய் தடுமாறினான்.

சித்ரா மளமளவென்று திரையை விலக்கிக்கொண்டு உள்ளே போனாள்.

சரிதா கூண்டிற்குள் பறவையைப் போல படபடக்கும் கண்களோடு சித்ராவைப் பார்த்தாள்.

''நீயா? இங்கே ஏன் வந்திருக்கிறாய்?'' கோபத்துடன் கேட்டாள் சித்ரா.

சுதாகர் பரபரப்புடன் உள்ளே வந்தான். ''தங்கச்சீ... சரிதா...'' என்று ஏதோ சொல்ல வந்தான். ஆனால் சித்ரா அவன் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''நீ எங்கே காலெடுத்து வைத்தாலும் அங்கே சர்வ நாசமாகிவிடும். இங்கே எதுக்கு வந்தாய்? என் கணவரை எனக்கு ஆகாமல் செய்தது போதாதென்று என் அண்ணனைக்கூட எனக்கு ஆகாமல் செய்துவிடுவதற்காகத் தான் வந்தாயா?''

''சித்ரா! நீ சரிதாவைத் தவறாய் புரிந்துகொண்டு விட்டாய். சரிதாவை யார் என்று நினைத்தாய்?'' சுதாகர் சொல்ல வந்தான்.

''என் தெரியாது? என் குடும்பத்தை நாசமாக்கிய ராட்சசி! பிசாசு.''

''சித்ரா! நீ சரிதாவைப் பற்றி இனி ஒரு வார்த்தை சொன்னாலும் என்னால் சும்மாயிருக்க முடியாது'' உத்தர விடுவதுபோல கடுமையாய் சொன்னான் சுதாகர்.

சித்ரா என்றுமில்லாதவாறு அண்ணனின் கோபத்தையும் ஆவேசத்தையும் பார்த்துவிட்டு விக்கித்துப் போய்விட்டாள். கண்களிலிருந்து கிர்ரென்று நீர் சுழன்றது.

''ஆயிடுத்து. உனக்குக்கூட புத்தி தடுமாறிவிட்டது. இந்தப் பாவியின் மூலமாய் நான் வேற்று மனுஷியாகி விட்டேன்.''

''நீ அவசரப்படாதே. என் பேச்சைக் கேளும்மா! சரிதா இங்கே இருப்பதைப் பற்றி நீ தப்பாய் யோசிக்க வேண்டாம்.''

''நான் யோசிக்கமாட்டேன். என் அண்ணனின் சங்கதி எனக்குத் தெரியும் ஆனால் உலகம் என்ன நினைத்துக் கொள்ளும்? இந்த விஷயத்தைக் கேட்டால் ஜமுனா எவ்வளவு வருத்தப்படுவாள்? நாலுபேர் வாயில் புரண்டு கெட்ட பெயர் வாங்கியிருக்கும் பெண்ணை நீ வீட்டிற்கு அழைத்து வந்து உன் கண்ணெதிரே ஏன் வைத்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும் எனக்காக! என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறாய். எனக்காக நீ கஷ்டங்களை வரவழைத்துக்கொள்ள வேண்டாம். ராஜாராமுக்கும், மாமாவுக்கும், இன்னும் யாருக்கும் தெரிவதற்கு முன்னாடியே இந்தக் கடைச்சரக்குப் பெண்ணை வீட்டைவிட்டு அனுப்பி வைத்துவிடு. இவளுடைய நிழல் பட்டாலும் அது மகாபாவம்'' என்று சொல்லிவிட்டு சித்ரா வெளியே வந்து விட்டாள்.

''சித்ரா''

''நீ எனக்கு வேறொன்றும் சொல்ல வேண்டாம். என் மீது கொஞ்சமாவது பாசம் இருந்தால் முதலில் அவள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு.''

''அந்தக் காரியத்தை என்னால் பண்ண முடியாது சித்ரா.''



''முடியும். முடிந்து தீரணும். இல்லாவிட்டால் என் மேல ஆணை!'' சித்ரா துக்கத்தை அடக்கிக்கொண்டு மளமளவென்று காரை நோக்கிப் போய்விட்டாள். பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே கார் வேகமாய் போய்விட்டது.

சுதாகர் சிலையாய் அதையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

சுதாகர் சித்ரா போனபிறகு கொஞ்சநேரங்கழித்து தானும் ஜானகிராமன் வீட்டிற்கு வந்தான்.

முன் ஹாலில் பைப் புகைத்துக்கொண்டு முதல் முதலாக ராஜாராம்தான் பார்த்தார் அவனை. சுதாகரைப் பார்த்ததுமே அவர் பைப்பைக் கையில் பிடித்துக்கொண்டு, பெரிதாய், தடபுடலாய் ''ஓஹோ! போலீஸ் ஆபீசரா! வாங்க'' என்று வரவேற்றார்.

''மன்னியுங்கள்'' அவர் கேலியைப் புரிந்து கொள்ளாமல் சட்டென்று கைகளைக் கூப்பினான்.

ராஜாராம் குரலைக்கேட்ட ஜானகிராமனும் ஜமுனாவும், பத்மாவும்கூட வெளியே வந்தார்கள். ராஜாராம் சுதாகரைப் பார்த்து உலுக்கி எடுப்பதுபோல கேட்டார்,

''சுதாகர்! ஒரு விஷயம் கேட்கிறேன். நேரிடையாய் பதில் சொல்லு. விக்கிரமன் உன் தங்கையின் கணவன் அல்லவா? அவனை அரெஸ்ட் பண்ணியதும், எங்களை தலை குனிய வைத்ததும் நல்லதுதானா? மார்பில் கைவைத்துக்கொண்டு சொல்லு!''

''அத்தான் குற்றம் செய்தார்.''

''நீ செய்தது? அதைவிட மன்னிக்க முடியாத குற்றம். ஒரு காலத்தில் உங்கப்பா எங்களுக்காக தன் உயிரையே தந்தார். அந்த தந்தையின் வயிற்றில் பிறந்த நீ இன்

றைக்கு எங்கள் மரியாதைகளையெல்லாம் நடுத்தெருவுக்குக் கூட்டிவந்து விட்டாய். இதைவிட பெரிய குற்றம் வேறு என்ன இருக்கிறது? பேசு என் பேசமாட்டேங்கிறாய்?''

''மன்னியுங்கள். எல்லாம் தெரிந்த நீங்களே இப்படிச் சொல்லிவிட்டால் என்னால் என்ன செய்ய முடியும்? ஒரு பக்கத்தில ஜனங்கள் ஆகாரம் கிடைக்காமல் பரிதவித்துக் கொண்டிருக்கும்பொழுது அரிசியை பிளாக் மார்க்கெட் பண்ணுவது எவ்வளவு மோசமான குற்றம் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். போலீஸ் அதிகாரியாய் என் தர்மத்தை நான் நிறைவேற்றினேன். உங்களுக்கெல்லாம் கஷ்டத்தை உண்டாக்கிவிட்டதற்கு எனக்கும் வருத்தமாய் தான் இருக்கு.''

ராஜாராம் பின்னால் நின்று கொண்டிருந்த மகளைப் பார்த்து சீரியஸாய் சொன்னார்.

''கேட்டாயா ஜமுனா? இப்படிப்பட்ட இதயம் இல்லாத நபரையா நீ கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன் என்று அவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாய்? சொல்லு, இவனை இன்னும் காதலிக்கிறாயா? கல்யாணம் பண்ணிக்கப் போகிறாயா?''

''டாடி'' கலக்கத்துடன் அவரைப் பார்த்தாள் ஜமுனா. அவள் முகம் சிவந்துவிட்டது.

''மன்னியுங்கள்! நான் இப்பொழுது கல்யாண பேச்சு பேசுவதற்கு வரவில்லை. ஜானகிராமனிடம் நடந்ததை யெல்லாம் சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். வரேன்'' சுதாகர் போக முயன்றான்.

''நில்.'' ராஜாராம் உத்தரவிட்டார்.

சுதாகர் நின்றுவிட்டான்.



''தம்பீ! பார்த்தாயா அந்த அலட்சியத்தை? இன்னும் பார்த்துக்கொண்டே சும்மாயிருந்தால் லாபமில்லை. இந்த நன்றிகெட்டவனுக்கு தண்டனை கொடுத்தே தீரணும்!''

''அண்ணா! என்ன சொல்கிறாய் நீ?'' ஜானகிராமன் கலவரத்துடன் கேட்டார்.

''என்னவா? இந்த நிமிஷத்திலேயே ஜமுனாவை தந்து மணம் செய்து வைத்து இந்த கர்வம் பிடித்த குதிரைக்கு மூக்கணாங்கயிறு போட்டுவிடுகிறேன்.''

''அண்ணா! நீ என்ன சொல்கிறாய்?'' ஜானகிராமன் திகைத்துப்போய்.

''டாடி'' ஜமுனா வியப்படைந்தாள்.

''நீங்கள் வீணாய் பதைத்துப்போய்விடாதீர்கள். இந்தா சுதாகர். இங்கே வா! உன்னை எனக்கு ரொம்ப பிடித்துவிட்டது. உன் நேர்மையை நான் பாராட்டுகிறேன். உன்னைப் போன்ற ஆபீசர்கள் நூற்றுக்கு ஒருவர் இருந்தாலும் போதும்; இந்த நாடு சீர்திருந்திவிடும். நீ என் மருமகனாய் வருவதையே என் அதிர்ஷ்டமாய் பாவிக்கிறேன். ஜமுனா, நீ என் மகள் என்பதை காட்டிக்கொண்டுவிட்டாய். நல்ல செலக்ஷன் உன்னுடையது. என்ன சொல்கிறாய் தம்பீ?''

''உனக்கு நீதான் இணை அண்ணா!'' என்றார் ஜானகிராமன் சிரித்துக்கொண்டே.

''எதில் என்று சொல்!''

''நான் சொல்கிறேன் கேளுங்கள், எல்லோரையும் அனாவசியமாய் கலங்கடிப்பதில்!'' என்றாள் பத்மா.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

# 31

விக்கிரமன் அறையில் சிகரெட் மீது சிகரெட்டாய் புகைத்துக் கொண்டே அங்குமிங்கும் நடைபயின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் களை இல்லை. தூக்கம் இல்லாதவனைப் போல சோர்ந்து போயிருந்தான். அதற்குள் சுதாமன் வந்தான். வரும் பொழுதே ''பார்த்தாயா பிரதர்? உன் அத்தான் என்ன காரியம் பண்ணிவிட்டான் பார்! நான் சந்தேகப்பட்டாற் போலவே ஆகிவிட்டது. உன்னை இப்படி ஜெயிலுக்கு அனுப்பி விட்டான். அங்கே சரிதாவையும் வலையில் வீழ்த்திக் கொண்டு விட்டான். ஹூம்! மேலுக்குப் பெரிய மனுஷனைப் போல போஸ் காட்டுகிறான். எவ்வளவு அயோக்கியன் பார்!''

''ஷட் அப்! விஷயத்தைச் சரியாய் சொல்லு முதலில்.''

''போகட்டும் விடு. உனக்கு அவ்வளவு கோபம் வருகிறது என்றால் நடுவில் நான் எதுக்கு. ஆமாமாம், என்னவானாலும் நீங்கள் எல்லோரும் ஒன்று, நான் வேறுதான்.''

''சரிதா இப்பொழுது எங்கே இருக்கிறாள்?''

''எங்கே இருந்தால் நமக்கென்ன? விடு.''

''எங்கே இருக்கிறாள் சொல்லு என்றால்?'' உறுமினான் விக்கிரமன்.

''வேறெங்கே? அவன் குவார்ட்டர்ஸில்தான்.''

''அவன் என்றால்?''

''ஐயோ தலையெழுத்து! அதுகூடவா புரியவில்லை உனக்கு? உங்கள் அத்தான் சுதாகரிடம் இருக்கிறாள். என்



கண்களால் நானே சுயமாய் பார்த்தேன். வேண்டுமானால் என்னோடு வா. உனக்கும் காட்டுகிறேன்.''

''சரிதா சுதாகரிடம் இருக்கிறாளா?'' விக்கிரமன் நம்ப மாட்டாதவனாய் பார்த்தான்.

''என்னோடு வாங்கறேன்.''

''வா. இன்றோடு ரெண்டில் ஒண்ணு தெரிந்துகொண்டு விடுகிறேன்'' துடுக்காய் பதிலளித்தான் விக்கிரமன்.

''இருடா அப்பனே! ஏற்கனவே போலீஸ் ஆபீசரின் வீட்டில் இருக்கிறாள். நீ ஏதாவது அவசரப்பட்டு விட்டால நம் தலை மீதே வந்து விழும்.''

''அப்படியென்னால்?''

''இப்படி வா பிரதர்! ஆபத்தில் உபாயத்தைக் காட்ட முடியாத சிநேகிதன் சிநேகிதனே இல்லை. நாமிருவரும் விக்கிரமன் வீட்டிற்குப் போகலாம்.''

''போய்?''

''இப்படி வா சொல்கிறேன்'' சுதாமன் விக்கிரமனிடம் போய் அவன் காதில் ரகசியமாய் ஏதோ சொன்னான்.

அதைக் கேட்டதுமே விறைப்பாகிவிட்ட விக்கிரமன் ஒரு வினாடி யோசித்துவிட்டு ''சரி, வா,' என்றான்.

இருவரும் சேர்ந்து புறப்பட்டார்கள்.

❖ ❖ ❖

சரிதா சுதாகரின் அறையில் புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

''மேடம்'' அதற்குள் யாரோ முன் அறையிலிருந்து வந்தார்கள்.

''யாரு?'' என்று வெளியே வந்த சரிதா பூதத்தை பார்த்த சிறு குழந்தையைப் போல நடுங்கிப் போய் 'நீயா?' என்றாள்.

''ஆமாம், நான்தான்'' கேலியாய் சிரித்தான் சுதாமன்.

''இங்கே ஏன் வந்தாய்?''

''உங்களோடு கொஞ்சம் காரியம் இருக்கு.''

''மரியாதையாய் வெளியே போ.''

''உங்களுக்காக விக்கிரமன் வந்திருக்கிறார். வெளியே உட்கார்ந்திருக்கிறார். ஒரு தடவை உங்களை வரச் சொன்னார்.''

''வரமாட்டேன் என்று சொல்லு.''

அதற்குள் விக்கிரமனே உள்ளே வந்து விட்டான். சரிதாவின் பதில் அவனுக்கு ஆத்திரத்தை விளைவித்து விட்டது.

''ஏன்? ஏன் மாட்டாய்?'' என்றான்.

சரிதா அவனைப் பார்த்ததுமே பின்வாங்கினாள்.

''ஏன் பேச மாட்டேங்கிறாய்? ஏன் வரமாட்டேங்கிறாய்?''

''உங்கள் நல்லதுக்காகத்தான்.''

''என் நல்லது என்னவென்று எனக்கு நன்றாய் தெரியும். ஆமாம் நீ இங்கே எதற்காக இருந்துகொண்டிருக்கிறாய்?''

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்.''

''எனக்கு ரொம்ப தேவை. உன்னால் நான் நடுத்தெருவுக்கு வந்துவிட்டேன். நாலு பேர் சந்தி சிரிக்கும்படியாகி விட்டேன் இவ்வளவு பண்ணிய பிறகு உன்னை இப்படியே சும்மா விட்டு விடுவேன்னு நினைச்சாயா? நீ இங்கே இருக்கக் கூடாது. இந்த நிமிஷமே புறப்படு.''



''நான் வரமாட்டேன்'' முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.''

''வரமாட்டாயா?''

''மாட்டேன்'' தயங்காமல் பதிலளித்தாள்.

''வரமாட்டாயா?'' விக்கிரமன் உறுமினான்.

''மாட்டேன்...மாட்டேன்... மாட்டேன்...இதுதான் என் கடைசி பதில். என்னை மன்னித்து நீங்கள் போய் விடுங்கள்.''

''சரிதா.''

''உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும். கத்தாதீர்கள்.''

''மூடு வாயை! எனக்கு நீதிகளை போதிக்கிற அளவுக்குப் போய் விட்டாயா? உம் புறப்படு. வராவிட்டால் பலவந்தமாய் தூக்கிக் கொண்டு போய் விடுவேன். வரப் போகிறாயா இல்லையா?...''

விக்கிரமன் சரிதாவின் கையைப் பிடித்துக் கொண்டான். சரிதா அவனைத் தள்ளிவிட்டு கைகளை உதறிக் கொண்டு அடுத்த அறைக்குள் சரேலென்று ஓடிப்போய் கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள்.

''பார்த்தாயா பிரதர்? விஷயம் இதுதான்'' என்றான் சுதாமன்.

ஆனால் விக்கிரமன் அதொன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. சரிதா தன் பேச்சை லட்சியம் பண்ணவில்லை...அந்த ஊகமே அவன் அணு அணுவிலும் கோபத்தையும் ஆவேசத்தையும் நிரப்பின.

உள்ளங்கையை மடக்கிக் கொண்டு பலமாய் கதவை ஓங்கித் தட்டினான்.

''சரிதா, கதவைத் திற. வா வெளியே! உனக்காக நான் பெற்ற தந்தையோடு சண்டை போட்டுவிட்டேன். கட்டிய மனைவிக்கு தூரமாகிவிட்டேன். உனக்காக வெட்கம், மானம் எல்லாவற்றையும்கூட விட்டுவிட்டேன். என்னை இப்பொழுது அநியாயம் செய்யப் போகிறாயா? என் பேச்சைக் கேளு சரிதா!'' உள்ளே சரிதா துக்கத்தை அடக்கிக் கொண்டு கதவின் மேல் சாய்ந்து நின்றாள். விக்கிரமனின் குரல் ரோஷத்துடன் சபதமிட்டாற்போல ஒலித்துக்கொண்டிருந்தது.

''சரிதா, இதெல்லாம் இந்த சுதாகரால் வந்த புது மோகம்தானே! உன்னை விட்டுவிடுவேன் என்று கனவிலும் கருதாதே. நான் போகிறேன். சாயந்திரம் வரைக்கும் டயம் தருகிறேன். வராவிட்டால் உங்களிருவரையும் கொன்று குவித்துவிடுவேன். ஜாக்கிரதை!''

விக்கிரமன் சபதமிட்டுவிட்டுப் போய்விட்டான்.

சரிதா முகத்தை கைகளால் பொத்திக்கொண்டு அவ்விடத்திலேயே சரிந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டேயிருந்தாள்.

ஃ ஃ ஃ

விக்கிரமன் வந்து சரிதாவை மிரட்டிக்கொண்டிருந்த அதே சமயத்தில் சுதாகர் சீனுவின் வீட்டிற்கு வந்து காளிதேவியிடம் திருமண விஷயத்தைப்பற்றி பேசிக்கொண்டிருந்தான்.

காளிதேவி சரிதாவின் பெயரை எடுத்ததுமே கோபம் தலைக்கேற தாம் தூம் என்று குதித்தாள்.

''என்னது, என்னது? அந்தக் கெட்டுப் போனவளை என் மருமகளாக்கிக்கொள் என்கிறாயா? ரொம்ப நன்றாய் சொல்லிவிட்டாயப்பா'' என்றாள்.



''இல்லைம்மா! உலகத்தார் காக்காயைப் போல. இல்லாததை உருவாக்குவதில் கைதேர்ந்தவங்க. வதந்திகள் எல்லாம் நிஜமில்லை. பொய். சரிதா ரொம்ப நல்ல பெண்.''

''போதும், போதுமய்யா, சொல்ல வந்துவிட்டாய். அம்மாயின் பிறந்த வீட்டுச் சங்கதியை மாமாவிடம் சொன்னாளாம்! என் பையனை வலையில் போட்டுக்கொண்டு எங்களுக்குக் கடைசியில் வசிக்க வீடுகூட இல்லாமல் செய்துவிட்டாள். அவளுக்குக் கல்யாணம் பண்ணிவைக்க மாட்டேன், கருமாதி பண்ணி வைக்கிறேன்.''

சுதாகர் எழுந்து நின்றான்.

அவன் முகம் இறுகிவிட்டது.

''அம்மா'' சீனு சட்டென்று தாயிடம் வந்தான்.

காளிதேவி மகனை ஒரு தள்ளு தள்ளிவிட்டாள் தொலைவிற்கு.

''ஆனாலும் எனக்குத் தெரியாமல்தான் கேட்கிறேன். நீ இவ்வளவு நெருங்கிய சிநேகிதனாய் இருந்தால் என் மகனுக்கு இப்படிப்பட்ட சம்பந்தத்தைப் பார்ப்பாயா? மொதல்ல அந்த சரிதாவுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அந்தப் பெண்ணின் பாரத்தையும் பொறுப்பையும் நீ உன் தலையில் போட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் என் வந்தது உனக்கு?''

''எனக்காகத்தாம்மா! அவருக்கென்ன அவசியம் வந்துவிட்டது! சார், நான் சொல்லவில்லை? எங்கம்மாவைச் சம்மதிக்க வைப்பது நடக்காத காரியம் என்று. நீங்கள்தான் கேட்கவில்லை. சரி, சரிதாவை நான் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன். நான் வாக்குறுதி அளிக்கிறேன். நீங்கள் போய் வாங்க.''

''தாங்க் யூ சீனு! உனக்கு என் செல்வாக்கால் நல்ல உத்யோகம் வாங்கித் தரேன். உங்கள் வீட்டையும் மீட்டுத் தந்துவிடுகிறேன்'' நிம்மதியாய் வெளியேறினான் சுதாகர்.

''ஓஹோ! அப்படீன்னால் மொதல்லேயே எல்லாவற்றையும் பேசி முடித்துக்கொண்டுதான் வந்திருக்கீங்கன்னு சொல்லு'' தலையை ஆட்டிக்கொண்டே சொன்னாள் காளிதேவி.

''ஆமாம் அம்மா! எது என்னவானாலும் சரி, நான் அந்த சரிதாவைதான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டுவிட்டேன்.''

''நான் இவ்வளவு மறுத்தும் நீ பண்ணிக்கொள்கிறேன் என்கிறாய் இல்லையா?''

''ஆமாம். உன் மேல் ஆணை'' சீனு தாயின் கையைப் பிடித்து சத்தியம் போட்டான்.

''சரி, அதையும் பார்த்துவிடறேன்! இந்தக் கல்யாணம் எப்படி நடக்கிறதுன்னு பார்த்துடலாம்'' என்றாள் காளிதேவி ஆத்திரமடைந்தவளாய்.

''பாரும்மா, பாரு. உன் ரெண்டு கண்களாலும் பார்த்துக்கொள். உன் ஜென்மம் சாபல்யமடையும்'' என்றான் சீனு.

ஃ ஃ ஃ

சரிதா தலைவாரிக்கொண்டே சிக்குகளை எடுத்துக்கொண்டிருந்தாள்.

அதற்குள் யாரோ காலிங் பெல்லை அடிக்கவே சரிதா போய் கதவைத் திறந்தாள்.

எதிரே இரண்டு பேர் போலீஸ் உடையுடனும், மேலும் இரண்டு பேர் சாதாரண உடையுடனும் நின்றுகொண்டிருந்தார்கள்.



''சுதாகர் சார் வீட்டில் இருக்கிறாரா?'' ஒருத்தன் கேட்டான்.

''இல்லை.''

''சரி, நீங்கள் வீட்டை சோதனை போடுங்கள்'' பக்கத்தில் இருந்த அவர்களைப் பார்த்து சொன்னான் அவன்.

எல்லோரும் திடீரென்று வீட்டிற்குள் நுழைந்து அறைகளில் இருந்த ஒவ்வொரு பொருளையும் சோதனையிட்டுக்கொண்டிருந்தார்கள்.

சரிதா சிலையாய் நின்றபடி கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஒருவன் எதிரே இருந்த அறையிலிருந்து வெளியே வந்து, பணத்தைக்காட்டி, ''இந்தாங்க சார்! இந்தப் பணம் கிடைத்தது அந்த அறையில்'' என்று நோட்டுக் கற்றைகளைத் தந்தான்.

ஆபீசர் அந்தப் பணத்தைக் கணக்கிட்டுப் பார்த்து, ''இருபதாயிரம்'' என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலிருந்த சாதாரண உடையுடனிருந்தவர்களைப் பார்த்து, ''இதோ; இதன் மீது நீங்கள் இருவரும் கையெழுத்துப் போடுங்கள்'' என்று சொன்னார்.

இருவரும் கையெழுத்துப் போட்டார்கள். ஆபீசர் பணத்தைப் பையில் போட்டுக்கொண்டே சரிதாவை நோக்கித் திரும்பி—

''உன் பேர் சரிதாதானே?'' என்று கேட்டார்.

''ஆமாம் சார்.''

''நீ இங்கே எதற்கு இருக்கிறாய்?''

சரிதா பதில் பேசவில்லை.

''ஏன் பேசமாட்டேங்கிறாய்? சுதாகருக்கும் உனக்கும் சம்பந்தம் என்ன?''

இதர அறைகளில் தேடிக்கொண்டிருந்தவர்கள் திரும்பி வந்தார்கள்.

''சார்! அந்த ஃபைல் இந்த அறையில் இல்லை சார்.''

''இந்த அறையிலும் இல்லை சார்.''

அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தபொழுதே சுதாகர் உள்ளே வந்தான். போலீஸ் ஆபீசரைப் பார்த்ததுமே, ''ஹலோ, மிஸ்டர் ராம்! என்ன இந்த பக்கமாய் வந்திருக்கீங்க?'' என்றான் உற்சாகத்தோடு.

''சாரீ பிரதர்! உங்கள் வீட்டிற்கு இப்படி டியூட்டியில் வரவேண்டியிருக்கும் என்று கனவிலும் எண்ணியிருக்கவில்லை.''

''என்ன நடந்தது?''

''உங்கள் அத்தான் விக்கிரமனின் பிளாக் மார்க்கெட் ஃபைல் எங்கே இருக்கிறது?''

''இதோ இருக்கிறது'' சுதாகர் போய் மேஜை டிராயரை இழுத்துப் பார்த்தான். அதில் காணவில்லை. மீதி டிராயர்களில் எல்லாம் தேடினான்.

''இங்கேதானே வைத்தேன். என்னவாகியிருக்கும்?''

''ஏன் இந்த நடிப்பு? அந்த ஃபைலைத் தேடினாலும் கிடைக்காதுன்னு உங்களுக்குத் தெரியும்.''

''அப்படின்னால்?''

''உங்கள் பீரோவில் கிடைத்த இருபதாயிரம் கரென்ஸிக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? இந்தப் பணம் ஏது உங்களுக்கு?''

''என் பீரோவில் இருபதாயிரம் இருந்ததா? தமாஷாய் இருக்கே?''



''உங்கள் விஷயம்கூட எல்லோருக்கும் தமாஷாய்தான் இருக்கு. மிஸ்டர் சுதாகர்! உங்கள் வீட்டில் இருக்கிற இந்த சரிதா என்ற பெண் யார்? அவளுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

சுதாகர் முகத்தில் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

''மிஸ்டர் ராம்! வாட் ஈஸ் திஸ்? என் பெர்சனல் விஷயத்தில் தலையிட்டு அத்துமீறி நடந்து கொள்கிறீங்க நீங்கள்.''

''தலையிட்டுத்தீர வேண்டியிருக்கிறது. வேறு வழி இல்லை. உங்கள் அத்தான் மீது இருந்த கேசைத் தப்பிக்கச் செய்துவிட வேண்டும் என்று தான் ஃபைலை மாயம் பண்ணியிருக்கீங்க. உங்கள் வீட்டில் உங்களுக்கே தெரியாமல் இருபதாயிரம் ரூபாய்கள் இருந்ததற்கும், கெட்டுப் போன பெண்ணை வீட்டில் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருப்பதற்கும் சால்ஜாப்பு சொல்லவேண்டிய ஜவாப்தாரி நீங்கள்...''

''நோ, நோ! இதெல்லாம் பொய், இதில் ஏதோ மோசடி இருக்கிறது.''

''அந்த மோசடி என்னவென்று வெளிப்படுகிற வரைக்கும் உங்களை அரெஸ்ட் பண்ணித் தீரவேண்டும்.''

சரிதாவின் தலையில் இடி விழுந்தாற் போலாயிற்று.

''ஜாமீன் வேண்டுமென்றால் உங்கள் பெர்சனல் செக்யூரிட்டியின் மீது கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.''

''ஆல்ரைட்! செய்யுங்கள்.''

சுதாகர் கையொப்பம் போட்டுத் தந்தான்.

''சாரீ பிரதர்! ஐயாம் ரியலி சாரீ!'' என்றார் போகும் முன்னால் ராம்.

''தட்ஸ் ஆல் ரைட்! உங்கள் டியூட்டியை நீங்கள் செய்தீர்கள்.''

வந்தவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். அதுவரை துக்கத்தை அடக்கிவைத்துக் கொண்டிருந்த சரிதா சட்டென்று ஓவென்று கதறித் தீர்த்துவிட்டாள்.

''தங்கச்சீ'' சுதாகர் கலக்கத்தோடு கிட்டே வந்தான்.

''என்ன காரியம் நடந்துவிட்டது அண்ணா?'' தீனமாய் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

''நீ ஒன்றும் கவலைப்படாதேம்மா, இதில் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை உண்மை வெளியாகிவிடும். ஆங்... நான் இல்லாதபோது இங்கே யாராவது வந்தாங்களா?''

''அந்த சுதாமனைக் கூட்டிக்கொண்டு விக்கிரமன் வந்தார். என்னைத் தன்னோடு வரச்சொல்லி பலவந்தம் செய்தார். நான் உன் அறைக்குள் ஓடிப்போய் கதவைச் சாத்திக் கொண்டுவிட்டேன். அப்புறமாய் அவங்க இங்கே என்ன செய்தாங்களோ நான் பார்க்கவில்லை அண்ணா. அவங்க போனபிறகுதான் வெளியே வந்தேன்.''

''உம்! இது விக்கிரமன் செய்த காரியந்தான். என்னைப் பழிவாங்க எண்ணி இப்படிச் செய்திருப்பான்'' பெருமூச்சுவிட்டான் சுதாகர்.

சரிதா அழுதுகொண்டே முறையிட்டாள்.

''நான் உயிரோடிருக்கும்வரை விக்கிரமன் என் மேலிருக்கும் மோகத்தை விடமாட்டார் போலிருக்கு. அக்காவின் வாழ்க்கை பாழாகிவிடும். நான் முன்பே சொல்லவில்லையா அண்ணா? என் துரதிஷ்டம் உங்கள் வாழ்க்கைகளைக்கூட பாழாக்கி விடும் என்று! இனி நான் உயிரோடு இருப்பதே அனாவசியம்'' சரிதா விரக்தியோடும் ஆவேசத்தோடும் சட்டென்று போய் மேஜை டிராயரை இழுத்து அதற்குள் இருந்த துப்பாக்கியை எடுத்து நெற்றிப் பொட்டை நோக்கி குறி



வைத்துக்கொள்ளப் போனாள். சுதாகர் மின்னலாய் பாய்ந்து சரிதாவின் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டான்.

''என்ன காரியம் இது? அவ்வளவுக்குத் துணிந்து விட்டாயே! இதற்காகவா நான் உன்னை இங்கே கூட்டிக் கொண்டு வந்தது?'' என்றான் பழித்தாற்போல

''அண்ணா!'' சரிதா ஓவென்று கதறிக்கொண்டே அவன் கைகளில் சரிந்து விட்டாள்.

தங்கையின் தலையைத் தடவிக்கொண்டே, அன்பொழுகச் சொன்னான் சுதாகர்.

'தங்கச்சீ! உனக்காக வாழ்க்கையில் எந்தப் பிரச்னை எதிர்பட்டாலும் எதிர்த்து நிற்பதற்கு சித்தமாய் நான் இருக்கும்பொழுது உனக்கு எதற்கும்மா இந்த அதைரியம்? நீ சாவதற்காகவா உன்னை இங்கே கொண்டு வந்தேன் நான்? உன் வாழ்க்கையைச் சீர்திருத்தி, உன்னை ஒருத்தனின் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டு, சித்ராவைப் போல நீயும் சந்தோஷமாய் வளைய வருவதைப் பார்க்கணும் என்றிருக்கும்மா எனக்கு! அப்பத்தான் எனக்கு திருப்தியும் நிம்மதியும்கிட்டும். இது நமக்கு ஒரு சோதனை காலம். நாம்ப தைரியமாய் இதைத் தாண்டி வரணும்மா.''

ஃ ஃ ஃ

சுதாமனும் விக்கிரமனும் சுதாகரின் வீட்டிலிருந்து ஃபைலை எடுத்துக்கொண்டு நேராய் தம் அறைக்கு வந்தார்கள்.

''அந்த ஃபைலை இப்படிக் கொண்டா'' என்றான் விக்கிரமன்.

''எதுக்கு?'' சுதாமன் ஃபைலைத் தன் உயிருக்குச் சமமாய் பாவித்து மார்போடு அழுத்தி வைத்துக் கொண்டிருந்தான்.

''கொளுத்தி விடலாம்.''

'கொளுத்துவதா?'' கேலியாய் சிரித்தான் சுதாமன்.

''ஆமாம். இல்லாவிட்டால் எந்தச் சமயத்திலும் போலீசார் வரலாம். வந்து அறையைச் சோதனை போடலாம்.''

''இந்த ஃபைல் உண்மையாகவே உனக்கு வேண்டுமா?''

''இதென்ன பேச்சு? உனக்கு புத்தி பிசகி விட்டதா?''

''ஒன்றுமில்லை பிரதர்! சோற்றுக்கு கதியில்லாமல் செத்துட்டிருக்கேன் நான். உன்னைப் போன்றவங்களிடம் கையை நீட்டக்கூட பிடிக்கவில்லை இப்பல்லாம். இந்த ஃபைல் தற்சமயம் என் கையில் இருக்கிறது. இதன் மதிப்பு இருபதாயிரம். வேண்டுமென்றால் நீ அந்த இருபதாயிரத்தைத் தந்துவிட்டு எடுத்துக்கொள்.''

''என்னடா சொன்னாய்? ராஸ்கல்!''

''வார்த்தைகளை அளந்து பேசு.''

''என் உப்பைத் தின்றுவிட்டு எனக்கே துரோகம் பண்ணுகிறாயா? நம்ப வைத்து இப்படி மோசம் பண்ணுகிறாயா?''

சுதாமன் அலட்சியமாய் சிரித்தான்.

''போ பிரதர்! நம்பினவங்களை மோசம் பண்ணாமல் நம்பாதவங்களையா பண்ணமுடியும்? ஆனாலும் இதிலென்ன மோசம் இருக்கு? என் கஷ்டத்துக்கு தகுந்த ஊதியத்தைத் தரச் சொல்கிறேன்.''

''தராவிட்டால்?''

''ஃபைல் நேராய் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விடும்.''



''பின்னே என்ன ஓய்? அவ்வளவு பணக்காரன், இருபதாயிரம் இல்லை என்கிறாய்! உன் மனைவியின் கழுத்தில் இருக்கிறநகைகளை விற்றுத் தா. உங்கப்பாவுக்குத் தெரிந்துவிடுமேங்கிற பயமா? அப்படியென்னால் பிராமிசரி நோட் எழுதிக் கொடு.''

விக்கிரமன் சுதாமன் மீது பாய்ந்தான். இருவருக்குமிடையே கொஞ்ச நேரம் ராம ராவண யுத்தம் நடந்தது. விக்கிரமன் கீழே விழுந்தான்.

சுதாமன் பிராமிசரி நோட்டைக் கொண்டு வந்து தந்து— ''நோட்டில் மரியாதையாய் கையெழுத்துப் போட்டுவிட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்'' என்றான்.

''போட்டுத் தரேன். மொதல்ல அந்த ஃபைலை இப்படிக் கொடு'' என்றான் விக்கிரமன்.

சுதாமன் போய் ஃபைலை எடுத்துக் கொண்டு வந்தான். அதற்குள் சுதாகர் அறைக்குள் வந்தான்.

சுதாமனின் கையில் ஃபைலைப் பார்த்ததுமே பசியுண்ட சிங்கத்தைப் போல அவன் மீது பாய்ந்தான். இருவரும் ஒருவர்மீது இன்னொருவர் விழுந்து திமிறிப் போராடிக் கொண்டிருந்தார்கள். விக்கிரமன் மெதுவாய் அங்கிருந்து நழுவி விட்டான். சுதாகர் சுதாமனை செம்மையாய்ப் புடைத்துவிட்டு அவன் கழுத்தைப் பிடித்து ''நட போலீஸ் ஸ்டேஷனுக்கு'' என்று வெளியே தள்ளிக்கொண்டு வந்தான்.

ஃ ஃ ஃ

சுதாமனை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்துவிட்டு ஃபைலைத் தந்துவிட்டு சுதாகர் வீட்டிற்குத் திரும்பி வரும் பொழுது இரவு வெகு நேரமாகி விட்டிருந்தது. கதவுகள் எல்லாம் திறந்தே கிடந்தன. விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. சுதாகருக்கு ஒன்றும் புரியவில்லை.

சரிதா சாதாரணமாய் என்றைக்குமே அப்படி கதவுகளைத் திறந்து வைத்திருக்க மாட்டாள்.

அதுவும் இந்த ராத்திரி வேளையில்! அவன் மனம் தீய்கை எடை போட்டது! சுதாகர் ஜீப்பிலிருந்து இறங்கி மளமளவென்று உள்ளே வந்தான்.

''சரிதா! சரிதா!'' என்று கூப்பிட்டான்.

எங்குமே சந்தடி இல்லை. வீடு முழுவதும் பயங்கரமான நிசப்தத்தில் ஆழ்ந்து போயிருந்தது. தன் படுக்கையறைக்குள் வந்த சுதாகர் சட்டென்று நின்று விட்டான்.

சரிதா தரையில் ரத்த வெள்ளத்திற்கிடையே விழுந்து கிடந்தாள். விக்கிரமன் அவளுக்கருகில் குனிந்துகொண்டிருந்தவன் சுதாகரைப் பார்த்துவிட்டு எழுந்து வெளியே ஓடி விட்டான்.

சுதாகர் மளமளவென்று விழுந்து கிடந்த தங்கையிடம் வந்தான். ரத்த வெள்ளத்திற்கிடையே விழுந்து கிடந்த சரிதாவின் மூச்சு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. பக்கத்தில் துப்பாக்கி கிடந்தது சுதாகர் சரிதாவின் தலையை மார்போடணைத்திக் கொண்டான். அவன் குரல் துக்கத்தால் நடுங்கிற்று. ''கடைசியில் உன்னை இதற்காகவா அம்மா இங்கே பலவந்தமாய் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தேன்? இந்த ஆபத்தை உணர்ந்து தானம்மா எங்கேயாவது அனுப்பி விடு அண்ணா! என்று மன்றாடினாய்? ஐயோ இதைத் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டேனே.''

அதற்குள் அவனுடைய கடமை விழித்துக் கொண்டது.

சரிதாவை சரியாய் படுக்க வைத்துவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணினான்.

போலீசார் வருவதற்குள் துப்பாக்கியின் மீது விரலடையாளங்கள் எதுவும் தெரிந்து விடாமலிருக்க ஜாக்கிரதையாய் துடைத்து விட்டான். போலீசார் வந்ததுமே சரிதாவைத் தானே கொன்றதாய் வாக்குமூலம் தந்துவிட்டு தானே அரெஸ்ட் ஆகி விட்டான்.



ஒரு தங்கையின் வாழ்க்கைதான் எப்படியோ நாசமாகி விட்டது. இதன் காரணமாய் இன்னொரு தங்கையின் வாழ்க்கைகூட நாசமாகி விடக் கூடாது என்ற தீர்மானத்துடன் விக்கிரமனை தண்டனையிலிருந்து தப்பிக்கச் செய்வதற்காக அந்த கொலை குற்றத்தைத் தன் மீது போட்டுக் கொண்டான் சுதாகர்.

ஃ ஃ ஃ

சுதாகர் வீட்டில் சரிதா என்ற பெண் கொலை பண்ணப்பட்டு விட்டாள் என்ற செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது. யாரைப் பார்த்தாலும் இதே பேச்சு! அந்தப் பெண்ணின் நடவடிக்கை நல்லதில்லையாம். சுதாகர் அந்தப் பெண்ணைத் தானே கொலை பண்ணியதாய் ஒப்புக் கொண்டானாம் ஏன் பண்ணியிருப்பான்? அவ்வளவு தேவை ஏன் வந்திருக்கும்? யார் வாயில் பார்த்தாலும் இதே வார்த்தைகள் புரண்டன.

ராஜாராமுக்கு டி எஸ். பி. போன் பண்ணிச் சொன்னார். போனை வைத்துவிட்டு அவர் ''பத்மா! பத்மா! ஜமுனா!'' என்று வீடே அதிரும்படியாய் கத்தினார்.

என்னவாயிற்றோ என்னவோ என்று எல்லோரும் ஓடி வந்தார்கள். ராஜாராம் ஸ்டேட்மென்ட்டைப்போல தந்தார். ''அந்த சுதாகர் யாரோ சரிதா என்ற பெண்ணை கொலை பண்ணி விட்டானாம். போலீசார் அவனை அரெஸ்ட் பண்ணியிருக்காங்க டி. எஸ். பி. இப்பத்தான் போன் பண்ணிச் சொன்னார்.''

''சுதாகரா? கொலையா? அண்ணா நீ சரியாய் கேட்டாயா?'' ஜானகிராமன் சந்தேகத்துடன் கேட்டார்.

''நீ வீணாய் பதறாதே. சுதாகர் கொலை பண்ணிய விஷயம் உண்மைதான். அந்தக் கொலை அவன் வீட்டிலேயே நடந்திருக்கிறது. துப்பாக்கியால் சுட்டு விட்டானாம்! குற்றத்தை தானே ஒப்புக்கொண்டதாய் அவர்கள் சொல்கிறார்கள். அவனை உத்யோகத்திலிருந்து சஸ்பெண்ட் பண்ணி விட்டார்களாம்.''

''டாடி! என்னால் நம்ப முடியாது. சுதாகர் அப்படிப் பட்ட மனிதர் அல்ல.''

''உனக்கென்னம்மா தெரியும்? இந்த உலகத்தில் பாதிக் கொலை கேசுகள் இந்தக் காதல் ரகளையால்தான்! அவன் தலையெழுத்து! நல்ல வேளை! உன் கழுத்தில் அந்த மூன்று முடிச்சுக்கள் விழவில்லை. பத்மா! புறப்படு. பாட்டுக் கச்சேரிக்கு நேரமாயிடுத்து'' ராஜாராம் எந்தக் கவலையும் இல்லாமல் போய் விட்டார்.

இந்த விஷயத்தைக் கேட்ட சித்ரா மூர்ச்சையடைந்து விழுந்து விட்டாள். சுமார் அரை மணி நேரம் வரை நினைவு திரும்பவில்லை. நினைவு திரும்பிய பிறகும் கூட வெறி பிடித்தாற்போல பார்க்கத் தொடங்கினாள். டாக்டர் வந்து பார்த்துவிட்டு மென்டல் ஷாக் என்றும் சில நாட்கள் நல்ல ஓய்வு வேண்டும் என்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

சித்ராவின் அறையை விட்டு வெளியே வந்த ஜமுனா முகம் சிறுக்க ''அவர் இந்தக் கொலையைப் பண்ணியிருக்க மாட்டார் சித்தப்பா'' என்றாள்.

''ஆமாம்மா. இதில் ஏதோ மோசம் இருக்கு'' என்றார் ஜானகிராமனும்கூட.

''நாம்ப ஒரு தடவை ஜெயிலுக்குப் போய் அவரைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன?''



''எனக்கும் அதான் தோன்றுகிறதும்மா. வா, புறப்படு போகலாம்'' என்றார் ஜானகிராமன். இருவரும் புறப்பட்டு ஜெயிலுக்கு வந்தார்கள்.

ஃ ஃ ஃ

ஜானகிராமன் சுதாகரை ஜெயிலில் பார்த்ததுமே அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு தொண்டை அடைக்கச் சொன்னார்: ''சுதாகர்! என்னப்பா இது! உன்னை இப்படி என் கண்களால் பார்க்க நேரிடும் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. இந்தக் கொலைக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? நீ இவ்வளவு கொடுமைக்குத் துணிந்திருப்பாய் என்று சொன்னால் என்னால நம்பவே முடியவில்லை. உங்கப்பா பாருப்பா! இன்னும் ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. உங்கப்புறம் தந்தையைப் போல இருக்கிறவன் நான். நிஜத்தைச் சொல்லு. என்னதான் நடந்தது?''

பதில் சொல்ல முடியாதவனாய் மௌனமாய் இருந்தான் சுதாகர்.

ஜமுனா கண்ணீர் மல்க கேட்டாள், ''சொல்லுங்கள் சித்தப்பாவிடம் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லி விடுங்கள். உங்களையே நம்பி உங்கள் மீது இவ்வளவு ஆசைகளை வளர்த்துக் கொண்டிருக்கும் என் மூஞ்சியைப் பார்த்தாவது நிஜத்தைச் சொல்லி விடுங்கள்'' என்று தீனமாய் கெஞ்சினாள்.

அவன் பதில் பேசவில்லை.

''இந்தக் குற்றத்தை நீங்கள் வேண்டுமென்றே உங்கள் தலையில் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இப்படி உங்கள் எதிர்காலத்தையே நாசம் பண்ணிக் கொள்வதற்கு ஏன் துணிந்தீர்கள்? நீங்கள் அரெஸ்ட் ஆகிவிட்டீர்கள்

என்ற செய்தியைக் கேட்டதுமே சித்ரா மூர்ச்சையாகி விழுந்து விட்டாள். நினைவு திரும்பினாலும் அவள் மூளை நல்ல சுவாதீனத்தில் இல்லை. நீங்கள் அர்த்தமில்லாமல் செய்கிற இந்த தியாகத்தால் எத்தனை பேர் குமுறிப்போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒரு முறை யோசித்துப் பாருங்கள்.''

''ஜமுனா! இந்தக் கொலையை நான்தான் பண்ணினேன். இதைத் தவிர என்னால் வேறெதுவும் சொல்ல முடியாது.''

''அசம்பவம்! நான் நம்ப மாட்டேன். ஒருத்தருக்காக உயிரையே தாரை வார்க்கத்தான் தெரியுமே தவிர ஒருத்தர் உயிரை வாங்கத் தெரியாது உங்கள் வம்சத்தாருக்கு, சுதாகர்! எனக்குத் தெரியும். என் சந்தேகந்தான் நிஜமாயிருக்கும். எனக்காக உங்கப்பா தன் உயிரையே ஈந்தார். இன்றைக்கு என் மகனுக்காக நீ செய்யாத குற்றத்தைத் தலைமேல் போட்டுக் கொள்கிறாய்.''

''நீங்கள் காரணமில்லாமல் விக்கிரமன் மீது சந்தேகப் படுகிறீர்கள். விக்கிரமன் அப்பாவி. அவனுக்கு இந்த ரகளையெல்லாம் தெரியாது.''

''அப்பாவி! ஹூம்!''

''மன்னியுங்கள், இதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்ல முடியாது'' சுதாகர் திரும்பி செல்லுக்குள் போய் விட்டான்.

ஜெயில் அதிகாரிகள் கதவைச் சாத்தி விட்டார்கள்.

ஜமுனா ''சித்தப்பா'' என்று அலறி விட்டாள்.

''அதைரியப்படாதேம்மா! நாம்ப ஆசுபத்திரிக்குப் போகலாம் வா! அந்தப் பெண்ணின் நிலைமை எப்படி இருக்கிறதோ? அந்தப் பெண் ஏதாவது சொல்ல முடிந்தால்...''



''வா சித்தப்பா! என் அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் அந்தப் பெண்ணின் வாயிலிருந்து வெளிவரப்போகும் வார்த்தைகளின் மீதுதான் ஆதாரப்பட்டிருக்கிறது'' ஜமுனா கண்களைத் துடைத்துக்கொண்டே காரை நோக்கி நடந்தாள்.

ஜானகிராமன் அவளைப் பின் தொடர்ந்தார்.

ஃ ஃ ஃ

உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த சரிதாவை எப்படியாவது பிழைக்க வைத்துவிட வேண்டும் என்று டாக்டர்கள் பலவிதங்களிலும் போராடிக்கொண்டிருந்தார்கள்.

சரிதாவுக்கு நினைவு திரும்புவதும் போவதுமாய் இருந்தது.

நினைவு திரும்பும்பொழுது யாரையோ கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். அந்த வார்த்தைகள் தெளிவில்லாமல் இருந்ததால் சரியாய் புரியவில்லை.

சரிதாவைப் பற்றிக் கேள்விப்பட்டுவிட்டு, சிதம்பரமும், சாருமதியும்கூட ஆசுபத்திரிக்கு ஓடிவந்தார்கள்.

அதற்குள் அங்கு வந்து சேர்ந்த ஜானகிராமன் ''டாக்டர்! அந்தப் பெண்ணிற்கு எப்படி இருக்கு?'' என்று கேட்டார்.

''உயிருக்குப் பயமில்லை. கண்டம் தப்பிவிட்டது.''

''டாக்டர்! அவளை எப்படியாவது பிழைக்க வைத்துவிடுங்கள். அவள் சொல்லப் போகும் ஒரு வார்த்தையில்தான் எங்கள் எல்லோருடைய வாழ்க்கையும் ஆதாரப்பட்டிருக்கிறது'' என்றாள் ஜமுனா கெஞ்சியபடி.

''எங்கள் முயற்சியை நாங்கள் பண்ணிக்கொண்டுதான் இருக்கிறோம். இனி பயமில்லை. கொஞ்ச நேரம் பொறுத்

துக்கொண்டிருங்கள். நினைவு திரும்பியதுமே கூப்பிடு கிறோம்'' என்று சொல்லிவிட்டு டாக்டர் போய்விட்டார். சுமார் அரைமணி நேரங்கழித்து சரிதாவுக்கு நினைவு திரும் பிற்று.

''அண்ணா...அண்ணா'' என்று முனகினாள். அதற் குள் அங்கே வந்து ஸ்டேட்மென்ட் ரிகார்டு பண்ணிக்கொள் வதற்கு ரெடியாய் உட்கார்ந்திருந்த மேஜிஸ்ட்ரேட் ''அம்மா சித்ரா!'' என்று மெதுவாய் கூப்பிட்டார்.

'உம்.''

''சொல்லும்மா! உன்னைக் கொல்வதற்கு முயன்ற வங்க யார்?''

''என்னையா...என்னை...என்னை!''

''ஆமாம்மா, உன்னைத்தான்!''

'காளிதேவி!''

23309
3858309

ஜமுனா, ஜானகிராமன், சுதாகர், சாருமதி, ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

சரிதா நிறுத்தி நிறுத்திச் சொல்லத் தொடங்கினாள்:

''நேற்றிரவு நான் தனியாய் இருந்தேன். காளிதேவி வீட்டிற்குள் நுழைந்தாள். கையில் பருமனான கழி ஒன்று இருந்தது. ''இங்கேயாடி இருக்கிறாய்?'' என்று பற்களை நறநறத்துக்கொண்டே எதிரே வந்து நின்றாள். நான் பயந்துபோய்விட்டேன். ''ஏன் எதுக்கு வந்தாய்'' என்று கேட்டேன். ''உன் உயிரை எடுப்பதற்கு!'' என்றாள். எனக்கு பயமாகிவிட்டது. காளிதேவி என்னைத் திட்டத் தொடங்கினாள். தன் மகனை நான் வலையில் போட்டுக் கொண்டுவிட்டேன் என்றாள். தங்க நிழல் இல்லாமல் பண்ணிவிட்டேன் என்றாள்.''

சரிதா ஆயாசத்துடன் நிறுத்திக்கொண்டாள்.

''சொல்லும்மா, அப்புறமாய் என்னவாச்சு? காளி தேவி திட்டியபொழுது நீ என்ன சொன்னாய்?''



''நான்... நான் வெளியே போ என்றேன். ஆனால் என் வார்த்தைகளைக் கேட்கவில்லை அவள்.

''கழியால் என் தலையில் அடித்தாள். நான் பயந்து விட்டேன். கோபமும் வந்தது உடனே போய் துப்பாக்கியை எடுத்து நீட்டி பயமுறுத்தினேன். அவள் என் மீது பாய்ந் தாள். இருவரும் திமிறினோம், போராடினோம். காளிதேவி யின் கையிலிருந்து துப்பாக்கி வெடித்தது. என் கண்கள் இருண்டு கொண்டுவந்தன. அப்புறமாய்... அப்புறமாய் என்னவாயிற்றென்றே... தெரியாது...'' மாஜிஸ்ட்ரேட் குனிந்தார்.

''இன்னும் ஒரு கேள்விம்மா! நீ சுதாகரிடம் ஏன் இருக் கிறாய்? அவர் இந்தக் குற்றத்தைத் தான் பண்ணியதாய் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஜெயிலில் இருக்கிறார்.''

''ஆங்! அண்ணா! ஜெயிலில் இருக்கிறாரா? ஏன்? எதுக்காக?'' ஹீனஸ்வரத்துடன் கேட்டுக்கொண்டே சட் டென்று எழுந்திருக்கப் போனாள் சரிதா.

பக்கத்திலிருந்த நர்சுகள் அவளைத் தடுத்துப் படுக்க வைத்தார்கள்.

''என்னம்மா, சுதாகரை அண்ணா என்கிறாயே?'' மேஜிஸ்ட்ரேட் கேட்டார்.

''ஆமாங்க. சுதாகர் எங்கண்ணன்தான். நாங்கள் ஒரே தாய் வயிற்றில் பிறந்த குழந்தைங்கள். எங்கம்மா என்னை... என்னை ஆசுபத்திரியில்... பெற்றுவிட்டுச் செத்து விட்டாங்க... சாருமதி அம்மா வளர்த்தாங்க எங்க அத்தை அவங்களுக்கு என்னை விற்றுவிட்டாள்.''

மேஜிஸ்ட்ரேட் சாருமதியை நோக்கித் திரும்பி ''ஏம்மா, இது நிஜந்தானா?'' என்று கேட்டார்.

''நிஜந்தாங்க! பச்சைக்குழந்தையை அந்த காளிதேவி எங்களுக்கு ஐநூறு ரூபாய்க்கு விற்றுவிட்டாள்'' என்றாள் சாருமதி.

''பின்னே இவ்வளவு நாட்களாய் இந்த விஷயத்தை நீங்கள் ஏன் சொல்லவேயில்லை?''

''வளர்த்த பாசத்தால் சொல்லவில்லைங்க! எங்கள் குழந்தை இல்லை என்று சொல்லிவிட்டால் எங்கள் பேச்சையே கேட்காமல் போய்விடுவாளோன்னு பயந்தோம்.''

''அண்ணா... அண்ணாவைப் பார்க்கணும்...'' என்றாள் சரிதா.

மேஜிஸ்ட்ரேட் உடனே சுதாகருக்காகச் செய்தி அனுப்பினார்.

சுதாகர் ஓட்டமும் நடையுமாய் வந்தான்.

''தங்கச்சீ'' கிட்டேவந்து கலக்கத்துடன் கூப்பிட்டான்.

''ஆங்! அண்ணா!'' சரிதாவின் உதடுகள் அதிர்ந்தன.

சுதாகர் கட்டிலில் உட்கார்ந்துகொண்டான்.

''என்னை... என்னை ஒரு தடவை உன் மடியில் வைத்துக்கொள் அண்ணா'' என்றாள் சரிதா.

சுதாகர் மெதுவாய் சரிதாவின் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டான்.

''அண்ணா.''

''தங்கச்சீ.''

சரிதாவின் கண்களிலிருந்து ஜிவ்வென்று நீர்ச் சுழன்றது. பேசுவதற்குச் சக்தி போதாமல் அண்ணன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒன்றும் பயமில்லை. குணமாகிவிடும்'' தேற்றுவது போல தைரியம் சொல்லிக்கொண்டே அவள் கேசங்களைக் கோதிவிட்டான். கண்ணீரைத் துடைத்து விட்டான். சரிதாவின் முகத்தில் முறுவல் தெளிந்தது.

''ஓய்வெடுத்துக் கொள்ளும்மா.'' அவளைப் படுக்கையில் சரியாகப் படுக்க வைத்துவிட்டு எழுந்தான்.

''அண்ணா'' வாசலில் திடீரென்று சித்ராவின் குரல் கேட்டது ஓலமாய்.



சுதாகர் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான்.

சித்ரா ஓட்டமாய் ஓடி வந்தாள். அவளுக்குப் பின்னால் விக்கிரமன் வந்தான் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே.

''எப்படி இருக்கு சரிதாவுக்கு? இவ்வளவு நாளாய் என்னிடம் ஏன் சொல்லவேயில்லை அண்ணா? சரிதா நம்ப ரத்தத்தைப் பகிர்ந்துகொண்டு பிறந்தவ நம் தங்கைதான் என்று என்னிடம் ஏன் சொல்லவேயில்லை?'' என்றாள் சித்ரா.

''சித்ரா'' வியப்போடு பார்த்தான் சுதாகர்.

''எனக்கு இப்பத்தான் தெரிஞ்சுது. சரிதா எழுதி போஸ்ட் பண்ணியிருந்த கடிதம் இப்பத்தான் கிடைத்தது. நான் எவ்வளவு பாவியாகி விட்டேன்! சரிதா யாரென்று தெரியாமல் என்னென்னவோ பேசிவிட்டேன்! அம்மா சரிதா! தங்கச்சீ'' சித்ரா சரிதாவின் கன்னங்களைத் தடவித் தந்தாள்.

''அக்கா'' என்றாள் சரிதா ஹீனஸ்வரத்துடன்

விக்கிரமன் சரிதாவின் கட்டிலுக்கருகில் வந்தான்.

''சரிதா! என்னை மன்னித்துவிடு. உனக்கு நான் செய்த அநியாயத்தால்தான் சித்ரா சாகக்கிடந்தாள். அந்த பாவத்தால்தான் சித்ராவைக்கூட நான் இழக்கவிருந்தேன். நல்ல வேளை என் தப்பை உணர்ந்து தெய்வத்திடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டதுமே சித்ராவுக்கு உன் இந்த லெட்டர் கிடைத்து அவள் உடம்பு சட்டென்று தேறிவிட்டது. என்னை மன்னித்துவிடு. உன்னையும் சீனுவையும் தெரிந்தோ தெரியாமலோ நான் பிரித்துவிட்டேன். இனி உங்களைச் சேர்த்துவைத்தால்தான் எனக்கு நிம்மதி கிட்டும்'' என்றான் நாத்தழுதழுக்க.

''சரிதா'' சீனு உள்ளே வந்தான்.

சரிதா அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''சரிதா! நீ பிறந்ததுமே எங்கம்மா உன்னை விற்றுவிட்டு, தொலைவிற்குப் பிரித்துவிட்டாள். இவ்வளவு நாட்களுக்கப்புறம் எப்படியோ அதிர்ஷ்டவசமாய் சேர்ந்து சுகமாய் இருக்கப் போகிற சமயத்தில் உன்னைக் கொல்ல

முயன்றான். அம்மா செய்த அபராதத்திற்கு முன்னால் அந்த ஜெயில் தண்டனைகூட குறைச்சல்தான்! இனி தான் திரும்பி அவங்க மூஞ்சியையும் பார்க்கப் போறதில்லை'' என்றான்.

ஜானகிராமன் சீனுவிடம் வந்தார். ''எங்கள் பேக்டரியில் மேனேஜர் இந்த மாதத்தில் பதவியிலிருந்து ரிடயர் ஆகப்போகிறார். உன்னை அந்தப் பதவிக்கு எடுத்துக் கொள்கிறேன்பா. நீ எங்களுக்கு உறவுக்காரனாகி விட்டாயே!'' என்றார்.

சீனு சரிதாவைப் பார்த்தான். அவள் முகம் மலர்ந்திருந்தது.

ஃ ஃ ஃ

சுதாகர் விடுதலையானான். தண்டனை பணத்தைக் கட்டியதும் விக்கிரமன் மேலிருந்த கேசு அடிக்கப்பட்டு விட்டது.

ஜமுனா சொன்ன பேச்சை நிறைவேற்றிக் கொண்டு விட்டாள்.

சுதாகர்—ஜமுனாவின் விவாகம் சுருக்கமாய் ஆடம்பரமில்லாமல் நடந்து முடிந்துவிட்டது.

ராஜாராம் மகளின் கையை சுதாகரின் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டு, ''சுதாகர்! என் சர்வீசில் எத்தனையோ கேசுகளை பார்த்திருக்கிறேன். ஆனால் என் பெண்ணைப் போன்ற கஷ்டமான கேசை நான் இதுவரையில் பார்த்ததில்லை. உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். ஜாக்கிரதை'' என்று எச்சரித்தார்.

''போடாடி நீ ஒண்ணு'' ஜமுனா கோபம் வந்தவளைப் போல பார்த்தாள்.

சீனுவுக்கு ஃபேக்டரியில் மேனேஜர் உத்யோகம் கிடைத்து விட்டது. சுதாகர் சரிதாவை சீனுவுக்குத் தந்து மணம் முடித்து வைத்தான்.

சுதாமன் சரிதாவை விட்டுவிட்டு புதுவேட்டையைத் தொடங்கிவிட்டான். அந்த ஊரில் அழகான பெண்கள் இருக்கும்வரை அவனுக்குக் கைநிறைய வேலைதான்.

23309

சுபம்

38583309